ஸ்ரீதுளஸீதாஸரின் மஹாகாவ்யம்

ஸ்ரீராம சரித மானஸ்

(துளஸீ ராமாயணம்)



பாலகாண்டம்

ஸ்ரீஸீதா ராமாப்யாம் நம :
ஸ்ரீமதே ராமானுஜாய நம :

ஸகல ஸௌபாக்யங்களும் தரும்
ஸ்ரீமத் கோஸ்வாமி துளஸீதாஸர்
அருளிய

ஸ்ரீராம சரித மானஸ்
பால காண்டம்
(முதல் ஸோபானம்)

தமிழாக்கம்
ஸ்ரீமதி. ஜயா சக்ரவர்த்தி
'ப்ராபாகர், கோவித்'

பதிப்பாசிரியர்
டாக்டர் : எஸ்.எஸ்.ராகவன்
'ஸாஹித்ய சிரோமணி, தமிழ் வித்வான், ஸாஹித்ய விசாரத'

பதிப்பகத்தார்
கிரி பப்ளிகேஷன்ஸ்

தெய்வீகப் புத்தக விற்பனையாளர்
கிரி டிரேடிங் ஏஜென்ஸி

10, கபாலீச்வரர்
ஸன்னதித் தெரு
மயிலாப்பூர்
சென்னை . 600004
போன் : 74376

12, தேவடித் தெரு
மயிலாப்பூர்
சென்னை - 4.

மோடி நிவாஸ், பண்டார்கர் ரோடு
(தபால் அலுவலகம் எதிரில்)
மாதுங்கா, பம்பாய் - 400 019.
போன் : 4371344, 4373140.

© பதிப்புரிமை பெற்றது.

முதல் பதிப்பு : ஏப்ரல் — 1989

விலை: ரூ 90/-

ஒளிஅச்சுக் கோர்வை : **சாந்தி-ஆனந்த்,**
பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்
சென்னை 600 002.
தொலைபேசி : 84 23 98

அச்சிட்டோர் : **நவீன ஆப்செட் பிரிண்டிங் கோ.,**
சென்னை 600 014.
தொலைபேசி : 84 88 91

ஸ்ரீகாஞ்சி காமகோடி ஜகத்குரு ஆசார்யாள் அருளிய அருளுரை

பகவான் ஸ்ரீராமனாக அவதரித்து, ஆடி ஓடித் தவழ்ந்து, திரிந்து, அரசனாக மிளிர்ந்து, கடமையின் பெருமையை உணர்த்திய பூமி இந்தப் பாரதபூமி.

தவவலிமை படைத்த மஹரிஷிகளே ஸ்ரீராமனின் பெருமையை உணர்வர் என்பது விச்வாமித்ரர் கூற்று.

இவரது சரித்ரத்தை ஹிந்தியில் காவ்யமாகப் பாடும் பெறற்கரிய பேறு பெற்றவர் ஸ்ரீதுளஸீ தாஸர்.

இக் காப்பியத்தின் சுவையுடன் ஸ்ரீராமபிரானின் பெருமையையும் ஸ்ரீதுளஸீதாஸர் காட்டும் வழியில் அறிந்து இன்புற்று நற்பேறு பெறுவதற்கு ஏதுவாக இக்காப்பியத்தின் தமிழாக்கத்தைச் செய்தவர் திருமதி ஜயா சக்ரவர்த்தி அவர்கள். இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிடுகின்றனர் கிரி டிரேடிங் ஏஜென்ஸி கம்பெனியார். முதலாவதாக வெளிவருகின்றது பால காண்டம்.

தமிழ் கூறும் ஆஸ்திக உலகம் இந்நூலைப் படித்து உணர்ந்து, அறவழி வாழ்ந்து இன்புறுவதாக.

காஞ்சீபுரம்
18-1-1989

நாராயண ஸ்ம்ருதி:

SRI RAMANAND SAGAR

November 11, 1988

I want to express my admiration for the most wonderful task performed by Mrs. Jaya Chakravarty in translating the 'Bal Kand' of Tulsi Ramayan in Tamil language. She is a Scholar of Hindi having done her M.A. in Hindi language and Tamil is her mother tongue. So the result must be good.

I am told by friends who have read the manuscript that her Tamil translation is very good and most appropriate.

By translating Tulsi Ramayan (Bal Kand) in Tamil, Mrs. Jaya Chakravarty has rendered great service to the devotees of Lord Rama specially in the South which also means helping the National Integration. She has a missionary zeal and she deserves all admiration.

(RAMANAND SAGAR)

பதிப்புரை

பரிபூர்ணகாமனும், ஸச்சிதானந்தஸ்வரூபனும் ஆன ஸ்ரீராமசந்த்ர ஸ்வாமியின் பவித்ரமான சரித்ரத்தை ச்ரவணம் செய்ய யார் தான் ஆசை கொள்ளார்? எல்லோருமே ஆசை கொள்வது திண்ணம். 'ராம' என்ற இரண்டு அக்ஷரங்களைச் சொன்னாலே ஆனந்தம் பொங்குவதும் உறுதி. ''ரமயதீதி ராம:'' எல்லோரையும் மகிழ்விப்பவர் என்பது பொருள்.

''ரமந்தே யோகினானந்தே நித்யானந்தே சிதாத்மனி |
இதி ராமபதேநாஸௌ பரப்ரஹ்மாபிதீயதே'' ||

என்பதாலே விளக்கமாகும்.

இந்த ஸ்ரீமத் ராமாயணம் நூறு கோடி விஸ்தாரமானது ஆகும். இதை வால்மீகி முனிவர் முதன் முதலில் அருளிச் செய்தார். இதனுள் பொதிந்துள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் பெரும் பாதகத்தையும் போக்கவல்லன. இதை -

''சரிதம் ரகுநாதஸ்ய சதகோடி ப்ரவிஸ்தரம் |
ஏகைகம் அக்ஷரம் பும்ஸாம் மஹாபாதக நாசனம்'' ||

என்ற இவ்வரிகள் உணர்த்தும். ஆக 100 கோடி ச்லோகங்கள் கொண்ட - விரிவானதொரு நூலின் பகுதியே வால்மீகி ராமாயணம், ஆநந்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம் என்ற பெயர்களுடன் இப்பூவுலகில் நிலவி வருகின்றன என்பர் முன்னோர்.

பிறகு வ்யாஸ மாமுனிவரும் தமது புராணங்களிலே ஸ்ரீராம கதையை விளக்கியருளினார். மற்றும் பல ஆயிரக்கணக்கான கவிஞர்களும், ஜ்ஞானிகளும், தங்கள் படைப்புக்களின் மூலமாக ராமகதையைப் பரிமளிக்கச் செய்திருக்கிறார்கள். வெளிநாட்டவரும், வேற்றுமொழிக் கவிஞர்களும் கூடத் தங்களது மொழிகளில் விளக்கியுள்ளது சிறப்பிற்குரிய விஷயமாகும். அதே போல் இந்தக் கலியுகத்தில் ஸ்ரீராம பக்தரான ஸ்ரீதுளஸீ தாஸரும்; வடமொழியில் வால்மீகி முனிவர் அருளிய ஸ்ரீமத் ராமாயணத்தை நன்கு அனுபவித்து,

உணர்ந்து, அதே போல வடமொழியே அறியாதவர்களும் நன்கு அனுபவித்துச் சுவைக்க வேண்டும் என்ற பேராவலால் தானோ இந்த மஹா காவ்யத்தைத் தனது ப்ரேமையூட்டும் மொழியான ஹிந்தியிலேயே ஆக்கி அருளினார் எனலாம். இதன் சிறப்பை:-

''ராமாயண் ஸம நஹிம் கோவூ
ஸப் உபமா உபமேய் |
உபமா பாஷா ஔர் கீ
கைஸே கோவு கவிதேய் ||
த்ரேதா மேம் பயே வால்மீகி முனி |
தே கலியுக் பயே துளஸீதாஸ் புனி ||
சதகரோரி ராமாயண் பாஷீ |
இன் மதி ஸார ஸூஸூக்ஷ்மராகீ'' ||

என்பவைகளால் தெள்ளிதின் அறியலாகும். ஆகவே, இந்நூல் மஹா காவ்யங்களுள் சிறந்தது என்பதால் இதற்கு ''ஸ்ரீராம சரித மானஸ்'' என்ற அரும் பெயரைச் சூட்டியருளினார். ஹிந்தி இலக்கிய உலகில் மட்டுமல்ல, உலக இலக்கிய வரிசையிலேயே மிகவும் சிறப்புடைய நிலையை நிர்வஹிக்கிறது எனலாம். இந்தப் படைப்பே மிக அழகியது; சிறந்த காப்பிய இலக்கணத்தோடு கூடியது; எல்லாவகை இலக்கியச் சுவைகளையும் சுவைக்க வைப்பது; காவ்யக் கலைக் கண்ணோடு பார்க்கும்போது மிகமிகச் சிறப்புள்ள இல்லற வாழ்க்கையையும், ராஜ தர்மங்களையும், ஸமூஹ நல வாழ்வையும், பாதிவ்ரத்ய தர்மத்தையும், ஸஹோதர தர்மத்தையும், எடுத்து விளக்குவதோடு, பக்தி, ஜ்ஞானம், வைராக்யம், த்யாகம்,ஸதாசாரம், இவைகளையும் விளக்குவது.

ஆண், பெண், சிறுவர், இளைஞர், முதியோர் என எல்லோருக்கும் ஸமமாகப் பயன்படக் கூடிய வகையில் விளங்குவது. உபநிஷத - புராண -சாஸ்த்ராதி ஸம்மதமானது.

எல்லாவற்றிலும் மேலான, பண்பே வடிவான, பகவான் மானிடனாக அவதரித்து (தசரத குமாரனாக)ச் செய்த லீலா விநோதங்களையும், அவரது பண்புகளையும் மஹிமையையும், மர்மத்தையும், அன்பையும், மஹத்தான தத்வங்களையும், எளிய - ருசிகர - கம்பீர நடையில் எப்படி ஸ்ரீதுளஸீ தாஸர் ஆக்கி

அருளினாரோ; அதே போல் தமிழிலும் எளிய, இனிய, அழகிய, கம்பீர நடையில், புரியும் அளவில், எல்லாத் தரப்பினரும் பயன்படுத்தக் கூடிய வகையில் 'உரையாக்கம்' கொடுக்கப்பட்டிருப்பது தனிப்பட்ட தொரு சிறப்பம்சமாகும். இப்படி இந்நூலின் எளிய தமிழாக்கத்தை இவ்வளவு நயமாகவும், எல்லோரும் சுவைத்து, அனுபவித்து, மகிழும்படிக்கு ஆக்கித் தந் தவர் திருமதி ஜயா சக்ரவர்த்தி அவர்கள்.

இந்தத் தமிழாக்கத்தை நன்கு பரீசோதித்துத் தக்க முறையில் வெளியிட அமைத்து, உருவாக்கிக் கொடுத் தவர், பன்மொழிப் புலவர் - டாக்டர். எஸ்.எஸ். ராகவன் அவர்கள்.

முதலில் இந்நூல் பெரிதாயிற்றே! எப்படிப் போடு வது? எவ்வளவு நாட்கள் ஆகும்? என்று ப்ரமிப்புத் தட்டத்தான் செய்தது எங்களுக்கு. எப்படியாவது இதை வெளிக் கொணர வேண்டும் என்று முழு மூச்சுடன் பல இடையூறுகளையும் பொருட்படுத்தாது எல்லோருக் கும் பயன்பட வேண்டும் என்பதன் பொருட்டு ஸ்ரீ ராம பிரானின் பேரில் எல்லாப் பாரத்தையும் சுமத்தி, எப்படியாவது வெளியிட்டு விடுவதே நம் தலையாய கடமை - பணி எனக் கருதி ரத்னம் போன்ற இந்நூலை நல்ல முறையில் வெளியிட்டுள்ளோம்.

இந் நூலின் உள்ளே உள்ள படங்களைச் சிறப் புடன் அமைத்துக் கொடுத்தவர், அமரர். திரு. 'சித்ர லேகா' அவர்கள். மேலே உள்ள வண்ணப்படத்தை அழகாகத் தீட்டித் தந்தவர், திரு. லதா அவர்கள். இந்நூலைச் சிறப்பான வகையில் சாந்தி - ஆனந்த் நிர் வாகத்தினர் கம்ப்யூட்டரின் மூலம் உருவாக்கி அளித் துள்ளனர். நொவீனோ அச்சகத்தினர் தக்க முறையில் அழகாக அச்சிட்டு வழங்கினர்.

மேலும், காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு பரமா சார்ய ஸ்வாமிகள் பரம க்ருபையுடன் இந்நூலுக்கு அருள் ஆசியுரை வழங்கியுள்ளார். அடுத்து; சிறப்பாக அணிந்துரை வழங்கியுள்ளவர், எல்லோருக்கும் பயன் படும் வகையில் வீடியோ கேசட் மூலம் ஸ்ரீமத் ராமா யணத்தை ஒளிபரப்பிப் புகழடைந்த திருவாளர் ராமா னந்த ஸாகர் அவர்கள்.

இப்படி இந்த மஹத்தான ''ஸ்ரீராம சரித மானஸ்'' என்ற நூலை வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த எல்லோருக்கும் எமது நன்றியையும், பரமாசார்யாளுக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரத்தையும் தெரிவித்துக் கொள் கிறோம்.

குறிப்பாக:- இப்புத்தகத்தில் நாங்கள் சேர்த்திராத அரிய விஷயங்கள் பெரியோர்களுக்கு ஏதேனும் புலப் படுமாகில் அவைகளைத் தெரிவித்தால், அடுத்து வரும் எமது பதிப்புகளில் அவைகளைச் சேர்த்து வெளியிட உதவும்.

இந்நூல் எல்லோருக்கும் பயன்படும் எனக் கருதிப் பரமாசார்யாள் அனுக்ரஹத்தை முன்னிட்டு அவர் களது திருவடி மலர்களில் இந்நூலிதழை அஞ்ஜலி செய்து ஸமர்ப்பிக்கின்றோம்.

ஓம் ஸ்ரீரஸ்து - சுபமஸ்து -
ஸமஸ்த ஸன்மங்களானி ஸந்து

பதிப்பகத்தார்.

ஸ்ரீராமசரித மானஸ் - பாலகாண்டம்
மாஸபாராயணமும் - நிறுத்தும் இடங்களும்

வரிசை	ச்லோகங்கள்	பக்கம்
1 - ஆம் நிறுத்தம்	1 - 296	88
2 - ஆம் நிறுத்தம்	297 - 613	156
3 - ஆம் நிறுத்தம்	614 - 927	214
4 - ஆம் நிறுத்தம்	928 - 1228	270
5 - ஆம் நிறுத்தம்	1229 - 1519	322
6 - ஆம் நிறுத்தம்	1520 - 1820	376
7 - ஆம் நிறுத்தம்	1821 - 2089	427
8 - ஆம் நிறுத்தம்	2090 - 2345	475
9 - ஆம் நிறுத்தம்	2346 - 2626	531
10 - ஆம் நிறுத்தம்	2627 - 2931	587
11 - ம் நிறுத்தம்	2932 - 3175	633
12 - ஆம் நிறுத்தம்	3176 - 3507	692

உள்ளுறை

1. மங்களம் 1
2. குருவந்தனம் 32
3. மறையோர் - ஸாது வந்தனம் 35
4. துஷ்டர்களுக்கு வந்தனம் 40
5. ஸாது - அஸாது வந்தனம் 42
6. ஸ்ரீராமஸ்வரூப ஜீவன்களுக்கு வந்தனம் 49
7. ஸ்ரீதுளஸீதாஸரின் அடக்கமும், ஸ்ரீராமபக்திமய கவிதையின் மஹிமையும் 50
8. கவி வந்தனம் 64
9. ஸ்ரீவால்மீகி, வேதம், ப்ரஹ்மா, தேவதை, சிவன், பார்வதி இவர்களுக்கு வந்தனம் 66
10. ஸ்ரீஸீதாராமன் - இருப்பிடம் எல்லாவற்றிற்கும் வந்தனம் 70
11. ஸ்ரீராமனின் திருப்பெயருக்கு வந்தனம், ஸ்ரீ ராமநாம மஹிமை 75
12. ஸ்ரீராமகுணமும், ஸ்ரீராமசரித மஹிமையும் 95
13. ஸ்ரீராமசரித மானஸம் தொடங்கிய நாள் 110
14. ஸ்ரீராமசரித மானஸத்தின் - வடிவமும், மஹிமையும் 112
15. ஸ்ரீயாஜ்ஞவல்க்யர் - ஸ்ரீபரத்வாஜர் ஸம்பாஷணை, ப்ரயாகையின் மஹிமை 133
16. ஸதீதேவியின் ப்ரமை, ஸ்ரீராமனின் செல்வச்சிறப்பு, ஸதீதேவியின் வருத்தம் 139
17. சிவனின் மூலம் ஸதீதேவியின் த்யாகம்; ஸ்ரீசிவனின் ஸமாதி நிலை 157
18. ஸதீதேவி தக்ஷயஜ்ஞத்திற்குச் செல்லல் 167
19. தம் மணாளருக்கு ஏற்பட்ட அவமானத்தால் ஸதீதேவி வருந்தல், யோகாக்னியில் எரிதல், தக்ஷயஜ்ஞம் அழிதல் 168
20. பார்வதி தேவியின் பிறப்பும் - தவமும் 171
21. ஸ்ரீராமன் சிவபிரானிடம் மணந்து கொள்ள வற்புறுத்தல் 189
22. ஸப்த ருஷிகளின் சோதனையும், பார்வதியின் மஹிமையும் 191

23. காமவேள் தேவகார்யமாகச் செல்லல், பஸ்மமாதல் 202
24. ரதிதேவிக்கு வரமளித்தல் 211
25. தேவதைகள் சிவபிரானை மணந்திட வேண்டல், ஸப்தருஷிகள் பார்வதியிடம் செல்லல், 213
26. சிவபிரானின் விசித்ர மண ஊர்வலம், திருமண ஏற்பாடு 219
27. சிவபிரானின் திருமண வைபவம் 236
28. சிவபிரான் - பார்வதி ஸம்பாஷணை 248
29. அவதாரத்திற்கான காரணம் 270
30. நாரதரின் செருக்கும், மாயையின் மஹிமையும் 283
31. விச்வமோஹினியின் சுயம்வ்ரம், சிவகணங்கள், பகவான் இவர்களின் சாபம், நாரதரின் மோஹம் விலகல் 287
32. ஸ்வாயம்புவமனு - சதரூபா இவர்களின் தவமும், வரதானமும் 305
33. பானுப்ரதாபனின் கதை 323
34. ராவணன் முதலானோரின் பிறப்பு, தவம், செல்வச் செழிப்பு, அவர்களது துர்நடத்தைகள் 360
35. பூமிதேவியும், தேவதைகளும் கருணையுடன் அழைத்தல் 378
36. பகவானின் வரதானம் 383
37. ராஜா தசரதரின் புத்ர காமேஷ்டியாகம், ராஜமாதேவியர் கருத்தரித்தல் 387
38. ஸ்ரீபகவானின் அவதாரம், பால லீலை 390
39. விச்வாமித்ரர் மன்னரிடம் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை யாசித்தல் 417
40. விச்வாமித்ரரின் வேள்வியைக் காத்தல் 422
41. அஹல்யையைக் கடைத்தேற்றல் 425
42. ஸ்ரீராம லக்ஷ்மணருடன் விச்வாமித்ரர் ஜனகபுரி செல்லல் 428
43. ஸ்ரீராம லக்ஷ்மணரைக் கண்டு ஜனகர் ப்ரேமையில் திளைத்தல் 434
44. ஸ்ரீராமரும் - லக்ஷ்மணரும் ஜனகபுரியைப் பார்வையிடல் 439
45. பூங்காவைக் காணல், ஸ்ரீஸீதாதேவியின் முதல் சந்திப்பு, ஒருவருக்கொருவர் பார்த்தல் 454

46. ஸ்ரீஸீதாதேவி, பார்வதியை வழிபட்டு வரம் பெறல், ஸ்ரீராம லக்ஷ்மணரின் ஸம்பாஷணை 467
47. ஸ்ரீராமலக்ஷ்மணருடன் விச்வாமித்ரர் வேள்விச்சாலையுள் ப்ரவேசித்தல் 477
48. ஸ்ரீஸீதாதேவி வேள்விச்சாலையுள் ப்ரவேசித்தல் 490
49. விருது பாடுவோர் மூலமாக ஜனக மஹாராஜரின் உறுதியைக் கோஷித்தல் 494
50. மன்னர்கள் வில்லை எடுக்க முடியாத நிலையும், ஜனகரின் நிராசைப் பேச்சும் 496
51. ஸ்ரீலக்ஷ்மணரின் சினம் 499
52. சிவதனுஸை முறித்தல் 515
53. ஜயமாலையை அணிவித்தல் 520
54. ஸ்ரீராம லக்ஷ்மணர் - பரசுராமர் ஸம்பாஷணை 532
55. தசரதரிடம் ஜனகரின் தூதனை அனுப்புதல், அயோத்தியிலிருந்து மணமகன் வீட்டார் புறப்படல். 560
56. மணமகன் வீட்டார் ஊர்வலம் ஜனகபுரிக்கு வந்து சேரல், வரவேற்பு அளித்தல் முதலியன 589
57. ஸ்ரீஸீதா ராம விவாஹம் 621
58. மணமகன் வீட்டார் ஊர் திரும்புதல், அயோத்தியில் கோலாஹலம் 662
59. ஸ்ரீராமனின் சரித்ரத்தைக் கேட்டல், பாடல் மஹிமை. 692
60. கங்கையின் வரலாறு (அநுபந்தம்)

ஓம் நமோபகவதே ஸ்ரீராமசந்த்ராய

பாராயணம் செய்யும் முறை

(ஸ்ரீராமசரிதமானஸை முறைப்படிப் பாடம் செய்ய வேண்டும் என்று விரும்புபவர்கள்; படிக்கத் தொடங்கு முன் ஸ்ரீதுளஸீ•தாஸர், ஸ்ரீவால்மீகி, ஸ்ரீசிவன், ஸ்ரீஹனுமான் இவர்களைப் படத்திலோ, பிம்பத்திலோ ஆவாஹனம் செய்து, பூஜித்திடவும். பிறகு மூன்று ஸஹோதரர்களுடன் ஸ்ரீஸீதா ராமரை ஆவாஹனம் செய்து, 16 வகை உபசார பூஜைகளைச் செய்து, த்யானம் செய்ய வேண்டும். அதன் பின்னரே படிக்கத் தொடங்கவும் வேண்டும்.

இங்கு அதற்காக வேண்டி ஆவாஹனம் - பூஜனம் - த்யானம் இவைகளுக்கு உரிய மந்த்ரங்களை முறைப்படிக் கொடுத்திருப்பதைக் காணவும்.)

ஆவாஹனமந்த்ரம்

துளஸீக நமஸ் துப்யம் இஹ ஆகச்ச சுசிவ்ரத |
நைர்ருத்ய உபவிச்யேதம் பூஜனம் ப்ரதிக்ருஹ்யதாம் || 1

ஓம் ஸ்ரீதுளஸீ தாஸாய நம: ||

ஸ்ரீவால்மீக நமஸ் துப்யம்
இஹ ஆகச்ச சுபப்ரத |
உத்தர பூர்வயோர் மத்யே
திஷ்ட்ட க்ருஹ்ணீஷ்வ மே(அ)ர்ச்சனம் || 2

ஓம் ஸ்ரீவால்மீகாய நம: ||

கௌரீபதே நமஸ் துப்யம் இஹ ஆகச்ச மஹேச்வர |
பூர்வதக்ஷிணயோர் மத்யே திஷ்ட்ட பூஜாம்
க்ருஹாண மே || 3

ஓம் ஸ்ரீகௌரீ பதயே நம: ||

ஸ்ரீலக்ஷ்மண நமஸ் துப்யம் இஹ ஆகச்ச ஸஹப்ரிய: |
யாம்யபாகே ஸமாதிஷ்ட்ட பூஜனம் ஸங்க்ருஹாண மே ||4

ஓம் ஸ்ரீஸபத்னீகாய லக்ஷ்மணாய நம: ||

ஸ்ரீசத்ருக்ன நமஸ் துப்யம் இஹ ஆகச்ச ஸஹப்ரிய: |
பீடஸ்ய பச்சிமே :பாகே பூஜனம் ஸ்வீகுருஷ்வ மே ||5

ஓம் ஸ்ரீஸபத்னீகாய சத்ருக்னாய நம: ||

ஸ்ரீபரத நமஸ் துப்யம் இஹ ஆகச்ச ஸஹப்ரிய: |
பீடகஸ்ய உத்தரேபாகே திஷ்ட்ட பூஜாம்
க்ருஹாண மே ||6

ஓம் ஸ்ரீஸபத்னீகாய பரதாய நம: ||

ஸ்ரீஹனுமந் நமஸ் துப்யம் இஹ ஆகச்ச க்ருபாநிதே |
பூர்வபாகே ஸமாதிஷ்ட்ட பூஜனம் ஸ்வீகுரு ப்ரபோ ||7

ஓம் ஸ்ரீஹநூமதே நம: ||

அத ப்ரதான பூஜா ச கர்த்தவ்யா விதிபூர்வகம் |
புஷ்பாஞ்ஜலிம் க்ருஹீத்வா து த்யானம் குர்யாத்
பரஸ்ய ச ||8

(முதலில் ப்ரதான பூஜையை முறைப்படிச் செய்ய வேண்டும். பிறகு புஷ்பத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அஞ்ஜலி செய்த வண்ணம் த்யானிக்கவும்)

த்யானம்

ரக்தாம் போஜதளாபிராம நயனம்
பீதாம் பராலங்க்ருதம்
ச்யாமாங்கம் த்விபுஜம் ப்ரஸன்ன வதனம்
ஸ்ரீஸீதயா சோபிதம் |

காருண்யாம்ருத ஸாகரம் ப்ரியகணை:
ப்ராத்ராதிபிர்ப்பாவிதம்
வந்தே விஷ்ணு சிவாதி ஸேவ்யமநிசம்
பக்தேஷ்ட ஸித்தி ப்ரதம் || 9

ஆகச்ச ஜானகீநாத ஜான்க்யா ஸஹ ராகவ |
க்ருஹாண மம பூஜாம் ச வாயு புத்ராதிபிர்யுத: || 10

(என்று சொல்லி ஆவாஹனம் செய்யவும்)

ஸுவர்ண ரசிதம் ராம திவ்யாஸ்தரண சோபிதம் |
ஆஸனம் ஹி மயா தத்தம் க்ருஹாண
மணிசித்ரிதம் ||11

(என்று சொல்லி 16 வகை உபசாரங்களாலே பூஜிக்க வேண்டும்)

ஓம் அஸ்ய ஸ்ரீமன் மானஸ ராமாயண ஸ்ரீராம சரிதஸ்ய | ஸ்ரீசிவ-காகபுசுண்டி-யாஜ்ஞவல்க்ய-கோஸ்வாமி துளஸீ தாஸா: ருஷய: | ஸ்ரீஸீதாராமோ தேவதா | ஸ்ரீராமநாம இதி பீஜம் | பவரோகஹரீ பக்தி: சக்தி: | மம நியந்த்ரித அசேஷவிக்னதயா ஸ்ரீஸீதாராம ப்ரீதி பூர்வக ஸகலமநோரத ஸித்த்யர்த்தம் பாடே விநியோக: ||

(இனி ஆசமனம் செய்யவும்)

ஸ்ரீஸீதாராமாப்யாம் நம: |
ஸ்ரீராம சந்த்ராய நம: |
ஸ்ரீராம பத்ராய நம: |

(இந்த மூன்று மந்த்ரங்களைச் சொல்லி ஆசமனம் செய்யவும். ''ஸ்ரீராம'' என்ற யுகள பீஜ மந்த்ரத்தாலே ப்ராணயாமம் செய்யவும் வேண்டும்)

(இனி கரந்யாஸம்)

ஜக மங்க்ள குன க்ராம ராம் கே |
தானி முகுதி தன தர்ம தாம் கே ||
அங்குஷ்ட்டாப்யாம் நம: |

ராம ராம கஹிஜே ஜமுஹாஹீம் |
தின்ஹஹி ந பாபபுஞ்ஜ ஸமுஹாஹீம் ||
தர்ஜனீப்யாம் நம: |

ராம ஸகல நாமன்ஹ தே அதிகா |
ஹோவு நாத அக கக கன் பதிகா ||
மத்யமாப்யாம் நம: |

உமா தாரு ஜோஷித் கீ நாயீ |
ஸப்ஹி நசாவத் ராமு கோஸாயீ ||
அநாமிகாப்யாம் நம: |

ஸன்முக ஹோயி ஜீவ மோஹி ஜப்ஹீம் |
ஜன்மகோடி அக நாஸஹிம் தப்ஹீம் ||

கனிஷ்ட்டி காப்யாம் நம: |

மாமபிரக்ஷய ரகுகுல நாயக் |
த்ருதபர் சாப ருசிர் கரஸாயக் ||

கரதலகரப்ருஷ்ட்டாப்யாம் நம: |

(இனி ஹ்ருதயாதி அங்கந்யாஸம்)

ஜக மங்கள குன க்ராம் ராம் கே |
தானி முகுதி தனதர்ம தாம் கே ||

ஹ்ருதயாய நம: |

ராம ராம கஹி ஜே ஜமுஹாஹீம் |
தின்ஹஹி ந பாபபுஞ்ஜ ஸமுஹாஹீம் ||

சிரஸே ஸ்வாஹா |

ராம ஸகல நாமன்ஹ தே அதிகா |
ஹோவு நாத் அககக கன். பதிகா ||

சிகாயை வஷட் |

உமாதாரு ஜோஷித் கீ நாயீ |
ஸப்ஹி நசாவத் ராமு கோஸாயீ ||

கவசாய ஹூம் |

ஸன்முக ஹோயி ஜீவ மோஹிஜ்ப்ஹீம் |
ஜன்ம கோடி அக நாஸஹிம் தப்ஹீம் ||

நேத்ராப்யாம் வௌஷட் |

மாமபிரக்ஷய ரகுகுல நாயக் |
த்ருதபர் சாப ருசிர் கரஸாயக் ||

அஸ்த்ராய பட்

(பிறகு த்யானம்)

மாமவலோகய பங்கஜ லோசன் |
க்ருபா பிலோகனி ஸோச் பிமோசன் ||

நீல தாமரஸ ஸ்யாம் காம அரி |
ஹ்ருதய கஞ்ஜ மகரந்த மதுப் ஹரி ||

ஜாதுதான் பரூத் பல பஜன் |
முனி ஸஜ்ஜன் ரஞ்ஜன் அக கஞ்ஜன் ||

பூஸுர ஸஸி நவப்ருந்த பலாஹக் |
அஸரன் ஸரன் தீனஜன காஹக் ||

புஜபல் பிபுல் பார மஹி கண்டித் |
கரதூஷன் பிராத் பத பண்டித் ||

ராவனாரி ஸுகரூப் பூபர் |
ஜய தஸரத் குல குமுத் ஸுதாகர் ||

ஸுஜஸ் புரான் பிதித் நிகமாகம் |
காவத் ஸுர முனிஸந்த் ஸமாகம் ||

காருனீக ப்யலீக் மதகண்டன் |
ஸப் பிதி குஸல் கோஸ்லா மண்டன் ||

கலிமல் மதன் நாம மம்தாஹன் |
துளஸீ தாஸ் ப்ரபு பாஹி ப்ரணத்ஜன் ||

கரந்யாஸ - அங்கந்யாஸ - த்யானம் இவை நிறைவுற்றன. பிறகு பாராயணத்தைத் தொடங்கவும்.

ராமாய ராமபத்ராய
ராம சந்த்ராய வேதஸே |
ரகுநாதாய நாதாய
ஸீதாயா: பதயே நம: ||

ஸ்ரீராமசந்த்ர ச்ரித பாரிஜாத:
ஸமஸ்த கல்யாண குணாபிராம: |
ஸீதாமுகாம் போருஹஸஞ்சரீகோ
நிரந்தரம் மங்கள மாதனோது ||

(என்று சொல்லி, ஏதாவதொரு நைவேத்யத்தை ஸமர்ப்பித்து, கற்பூரஹாரத்தி காட்டி, பாராயணத்தை ஸமாபனம் செய்யவும்)

ஓம் ஸ்ரீரஸ்து-ஸ்வஸ்திரஸ்து-ஸமஸ்தஸன்மங்களானிஸந்து

'ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ஸீதா ராமாப்யாம் நம:
ஸ்ரீ ராமசந்த்ராய நம:
ஸ்ரீ ராமபத்ராய நம:'

ஸ்ரீ துளஸீ தாஸரின்
மஹா காவ்யம்

"ஸ்ரீ ராமசரித மானஸ்"

(துளஸீ ராமாயணம்)

"துளஸியின் வாழ்க்கை வரலாறு"

வடக்கில் ப்ரயாகைக்கு அருகில் 'பாந்தா' ஜில்லாவில் 'ராஜாபுர்' என்ற கிராமத்தில் ஆத்மாராம் டூபே என்ற அந்தணர் வசித்து வந்தார். அவரது மனைவி பெயர் ஹுலஸி.

1554ஆம் ஆண்டில் ச்ராவண சுக்ல ஸப்தமி தினத்தில் மூல நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் மேற்கூறிய பாக்யவான்களான தம்பதிகளுக்குப் பன்னிரெண்டு மாத கர்ப்ப வாஸத்திற்குப் பின் கோஸ்வாமி துளஸீதாஸர் பிறந்தார்.

பிறந்த உடன் குழந்தை அழவே இல்லை. அதற்குப் பதிலாக அவர் வாயிலிருந்து 'ராம்' என்ற சப்தம் எழுந்தது. அக்குழந்தையின் வாயில் '32' பற்கள் இருந்தன. குழந்தையின் உருவமோ நான்கு, ஐந்து வயது மதிக்கும்படியாக இருந்தது.

இம்மாதிரியான அதிசயக் குழந்தையைக் கண்டவுடன் குழந்தையின் தந்தை பயந்து போய் ஏதேனும் அமங்களம்-தீமை-ஏற்படுமோ! இந்தக் குழந்தையால் என்ன கேடு விளையப் போகிறதோ? என்று எண்ணினார். அவர் அந்தக் குழந்தையைப் பற்றிப் பல விதமாகக் கற்பனை-யோசனை-செய்ய ஆரம்பித்தார்.

தாயார் ஹுலஸியும் கவலையுற்றாள். அதனால் தாயார் குழந்தையை அபசகுனம் உள்ளது என்று எண்ணித் தனது தாதி மூலம் அவள் மாமியார் வீட்டிற்குத் தசமியன்று கொடுத்து அனுப்பிவிட்டாள். மறு தினமே அந்த் அம்மாள் துக்கத்தினால் உயிர் நீத்தாள்.

தாதியானவள் குழந்தையை மிகவும் அன்புடன் வளர்க்க ஆரம்பித்தாள். அவள் பெயர் சுனியா. குழந்தை துளஸீதாஸருக்கு ஐந்து வயது ஆகும் பொழுது சுனியாவும் இறைவனடி போய்ச் சேர்ந்தாள்.

குழந்தை இப்போது அநாதையாகி விட்டான். குழந்தை ஒவ்வொருவர் வீட்டு வாசலிலும் போய் இரந்து கேட்டு வாழ ஆரம்பித்தான். அவனுடைய கஷ்டமான வாழ்க்கையில் கவலை கொண்ட பார்வதி தேவி, அவன்மீது

இரக்கம் கொண்டு, ஒரு ப்ராஹ்மணி வேடம் பூண்டு, தினம் அந்தக் குழந்தைக்கு அன்ன ஆகாரம் கொடுக்கலானாள். ஜகத் ஜனனியே இம்மாதிரி தாயார் ரூபத்தில் வந்து குழந்தையை ஆதரிப்பது யாருக்குமே தெரியாது.

பகவான் சங்கரன் கனவில் வந்து தூண்டியதால் 'ராமஷைலபுர்' என்னும் இடத்தில் வசிக்கும் பக்தர் ஸ்ரீ அனந்தாநந்தருடைய பிரிய சிஷ்யரான ஸ்ரீ நரஹர் யானந்தாவால் தேடப்பட்டவர் துளஸீதாஸர்; '**ராம் போலா**' என்ற பெயரால் அழைக்கப்பட்டார். அவர் ராம் போலாவை அயோத்யாவிற்குக் கூட்டிச் சென்றார். (1561) மாக சுக்ல பட்ச பஞ்சமி வெள்ளிக் கிழமையன்று குழந்தை துளஸீதாஸருக்கு முறைப்படிப் பூணூல் போட்டார்.

யாருமே சொல்லிக் கொடுக்காமல் ஸ்ரீ துளஸீதாஸர் தாமாகவே காயத்ரி மந்த்ரத்தை உச்சரிக்க ஆரம்பித்தார்; எல்லாரும் ஆச்சர்யமடைந்தார்கள்.

இதன்பின் நரஹரிசுவாமியானவர் 'ராம்போலா' என்னும் துளஸிக்கு வைணவர்களின் ஐந்து ஸம்ஸ்காரங்களையும், ராம மந்த்ரத்தையும் தீட்சை எடுக்கும்படிச் செய்தார்.

பின்னர் அயோத்தியிலேயே அவரை வைத்துக் கொண்டு வேத அத்யயனம், **வித்யாத்யயனம்** கற்றுக் கொடுத்தார். குழந்தை 'ராம்போலாவின்' அறிவு அதிசயிக்கத்தக்க வகையில் இருந்தது. ஒரு முறை எதையும் கேட்டால் போதும்; அவருக்கு மனப்பாடமாகிவிடும். குரு அவர்களின் வாக்கில் எந்த வார்த்தைகள், பாடங்கள் வந்தாலும்; உடனே அது சிறுவன் துளஸிக்கு மனப் பாடமாகிவிடும். அயோத்தியிலிருந்து கொஞ்ச காலத்திற்குப் பின் குரு, சிஷ்யர் இருவரும் ஸூகர் க்ஷேத்ரம் வந்தடைந்தனர். அங்கு ஸ்ரீ நரஹரி அவர்கள் துளஸீ தாஸருக்கு ஸ்ரீ ராம சரித்ரத்தைப் போதித்தார்.

இன்னும் சில நாட்கள் கழிந்த பின் இருவரும் காசிக்குப் போனார்கள். காசியில் சேஷ ஸநாதனர் என்பவரிடம் இருந்துகொண்டு, பதினைந்து ஆண்டுகள் துளஸீதாஸர் வேத வேதாந்தப் பாடங்களை அத்யயனம் செய்தார்.

இங்கு துளஸீதாஸருக்கு லோக இச்சைகளும், ஸுகங்களும் லேசாகத் தலை தூக்கின. தனது அத்யாபகரிடம் உத்தரவு பெற்றுத் தனது பிறந்த ஊர் வந்து சேர்ந்தார். ஆனால், பாவம், அவர் குடும்பத்தில் யாருமே இல்லை. எல்லோரும் இறந்து போய்விட்டிருந்தனர். துளஸீதாஸர் அங்கேயே இருந்து தமது பித்ருக்களுக்கு ச்ராத்தம் செய்தார். முறை தவறாமல் எல்லாக் கடமைகளையும் செய்தபின் அங்கே இருந்துகொண்டு அங்குள்ள மக்களுக்குப் பகவான் ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியின் கதையைக் கதா காலட்சேப முறையில் கூறி வந்தார். இதில் அவருக்கு ஆத்ம திருப்தி ஏற்பட்டது.

1583ம் வருடம் ஜ்யேஷ்ட சுக்ல பட்சத்தன்று, பதின்மூன்றாம் தேதி, வியாழக்கிழமை, பாரத்வாஜ கோத்திரத்தில் உதித்த ஓர் அழகிய கன்னிகையுடன் துளஸீதாஸருக்கு விவாஹம் நடந்தது.

துளஸீதாஸர் புதிய மணப்பெண்ணுடன் ஆனந்தமாக வாழ்க்கையைத் தொடங்கினார்.

ஒருமுறை துளஸீதாஸரின் மனைவி தனது ஸஹோதரனுடன் தாய்வீடு செல்ல நேர்ந்தது. அந்தச் சிறுபிரிவையும் தாங்க முடியாது விரஹ வேதனையடைந்த துளஸீதாஸர் தானும் மனைவியின் பின்னாலேயே மாமியார் வீடு ஏகினார்.

இந்த் ஸம்பவம் துளஸீதாஸரின் மனைவிக்கு மிகவும் துக்கத்தை அளித்தது. அவமானமும், வெட்கமும் பொங்க அவரைத் திட்டினார்-

''லாஜன் லாகத் ஆப்கோ தௌடே ஆயே
ஹோஸாத் மேரே ஹாட்மாம்ஸ் சே இஸ்
சரீர் மேம் ஜித்னி தும்ஹாரி ஆஸக்தி ஹை!
உஸ்ஸே ஆதீ பீ யதி பகவான் மேம்
ஹோதீ தோ தும்ஹாரா பேடா பார் ஹோ
கயா ஹோதா''

அதாவது; துளஸீதாஸரின் இந்தச் செய்கையில் வெகுண்ட அவர் மனைவி கணவனிடம் துக்கத்துடன் கூறுகிறாள்.

''வெட்கம் வரவில்லையா உங்களுக்கு? என் பின்னால் ஓடி வந்தீர்களே! எலும்பினாலும், தோலினாலும் செய்யப்பட்ட என்னுடைய இந்த உடம்பின் மீது உள்ள ஆசைகளைப் பகவான் ராமனிடம் அர்ப்பணித்தால் உங்களது ஜன்மம் கடைத்தேருமே!'' என்கிறாள்.

துளஸீதாஸருக்கு இச்சொற்கள் காதுகளில் நாராசமாக விழுந்தன. பின்னர் ஒரு க்ஷணமும் அங்கு நிற்காமல் புறப்பட்டு விட்டார்.

துளஸீதாஸ் ப்ரயாகை வந்தடைந்தார். வந்தவுடன் தனது க்ருஹஸ்தாச்ரமத்தின் உடைகளைக் களைந்து விட்டு ஸாது வேடமணிந்தார்.

பிறகு தீர்த்தஸ்தலங்களில் தரிசனம் செய்து, ஸ்நாநம் செய்துவிட்டு, காசி வந்தடைந்தார். மானஸ ஸரோவருக்கு அருகே அவருக்குக் காகபுசுண்டி அவர்களின் தரிசனம் கிடைத்தது.

காசியில் ஸ்ரீ துளஸீதாஸர் ஸ்ரீராம கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு தினம் துளஸிக்கு ஒரு பிசாசு (பிணம்) தென்பட்டது. அது அவரிடம் ஸ்ரீராம பக்த ஹனுமானின் இருப்பிடம் தெரிவித்தது. துளஸீ ஹனுமானை அணுகி ஸ்ரீராம தரிசனம் செய்விக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தார். அப்பொழுது ஹனுமான் துளஸீதாஸரிடம் ''சித்ரகூடம் போய்ச் சேர், அங்கு உனக்கு ஸ்ரீராம பிரான் தரிசனம் கிடைக்கும்'' என்றார். அதேபோல் துளஸீ சித்ரகூடம் ஏகினார்.

சித்ரகூடம் போய்த் தனக்கென்று ஓர் இடத்தை 'ராம்காட்' என்னும் இடத்தில் ஸ்தாபிதம் செய்து கொண்டார்.

ஒரு தினம் துளஸீ ப்ரதட்சிணம் செய்வதற்காகக் கிளம்பினார். அப்போது வழியில் அவருக்கு ஸ்ரீராமச் சந்த்ர மூர்த்தியின்தரிசனம் கிடைத்தது. அவர், கண் முன் கண்டது என்ன?

'இரண்டு அழகிய ராஜகுமாரர்கள் குதிரையில் சவாரி செய்து கொண்டு கையில் அம்பும் வில்லுமாகப் போகிறார்கள்' அவர்கள் ரூபலாவண்யத்தில், ப்ரகாசத்தில் துளஸீ மதிமயங்கிப் போனார். ஆனால், அவர் அவர்களை யாரென்று கண்டு கொள்ளவில்லை. எல்லாமே கற்பனைதானே! பின்னால் ஹனுமான் துளஸியிடம் வந்து எல்லா விஷயங்களையும் கூறியபின்; துளஸீ நான் ஆண்டவனைக் கண்டு கொள்ளவில்லையே என்று அழுதார். பக்திப் ப்ரபாவத்தால் அவர் உடல் புளகாங்கிதமடைந்தது.

மறுபடி விடியற்காலை உனக்கு ஸ்ரீராம தரிசனம் கிடைக்கும் என்று ஹனுமான் கூறினார்.

ஸம்வத் 1607ம் ஆண்டு துளஸீதாஸருக்குப் புதன் கிழமை, அமாவாஸ்யை கூடிய சுபதினத்தில் மீண்டும் ஸ்ரீராம தரிசனம் கிடைத்தது. குழந்தைகள் வடிவமாக வந்த ஸ்ரீராம லட்சுமணர்கள் துளஸீயிடம் வந்து-

''ஐயா! கொஞ்சம் சந்தனம் தாருங்கள்'' என்றார்கள். இந்தச் சமயமும் துளஸி ஏமாந்து விடக்கூடாதே என்று எண்ணி, உடனே ஹனுமான் கிளிரூபம் கொண்டு, ஸந்தர்ப்பத்தை விட்டுக் கொடுக்காமல் சந்தனம் கொண்டு வந்தார்.

'சித்ரகூட் கே காட் பர் பயி ஸந்தன் கீ பீர் !
துள்ஸிதாஸ் சந்தன் கிஸேம் திலக் தேத் ரகுபீர் ||

துளஸீதாஸர் அந்த அழகிய உருவங்களில் மதிமயங்கிப் போனார். பகவான் ஸ்ரீரகுவீரன் தன்கைகளினால் சந்தனம் எடுத்துத் துளஸீதாஸரின் நெற்றியில் இட்டுவிட்டார். பிறகு மறைந்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

1628ம் ஆண்டு ஹனுமான் கனவில் கூறியபடி துளஸீதாஸர் மீண்டும் அயோத்தி வந்தடைந்தார்.

அச்சமயம் ப்ரயாகையில் திருவிழா நடந்தது. அதற்கு 'மாக்மேலா' என்று பெயர். அங்குச் சிறிதுகாலம் துளஸீ தங்கினார்.

திருவிழா முடிந்து சில நாட்களுக்குப் பிறகு ஓர் ஆல மரத்தடியில் திரு துளஸீதாஸருக்குப் 'பரத்வாஜர், யாஜ்ஞுவல்க்யர்' போன்ற முனிவர்களின் தரிசனம் கிடைத்தது.

மீண்டும் துளஸீதாஸர் காசி வந்தடைந்தார். காசியில் ப்ரஹ்லாத் கட்டத்தில் ஒரு ப்ராஹ்மணர் வீட்டில் தங்கியிருந்தார். இங்குதான் துளஸீக்கு கவித்வ சக்தி, அதாவது, கவிதைகளைச் செய்யும் சக்தியுண்டானது. அன்றிலிருந்து ஏராளமான கவிதைகளை ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதலானார். ஆனால், தினமும் அவர் பகலில் எழுதும் கவிதைகள் இரவில் அழிந்து போயின. இதனால், துளஸிக்கு தூக்கம் பிடிக்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் விழிப்புடன் உட்கார்ந்து இருந்தார். அப்போது பகவான் சங்கரரும், பார்வதியும் ப்ரத்யட்சமாகி, ''துளஸீதாஸரே! நீ அயோத்யாவிற்குப் போய் அங்கேயிருந்தபடி (ஹிந்தியில்) உன் மொழியில் காவ்ய-ரசனைகளைச் செய்து வா. எங்கள் ஆசீர்வாதத்தினால் உன் கவிதைகள் ஸாமவேத மந்த்ரம் போல் அமரத்வம் பெற்று விளங்கும். உனக்குப் பல நன்மைகள் உண்டாகும்'' என்றார்கள்.

அன்றே துளஸீதாஸர் பகவானின் வார்த்தையைச் சிரமேற் கொண்டு அயோத்யா சென்றார்.

ஸம்வத்-வருடம் 1631ம் ஆண்டு ஆரம்பமானது. அன்று 'ஸ்ரீராம நவமி' தினம். எப்படி த்ரேதாயுகத்தில் ஸ்ரீராமர் பிறக்கும் வேளையும், முஹூர்த்தமும் ஒன்று சேர்ந்தனவோ; அதேபோல் அன்றும் ஸ்ரீராம பிரானின் ஜன்மதினமாக இருந்தது.

அதே தினத்தில் விடியற்காலை ஸூர்யோதயத்திற்கு முன்னால் சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ துளஸீதாஸர் 'ஸ்ரீராம சரித மானஸ்' என்றும் மஹாகாவ்யத்தை எழுத ஆரம்பித்தார்.

இரண்டு வருடம், ஏழு மாதம், இருபத்தி ஆறு நாட்களில் இந்த மஹாகாவ்யம் நிறைவு பெற்றது.

1633ல் ம்ருகசீர்ஷ நட்சத்திரம் கூடிய சுக்ல பட்ச

ஸ்ரீராம விவாஹதினத்தில், ஏழு காண்டங்களையும் பூர்த்தி செய்தார் ஸ்ரீ துளஸீதாஸர்.

இதன்பின் கடவுளுடைய கட்டளைப் பிரகாரம் துளஸீதாஸர் காசி வந்தார். அங்கு அவர் பகவான்விச் வநாதருக்கும், அன்னபூர்ணா தேவிக்கும் தாம் எழுதிய '**ஸ்ரீராம சரித மானஸ்**' என்னும் ராம காவ்யத்தைப் படித்துக் காட்டினார். இரவில் புத்தகத்தைக் விச்வ நாதர் கோவிலிலேயே வைத்திருந்தார்.

என்ன அதிசயம்! மறுநாள் காலை புத்தகத்தின் மேலே நோக்கினார். அதில் ''ஸத்யம், சிவம், ஸுந் தரம்'' என்று எழுதியிருந்தது கண்டு துளஸீ ஆச்சரிய மடைந்தார். புத்தகத்தின் கீழே பகவான் சங்கரருடைய கையொப்பமும் தென்பட்டது. எல்லோரும் ஆச்சரியம் அடைந்தார்கள். இச்சமயம் அங்கு இருந்தவர் காது களிலும் ''ஸத்யம், சிவம், ஸுந்தரம் என்ற நாமங்களின் ரீங்காரம் கேட்டதாம்.

இச்சமயம் அங்குள்ள பல பண்டிதர்களுக்கும், வித் வான்களுக்கும் இச்செய்தி கேட்க அருவறுப்பாக இருந் தது. அவர்கள் மனத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

எல்லோரும் சேர்ந்து துளஸீதாஸரைக் கண்டபடி திட்டிக் கேலி செய்தார்கள்.

அவர்கள் யாவரும், **ஸ்ரீராம சரித மானஸ்** என் னும் புத்தகத்தையே திருடி ஒழித்துவிட ஏற்பாடு செய் தார்கள். அவர்கள் இரு திருடர்களைக் குடிசைக்கு அனுப்பிப் புத்தகத்தைத் திருடி வர ஏற்பாடும் செய் தார்கள்.

ஆனால், துளஸியே அறியாத வண்ணம் அவர் குடி சையின் வாயிலில் இரண்டு வீரர்கள் வில்லும்-அம்பு மாகக் காவல் புரிந்து நின்றிருந்தார்களாம். இதுவும் ஸ்ரீராமபிரானின் செயல்தான். அவர்கள் இருவரும் மிக அழகாக இருந்ததால்; திருடப்போன திருடர்களும் புத்தி திரும்பிப் பரிசுத்த மனத்துடன் வந்துவிட்டார் களாம்.

இந்த விஷயத்தை அறிந்த துளஸீதாஸர் மிகவும் வருத்தப்பட்டுத் தன்னுடைய அருமையான க்ரந்தத்தைத் தனது நண்பன் தோடர்மாலிடம் வைத்து வந்தார். இதன்பின் தானே இன்னொரு ப்ரதியையும் எழுதினார்.

அதேபோல இன்னும் பல ப்ரதிகள் எழுதப்பட்டன. புத்தகத்தினுடைய ப்ரபாவம் நாளுக்கு நாள் அதிகரித்தது. இங்கு பண்டிதர்களும், வித்வான்களும் வேறு வழியின்றி இந்த 'ராமசரிதமானஸ்' என்னும் புத்தகத்தின் ப்ரதியை ஶ்ரீ மதுஸூதன் ஸரஸ்வதிஜீ என்பவரை விட்டுப் படிக்கச் சொன்னார்கள். அவரோ இந்த மானஸ் புத்தகத்தைப் படித்த மாத்திரத்தில் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தார். அவர் மனமார வாழ்த்தி ஒரு வாழ்த்திதழ் எழுதினார். படித்தார், அதாவது:-

ஆனந்த கானனே ஹ்யஸ்மின்ஜங்கமஸ் துளஸீதரு:|
கவிதா மஞ்ஜரீ பாதி ராமப்ரமரபூஷிதா ||

''காசி என்னும் இந்த ஆனந்த வனத்தில் துளஸீதாஸர் என்னும் துளஸிச் செடி நடைபோட்டுக் கொண்டு இருக்கிறது. இந்தத் துளஸிச் செடியின் கவிதை என்னும் ரூபத்தில் உள்ள மஞ்ஜரி மிக அழகானது. இந்த அழகான செடி மீது ஶ்ரீராமரூபம் என்னும் வண்டு ரீங்காரம் செய்து கொண்டு இருக்கிறது.'' என்று அழகாகப் பாடினார்.

பண்டிதர்களுக்கும், ஸந்யாசிகளுக்கும் இந்த மாதிரி இவர் துளஸியைச் சிலாகித்துப் பாடியது பிடிக்கவில்லை. அவர்கள் ராமசரிதமானஸ் என்னும் காவ்யத்தைச் சோதிக்க வேண்டி ஒரு தந்திரம் செய்தார்கள். அதாவது; பகவான் விச்வநாதரின் கோவிலில் போய் எல்லாப் புஸ்தகங்களையும் வைத்தார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக வேதங்களையும் தர்க்க சாஸ்த்ரங்களையும், புராண இதிஹாசங்களையும் வைத்துக் கடைசியாகக் கீழே ராமசரித மானஸ் என்னும் காவ்யத்தை வைக்கச் செய்தார்கள். கோவில் கதவுகள் மூடப்பட்டு விட்டன.

என்ன அதிசயம்! காலையில் கோவில் கதவுகள்

திறந்த உடன் எல்லோரும் பார்த்தார்கள். அப்போது துளஸீதாஸரின் ராமாயணம் மட்டுமே மேலாக இருந்தது. இதைக்கண்ட பண்டிதர்கள் வெட்கித் தலை குனிந் தார்கள். அவர்கள் யாவரும் உடனே துளஸீதாஸரின் கால்களில் விழுந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து மன்னிப்புக் கேட்டார்கள். துளஸியும் மன்னித்தார்.

துளஸீதாஸர் இப்போது 'அஸீகாட்' என்னும் இடத் தில் இருக்கலானார். ஒரு தினம் அவரிடம் இரவில் கலியுகமான கோர ரூபமுள்ள ஓர் உருவம் வந்து தொந் திரவு கொடுத்தது. அப்போது துளஸீ ஸ்ரீராமபக்த ஹனு மானை த்யானித்தார். ஹனுமான் துளஸீதாஸரிடம் வந்து **'விநய பத்ரிகா'** எழுதும்படி அருளினார். அதே போல் கோஸ்வாமி துளஸீதாஸர் அழகான கவிதை யாக 'விநய பத்ரிகா' எழுதினார். பிறகு அவர் இதை ஸ்ரீராமன் ஸந்நிதியில் ஸமர்ப்பித்தார். மறைமுகமாக ஸ்ரீராமனே வந்து அவர் புத்தகத்தில் கையொப்பமிட் டார் என்பது வரலாறு. யாரும் அழிக்க முடியாதபடி ஸ்ரீராமனே அவரது காவ்யங்களைப் பாதுகாத்து வந் தார் என்கிறார்கள்.

ஸம்வத் வருடம் 1680ம் ஆண்டு ச்ராவண க்ருஷ்ண பட்சம், த்ருதியை சனிக்கிழமை அஸி கட்டத்தில் ஸ்ரீதுளஸீ தாஸர் என்னும் மஹான் ஸ்ரீராம நாமத்தை ஜபித்துக் கொண்டே சரீர த்யாகம் செய்தார் என்று கூறுகிறார்கள். அதாவது; பரமபதம் எய்தினார்.

''ஓம் தத்ஸத் ப்ரஹ்மார்ப்பணம் அஸ்து''

துளஸீ ராமாயணம்

ஸ்ரீ துளஸிதாஸரின் மஹாகாவ்யம்

(ஸ்ரீஇராமசரித மானஸ்)

ஹிந்தியிலிந்து தமிழாக்கம்-

ஜட் சேதன் குண தோஷமய
விஸ்வ கீன்ஹ கிர்தார் ||
ஸந்த் ஹம்ஸ் குண கஹஹீ
பய பரிஹரி பாரி விகார்'' ||

''கடவுள் உலகில் குணமும்-தோஷமும் உள்ள ஜட சேதனங்களைப் படைத்திருக்கிறார். ஆனால், ஸாது சந்து ரூபமான ஹம்ஸம் வசதியானது. நல்லதை க்ரஹித்துக் கொண்டு (பாலை) அதாவது, அசுத்தமான நீரைத் தள்ளி விடுவது போல்; நாம் நல்லதை க்ரஹித்துக் கொண்டு அசுத்தத்தைத் த்யாகம் செய்ய வேண்டும்.''

(துளஸீ)

துளஸீதாஸரின்

"ஸ்ரீ ராமசரித மானஸ்"

(முதல் ஸோபானம்)

பாலகாண்டம்

வர்ணாநாமர்த்த ஸங்கானாம்
ரஸானாம் சந்தஸாமபி|
மங்களானாம் ச கர்தாரௌ
வந்தே வாணீ விநாயகௌ || 1

அட்சரங்கள், (எழுத்துகள்) அர்த்த ஸமூஹம் (பொருள்) ரஸம், சந்தாலங்காரம் எல்லாவற்றிற்கும் மங்களத்தை உண்டு பண்ணும் ஸரஸ்வதி தேவியையும், விநாயகரையும் வணங்குகிறேன்.

பவானீசங்கரௌ வந்தே
ச்ரத்தாவிச்வாஸரூபிணௌ |
யாப்யாம் வினா ந பச்யந்தி
ஸித்தா: ஸ்வாந்தஸ்தமீச்வரம் || 2

ச்ரத்தை, விச்வாஸம் இவைகளின் இருப்பிடமான, ஸ்ரீ பார்வதி தேவியையும், ஸ்ரீ சங்கரரையும் நான் வணங்குகிறேன். இவர்கள் இல்லாவிட்டால்; ஸித்தர்கள் கூடத் தங்களது அந்தக்கரணத்தில் உள்ள ஈச்வரனையும் பார்க்க முடியாது போகும்.

வந்தே போதமயம் நித்யம்
குரும் சங்கரரூபிணம் |
யமாச்ரிதோ ஹி வக்ரோ(அ)பி
சந்த்ர: ஸர்வத்ர வந்த்யதே || 3

ஜ்ஞானமயனும், நித்யனும் ஆன சங்கரனாகிய குருவை நான் ஓயாமல் தினமும் வணங்குகிறேன். அவருடைய கடாட்சத்தால், அவரை அண்டியதால் வக்ரமான சந்த்ரன் கூட எல்லோராலும் வணங்கப்படுகிறான்.

ஸீதாராம குணக்ராம புண்யாரண்ய விஹாரிணௌ |
வந்தே விசுத்த விஜ்ஞாநௌ கவீச்வர கபீச்வரௌ ||4

ஸ்ரீ ஸீதாராமனுடைய குணமெனும் பவித்ரப் பூங் காவனத்தில் உலவிவரும் தூய அறிவாற்றல் படைத்த வால்மீகி என்னும் கவி சிரோமணிக்கும், வானர ச்ரேஷ்டரான ஸ்ரீ ஹனுமானெனும் மஹாத்மாவிற்கும் நான் வந்தனம் செலுத்துகிறேன்.

உத்பவ ஸ்த்திதி ஸம்ஹார
காரிணீம் க்லேச ஹாரிணீம் |
ஸர்வ ச்ரேயஸ்கரீம் ஸீதாம்
நதோ(அ)ஹம் ராமவல்லபாம் || 5

உத்பத்தி, காத்தல், பின் அழித்தல் போன்ற கஷ்டங் களை அகற்றுபவரும், எல்லாவிதமான கல்யாணங் களையும், நலன்களையும் செய்பவருமான ஸ்ரீராமச் சந்த்ர மூர்த்தியின் ப்ரிய பத்தினி ஸீதாதேவியை நான் நமஸ்கரிக்கின்றேன்.

யன்மாயாவசவர்த்தி விச்வமகிலம்
ப்ரஹ்மாதி தேவாஸுரா
யத் ஸத்வாதம்ருஷைவ பாதி ஸகலம்
ரஜ்ஜௌ யதா (அ) ஹேர்ப்ரம: |
யத் பாதப்லவ மேகமேவ ஹி பவாம்
போதேஸ்திதீர்ஷாவதாம்
வந்தே(அ)ஹம் தமசேஷ காரணபரம்
ராமாக்யமீசம் ஹரிம் || 6

ஸம்பூர்ணமான உலகமும், ப்ரஹ்மன் முதலான தேவர்களும், அஸுரர்களும் எவனது மாயைக்கு வசப் பட்டிருக்கின்றார்களோ, கயிற்றைப் பார்த்ததும் பாம்பு என்ற ப்ரமை ஏற்படுவதுபோல; நாம் காண்கின்ற உலகம் யாவும் எவன் இங்கு நிலைபெற்றிருப்பதாலே உண்மையென்று தெரியவருகிறதோ; மேலும், ஸம் ஸாரக் கடலைக் கடக்க விரும்புகின்ற மக்களுக்கு எவ னது திருவடிகள் மட்டுமே ஒரே ஒரு படகாக இருக் கின்றதோ; அப்படிப்பட்ட அவனே எல்லாக் காரணங் களுக்கும் மேலானவன், ஸ்ரீராமன் என்று சொல்லப் படுபவன், அந்தப் பகவானுக்கு நான் வணக்கம் செலுத்து கிறேன்.

நாநா புராண நிகமாகம ஸம்மதம் யத்

ராமாயணே நிகதிதம் க்வசிதன்யதோ(அ)பி |
ஸ்வாந்த: சுகாய துளஸீ ரகுநாதகாதா-
பாஷா நிபந்தமதி மஞ்ஜுளமாதநோதி || 7

அநேக புராண, வேத, தந்த்ர, சாஸ்த்ரங்களினால் தேர்ந்து எடுத்துத் தொகுத்ததை, வேறோர் இடத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தில் சொல்லப்பட்டதைத் தமது ஸ்ரீரகு நாதனின் கதையில் துளஸீதாஸர் தான் மனத்தில் தோன்றிய இச்சைப்படிக் கற்பனையினாலும், அழகிய சப்தங்களைச் சேர்த்து அழகான மொழியினாலும் இந்தக் காவ்யத்தை விஸ்தாரமாக அலங்கரித்திருக்கிறார்.

ஜோ ஸுமிரத் ஸிதி ஹோயி
கண நாயக் கரிபர் பதன்|
கர்உ அனுக்ரஹ் ஸோயி புத்தி
ராஸி ஸுப் குண் ஸதன் || 8

நினைத்த மாத்திரத்தில் ஸகலகார்யங்களும் ஸித்தியடையச் செய்கின்றவனும், கணங்களுக்கெல்லாம் நாதனானவனும், அழகிய யானை முகத்தையுடையவனும், (எல்லா ராசிகளுக்கும், சுபகாரியங்களுக்கும் ஸித்தியானு) புத்தியில் சிறந்தவனும், சுபகுணங்களுக்கிருப்பிடமானவனும் ஆன ஸ்ரீகணபதிப் பெருமான் எனக்கு க்ருபை செய்யட்டும்

மூக் ஹோயி பாசால் பங்கு
சடயி கிரிபர் கஹன் |
ஜாஸு க்ருபாம் ஸோ தயால் த்ரவவு
ஸகல் கலிமல் தஹன் || 9

யாருடைய க்ருபையால் ஊமை மிகவும் அழகாகப் பேச ஆரம்பிக்கின்றானோ, நொண்டி, ஊனமுற்றவன் பெரிய மலை மீது ஏறுகின்றானோ, இவ்விதமே கலியுகத்தில் எல்லாப் பாபங்களையும் தீர்த்தருளுபவரும், தயாமூர்த்தியுமான பரமாத்மா (தயவால் என்னை இங்கு காக்கட்டும்.) எனக்கும் அருள் புரியவேண்டும்.

நீலஸரோருஹஸ்யாம் தருண்அருண் பாரிஜ நயன் |
கர்உ ஸோ மம உர் தாம் ஸதா சீர்ஸாகர் ஸயன் ||10

நீலத் தாமரை போல் வர்ணமுள்ளவனும், சிகப்புத் தாமரையைப் போல் மலர்ந்த கண்களையுடையவனும், எப்போதும் பாற்கடலில் சயனித்துக் கொண்டு இருப்பவனும் ஆன பகவான் ஸ்ரீமந்நாராயணன் என் உள்ளத்திலும் வசிக்கட்டும்.

குந்த இந்து ஸம தேஹ் உமா
ரமன் கருணா அயன் |
ஜாஹி தீன் பர் நேஹ் கர்உ
க்ருபா மர்தன் மயன் || 11

குருக்கத்திப் புஷ்பம் போலும், சந்த்ரனைப் போலும் வெண்மையான சரீரம் உள்ளவனும், பார்வதி தேவியின் ப்ராண ப்ரியனும், தயைக்கு இருப்பிடமானவனும், ஏழை எளியரிடம் பாசம் உள்ளவனும், மன்மதனைத் தஹனம் செய்தவனுமான பகவான் சங்கரன் என்மீது க்ருபை செய்யட்டும்.

பந்தஉம் குரு பத் கஞ்ஜ க்ருபா ஸிந்து நரரூப் ஹரி |
மஹாமோஹ் தம புஞ்ஜ ஜாஸு பசன் ரபி கர் நிகர் || 12

க்ருபா ஸமுத்ரமானவனும், நரரூபமெடுத்த ஹரியும், எவன் வார்த்தை மஹாமோஹ ரூபமான இருட்டு அழிந்து ஸூர்ய கிரணங்களைப் போல ப்ரகாசித்து நமக்கு வழிகாட்டுகிறதோ; அப்படிப்பட்ட அந்தக் குருமஹாராஜனின் பாதங்களை நான் நமஸ்கரிக்கின்றேன்.

பந்தவும் குரு பத பதும பராகா |
ஸுருசி ஸுபாஸ் ஸரஸ் அனுராகா || 13
அமிய மூரிமய சூர்ண சாரூ |
ஸமன் ஸகல் பவ ருஜ் பரிவாரூ || 14

வாஸனை உள்ளதும், ப்ரேமையாகிய சுவை நிறைந்ததும் ஆன அந்தக் குருமஹாராஜனின் திருவடித்தாமரைத் தூசிகளை, ஸஞ்ஜீவினிப் பொடியான அந்தத் தூள்களை, பவரோகம் என்னும் நோய்க்கு நாசத்தை உண்டாக்குகிற அந்தப் பாதத் துளியை நான் வந்தனை செய்கிறேன்

ஸுக்ருதி ஸம்பு தன் பிமல் பிபூதீ|

மஞ்ஜுலமங்கல் மோத ப்ரஸூதீ || 15
ஜன் மன் மஞ்ஜு முகுர மல் ஹர்நீ|
கியேம் திலக் குன கன் பஸ் கர்நீ|| 16

அந்தத் தூளானது புண்ய புருஷனான சிவ பெருமானின் சரீரத்தில் சோபையைக் கொடுக்கும் நிர்மல விபூதி. நல்ல காரியங்களுக்கும், ஆனந்தத்திற்கும் இருப்பிடம்.

பக்தர்களின் மனோரூபமான அழகிய கண்ணாடியைத் துடைத்து அழுக்கைப் போக்கிவிடும். இந்த பஸ்மத்தைத் திலகமாக இட்டுக்கொண்டால் நற்குணங்களைத் தன் வசமாக்கிக் கொள்ளும். (மனம் ஆகிற கண்ணாடியும் பரிசுத்தமாகிறது என்று பொருள்.)

ஸ்ரீகுர் பத நக் மநி கன் ஜோதீ|
சுமிரத் திவ்ய த்ருஷ்டிஹியம் ஹோதீ|| 17
தலன் மோஹ தம ஸோ ஸப்ரகாஸூ|
படே பாக் உர் ஆவயி ஜாஸூ|| 18

ஸ்ரீகுரு மஹாராஜனின் கால் நகங்களின் காந்தி, அதன் பிரகாசமானது ஜொலிக்கும் மணியைப் போன்றது. அதை நினைத்த மாத்திரத்தில் நம் ஹிருதயத்தில் திவ்யமான ஒரு பார்வை கிடைக்கிறது.

அந்தத், திவ்ய ஒளியால் (திருஷ்டியால்) அஜ்ஞானம் என்னும் அந்தகாரம் (இருட்டு) அடியோடு அழிந்து போகிறது. அந்த ஒளி (திருஷ்டி) எவன் ஹிருதயத்தில் பதிகிறதோ அவன் மிகுந்த பாக்யவானே ஆவான்.

உகர்ஹிம் பிமல் பிலோசன் ஹீகே|
மிட்ஹிம் தோஷ துக் பவ ரஜ்னீ கே|| 19
ஸூஜஹிம் ராம சரித் மனி மானிக்|
குபுத் ப்ரகட் ஜஹம் ஜோ ஜேஹி கானிக்|| 20

அந்தத் தெய்வீக ஒளியானது (திருஷ்டியானது) யாருடைய ஹிருதயத்தில் அமைகிறதோ, அவர்களுடைய ஹிருதயத்தின் நிர்மலமான கண்கள் திறந்து விடுகின்றன. வாழ்க்கை என்னும்அந்தகாரமான ராத்திரி

யின் தோஷமும்-துக்கமும் விலகி விடுகின்றன. அப்போது ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியின் சரித்ரமாகிய மணி, மாணிக்கம் எல்லாம் களஞ்சியத்தில் மறைத்து வைக்கப் பட்டிருந்தாலும், வெளிப்படையாக இருந்தாலும், இவை யாவும் தன்னைத் தானாகவே வெளியாகிப் பார்வை யில் படத் தொடங்குகின்றன.

ஜதா ஸுஅஞ்ஜன் அஞ்ஜி த்ருக்
ஸாதக் ஸித்த ஸுஜான் |
கௌதுக் தேகத் ஸைல் பன்
பூதல் பூரி நிதான் || 21

ஸித்த புருஷர்களும், மந்த்ரஸாதனம் பண்ணும் ஸாதகர்களும், மஹான்களும் ஸித்தாஞ்ஜனம் என்ற ஒருவகை மையைக் கண்களில் இட்டுக்கொண்டு மலை களிலும், காடுகளிலும், நிலத்தின் அடியிலும் மிக மகிழ்ச்சியோடு பல மாணிக்கக் களஞ்சியங்களைப் பார்க்கிறார்கள்.

(ஸித்த ஜனங்கள் இம்மாதிரியான ஸ்ரீராமநாம மையைக் கண்களில் இட்டுக்கொண்டு மலைகளிலும், மடுவுகளிலும் உள்ள கஷ்டமான இடங்களுக்கும் ஸந்தோஷமாகப் போய் விடுகிறார்கள்.)

குருபத ரஜ் ம்ருது மஞ்ஜுள அஞ்ஜன் |
நயன அமிய த்ருக் தோஷ் பிபஞ்ஜன் || 22
தேஹிம்கரி பிமல் பிபேக் பிலோசன் |
பர்னவும் ராம சரித் பவ மோசன் || 23

ஸ்ரீகுருவினுடைய பாத தூளிகள் ம்ருதுவான, அழகான கண்களில் இட்டுக் கொள்ளும் மை ஆகும். (அஞ்ஜனம்) அது கண்களிலுள்ள அழுக்கைக் (குற்றங்களை) துடைக்க வல்லது. அதனால் விவேகம் என்னும் கண்களை நிர்மலமாக்கிக் கொண்டு நான் ஸம்ஸாரமாகிற கட்டிலிருந்து விடுபட ஸ்ரீராமனின் சரிதத்தை வர்ணிக் கிறேன்.

பந்தஉம் ப்ரதம மஹீஸுர சர்னா |
மோஹ் ஜநித ஸம்ஸய் ஸப் ஹர்னா || 24
ஸுஜன ஸமாஜ் ஸகல் குண் காநீ |
கர்உம் ப்ரநாம் ஸப்ரேம ஸுபானீ || 25

முதலில் நான் பூதேவர்களான ப்ராஹ்மணர்களின் கால்களைத் தொட்டு வணங்குகிறேன். இவர்கள் அஜ்ஞானத்தால் உண்டாகும் பல ஸந்தேஹங்களையும் போக்குபவர்கள்.

மேலும், நற்குணக் களஞ்சியமாக இந்த ஸமூஹத்தில் வாழும் மஹாத்மாக்களை ப்ரேமையுடனும், அன்பான வார்த்தைகளுடனும் வந்தனம் செய்கிறேன்.

ஸாது சரித் சுப சரித் கபாஸூ|
நிரஸ பிஸத் குனமய் பல் ஜாஸூ|| 26
ஜோ ஸஹி துக் பரசித்ர துராவா|
ப்ந்தநீய ஜேஹிம் ஜக் ஜஸ் பாவா|| 27

அதாவது, ஸாதுக்களின் வாழ்க்கை ஸந்நியாசிகளின் வாழ்க்கை போலப் பரிசுத்தமானது. எப்படிப் பஞ்சு (பருத்திப்பஞ்சு) வெண்மையாக அழுக்கில்லாமல், வாழ்வில் பற்றில்லாமல் நிர்மலமாக, சுத்தமாக இருக்கிறதோ; அதேபோல், ஸாதுக்களின் மனமும் பரிசுத்தமானது. ஸாதுக்களின் சரிதத்தில் விஷயப்பற்று கிடையாது. அதேபோல் பஞ்சில் ஈரப்பசை கிடையாது. அதேபோல் இவர்களும் ரஸமற்றவர்கள். இவர்கள் வாழ்வு பாபம், அறியாமை என்னும் இருட்டை விலக்கிப் பஞ்சுபோல் பிரகாசமாக இருக்கிறது. சுத்தமாக ஆகிறது. பஞ்சில் குணம், அதாவது, நூல் உள்ளது. அதேபோல் ஸாதுக்களின் சரிதமும் குணக்களஞ்சியமே. பருத்தியிலான ஆடை எப்படி மனிதனுடைய அசிங்கமான உடலை மறைத்து ப்ரகாசிக்கச் செய்கிறதோ; அதேபோல் ஸாதுக்கள் மனமெனும் நிர்வாண ரூபத்தைத் தமது நற்குணங்களால் ப்ரகாசிக்கச் செய்கிறார்கள். அதனால் எல்லோராலும் வணங்கப்படுகிறார்கள். இதுதான் தத்துவம். அதாவது, ஸாதுக்கள் தாங்கள் தங்களுக்கு நேரும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு மற்றவர்களின் குற்றங்களை மறைக்கிறார்கள். ஆகவே, அவர்கள் வணங்கற்குரிய புகழை அடைகிறார்கள்

முத் மங்கலமய் ஸந்த் ஸமாஜூ |
ஜோ ஜக் ஜங்கம் தீர்த்ராஜூ|| 28
ராம பக்தி ஜஹம் ஸுரஸரி தாரா|
ஸர்ஸஇ ப்ரஹ்ம பிசார் ப்ரசாரா|| 29

ஸாதுக்களின் ஸமூஹம் ஆனந்தமானது, கல்யாண குணமானது, (மங்களகரமானது) உலகில் நடமாடும் ப்ரயாகை அவர்கள். இந்தத் தீர்த்தராஜ் ப்ரயாகையு டன் ஸ்ரீராம சரித, ஸ்ரீராம பக்தி என்னும் கங்கையின் தாரை ப்ரவாஹமெடுத்து ஓடிக்கலக்கிறது. இவர்கள் மனத்தில் ஓடும் பரம்ம விசாரம் பற்றிப் பிரசாரம் செய்யும் ஸரஸ்வதி என்னும் நதி இருக்கிறது. இதை இங்கு ஸாதுக்களின் த்ரிவேணி ஸங்கமம் என்று துளஸி வர்ணிக்கிறார்.

பிதி நிஷேதமய் கலிமல் ஹர்னீ |
கர்ம கதா ரபிநந்தனி பர்னீ ‖ 30
ஹரி ஹர் கதா பிராஜதி பேனீ|
ஸுனத் ஸகல் முத் மங்கல் தேனீ ‖ 31

செய், செய்யாதே என்கிற கர்மங்களையும், கலியு கத்தின் பாவங்களையும் போக்கக்கூடிய ஸூர்ய புத்திரி யான யமுனை இங்கு இருக்கிறது. பகவான் விஷ்ணு, சங்கரருடைய கதைகள் த்ரிவேணி மூலம் விளங்குகிறது என்பது ப்ரஸித்தம். யார் இதைக் கேட்கிறார்களோ, ஆச்ரயிக்கிறார்களோ அவர்களுக்கு ஆனந்தத்தையும், செல்வாக்கையும் கொடுக்க வல்லது யமுனை.

படு விஸ்வாஸ் அசல் நிஜ தர்மா |
தீர்த்ராஜ் ஸமாஜ் ஸுகர்மா ‖ 32
ஸப்ஹி ஸுலப் ஸப் தின் ஸப் தேஸா|
ஸேவத் ஸாதர் ஸமன் கலேஸா ‖ 33

ஸந்த் ஸாதுக்களின் ஸமாஜம் என்னும் ப்ரயாகை யில், தங்களது தர்மத்தில் நிலையான நம்பிக்கை கொண்ட அட்சய விருட்சம் போன்றது. இந்தத் திரிவேணி பிர வாஹமானது எல்லோருக்கும், எவர் ஆராதித்துப் பூஜை செய்கிறார்களோ அவர்களுக்கும் சமயத்தில் உதவி செய்கிறது; யாவருக்கும் நன்மை செய்கிறது; பழைய துன்பங்களையும் க்லேசங்களையும் மாற்றுகிறது.

அகத் அலௌகிக் தீர்த்ராவூ |
தேஇ ஸத்ய பல ப்ரகட் ப்ரபாவூ ‖ 34

அதாவது அந்தத் தீர்த்தராஜ் என்னும் ப்ரயாகை

யின் ப்ரவாஹம் அற்புதமானது; வர்ணிக்க முடியாதது. உடனுக்குடன் பலன் தரக் கூடியது. அதனுடைய மஹிமை ப்ரத்யட்சமானது.

ஸுநி ஸமுஜ்ஹிம் ஜன முதித் மன் மஜ்ஜஹிம் அதி அனுராக் |
லஹஹிம் சாரி பல் அசத் தனு ஸாது ஸமாஜ் ப்ரயாக் ‖ 35

மஹாத்மாவான ப்ரயாகையினுடைய மஹிமையைத் தெளிந்த மனதோடு கேட்டும், அறிந்தும் ப்ரவாஹத்தில் அக்கரையுடன் முழுகி வருபவர்களும், அன்பான அக்கரையுடன் பூஜிக்கிறவர்களும் இந்த ஜன்மத்திலேயே இதே உடல், மனத்துடன் கூடியிருக்கும் போதே மோட்சமும் அதாவது, தர்ம, அர்த்த, காம மோட்சம் எனற நான்கு வகைப்பேறுகளையும் பெறுவார்கள்.

மஜ்ஜன் பல் பேகிஅ தத்காலா |
காக் ஹோஹிம் பிக பக்உ மராலா ‖ 36
ஸுனி ஆசரஜ் கரை ஜனி கோயீ |
ஸத் ஸங்கதி மஹிமா நஹிம் கோயீ ‖ 37

இந்தப் புண்ய தீர்த்தத்தில் முழுகி எழுந்தவர்களுக்குக் கைமேல் பலன் கிடைக்கிறது. அதாவது, காகம், குயிலாகிறது. கொக்கு, ஹம்ஸ பட்சியாகிறது. இதைக் கேட்டு ஆச்சர்யம் அடைய வேண்டியதில்லை. ஏனெனில்; இந்தத் தீர்த்தத்தின் மஹிமையும், நல்லவர்களின் நட்பும் நிதர்சனமாகக் காணப்படுகிறது.

வால்மீக நாரத் கட்ஜோனீ |
நிஜ நிஜ் முக்னி கஹீ நிஜ் ஹோனீ ‖ 38
ஜலசர் தலசர் நபசர் நாநா |
ஜே ஜட் சேதன் ஜீவ ஜஹானா ‖ 39

வால்மீகி, நாரதர், அகஸ்தியர் யாவரும் தங்களுடைய வாழ்க்கை விருத்தாந்தங்களைக் கூறி இருக்கிறார்கள். ஜலத்தில் வாழ்பவை, நிலத்தில் வாழ்பவை, ஆகாயத்தில் பறப்பவை, மற்ற ஜடஜந்துக்கள் எத்தனை இவ் வுலகில் இருக்கின்றனவோ, அத்தனை நிலராசிகளைப் பற்றியும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மதி கீர்தி கதி பூதி பலாயீ|
ஜப் ஜேஹிம் ஜதன் ஜஹாம் ஜேஹிம் பாயீ||40
ஸோ ஜானப் ஸத்ஸங்க் ப்ரபாவூ||
லோகஹூம்பேத் ந ஆன் உபாவூ| 41

அவைகளிடமிருந்து ஒருவன் முயற்சியுடன் புத்தி, கீர்த்தி, நன்னடத்தை, ஐச்வர்யம், நன்மைகள் என இப் படி எதை அடைந்தாலும், அதற்குக் காரணம் ஸத்ஸங் கம்தான். அதாவது; நல்லவர் சேர்க்கைதான் மஹிமை என அறிதல் வேண்டும். வேதங்களும் இதையேதான் கூறுகின்றன.

பினு ஸத்ஸங்க் பிபேக் ந ஹோயீ|
ராம் க்ருபா பினு ஸுலப் ந ஸோயீ|| 42
ஸத் ஸங்கத் முத் மங்கள் மூலா|
ஸோயி பல் ஸிதிஸப் ஸாதன் பூலா|| 43

நல்லவர் சேர்க்கையில்லாவிடில் விவேகம் வராது. அந்த விவேகமானது ஸ்ரீராமனுடைய அருள் இல்லா விட்டால் எளிதில் கிடைக்காது. அவர் க்ருபையால் தான் ஸுலபமாகக் கிடைக்கிறது. ஸத்ஸங்கம் என்பது மகிழ்ச்சி- நன்மையின் வேர். அந்த ஸத்ஸங்கம் என் னும் ப்ராப்தி பழம் போன்றது. அதாவது, ஸாதனம் பூ போன்றது.

ஸட் ஸுதர்ஹிம் ஸத் ஸங்கதி பாயீ|
பாரஸ் பரஸ் குதாத் ஸுஹாயீ|| 44
பிதி பஸ் ஸுஜன் குஸங்கத் பர்ஹீம் |
ஃபனி மனி ஸம் நிஜ குன் அநுஸர்ஹீம்|| 45

துஷ்டர்களும் நல்லவர் சேர்க்கையால் சுத்தமடை கிறார்கள், திருந்துகிறார்கள். எப்படி பாரஸ் தொட்ட மாத்திரத்திலேயே இரும்பானது அழகான தங்கமாகி றதோ; அதேபோல, துஷ்ட நாகத்தின் தலையில் மணி இருந்தாலும் நாகத்தினுடைய விஷமானது எப்படி அதன் தலையில் உள்ள மணியைப் பாதிக்கிறதில்லையோ, அதனுடைய ப்ரகாசத்தை விட்டுக் கொடுப்பதில்லையோ, அதேபோலத் தெய்வாதீனமாக ஸாது புருஷர்கள், துஷ் டர்கள் ஸங்கத்தில் இருந்தாலும் கூடத் தங்களது இயல் பான நல்ல குணத்தின் ப்ரகாசத்தை விட்டுவிடுவதில்லை.

அதே மாதிரி ஸாதுக்கள் துஷ்டர்களோடு கூடியிருந்தாலும், மற்றவர்களை ப்ரகாசப்படுத்துகிறார்கள். துஷ்டர்களின் ஜம்பம் அவர்களிடம் பலிப்பதில்லை.

பிதி ஹரி ஹர் கபி கோபித் பானீ |
கஹத் ஸாது மஹிமா ஸகுசானீ || 46
ஸோ மோ ஸன் கஹி ஜாத் ந கைஸே |
ஸாக் பனிக் மனி குன கன் ஜைஸே || 47

ப்ரம்மா, விஷ்ணு, சிவன், கவி, பண்டிதர்களின் வார்த்தையாலும் ஸாதுக்களின் மஹிமையைப் பற்றி வர்ணிக்க முடியாது. அவர்களோ தயக்கம் கொள்ளும் போது நான் எம்மாத்திரம் வர்ணிக்கமுடியும்? காய்கறி விற்கும் வியாபாரியிடம் போய் விலையுயர்ந்த மணிகளைப் பற்றி விலை பேசினால் என்ன தெரியும்? ஸாதுக்களின் குணாதிசயங்களை என்னால் வர்ணிக்க முடியுமா?

பந்தவும் ஸந்த் ஸமான் சித ஹித்
அன்ஹித் நஹிம் கோயி |
அஞ்சலி கத் ஸுப ஸுமன் ஜிமி
ஸம ஸுகந்த் கர் தோயி || 48

நான் ஸாதுக்களை, மஹான்களை நமஸ்கரிக்கிறேன். அவர்கள் ஹிருதயத்திலே கல்மஷம் இல்லை, அவருக்குச் சத்ருவும் இல்லை, நண்பரும் இல்லை. அவர்கள் இரு கைகளிலும் கமல புஷ்பத்தை வைத்துக் கொண்டு வாசனை அளிக்கிறார்கள். அவர்களது அந்தக் கைகளும் வாசனை வீசுகிற மாதிரி ஸாது புருஷர்கள், சத்ரு நண்பர்கள், இருவரையும் ஸமமாகப் பாவிக்கிறார்கள். அவர்களுக்கு நன்மை அளிக்கிறார்கள்.

ஸந்த் ஸரள் சித் ஜகத் ஹித்
ஜானி ஸுபாஉ ஸநேஹு |
பால பினய் ஸுநி கரி க்ருபா
ராம சரன் ரதி தேஹு || 49

ஸாதுக்கள், முனிவர்கள் சரளமான ஹிருதயம் உள்ளவர்கள், உலகத்திற்கு நன்மை உண்டாக்குகிறார்கள். அவர்களுடைய இத்தகைய

ஸ்வபாவத்தையும், ஸ்னேகத்தையும் தெரிந்து அவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன். என்னுடைய இந்தச் சிறு வேண்டுகோளைக் கேட்டு அருள்கூர்ந்து பகவான் ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியின் சரணாரவிந்தங்களில் எனக்காக ப்ரீதியையும் கொடுப்பார்கள்.

பஹுரி பந்தி கல் கன் ஸதிபாயேம் |
ஜே பினு காஜ் தாஹிநேஹு பாயேம் || 50
பர் ஹித் ஹாநி லாப் ஜின்ஹ கேரேம் |
உஜ்ரேம் ஹர்ஷ் பிஷாத் பஸேரேம் || 51

நான் இப்போது உண்மையிலேயே துஷ்டர்களை வணங்குகிறேன். அவர்கள் ஒரு விதமான உதவியும் இல்லாமல் தங்களுக்கு இதம் செய்கின்றவர்களுக்கும் கெடுதலைச் செய்கிறார்கள். அதனால் தன்னுள் ஸந்தோஷமடைகிறார்கள். அவர்கள் பிறருக்குத் துன்பம் விளைவித்து அதில் ஆனந்தமடைகிறார்கள். பிறர் அழிந்தால் அதில் அவர்களுக்கு ஸந்தோஷம். இப்படிப்பட்ட மூர்க்கர்களையும் நான் வணங்குகிறேன்.

ஹரி ஹர் ஜஸ் ராகேஸ் ராஹு ஸே |
பர் அகாஜ் பட ஸஹஸ்பாஹு ஸே || 52
ஜே பர் தோஷ் லகஹிம் ஸ்ஹஸாகீ |
பர் ஹித் க்ருத ஜின்ஹ கே மன் மாகீ || 53

அவர்கள் ஹரி, ஹரன் என்னும் பிரசண்ட கீர்த்திமயமான பெயரைக் கேட்டு அந்த ஒளி வீசும் சந்திரனுக்கும் ராஹுவைப்போல, துன்பம் தர விரும்புகிறவர்கள். பிறருக்குக் கஷ்டம் கொடுக்கும் விஷயத்தில் அவர்கள் ஸஹஸ்ரபாஹுபோன்றவர்கள். மற்றவர் குற்றங்களை ஆயிரம் கண்களோடு பார்ப்பவர்கள். ஒரு ஈயானது முழு நெய்யில் விழுந்து, தானும் அதில் இறந்து, பிறரையும் சாப்பிட விடாமல் கெடச் செய்கிறதோ; அதேபோல் துஷ்டர்கள் தாங்கள் கெட்டது மட்டும் அல்லாமல் பிறரையும் கெடுப்பார்கள்.

தேஜ் க்ருஸாநு ரோஷ் மஹிஷேஸா |
அக் அவகுன் தன் தனீ தனேசா || 54

உதய் கேது ஸம ஹித் ஸப்ஹீகே |
கும்பகரன் ஸம ஸோவத் நீகே || 55

அவர்கள் தஹிப்பதில் அக்னியைப் போன்றவாறும், குரோதத்தில் (கோபம்) எமனைப் போன்றவாறும் பாபம், கெட்ட நடத்தையெனும் துர்க்குணங்களைச் செல்வமாகப் பெறுவதில் குபேரனுக்கு ஸமமாகவும், எல்லோருடைய ஸுகத்தையும் நாசம் செய்வதில் கேது வைப் போன்றவர்களாகவும் இப்படிப் பட்ட வெறுக் கத்தக்கவர்கள் கும்பகர்ணனைப்போல் தூங்கிக் கொண்டு இருப்பதே நலம்.

(ஏனெனில்; இவர்களுடைய விஷம புத்தியானது விழித்திருந்தால் உலகத்திற்குக் கேட்டையே விளை விக்கும்.)

பர் அகாஜு லகி தனு பரிஹர்ஹீம் |
ஜிமி ஹிம உபல் க்ருஷீ தலி கர்ஹீம் || 56
பந்தஉம் கல் ஜஸ ஸேஷ் ஸரோஷா |
ஸஹஸ் பதன் பர்னஇ பர் தோஷா || 57

பனிக்கட்டிகள் (ஆலங்கட்டிகள்) மொத்தமாக வயல் களிலும், பயிர்களிலும் விழுந்து பயிரையும் நஷ்டப் படுத்தித் தானும் எப்படிக் கரைந்து போகிறதோ; அதேபோல் ஒரு துஷ்டன் மற்றவன் காரியத்தைக் கெடுக் கத் தன்னைத்தானே அழித்துக் கொள்ளவும் தயாராகி றான். நான் துஷ்டர்களை அதாவது, ஆயிரம் தலைகள் உள்ள ஆதிசேடனுக்கு ஸமமாக எண்ணி வணங்குகி றேன். ஏனெனில்; இவர்கள் மற்றவர்களைப் பற்றி ஆயிரம் முகங்களுடன், வாய்களுடன் வர்ணிக்கிறார்கள். இவர்களைவிட நாகமே சிறந்தது எனலாம்.

புனி ப்ரனவஉம் ப்ருதுராஜ் ஸமானா |
பர் அக்ஸுனயி ஸகஸ் தஸ் கானா || 58
பஹுரி ஸக்ர ஸம பினவஉம் தேஹீ|
ஸந்தத் ஸுரானீக் ஹித் ஜேஹீ || 59

ப்ருது மஹாராஜன் பகவானின் புகழைக் கேட்ப தற்காக வேண்டி 10 ஆயிரம் காதுகளை வேண்டிப் பெற்றானாம். ஆகவே, அந்தப் ப்ருதுவைப் போலவே

பிறரது பாபங்களைக் கேட்கவே பத்தாயிரம் காதுகள் கொண்டவர்களையும் நான் வணங்குகிறேன். மேலும், இந்த்ரனைப்போல எண்ணி நான் வணங்குகிறேன்; வேண்டுகிறேன். ஏனெனில்; அவர்களுக்கு ஸுரா(கள்) பானங் கூட நல்லதாகவும், இதம் செய்யக் கூடியதாக வும் அமைகிறது. அதாவது, (இந்த்ரனுக்குத் தேவதை களின் ஸேனை நன்மைபயக்குவன என்பதாகும்.)

பசன் பஜ்ர ஜேஹி ஸதா பியாரா |
ஸகஸ் நயன் பர் தோஷ் நிஹாரா || 60

எவனுக்குக் கடுமையான வசனங்கள் ஆகிற வஜ் ராயுதமும் இன்பமளிக்கிறதோ; எவன் ஆயிரம் கண் களுடன் பிறரின் தோஷங்களைக் காண்கிறானோ; அப்படிப்பட்டவரை நான் வணங்குகிறேன்.

உதாஸீன் அரிமீத் ஹித் ஸுநத்
ஜர்ஹிம் கல் ரீதி |
ஜாநி பானி ஜுக்ஜோரி ஜன்
பின்தீ கர்இ ஸப்ரீதி || 61

வருந்துகின்ற பகைவனானாலும் சரி, நண்பனானா லும் சரி அவர்கள் நன்மை அடைவதைக் கேட்டாலே; பொறாமைப்படுவது துஷ்டர்களின் வழக்கமான பண்பு. ஆகவே, இதனை அறிந்து இரு கரங்களையும் குவித்து அன்புடன் அவர்களிடம் வேண்டி நிற்கிறேன்.

மைம் அப்னீ திஸி கீன்ஹ நிஹோரா |
தின்ஹ நிஜ ஓர் ந லாஉப் போரா || 62
பாயஸ் பலிஅஹிம் அதி அனுராகா |
ஹோஹிம் நிராமிஷ் கப்ஹும்கி காகா || 63

காகத்தை ப்ரியத்துடன் போஷணை செய்து வளருங் கள். அது பின்னும் மாமிசம் தின்னுவதை விடு வதில்லை அல்லவா?

அதே போல் நான் எத்தனைதான் வேண்டிக் கொண் டாலும், துஷ்டர்கள் அவர்கள் போக்குப்படிதான் போவார் கள். தங்களுக்குரிய ஸந்தர்ப்பத்தை நழுவ விடுவதில்லை.

பந்தஉம் ஸந்த் அஸஜ்ஜன் சர்நா |

துக்ப்ரத் உபய் பீச் கசு பர்நா॥ 64
பிசுரத் ஏக் ப்ரான் ஹரி லேஹீம் |
மிலத் ஏக் துக் தாருன் தேஹீம் ॥ 65

நான் இப்போது ஸாதுக்களையும், துஷ்டர்களையும் ஸமமாகப் பாவித்து இருவர் காலிலும் வீழ்ந்து வணங்கு கிறேன். ஏனெனில், அவ்விருவருமே துயரத்தைத் தரு பவர்கள்தான். ஆனாலும், அவர்களில் கொஞ்சம் வித் யாஸம் இருக்கிறது.

ஒரு வகையினரால் துக்கத்திலிருந்து மீட்பு கிடைக்கி றது; இன்னொருவர் மூலம் பவஸாகரத்தில் ஆழ்ந்து மூழ்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இருவரும் ஒன்று தான்.

(அதாவது, ஸாதுக்களைப் பிரிகின்றபோது மரணம் போல் வருத்தம் உண்டாகிறது. துஷ்டர்களோடு சேர்வ தும் அப்படித்தான்)

உபஜஹிம் ஏக் ஸங்க் ஜக் மாஹீம் |
ஜலஜ் ஜோங்க் ஜிமி குன் பில்காஹீம் ॥ 66
ஸுதா ஸுரா ஸம ஸாது அஸாதூ |
ஜனக் ஏக் ஜக் ஜலதி அகாதூ ॥ 67

நல்லவர் (ஸாது) கெட்டவர் (அஸாது) உலகில் சேர்ந்தே பிறக்கிறார்கள். தாமரையும் சகதியும் ஒரே இடத்தில் பிறந்தாலும் குணங்கள் மாறுபட்டு இருப்பது போல; வெவ்வேறு குணங்களை உடையவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

தாமரைப் புஷ்பத்தை ஸ்பரிசித்துப் பார்த்தமாத் திரத்தில் நமக்கு ஸுகத்தைக் கொடுக்கிறது. மற்றது தொட்ட மாத்திரத்திலேயே நம் உடல் இரத்தத்தை உறிஞ்சி மரணத்திற்கே கொண்டு செல்கிறது.

அதுபோல் ஸாது ஜனங்கள் மரணம் விளைவிக்கும் ஸம்ஸாரத்திலிருந்து காப்பாற்றும் தன்மை வாய்ந்தவர்கள். அம்ருதம் போல் ஸுகத்தைக் கொடுப்பார்கள். அஸா துக்கள் கள்ளைப் போன்றவர்கள். ஏனெனில்; காமம், இச்சை என்னும் மயக்கம் தரும் தன்மை உள்ளவர்கள்.

பல் அன்பல் நிஜ் நிஜ் கர்தூதீ |
லஹத் ஸுஜஸ் அப்லோக் பிபூதீ || 68
ஸுதா ஸுதாகர் ஸுர்ஸரி ஸாதூ |
கரல் அநல் கலிமல் ஸரி ப்யாதூ || 69
குன் அவகுன் ஜானத் ஸப் கோயீ |
ஜோ ஜேஹி பாவ் நீக் தேஹி ஸோயீ || 70

நல்லதும்-கெட்டதும்; அவரவர் கர்மாக்களின் அனுசாரம் நமது வாழ்வில் புகழ்ச்சியோ, இகழ்ச்சியோ கிடைக்கிறது. உலகில் அம்ருதமும், சந்த்ரனும், ஸுர்யனும், கங்கையும், ஸாதுக்களும், விஷமும், நெருப்பும், கலியுகத்தில் பாபங்களுக்கு உரிய நதியான 'கர்மநாசா' நதியும், ஹிம்ஸை செய்யும் தொழில் உடைய வேடனும் உள்ளனர். இவர்களது குணதோஷங்களை எவரும் அறிந்ததே. எது எவனுக்குப் பிடித்திருக்கிறதோ அது அவனுக்கு நல்லதாகப் படுகிறது. நமக்குத் துன்பமளிக்கும் துஷ்ட மிருகங்களும் பாம்பும், தேளும், புலியும், சிறுத்தையும், எல்லாமே உள்ளன. இந்த நல்லவை, கெட்டவை நம்முடைய புண்ணிய பாபத்திற்கேற்ப நம்மைப் பிடித்து வாட்டுகின்றன.

பலோ பலாயிஹி பை லஹயி லஹயி
நிசாயிஹி நீசு |
ஸுதா ஸராஹிய அமர்தாம் கரல்
ஸராஹிய மீசு ||

நன்மை நன்மையையே சேருகிறது. துன்பமும், அற்பமும் துன்பத்துடனேயே, அற்பத்துடனேயே சேருகிறது. அமிர்தம் வாழ்வதற்கே உபயோகப்படுகிறது. அதே போல் விஷம் சாவதற்கே உபயோகப்படுகிறது!

கல் அக அகுன் ஸாது குன் காஹா |
உபய் அபார் உததி அவகாஹா || 72
தேஹி தேம் கசு குன் தோஷ் பகானே |
ஸங்க்ரஹ் த்யாக் ந பினு பஹிசானே || 73

துஷ்டர்களுடைய பாவச் செயல்களுக்கும், கெட்ட குணங்களுக்கும் ஸாதுக்களுடைய குணாதிசயமுள்ள கதைகளுக்கும், இரண்டுக்குமே கரைகாணமுடியாத ஆழங்காண முடியாத ஸமுத்திரநிலைதான். அதனால் சில குணங்களையும், சில தவறுதல்களையும் பற்றி வர்ணனை செய்யப்படுகிறது.

அவை தள்ளமுடியாதவை. (ஏனெனில், இரண்டுமே அதலபாதாளத்தில் உள்ளவை.)

பலேஉ போச் ஸப் பிதி உபஜாஏ |
கனி குன் தோஷ் பேத் பில்காயே || 74
கஹஹிம் பேத் இதிஹாஸ் புரானா |
பிதி ப்ரபஞ்சு குன் அவகுன் ஸாநா || 75

நல்லவையும், கெட்டவையும் ப்ரம்மாவினால் படைக்கப்பட்டவைதான். (மனிதர்களுள் நல்லவர், கெட்டவர் என்னும் இரு கோட்பாடுகள் உள்ளன.) இதனால்தான் வேதமானது இவர்களிடம் உள்ள குணதோஷங்களை ஆராய்ந்து இவர்களைத் தனித்தனியாகப் பிரித்து இருக்கிறது. இதிஹாஸங்களும், புராணங்களும் குண-அவ குணத்தினாலேயே உலகைப் படைத்திருக்கிறார் ப்ரம் மாவானவர் என்கின்றன.

துக் சுக் பாப் புண்ய தின் ராதீ |
ஸாது அஸாது ஸுஜாதி குஜாதீ || 76
தானவ் தேவ் ஊஞ்ச் அரு நீசூ |
அமிய ஸு ஜீவனு மாஹுரு மீசூ || 77
மாயா ப்ரஹ்ம ஜீவ் ஜகதீஸா |
லச்சி அலச்சி ரங்க் அவநீஸா || 78
காஸீ மக் ஸுர்சரி க்ரமநாசா |
மரு மாரவ் மஹிதேவ் கவாஸா || 79
ஸர்க் நரக் அனுராக் பிராகா |
நிகமாகம் குன் தோஷ் பிபாகா || 80

ஸுகம், துக்கம், பாபம், புண்யம், பகல், இரவு, ஸாது, அஸாது, நல்ல ஜாதி, கீழ் ஜாதி, தேவர், அரக்கர், உயர்ந்தவன், தாழ்ந்தவன், அம்ருதம், விஷம், அழகான வாழ்க்கை, மரணம், மாயா, ப்ரம்மம், ஜீவன், ஈச்வரன், (ஸம்பத்து, தரித்ரதா) செல்வம்-வறுமை, ஏழை, அரசன், காசீ, மகதம், கங்கை, கர்மநாசா, மார்வாட், மாலவா, ப்ராமணர், புலையன், ஸ்வர்கம், நரகம் (ஆசை-வெறுப்பு) அனுராகம், வைராக்யம் இவை எல்லாமே ப்ரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டவையே. ஆனால், வேதமோ இவைகளின் குணதோஷங்களைத் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுகிறது.

ஜட் சேதன் குன் தோஷ்மய் பிஸ்வ கீன்ஹ கர்தார்।
ஸந்த் ஹம்ஸ் குன் கஹஹிம் பய் பரிஹரி பாரி
பிகார்॥81

அதாவது, ப்ரம்மாவானவர் குணதோஷமய ஜட சேதனங்களை உலகில் படைத்திருக்கிறார். இதில் நாம் நல்லதையே ஸ்வீகாரம் செய்து கொள்ள வேண்டும். எப்படி ஹம்ஸ பட்சியானது நீருடன் சேர்ந்த பாலை மட்டும் தனியாகப் பிரித்துக் குடித்துத் தண்ணீரைத் தூரத் தள்ளுகிறதோ; அதேபோல் நாம் நல்லதையே எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிறார் துளஸீ.

அஸ் பிவேக் ஜப் தேயி பிதாதா।
தப் தஜி தோஷ் குன்ஹி மனு ராதா॥ 82
கால் ஸுபாஉ கர்ம பரிஆயீம்।
பலேஉ ப்ரக்ருதி பஸ் சுகஇ பலாயீம்॥ 83

ப்ரம்மாவே ஹம்ஸபட்சி மாதிரி விவேகத்தைக் கொடுத்தாலும் தோஷங்களை விட்டு நல்லதைக் கிர ஹிக்கும் சக்தி அளிக்கிறார். பின்னும் காலத்தாலும், இயற்கையாலும் கர்ம பலத்தாலும் நல்லவர்களும் கெடு தலை மாயையின் வசமாகிச் செய்யத் துணிந்து விடு கிறார்கள்.

ஸோ ஸுதாரி ஹரிஜன் ஜிமி லேஹீம்।
தலி துக் தோஷ் பிமல் ஜஸு தேஹீம்॥ 84
கலவு கர்ஹிம் பல் பாயி ஸுஸங்கூ।
மிடயி ந மலின் ஸுபாஉ அபங்கூ॥ 85

பகவானின் பக்தர்கள் துன்பம், தோஷத்தை நிவர்த்தி செய்து அவர்களுக்குக் கீர்த்தியைக் கொடுக்கிறார்கள். அதேபோல் துஷ்டர்களும் நல்லவர் கூட்டத்தில் சேர்ந்து நன்மை செய்கிறார்கள். அப்படி நல்லவர்களானாலும், அவர்களுடைய உண்மையான கெட்ட நடத்தையும் சில சமயம் தலை தூக்கத்தான் செய்கிறது. அது அழிவ தில்லை.

லகி சுபேஷ் ஜக பஞ்சக் ஜேவூ।
பேஷ் ப்ரதாப் பூஜிஅஹிம் தேவூ॥ 86
உகர்ஹிம் அந்த் ந ஹோயி நிபாஹூ।

காலநேமி ஜிமி ராவன் ராஹூ || **87**

காலநேமி, ராவணன், ராகு போன்றவர்களின் துர்ப்புத்தியுள்ள விவகாரங்கள் எப்படி ஒரு தினம் ஸந்தியில் வந்ததோ; அதேமாதிரி ஸாதுக்களைப் போல், நல்லவர் போல் வேஷம் போட்டுக் கொண்டு உலகை ஏமாற்றும் கயவர்களின் வேஷ ஸாமர்த்யத்தைக் கண்டு உலகம் கொண்டாடலாம். ஆனால், ஒருநாள் இல்லா விட்டால் ஒரு தினம் ஸந்தியில் வந்துதான் தீரும்.

கியேஹூம் குபேஷூ ஸாது ஸன்மானூ |
ஜிமி ஜக் ஜாம்வந்த் ஹனுமானூ || **88**
ஹானி குசங்க ஸூஸங்கதி லாஹூ |
லோகஹூம் பேத் பிதித் ஸப் காஹூ || **89**

கெட்டவேஷம் (குரூபமான தோற்றம்) பெற்றாலும் ஸாதுக்களுக்கு எங்கும் மரியாதையே கிடைக்கிறது. எப்படி ஹனுமான், ஜாம்பவான் இவர்களுக்கு உலகில் மரியாதை கிடைத்ததோ; அதேபோல்தான் கெட்டவருடன் சேர்ந்தால், கெடுதல் வரும், நல்லவருடன் சேர்ந்தால் பயன் கிடைக்கும். இதைப்பற்றி உலகிலும், வேதத்திலும் வருகிறது என்பதை எவரும் அறிவர்.

ககன் சடயி ரஜ் பவன் ப்ரஸங்கா |
கீசஹிம் மிலஇ நீச ஜல் ஸங்கா || **90**
ஸாது அஸாது ஸதன் ஸூக ஸாரீம் |
ஸூமிரஹிம் ராம் தேஹிம் கனி காரீம் || **91**

காற்றின் உதவியால். ஸம்பந்தத்தால் தூசி ஆகாசத்தில் பறக்கிறது. அதே கொஞ்ச நேரத்தில் கீழே விழுந்து தண்ணீரிலுள்ள சகதியுடன் கலந்துவிட்டால், தானும் சேறாகி விடுகிறது. எப்படி ஸாதுக்கள் வீட்டில் வளரும் மைனாக்கள் கிளிகள் 'ராம ராம' என்று கூவுகின்றனவோ, அயோக்யர்கள் வீட்டுக் கிளிகளும் மைனாக்களும் கெட்ட கெட்ட வசவுகளை உதிர்க்கின்றனவோ, அதேபோல், நல்லவர் நல்லவருடனும், கெட்டவர் கெட்டவருடனும் சேருவதால் அதற்கேற்ற பண்புதான் வளரும் என்பது உலக இயல்பு.

தூம் குஸங்கதி காரிக் ஹோயீ |

லிகிய புரான் மஞ்ஜு மஸி ஸோயீ || 92
ஸோயி ஜல் அநல் அனில் ஸங்காதா |
ஹோயி ஜலத் ஜக் ஜீவன் தாதா || 93

கெட்டவர் கூட்டத்தில் கலந்ததால் புகையைக் கருப்பு நிறத்தில் காண்கிறோம் (மை என்கிறோம்). அதே கரும் புகையானது நல்லவர் கூட்டத்தில் சேர்ந்தால், சுத்த மான-அழகான புராணங்களை எழுதும் மையாகப் பய னுடையதாக ஆகிறது. அதே புகையானது நீருடனும், அக்கினியுடனும், காற்றுடனும் சேர்ந்து ஸுகம் தரும் மேகங்களாகி உலகிற்குக் குளுமையளித்து வாழ்வை உண்டாக்குகிறது.

க்ரஹ பேஷஜ் ஜல் பவன் பட்
பாயி குஜோக் ஸுஜோக் |
ஹோஹிம் குபஸ்து ஸுபஸ்து ஜக்
லக்ஹிம் ஸுலச்சன் லோக் || 94

க்ரஹம், மூலிகை மருந்துகள், ஜலம், காற்று, ஆடை அணிகள் எல்லாமே கெட்ட சேர்க்கை, நல்ல சேர்க்கை களுடன் சேர்ந்து உலகில் நல்லனவாகவும், கெட்டன வாகவும் மாறுகின்றன. திறமையுள்ள சக்திமானும் அறி வுள்ளவனுமானவன் இதைத் தகுந்தபடி அறிந்து கொள் கிறான்.

ஸம ப்ரகாஸ் தம பாக் துஹும்
நாம பேத் பிதி கீன்ஹ |
ஸஸி ஸோஷக் போஷக் ஸமுஜி
ஜக் ஜஸ் அபஜஸ் தீன்ஹ || 95

மாதத்தின் இரண்டு பட்சத்திலும் ஒளியும்-இருட்டும் ஸமமாகவே உண்டாகின்றன. ஒன்றின் பெயர் சுக்ல பட்சம், மற்றதன் பெயர் க்ருஷ்ண பட்சம் எனப் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒன்றில் சந்த்ரன் வளர் கிறது. மற்றொன்றில் சந்த்ரன் குறைகிறது என்ற இந்த நிகழ்ச்சியை அறிந்து உலகம் ஒன்றைப் புகழ் உள்ளது என்றும், மற்றதைப்புகழ் அற்றது என்றும் வைத்துள் ளது. சந்த்ரனை வளர்ப்பதிலும் சந்த்ரனைக் குறைப் பதிலும் ஒரு கடவுள் சக்தி இருப்பதால் உண்டான இயற்கை மாற்றங்களை நாம் கவனித்துச் சுக்லபட்சத்தை

புகழ்கிறோம், க்ருஷ்ண பட்சத்தைத் திட்டுகிறோம். ஏன்? ப்ரம்மாவானவர் இரு பேதத்திற்கும் தனித்தனி பெயரிட்டதனால் இந்தப் பேதங்கள்! மனிதனில் ஒருவனை சுக்லபட்சமாகவும், மற்றவனை க்ருஷ்ணபட்சமாகவும் கருதுகிறார்.

ஜட் சேதன் ஜக் ஜீவ ஜத் ஸகல்
ராமமய் ஜானி |
பந்தவும் ஸப் கே பத் கமல் ஸதா
ஜோரி ஜுக் பானி || 96

உலகில் ஜடமான, சேதனமான எத்தனை உயிர்கள் உள்ளனவோ; அவை எல்லாவற்றிலும் ராம மயமான நிலை உண்டு என்று எண்ணி அந்த எல்லாப்பொருள்களின் சரணாரவிந்தங்களிலும் இரு கை கூப்பி நான் வணங்குகிறேன்.

தேவ் தனுஜ் நர் நாக் கக ப்ரேத் பிதர் கந்தர்வ்|
பந்தவும் கிந்நர் ரஜனிசர் க்ருபா கர்ஹு அப் ஸர்ப்||
97

தேவதை, அஸுரர், மனுஷ்யர், நாகம், பறவைகள், ப்ரேதம் பித்ருக்கள், கந்தர்வர், கின்னரர், நிசாசரர், (அரக்கர்) எல்லோரையும் நான் வணங்குகிறேன். நீங்கள் யாவரும் என்மீது கருணை காட்டுங்கள்.

ஆகர் சாரி லாக் சௌராஸீ |
ஜாதி ஜீவ் ஜல் தல் நப் பாஸீ || 98
ஸீய் ராமமய் ஸப் ஜக் ஜானீ |
கர்உம் ப்ரனாம் ஜோரி ஜுக் பானீ || 99

நாற்பது லட்சம் கர்ப்பங்களில் (அதாவது ஸ்த்ரீ கர்ப்பத்தில்) நான்கு வகைகளில் ஜீவன்கள் உற்பத்தியாகின்றன. தானே உண்டாவது, வயிற்றில் பிறப்பது. முட்டைகளிலிருந்து வெளிப்படுவது, ஆகாயத்தில் தோன்றுவது (அதாவது ஸ்வேதஜம், அண்டஜம், உத்பித்ஜம், ஜராயுஜம் என்பன.) இம்மாதிரி ஜீவன்களின் பல பிறப்புகளால் நிறைந்த உலகை நான் ஸ்ரீஸீதாராமனாகவே மதித்து (எல்லாமே ராமமயம் என்று) கைகூப்பி வணங்குகிறேன்.

ஜானி க்ருபாகர் கிங்கர் மோஹூ|
ஸப் மிலி கர்ஹு சாடி சல் சோஹூ || 100
நிஜ் புதி பல் பரோஸ் மோஹி நாஹீம்|
தாதேம் பினய கர்வும் ஸப் பாஹீம்|| 101

என்னை உங்கள் தாஸனாக, அடிமையாக எண்ணிக் கருணைக் களஞ்சியமான நீங்கள் எல்லோரும் கபட மனப்பான்மையை விட்டு என்மீது க்ருபை செய்யுங்கள். ஏனெனில்; என்னுடைய புத்தி பலத்தின் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. அதனால் நான் உங்களை வேண்டு கிறேன்.

கரன் சஹஉம் ரகுபதி குன் காஹா|
லகு மதி மோரி சரித் அவகாஹா|| 102
ஸூஜ் ந ஏகவு அங்க உபாவூ|
மன் மதி ரங்க் மனோரத் ராவூ|| 103

நான் ஸ்ரீராமச்சந்த்ரனின் குணங்களை வர்ணிக்க, புகழைப் பாட விரும்புகிறேன். ஆனால், என்னுடைய அறிவோ சிறிய அறிவு அதற்குத் தகுந்தது இல்லை. ஸ்ரீராமனின் சரித்திரமோ ஆழம் காணமுடியாத ஸமுத் திரம். அவனைப் பாட நான் எம்மாத்திரம்? எனக்குச் சிறிது கூட உபாயம் (வழி) தெரியவில்லை. என் மன மும் புத்தியும் பரம ஏழை. ஆனால் ஆசை, மட்டும் (பணக்காரன் போல்-மன்னனைப் போல்) நிறைய இருக்கிறது.

மதி அதி நீச் ஊஞ்சி ருசி ஆசீ|
சஹிய அமிய ஜக் ஜுரயி ந சாசீ|| 104
சமிஹஹிம் ஸஜ்ஜன் மோரி டிடாயீ|
ஸுனிஹஹிம் பால்பசன் மன் லாயீ|| 105

என் புத்தியானது ரொம்பவும் சிறியது. ஆனால், ஆசைக்கோ அளவில்லை. ஆசை இருக்கிறது அம்ருதம் குடிக்க. ஆனால், இவ்வுலகில் மோர் கூட எனக்குக் கிடைப்பதில்லை

நன்மக்களே! இப்படிப்பட்ட என்னை ஆதரியுங்கள்; மன்னியுங்கள்; என் அற்பமான இந்தச் சிறு குழந்தை யைப் போன்ற வசனங்களை அன்புடன் கேளுங்கள்.

ஜௌம் பாலக் கஹ் தோதரி பாதா |
ஸுனஹிம் முதித மன் பிது அரு மாதா || 106
ஹம்ஸி ஹஹிம் கூர் குடில் குபிசாரீ |
ஜே பர் தூஷன் பூஷன்தாரீ || 107

குழந்தை கிளிபோல் மழலையில் பேசுவதைக் கேட்டுத் தாயும் தந்தையும் ஸந்தோஷமடைவார்கள். ஆனால், பிறரைத் தோஷம் சொல்லிக் கேலி செய்யும் க்ரூரமானவர்கள் கோணல்புத்தி உள்ளவர்கள் பிள்ளையின் இச்செயலைப் பார்த்துச் சிரித்துப் பரிஹசிப்பார்கள். இப்படிப் பிறரிடம் குற்றங் காண்பதே அவர்களுக்குப் பிரியமாக இருக்கிறது.

நிஜ கபித் கேஹி லாக் ந நீகா |
ஸரஸ் ஹோவு அதவா அதி பீகா || 108
ஜே பர் பநிதி ஸுநத் ஹர்ஷாஹீம் |
தே பர் புருஷ பஹுத் ஜக் நாஹீம் || 109

இன்பம் தரக்கூடியதோ, அல்லது, சுவையில்லாததோ எப்படியானாலும் அவனது கவிதை அவனுக்குப் பிடிக்காமலா போகும்? தன் கவிதையை எவனும் விரும்புவான்! ஆயினும், பிறருடைய ஏதோவிதமான கவிதைகளையும் கேட்டு ஆனந்திக்கிறானோ அந்த மாதிரி உத்தம புருஷர்கள் உலகில் கிடைப்பது வெகு அரிது.

ஜக் பஹுநர் ஸர் ஸரி ஸம பாயீ |
ஜே நிஜ் பாடி பட்ஹிம் ஜல பாயீ || 110
ஸஜ்ஜன் ஸக்ருத் ஸிந்து ஸம கோயீ |
தேகி பூர பிது பாடயி ஜோயீ || 111

ஹே ஸஹோதரா! உலகில் குளம்போன்று, நதி போன்று மக்கள் பெருகியிருக்கிறார்கள். அதாவது, (தங்கள் பெருமை உயர்வில் பெருகியிருக்கிறார்கள் வெள்ளம்போல்). ஆனால், ஸமுத்திரம் போன்று நல்லவர்கள் ஒருசிலரே. அந்த ஆழ்ந்த அறிவுள்ள மனிதன் பூர்ணிமையைக் கண்டு மட்டும் உள்ளம் மகிழ்கிறான். அதாவது, பிறருடைய ஸந்தோஷத்தைப் பார்த்து உற்சாகமடைகிறான்! பூர்ணிமா தினத்தன்று சந்த்ரன் உதிக்கும்போது கடல் பொங்கி ஆரவாரிக்கிறது அல்லவா? அதேபோல,

பாக் சோட் அபிலாஷு பட் கர்உம் ஏக்
பிஸ்வாஸ்|
பைஹஹிம் ஸுக் ஸுனி ஸுஜன் ஸப் கல்
கரிஹஹிம் உபஹாஸ்|| 112

என் பாக்யம் ரொம்பவும் சிறியது. ஆனால், இச்சையோ மிகப் பெரியது. எனக்கு ஒரு நம்பிக்கை என்னவென்றால், இம்மாதிரி மனப்போக்கைக் கண்டு நன்மக்கள் ஆனந்திப்பார்கள், துஷ்டர்களோ சிரிப்பார்கள்.

கல் பரிஹாஸ் ஹோயி ஹித் மோரா|
காக் கஹஹிம் கலகண்ட் கடோரா|| 113
ஹம்ஸஹிம் பக் தாதுர் சாதக்ஹீ|
ஹம்ஸஹிம் மலின் கல் பிமல் பதக்ஹீ|| 114

ஆனால், துஷ்டர்கள் சிரித்தால் அதில் எனக்கு நன்மையே! மதுரமான குரலுடைய குயிலை நோக்கிக் காகம் கடுமையாக இருக்கின்றதே என்று சொல்லி நகைக்கிறது. இதேபோல் அழகான ஹம்ஸ பட்சியை நோக்கிக் கொக்கு சிரிக்கிறது. மனத்திற்கு இன்பத்தையூட்டும் சாதகப் பட்சியின் குரலைக் கேட்டுத் தவளை நகைக்கிறது. பின்னும் தோஷமுள்ள மனமுள்ள ஒருவர் நல்ல மனமுள்ள என்னைக் கண்டு என் நிர்மலமான வாக்கைக் கண்டு நகைக்கிறார். (அதாவது, தன்னுள் இருக்கும் குறைகளை மறைக்க இவ்வாறு இங்கு ஒவ்வொருவரும் செய்கிறார்கள்)

கபித் ரசிக் ந ராம் பத் நேஹூ|
தின்ஹ கஹம் ஸுகத் ஹாஸ ரஸ் ஏஹூ|| 115
பாஷா பனிதி போரி மதி மோரீ|
ஹன்ஸிபே ஜோக் ஹன்ஸேம் நஹிம் கோரீ|| 116

எவனொருவனுக்குக் கவிதையை ரசிக்கத் தெரியவில்லையோ; எவனுக்கு ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியின் பாதங்களில் அன்பு இல்லையோ, அப்படிப்பட்டவனுக்கு இந்தக் கவிதை ஒரு ஹாஸ்ய ப்ரதானம்தான். என் சிறிய புத்திக்குத் தக்கபடி இதை இசைத்திருக்கிறேன். இது ஹாஸ்யம் செய்யக் கூடியதுதான். ஆனாலும், எனக்கு ஒரு துக்கமும் இல்லை. சிரிப்பவர் சிரிக்கட்டுமே!

ப்ரபு பத் ப்ரீதி ந ஸாமுஜி நீகீ |
தின்ஹஹி கதா ஸுனி லாகிஹி பீகீ || 117
ஹரி ஹர பத் ரதி மதி ந குதர்கீ |
தின்ஹ கஹும் மதுர் கதா ரகுவர் கீ || 118

எவனுக்கு ப்ரபுவின் பாதங்களில் அன்பே இல்லையோ, எவனுக்கு ப்ரபுவைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லையோ, அப்படிப்பட்டவர்களுக்கு இந்த ஸ்ரீராம கதை கேட்க வெறுப்பாகவே இருக்கும்; ஸ்வாரஸ்யமாக இராது. எவருக்குப் பகவான் விஷ்ணு, பகவான் ஹரன் இவர்களது பாதகமலங்களில் அன்பு இருக்கிறதோ; எவனுடைய புத்தி குதர்க்க வழியில் செல்லவில்லையோ, (அதாவது விஷ்ணு-சிவனிடம் பேத மனப்பான்மை உயர்வு தாழ்வு என்ற நிலைபற்றிக் கற்பனைகூடச் செய்யப்படவில்லையோ) அப்படிப்பட்டவர்களுக்கு ஸ்ரீரகுநாதனுடைய இக்கதை இனிப்பாக இருக்கும்.

ராம பக்தி பூஷித் ஜியம் ஜானீ |
ஸுனிஹஹிம் ஸுஜன் ஸராஹி ஸுபானீ || 119
கபி ந ஹோஉம் நஹிம் பசன் ப்ரபீனூ |
ஸகல் கலா ஸப் வித்யா ஹீனூ || 120

நல்லவர்கள் இம்மாதிரி ஸ்ரீராமகதையைப் பக்தியுடன் ஒரு பூஷணமாக ஏற்றுக்கொண்டு அன்புடன் அழகான வார்த்தைகளால் பிறர் புகழ்ந்து சொல்லக் கேட்டு ஸந்தோஷமடைவார்கள்.

நானோ கவியும் இல்லை, வாக்கியம் அமைப்பதில் சதுரனும் அதாவது; திறமைசாலியும் இல்லை. எல்லாக் கலைகளும், கல்விகளும் இல்லாத குறைபாடு என்னிடம் உள்ளது.

ஆகர் அர்த் அலங்க்ருதி நாநா |
சந்த் ப்ரபந்த் அநேக் பிதானா || 121
பாவ் பேத் ரஸ் பேத் அபாரா |
கபித் தோஷ் குன் பிபித் ப்ரகாரா || 122

பலவிதமான அட்சரங்கள் (எழுத்துக்கள்) அர்த்தங்கள், அலங்காரங்கள், பலவிதமான கவிதைச் சந்தங்

களின் சேர்ப்பு பாவம், ரஸம் (சுவை) இவைகளின் பேதங்கள் உண்டு. கவிதைகளில் ஏராளமான குண-தோஷங்களும் இருக்கின்றன.

கபித் பிவேக் ஏக் நஹிம் மோரேம்|
ஸத்ய கஹஉம் லிகி காகத் கோரேம்॥ *123*

இப்படிக் காவ்யங்களுக்கு வேண்டிய அலங்கார சாஸ்திரம், சந்தஸ் சாஸ்திரம் இவைகளைப் பற்றிய ஜ்ஞானம் ஏதுமில்லாத, ஒன்றுமே தெரியாத நான் ஒரு வெள்ளைக் காலியான காகிதத்தில் உறுதி செய்து ஏதேதோ எழுதி வைக்கிறேன். அதனால் நான் எழுது வது எல்லாமே ஸத்தியம்- உண்மை என்கிறேன்.

பநிதி மோரி ஸப் குன் ரஹித் பிஸ்வ பிதித் குன் ஏக்|
ஸோ பிசாரி ஸுநிஹஹிம் ஸுமதி ஜின்ஹ கேம் பிமல் பிபேக்॥ *124*

என்னுடைய எழுத்தானது படைப்பானது எல்லா விதத்திலும் குணமற்றுக் கீழ்த்தரமாக உள்ளது. ஆனால், என்னுடைய இந்த ஸாஹித்யத்தில், படைப் புக் கவிதையில் உலகப்ரஸித்தமான ஒரு குணம் உண்டு. எனவே, புத்திசாலியானவன்-அறிவுள்ளவன் என் கவி தையில் ஒரே ஒரு உண்மையை அறிந்து கேட்டு ஆனந்த மடைவானாக. (அதுதான் ஸ்ரீராமபக்தி மந்த்ரம்!)

ஏஹி மஹம் ரகுபதி நாம் உதாரா|
அதி பாவன் புரான் ச்ருதி ஸாரா॥ *125*
மங்கள் பவன் அமங்கள் ஹாரீ|
உமா ஸஹித் ஜேஹிஜபத் புராரீ॥ *126*

இதில் ஸ்ரீராமச்சந்த்ரனின் பெருந்தன்மை வாய்ந்த எளிமையான பெயர் இருக்கிறது. இந்த நாமம் (பெயர்) மிகவும் பவித்திரமானது. (தூய்மையானது) வேத புரா ணங்களுடைய ஸாரம். கல்யாணமயமான ஓர் இல்லம். அமங்கலத்தை அழிக்கவல்ல, நலன் செய்யும் திவ்ய நாமம். எந்த ஸ்ரீராமமந்த்ரத்தைப் பகவான் சிவனும், பார்வதியும் எப்போதும் ஜபித்துக் கொண்டே இருக்கிறார்களோ; அந்த ஸுகமான, ஆனந்தமான நாமம் ஸ்ரீராம நாமம்.

பனிதி பிசித்ர ஸுகபி க்ருத் ஜோவூ |
ராம நாம் பினு ஸோஹ் ந ஸோவூ || 127
பிதுபதனீ ஸப் பாந்தி ஸம்வாரீ |
ஸோஹ் ந பஸன் பினா பர் நாரீ || 128

இக்கவிதையானது ப்ரபலமான நல்ல கவியினால் எழுதப்பட்ட விசித் ரமான அரிய கவிதை. இக்கவிதை ராம நாமமின்றி சோபிக்காது. அழகுள்ள சந்த்ரனைப் போன்ற முகமுடைய பெண் எல்லாவிதத்திலும் அலங் காரம் செய்துகொண்டிருந்தாலும், நல்ல உடையில்லா விட்டால், எப்படிச் சோபிக்க மாட்டாளோ, அதே போல இக்கவிதை ஸ்ரீராமநாமம் இல்லாமல் சோபிக் காது என்கிறார் துளஸீ.

ஸப் குன் ரஹித் குகபி க்ருத் பானீ |
ராம நாம் ஜஸ் அங்கித் ஜானீ || 129
ஸாதர் கஹஹிம் ஸுநஹிம் புத் தாஹீ |
மதுகர் ஸரிஸ ஸந்த் குனக்ராஹீ || 130

குணமும் நேர்மையும் ஒழுங்குமில்லாத கவிதை களையும் ஜ்ஞானிகள் கேட்கிறார்கள்; படிக்கிறார்கள். ஏனெனில்; அதில் ஸ்ரீராமநாமம் உள்ளது; அந்த நாமத் தைப் படிக்கிறார்கள். ஆகவே, தோஷமயமான கவி தையைக் கூட அவர்கள் பொறாமையுடன் பாராட்டு கிறார்கள். ஏனெனில்; பைராகிகள், ஸாது ஜனங்கள் வண்டுக்களைப் போல் நல்லதை க்ரஹித்துக் கொண்டு கெட்டதைத் தள்ளி விடுகிறார்கள்.

ஜதபி கபித ரஸ் ஏகவு நாஹீம் |
ராம ப்ரதாப் ப்ரகட் ஏஹி மாஹீம் || 131
ஸோயி பரோஸ் மோரேம் மன் ஆவா |
கேஹிம் ந ஸுஸங்க படப்பனு பாவா || 132

பின்னும் என் கவிதைகளில் ஒரு விதமான ரஸமும் இல்லை; பாவமும் இல்லை. அதாவது, பாண்டித்யமும் இல்லை. ஆயினும் ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியின் ப்ரதாபம் இதில் வெளிப்பட்டு இருக்கிறது. ஆகவே, என் மன தில் ஒரு நம்பிக்கை உண்டு. அதாவது, நல்ல ஸத் ஸங் கத்தில் சேர்ந்திருப்போருக்கு நன்மையும், பெருமையும் உயர்வும் உண்டாகாமல் இருக்குமா?

தூம்உ தஜயி ஸஹஜ் கருஆயீ |
அகரு ப்ரஸங்க் ஸுகந்த் பஸாயீ || 133
பனிதி பதேஸ் பஸ்து பலி பர்னீ |
ராம் கதா ஜக் மங்கள் கர்னீ || 134

புகை கூட ஊதுவத்தியுடன் சேர்ந்து குளுமையான சந்தன மணத்துடன் நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. தன்னுடைய இயற்கையான, மட்டரகத்தினாலான குணத்தை இழந்து சந்தனச் சேர்க்கையினால் ப்ரபாவமான வஸ்துவாகி விடுகிறது.

இதேபோல் என் கவிதைகளும் தரமில்லா மட்டரகமானது. ஆயினும், இதற்கு உயர்வு எப்படி வந்ததென்றால் உலகத்திற்கு மங்களத்தையுண்டாக்கும் ஸ்ரீராம கதை உத்தமப்பொருளை வர்ணித்து இருப்பதால் இக் கவிதைக்குப் பெருமை. இதனால் இதுவும் நல்லதாகக் கருதப்படும்.

மங்கல் கர்னி கலிமல் ஹர்னி
துளஸீ கதா ரகுநாத் கீ | கீ|
கதி கூர் கபிதா ஸரித் கீ ஜ்யோம்
ஸரித் பாவன் பாத் கீ|| 135
ப்ரபு ஸுஜஸ் ஸங்கதி பனிதி பலி
ஹோஇஹி ஸுஜன் மன் பாவ்னீ |
பவ் அங்க் பூதி மஸான் கீ ஸுமிரத்
ஸுஹாவனி பாவ்னீ || 136

ஸ்ரீராமச்சந்த்ரனின் கதை மங்களகரமானது கலியுகத்தில் பாபத்தை அழிக்க வல்லது. (மே பி இஸ் கவிதா ரூபி நதி) அதாவது; என்னுடைய மட்டமான இந்தக் கவீதை என்னும் நதியின் வேகமானது பவித்திர நதி கங்கை போல் வளைவு நெளிவுடன் கூடியது. ப்ரபு ஸ்ரீ ரகுநாதரின் ஸுந்தர கீர்த்தி வாய்ந்த தன்மையின் ஸஹவாசத்தால் இந்தக் கவிதையானது அழகாகி ஸாதுக்களுடைய உள்ளத்தையும் கவர்கிறது. ஸ்மசானத்தில் இருக்கும் தூய்மையற்ற சாம்பல் கூட மஹாதேவனின் உடல் ஸம்பந்தத்தால் சுத்தமாகி நம் உடலில் பூசிக் கொள்ளும் அளவிற்கு நினைத்தமாத்திரத்தில் பவித்திரமாகி விடுகிறது. நினைத்த மாத்திரத்தில் உள்ளத்திற்கு உவகையை ஊட்டுகிறது என்கிறார் துளஸீ.

ப்ரிய லாகிஹி அதி ஸப்ஹி மம
பனிதி ராம் ஜஸ் ஸங்க் |
தாரு பிசாரு கி கர்யி கோவு
பந்திஅ மலய் ப்ரஸங்க் || 137

ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தி புகழ்க்கதையின் ஸங்கமமான எனது கவிதை எல்லோருக்கும் அத்யந்த பிரியமானது. மலய மாருத பர்வதத்திலிருந்து அகப்பட்ட சந்தன விருட் சத்தின் ஸுகந்தம் நம் எல்லோருக்கும் இன்பம் அளிக் கிறது. அந்தக் கட்டையைக் கொண்டாடுகிறோம், நாம் வணங்குகிறோம். ஏனெனில்; அதனுள் உள்ள வாசனை நம்மை இழுக்கிறது. இது வெறும் கட்டையானால் இத் துணை மஹத்துவம் உண்டா! ஏன்? ஸ்ரீராம நாமம் என்னும் லய வாசனை இருப்பதால் இக்கவிதைக்கும் இந்த மஹிமை உண்டாகிறது.

ஸ்யாம் ஸுரபி பய் பிஸத் அதி குனத்
கர்ஹிம் ஸப் பான் |
கிரா க்ராம்ய ஸிய ராம் ஜஸ் காவ்ஹிம்
ஸுநஹிம் ஸுஜான் || 138

கருப்புநிறமுள்ள பசு கறுப்பாக இருந்தாலும்; அதன் பால் வெள்ளையாகவே இருக்கிறதல்லவா? நன்மை யைத் தருகிறதல்லவா? ஆகவே, அதனுடைய குண விசேஷத்தினால் ஜனங்கள் அதன் பாலைக் குடிக்கி றார்கள். அதேபோல் என் கவிதையின் பாஷை கிரா மீய பாஷையாக இருந்தாலும் கூட ஸீதா ராமனான ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியின் கதை இருப்பதால் இதை எல்லோரும் ப்ரியத்துடன் படிக்கிறார்கள்; கேட்கி றார்கள்.

மனி மானிக் முகுதா சபி ஜைஸீ |
அஹி கிரி கஜ் சிர் ஸோஹ்ந தைஸீ || 139
ந்ருப கிரீட் தருணீ தனு பாயீ |
லஹஹி ஸகல் ஸோபா அதிகாயீ || 140

உயர்ந்த ரத்ன மணிகளும், மாணிக்கமும், முத்துக் களும் அழகானவை; காந்தி உள்ளவைதான். ஆனால், அவைகள் ஸர்ப்பத்தின் தலையிலும், மலையின் சிக ரத்தின் மேலும், யானையின் தலைப்பகுதியிலும் இருந்

தால் அழகாக, சோபையுடன் இருக்க முடியுமா? அவை கள் ராஜாவின் முடியிலும், ஸுந்தர இளங் கன்னி கைகளின் உடலிலும் சேர்ந்தால்தான் மிகவும் அழ குறும்.

தைஸேஹி ஸுகபி கபித் புத் கஹஹீம் |
உபஜஹிம் அந்த அந்த சபி லஹஹீம் ‖ 141
பக்தி ஹேது பிதி பவன் பிஹாயீ |
ஸுமிரத் ஸாரத் ஆவதி தாயீ ‖ 142

அதேபோல்தான் நல்ல கவிகளுடைய கவிதைகளும் எங்கோ உற்பத்தியாகி எங்கோ நல்ல இடத்தில் ப்ரா பல்யமாகி இருக்கிறது. நல்ல கவிதைகளை நினைத்த மாத்திரத்தில் ஸரஸ்வதி தேவியானவள் ப்ரம்மலோகம் விட்டுவிட்டு வேகமாக இவ்வுலகம் ஓடி வருகிறாள்.

ராம சரித் ஸர் பினு அன்ஹவாயேம் |
ஸோ ச்ரம ஜாயி ந கோடி உபாயேம் ‖ 143
கபி கோபித் அஸ ஹ்ருதயம் பிசாரீ |
காவஹிம் ஹரி ஜஸ் கலி மல் ஹாரீ ‖ 144

ஸரஸ்வதி தேவியானவள் ஓடோடி வந்து களைப் புத்தீர ஸ்ரீராமசரித்திரம் என்னும் தடாகத்தில் குளித்து நீராடிச் சாந்தமடைகிறாள். கோடிக்கணக்கான வழிகள், மார்க்கங்கள் இருந்தாலும்; அந்தக் களைப்பு தீராது. அதனால் ஸரஸ்வதி தேவிக்கு ஸ்ரீராமசரிதமென்னும் தடாகமே உயர்வாகப்பட்டது. இக் கவியில் பாவத்தைத் துடைக்கவென்று கவிஞரும், பண்டிதர்களும் இம்மாதிரி ஸ்ரீஹரியின் காவ்யங்கள் இயற்றுகிறார்கள். ஸ்ரீஹரி யின் புகழைப்பற்றிப் பாடுகிறார்கள்.

கீன்ஹேம் ப்ராக்ருத் ஜன் குன் கானா |
சிர் துனி கிரா லகத் பசிதானா ‖ 145
ஹ்ருதய ஸிந்து மதி ஸீப் ஸமானா |
ஸ்வாதி ஸாரதா கஹஹிம் ஸுஜானா ‖ 146

உலகமக்களின் அறிவற்ற புகழ்ப்பாட்டைக் கேட்டு ஸரஸ்வதி தேவியானவள் வருத்தமடைகிறாள்.

அதாவது; இவர்கள் பக்தியுடன் அழைப்பதால்,

போக வேண்டியிருக்கிறதே என்று வருந்துகிறாள். ஆனால், அறிவுள்ள மக்கள் ஹிருதயத்தைக் கடலாக வும், புத்தியைச் சிப்பியாகவும், ஸரஸ்வதி தேவியை ஸ்வாதி நட்சத்ரமாகவும் பாவிக்கிறார்கள். இதனால் ஸரஸ்வதி ஸந்தோஷமடைகிறாள்.

ஜௌம் பர்ஷயி பர் பாரி பிசாரு |
ஹோஹிம் கபித் முகுதாமனி சாரு || 147

இதில் ஒருக்கால் சிரேஷ்டமான கருத்துள்ள ஜலம் மழையாகப் பெய்தால் முக்தாமணியைப் போல் அழகிய கவிதை உண்டாகிறது. (அதாவது ஸ்வாதி நட்சத்திரத்தில் சிப்பியின் வாயில் மழைத்துளி விழுந்தால் நல்ல முத்துக்கள் உண்டாவது போல் நல்ல கவிதையின் பெருமழையால் நல்ல முத்தான ஒன்று (படைப்பு) பிறக்கிறது.)

ஜுகுதி பேதி புனி போஹி அஹிம் |
ராமசரித் பர் தாக் ||
பஹிரஹிம் ஸஜ்ஜன் பிமல் உர் |
ஸோபா அதி அனுராக் || 148

அதாவது; சுத்தமான மனமுடைய நல்லவர்கள் கவிதா ரூபமான முக்தா மணிகளைச் சேர்த்துப் பொறுக்கி எடுத்து யுக்தியாகத் துளையிட்டு, ஸ்ரீராமசரித ரூபமான அழகிய நூலில் கோர்த்து, அதைத் தங்களது நிர்மல மான ஹிருதயத்தில் தரிக்கிறார்கள். அதனால் அவர்கள் அனுராகச் சோபையைப் பெறுகிறார்கள். (அவர்கள் அதிகமான ராமஅன்பைப் பெறுகிறார்கள்)

ஜே ஜன்மே கலிகால் கராலா |
கர்தப் பாயஸ் பேஷ் மராலா || 149
சலத் குபந்த் பேத் மக் சாண்டே |
கபட் கலேவர் கலி மல் பாண்டே || 150

கபட மனமுள்ள மனிதர்கள் காகத்தைப் போல் கபடத்தனமாக நடந்து கொண்டாலும் வெளிவேஷம் ஹம்ஸ பட்சியைப் போலப் போடுகிறார்கள். அவர்கள் வேத மார்க்கத்தை விட்டுவிட்டுக் கெட்ட மார்க்கத்தில் செல்லுகிறார்கள். அவர்கள் உண்மையில் கலியுகத்தின் பாபச் சுமைகள், வஞ்சமே வடிவெடுத்து வந்தவர்கள்.

பஞ்சக் பக்த கஹாயி ராம் கே|
கிங்கர் கஞ்சன் கோஹ் காம் கே|| 151
தின்ஹ மஹம் ப்ரதம் ரேக் ஜக் மோரீ|
தீங் தர்மத்வஜ் தந்தக் தோரீ|| 152

ஸ்ரீராமச்சந்த்ரனின் பக்தன் என்று சொல்லிக் கொண்டு உலகத்தை ஏமாற்றுகிறார்கள் பலர். காம, குரோத, லோபம் என்னும் முக்குணங்களுக்கு அடிமை யாகித் தர்மத்தின் பெயரால் அதர்மக் கொடியைப் பறக்க விட்டு உலகை ஏமாற்றுகிறவர்கள். வஞ்சகச் சுமையைச் சுமப்பவர்கள் பலர். அப்படி அதர்மத்தைத் தாங்கி வாழும் பாபிகளில் நான் முதல்வன்.

ஜௌம் அப்னே அவகுன் ஸப் கஹவூம்|
பாடயி கதா பார் நஹிம் லஹவூம்|| 153
தாதே மைம் அதி அலப் பகானே|
தோரே மஹும் ஜானிஹஹிம் ஸயானே|| 154

நான் என்னுடைய கெட்ட குணங்களைப் பற்றிச் சொல்ல முற்படுவேனானால் கதை மிகவும் பெரிய தாகிவிடும். நான் இதற்குக் கரைகாணவும் முடியாது. பெரியவர்களும், ஞானிகளும் இச்சிறு வர்ணனையி லேயே எல்லாம் அறிந்து கொண்டிருப்பார்கள்.

ஸமுஜி பிபிதி பிதி பின்தீ மோரீ|
கோவு ந கதா ஸுனி தேயிஹி கோரீ|| 155
ஏதேஹு ப்ர் கரிஹஹிம் ஜே அசங்கா|
மோஹி தே அதிக் தே ஜட மதி ரங்கா|| 156

என்னுடைய பலவிதமான ப்ரார்த்தனைகளை ஏற்றுக் கொண்டவர்கள் என் இந்தக் கதையைக் கேட்டுக் குற்றம் சொல்லமாட்டார்கள். இதிலும் குற்றமும் குறையும் கண்டுபிடிப்பவர்கள் இருக்கிறார்கள் என்றால்; அவர்கள் என்னைவிட மூர்க்கர்கள்; புத்தி கெட்டவர்கள் என லாம்.

கபி ந ஹோவும் நஹிம் சதுர கஹாவஉம்|
மதி அனுரூப் ராம குன் காவஉம்|| 157
கஹம் ரகுபதி கே சரித் அபாரா|
கஹம் மதி மோரி நிரத் ஸம்ஸாரா || 158

நான் ஒரு கவியும் இல்லை, கவியென்றும் கெட்டிக் காரன் என்றும் சொல்லிக்கொள்ள நான் விரும்ப வில்லை. என் மந்த புத்திக்கு எட்டியபடி ஸ்ரீராமசந்த் ரனின் குணத்தைப் பற்றிய கதையைப் பாடுகிறேன். ஸ்ரீராம சரித்திரம் உலகில் எப்படிப்பட்டது? கரை காணமுடியாத அக்கதை எங்கே? ஹீனமான என் புத்தி எங்கே?

ஜேஹிம் மாருத் கிரி மேரு உடாஹீம்|
கஹஹூ தூல் கேஹி லேகே மாஹீம் 159||
ஸமுஜத் அமித் ராம ப்ரபுதாயீ|
கர்த் கதாமன் அதி கத்ராயீ|| 160

எந்தக் காற்றினால் ஸூமேரு பர்வதமே பறந்ததோ, அதற்கு எதிரில் பஞ்சைப் பற்றி எண்ண முடியுமா? சொல்லுங்கள் என் பலஹீனமான கதை ஸ்ரீராமசரித் திரத்தைப் பற்றிச் சொல்லத் தயக்கமாக இருக்குமா? இருக்காதா? தயங்கத்தான் செய்கிறது.

ஸாரத் சேஸ் மஹேஸ் பிதி ஆகம் நிகம் புரான் |
நேதி நேதி கஹி ஜாசு குன் கர்ஹிம் நிரந்தர் கான் || 161

ஸரஸ்வதி, சேஷநாகம், சிவபிரான், ப்ரம்மா முத லானோரும் சாஸ்த்ரம், வேதம், புராணம் ஆகியவை யும் சேர்ந்து இல்லவே இல்லை என்று சொல்லிக் கொண்டே அந்தப் பரம்பொருளை- அதன் குணங்களை ஸதாபொழுதும் பாடிக் கொண்டு இருக்கிறார்களே!

ஸப் ஜானத் ப்ரபு ப்ரபுதா ஸோயீ|
ததபி கஹேம் பினுரஹா ந கோயீ|| 162
தஹாம் பேத் அஸ காரன் ராகா|
பஜன் ப்ரபாஉ பாந்தி பஹூ பாஷா|| 163

எப்படியும் ஸ்ரீராமசந்த்ரனின் கதையையும் அவர் ப்ரபாவத்தையும் யாவரும் அறிவார்கள். இருப்பினும், அவரைப் பற்றிக் கூறாதவர் யாருமில்லை. நினைக்காதவர் யாருமில்லை. எல்லோராலும் எல்லாமுமே பாடமுடி யாது. வேதத்தில் சொல்லியபடி அவர் ப்ரதாபத்தை

முடிந்தவரை பஜனை மூலமாகவும், ப்ரார்த்தனை, ஸங்கீதம் மூலமாகவும் சொல்ல வேண்டும். அவனது மஹிமையைப் பூராவும் யாரும் சொல்ல முடியாது. முடிந்தவரை பகவானின் குணாதிசயங்களைப் பாட வேண்டும். ஏனெனில்; அவனுடைய குணத்தைப் பாடுவதால் வரும் மஹிமை விசித்ரமானது. (குறைந்தபட்சம் பகவானுடைய திவ்ய நாமமானது மனிதனைப் பவஸாகரத்திலிருந்து கரை ஏற்றுகிறது.)

ஏக் அநீஹ அரூப் அநாமா|
அஜ் சச்சிதானந்த பர் தாமா|| 164
ப்யாபக் பிஸ்வரூப் பக்வானா|
தேஹிம் தரி தேஹ சரித் க்ருத நாநா|| 165

பரமேச்வரர் ஒருவர்தான். அவருக்கு எதிலும் விருப்பமில்லை. எதிலும் ஆசையில்லை. அவருக்கு ரூபமும் இல்லை. நாமமும் (பெயரும்) இல்லை. அவர் பிறவியற்றவர். ஸச்சிதானந்த ஸ்வரூபி. அவர் தான் கைவல்யம், வைகுண்ட்டம், ஸ்வர்கம். உலகெங்கும் வியாபித்து நிற்கிறார். இப்படிப்பட்ட பகவானானவர் பலவிதமான தெய்வீக ரூபங்களைக் கொண்டு பூமியில் பலவித லீலைகளைச் செய்திருக்கிறார்.

ஸோ கேவல் பக்தன் ஹித லாகீ |
பரம க்ருபால் ப்ரனத் அனுராகீ || 166
ஜேஹி ஜன் பர் மம்தா அதி சோஹூ |
ஜேஹிம் கருனா கரி கீன்ஹ ந கோஹூ || 167

இந்தவிதமான லீலையானது பக்தர்களின், மனிதர்களின் நன்மையை உத்தேசித்தே செய்திருக்கிறார். ஏனெனில்; பகவான் தயவுள்ளவர்; அன்புடையவர்; யார் அவருடைய சரணங்களைத் தஞ்சமென்று வந்து அண்டினார்களோ; அவர்களைக் காப்பவர். பக்தர்களிடம் அவருக்கு அன்பும் அருளும் உண்டு. அவர் ஒரு முறை பக்தர்களிடம் அன்பு, அருள் செலுத்திவிட்டால்; பின்னர் அவர் கோபம் கொள்ளவேமாட்டார். அத்தகைய குணமுடையவர்.

கயீ பஹோர் கரீப் நேவாஜூ |
ஸரல் ஸபல் ஸாஹிப் ரகுராஜூ || 168

புத் பர்நஹிம் ஹரி ஜஸ் அஸ் ஜானீ|
கரஹிம் புனீத் ஸுபல நிஜ் பானீ|| 169

அந்தப் பிரபு ஸ்ரீ ரகுநாதனானவர் தீனபந்து; ஸர்வ சக்திமான்; உதார குணமுள்ளவர்; ஏழைகளைக் காப்பவர்; போன பந்துக்களை; இழந்த பொருள்களை மீண்டும் அடையச் செய்பவர். அந்தக் க்ருபாகர ஸ்வாமியைத் தவிர்த்து வேறு யாருமில்லை என்று புத்திமான்கள் அறிந்து கொண்டு அந்த ஹரியின் புகழைச் வர்ணித்துத் தங்கள் வாக்கைத் தூய்மைப் படுத்திக் கொண்டு சிறந்த மோட்சபலனைக் கொடுக்கும்படியும் செய்து விடுகிறார்கள்.

தேஹிம் பல் மைம் ரகுபதி குன் காதா|
கஹிஹஉம் நாயி ராம பத் மாதா|| 170
முனின்ஹ ப்ரதம ஹரி கீர்தி காயீ|
தேஹிம் மக் சலத் ஸுகம் மோஹி பாயீ|| 171

அதே பலத்தினால்தான் ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியின் சரணாரவிந்தங்களில் தலைகுனிந்து வணங்கி ஸ்ரீரகுவரரின், கதையை, அவர் குணத்தைக் கூறுகிறேன். (கூறுவேன்) வால்மீகியும், வியாஸரும் முன்பே ஹரியின் புகழை, ஹரிகதையைப் பாடியிருக்கிறார்கள். ஹேஸஹோதரா! அதே முனிவர்களின் வழியில் நானும் சென்றால் எனக்கும் சார்ந்தது ஆகும்; ஸுலபமாகவும் ஆகும்.

அதி அபார் ஜே ஸரித் பர் ஜௌம் ந்ருப சேது கராஹிம்.|
சடி பிபீலிகஉ பரம லகு பினு ச்ரம பார்ஹி ஜாஹிம்|| 172

மிகப்பெரிய சிறந்த நதியொன்று; அந்த நதியின் மீது ஓர் அரசன் கட்டியுள்ள பாலம் இருக்கிறது. சின்னச் சின்ன எறும்புகள் கொஞ்சமும் தேஹ சிரமமின்றி அந்தப் பாலத்தில் ஏறிப் பாலத்தைக் கடந்து அக்கரை போய்ச்சேர்ந்து விடுகிறது. அதேபோல், நான் (துளஸீ) முனிவர்களது வர்ணனையின் உதவியால் இப்பொழுது ஸ்ரீராமச்சந்த்ரனை இயல்பாகவே வர்ணிக்கத் தகுந்தவனாகிவிட்டேன்.

ஏஹி ப்ரகார் பல் மன்ஹி தேகாயீ|
கரிஹவும் ரகுபதி கதா ஸுஹாயீ|| 173
ப்யாஸ் ஆதி கவி புங்கவ் நானா|
ஜின்ஹ ஸாதர் ஹரிஸுஜஸ் பகானா|| 174

இவ்வாறாக மனோபலத்தை வெளிக்காட்டி நான் ஸ்ரீரகுநாதரின் அழகிய கதை இயற்றுவேன். வ்யாஸர் முதலான பல சிறந்த கவிகள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த வாஞ்சையோடு ஸ்ரீ ஹரியின் புகழை வர்ணித்திருக்கிறார்கள்.

சரண கமல் பந்தஉம் தின்ஹ கேரே|
புர்வஹும் ஸகல் மனோரத் மேரே|| 175
கலி கே கபின்ஹ கர்உம் பர்நாமா|
ஜின்ஹ பர்னே ரகுபதி குன் க்ராமா|| 176

நான் அப்படிப்பட்ட சிறந்த கவிஞர்களின், முனி வர்களின் கால்களில் வீழ்ந்து நமஸ்கரிக்கிறேன். அவர்கள் என் முழு மனோரதங்களையும் பூர்த்தி செய்வார்களாக. கலியுகத்திலும் அந்தக் கவி முனிவர்களை நான் வணங்குகிறேன். அவர்கள் ஸ்ரீராமச்சந்த்ரனின் குணம்நிறை பெரும்புகழைப் பாடினார்கள்.

ஜே ப்ராக்ருத் கபி பர்ம ஸயானே|
பாஷாம் ஜின்ஹ ஹரி சரித் புகானே|| 177
பயே ஜே அஹஹிம் ஜே ஹோயிஹஹிம் ஆகேம்|
ப்ரணவவும் ஸப்ஹி கபட் ஸப் த்யாகேம்|| 178

மிகப் புத்திமானான பழம்பெரும் கவி அவர். தன்னுடைய மொழியில் ஸ்ரீராமச்சந்த்ரனை வர்ணித்து இருக்கிறார். அம்மாதிரிக் கவிஞர் இறந்த காலத்தில் இருந்தாலும் சரி, நடைபெறும் காலத்தில் இருந்தாலும் சரி, எதிர்காலத்தில் இருந்தாலும் சரி. அவரை நான் வணங்குகிறேன். என் மனத்தில் உள்ள களங்கத்தை விலக்கி அவரை வணங்குவேன்.

ஹோஹு ப்ரஸன்ன தேஹு பர்தானூ|
ஸாது ஸமாஜ் பநிதி ஸன்மானூ|| 179
ஜோ ப்ரபந்த புத் நஹிம் ஆதர்ஹீம்|
ஸோ ச்ரம பாதி பால் கபி கர்ஹீம்|| 180

நீங்கள் எல்லாரும் ப்ரஸன்னமடைந்து எனக்கு ஒரு வரம் கொடுங்கள். ஸாது ஸமூஹகங்களில் என் கவிதைக்கு மரியாதை கொடுக்கட்டும். ஏனெனில், புத்திமான் கவிகள் இதற்கு மரியாதை கொடுக்காவிடில், முட்டாளான கவிகள் மத்தியில் என் சிரமம் வீணாகி விடுமே!

கீர்தி பனிதி பூதி பலி ஸோயீ|
ஸுரஸரி ஸம் ஸப் கஹம் ஹித் ஹோயீ|| 181
ராம ஸுகீர்தி பனிதி பதேஸா|
அஸமஞ்ஜஸ் அஸ் மோஹி அந்தேஸா|| 182

கீர்த்தி (புகழ்) கவிதை, ஸம்பத்து எல்லாமே உத்தமமானவை. கங்காஜலம் போல் நன்மை உண்டாக்குபவைதான் எல்லோருக்கும் அனந்த கல்யாணமுண்டாக்கக்கூடிய ஸ்ரீராமச்சந்த்ரனுடைய கீர்த் தியோ மிகவும் அழகானது.

ஆனால், என் கவிதையோ அழகு ரூபமில்லாதது; அசிங்கமானது. அதனால்தான் நான் வருந்துகிறேன். அழகிற்கும், அழகு அற்றதற்கும் எப்படி ஒற்றுமை ஏற்படும்?

தும்ஹரீ க்ருபாம் ஸுலப ஸோஉ மோரே|
ஸிஅனி ஸுஹாவனி டாட் படோரே|| 183

ஹே, கவிகளே! உங்கள் க்ருபையினால் இவ்விஷயம் எனக்கு ஸுலபமாகிறது. பட்டுத் துணியைத் தைத்ததும் அதன் ஸுகமே, அழகே தனி. அதேபோல்; எனக்கும் நன்மை கிடைக்கும்.

ஸரல் கபித கீர்தி பிமல் ஸோயி ஆதர்ஹிம் ஸுஜான்|
ஸஹஜ் பயர் பிஸ்ராயி ரிபு ஜோ ஸுனி கர்ஹிம் பகான்|| 184

அறிவுள்ளவர் ஒரு கவியை, அவன் காவியத்தையே விரும்புவான். அது எப்படி இருக்க வேண்டுமென்றால், கொஞ்சமும் குழப்பமின்றி ஸரளமாகவும், அழகாகவும், தூயதாகவும் உள்ள சரித்திரத்தை வர்ணிக்க வேண்டும்.

சத்ருக்கள் கூட அதைப் படித்த, கேட்ட மாத்திரத்தில் தங்கள் விரோதத்தை மறந்து கவிதையைப் புகழ வேண்டும்.

ஸோ ந ஹோயி பினு பிமல் மதி மோஹி மதி பல் அதி தோர்|
கர்ஹு க்ருபா ஹரி ஜஸ் கஹஉம் புனி புனி கர்உம் நிஹோர்|| 185

என் புத்திபலம் மிகவும் குறைவானது. இம்மாதிரிக் கவிதைகள் நிர்மலமான புத்தியுடையவர்கள்தான் எழுத முடியும். ஆனால், நானோ திரும்பத் திரும்ப முறை யிடுகிறேன். ஹே கவிகளே! என்மீது க்ருபை செய்யுங்கள். உங்கள் க்ருபை இருந்தால் என்னால் முடிந்தவரை ஹரி யின் கீர்த்திகளை வர்ணனை செய்ய முடியும்.

கபி கோபித் ரகுவர் சரித் மானஸ் மஞ்ஜு மரால்
பாலபினய் ஸுனி ஸுருசி லகி மோ பர் ஹோஹு க்ருபால்|| 186

ஹே கவி கணங்களே! அறிஞர்களே! நீங்கள் ஸ்ரீராம சரித்திரம் என்னும் மான ஸரோவரின் அழகிய ஹம்ஸ பட்சிகள். நான் ஒரு பாலகன். என் வேண்டுகோளைக் கேட்டு, என்மீது கிருபை செய்து என்னிடம் உள்ள என் னுடைய அழகான ஆவல் கண்டு என்னை ஆதரியுங்கள்.

பந்தவும் முனி பத் கஞ்ஜு ராமாயன் ஜேஹிம் நிர்மயஉ|
ஸகர் ஸுகோமல் மஞ்ஜு தோஷ ரஹித் தூஷன் ஸஹித்|| 187

நான் அந்த வால்மீகி முனிவரின் காலைத் தொட்டு நமஸ்கரிக்கிறேன். அவர் எந்த மாதிரி ஒரு ராமாயண காவியத்தை இயற்றினாரோ! அந்த ராமாயணத்தில் பலவிதமான, கடூரமான ராட்சஸர்கள், துஷ்டர்கள் கூட இருந்தாலும்; இல்லாவிட்டாலும் அழகாகவும் இனிமையாகவும் இருக்கிறது.

பந்தவும் சாரிஉ பேத் பவ பாரிதி போஹித்
ஸரிஸ்|
ஜின்ஹஹி ந ஸப்நேஹுூம் கேத் பர்நத் ரகுபர்
பிஸத் ஜஸுூ|| 188

நான் நான்கு வேதங்களையும் நமஸ்கரிக்கிறேன். எந்த வேதங்களானது ஸம்ஸார ஸாகரம் என்னும் ஸாகரத்தை சுலபமாகக் கடக்க உதவுகிறதோ, மேலும், (கப்பலைப் போல் கரை சேர்க்க உதவுகிறதோ) மேலும், எந்த வேதமானது ஸ்ரீரகுநாதனின் கீர்த்தியையும், நிர் மலமான குணாதிசயங்களையும் ஸ்வப்னத்தில் கூட நமக்குக் களைப்பில்லாமல் செய்கிறதோ; (அறிமுகப் படுத்துகிறதோ) அப்படிப்பட்ட வேதங்களை நான் வணங்குகிறேன்.

பந்தவும் பிதி பத் ரேனு பவ ஸாகர் ஜேஹிம்
கீன்ஹ ஜஹம்|
ஸந்த் ஸுூதா ஸஸி தேநு ப்ரகடே கல் பிஷ்
பாருனீ|| 189

நான் ப்ரம்மனுடைய பாதத்துளிகளை வணங்குகி றேன். எவனொருவன் இந்தப் பவஸாகரத்தை ஸ்ருஷ் டித்தானோ; எந்த பவஸாகரத்திலிருந்து ஸாது முனி வர்களும், அம்ருதமும், சந்த்ரனும், காமதேனுவும் வெளி வந்தனவோ, அதே இடத்தில் மறுபக்கம் துஷ்ட மனுஷ்ய ஜாதியும், விஷமும், மதுவும் கூடவே உண்டாயின. அப்படிப்பட்ட பவ ஸாகரத்தை உண்டாக்கிய ப்ரம் மாவிற்குத் தலை வணங்குகிறேன்.

பிபுத் பிப்ர புத க்ரஹ சரன் பந்தி கஹஉம் கர்
ஜோரி|
ஹோயி ப்ரஸன்ன புர்வஹுூ ஸகல் மஞ்ஜுூ
மனோரத் மோரி|| 190

தேவதைகள், ப்ராமணர்கள், பண்டிதர்கள், க்ரஹங்கள் இவர்கள் எல்லோருடைய திருவடிகளையும் நான் வணங்குகிறேன்.

என்னவென்றால், இவர்கள் என் அழகிய, அழுக் கில்லாத மனோரதங்களை அதாவது; ஆசைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்.

புனி பந்தஉம் ஸாரத் ஸுர்ஸரிதா|
ஜுகல் புனீத் மனோஹர் சரிதா|| 191
மஜ்ஜன் பான் பாப் ஹர் ஏகா|
கஹத் ஸுனத் ஏக ஹர் அபிபேகா|| 192

நான் மீண்டும் ஸரஸ்வதியையும், தேவநதியான கங்கையையும் நமஸ்கரிக்கிறேன். இருவரும் சுத்தமான (பவித்திரமான) நடத்தை உள்ளவர்கள்.

ஒரு நதி கங்கை. இதில் ஸ்நானம் செய்தாலோ; ஜலத்தைப் பருகினாலோ; நமது பாபங்கள் கழிகின்றன. மற்றது ஸரஸ்வதி. ஸரஸ்வதி தேவியை, அவள் புகழை, குணத்தைச் சொன்னாலும், கேட்டாலும், நல்ல எண்ணத்துடன் வணங்கினாலும் நம் அஜ்ஞானத்தைப் போக்கி மனதின் இருளையும் அழுக்கையும் அவள் துடைக்கிறாள்.

குர்பிது மாது மஹேஸ் பவானீ|
ப்ரணவவும் தீனபந்து தின் தானீ|| 193
ஸேவக் ஸ்வாமி ஸகா ஸிய பீ கே|
ஹித் நிருபதி ஸப் பிதி துளஸீ கே|| 194

சிவனையும், பார்வதியையும் நான் நமஸ்கரிக்கிறேன். அவர்கள்தான் என்னுடைய மாதா, பிதா, குரு எல்லாமே! அவர்கள் தீனர்களின் பந்துக்கள். அவர்கள் எப்பொழுதும் கொடுப்பவர்கள். என் ஸீதாபதியான ஸ்ரீராமனின் தோழர்கள்; நண்பர்கள்; பணிவிடை செய்பவர்கள். அவர்கள் கபடமில்லாத சுத்தமான அன்பைத் துளஸீதாஸருக்குக் கொடுப்பவர்கள், நன்மை செய்பவர்கள்.

கலி பிலோகி ஜக ஹித் ஹர் கிரிஜா|
ஸாபர் மந்த்ர ஜால் ஜின்ஹ ஸிரிஜா|| 195
அந்மில் ஆகர் அர்த் ந ஜாபூ|
ப்ரகட் ப்ரபாவு மஹேஸ ப்ரதாபூ|| 196

எந்தப் பார்வதி-பரமசிவனானவர்கள் இந்தக் கலியுகத்தைப் பார்த்து 'ஸாபர்' எனப்படும் மந்திரங்களை உண்டாக்கினார்களோ; எந்த மந்திரத்திற்கு இக்கலியில் அட்சரமும், அர்த்தமும் இல்லையோ; ஆயினும்,

அந்த மந்திரங்கள் பரமசிவனின் ப்ரதாபத்தினால் பெருமையை,' மஹிமையை அடைந்திருக்கின்றன.

ஸோ உமேஸ் மோஹி பர் அனுகூலா |
கரிஹிம் கதா முத் மங்கல் மூலா || 197
ஸுமிரி சிவா சிவ பாயி பஸாவூ |
பர்னஉம் ராமசரித சித் சாவூ || 198

ஸ்ரீ உமாபதியும்-சிவனுமானவர் என்மீது கருணை கூர்ந்து இந்த ஸ்ரீராமச்சந்த்ரனின் கதையை மங்களகரமாகவும், ஆனந்தமயமாகவும் செய்வர் என்பது திண்ணம். இவ்விதம் பார்வதி தேவி, சிவன் இருவரையும் வணங்கி அவர்களை மனத்தில், நினைவில் இருத்தி, அவர்களிடம் அனுக்ரஹம் பெற்று நான் இன்பமளிக்கும், ஆனந்தமளிக்கும் மனத்துடன் ஸ்ரீ ராம சரித்திரத்தை வர்ணனை செய்கிறேன்.

பநிதி மோரி ஸிவ் க்ருபா பிபாதீ
ஸஸி ஸமாஜ் மிலி மன்ஹும் ஸுராதீ|| 199
ஜே ஏஹி கதஹி ஸ்நேஹ ஸமேதா|
கஹிஹஹிம் ஸுனிஹஹிம் ஸமுஜி ஸசேதா|| 200

ஹோயிஹஹிம் ராம சரண் அனுராகீ
கலிமல் ரஹித் ஸுமங்கல் பாகீ|| 201

என் கவிதைகள் ஸ்ரீ சிவனாரின் க்ருபையால் அழகு பெற விளங்கும். எப்படி நட்சத்திரங்களின் கூட்டத்தோடு சந்திரனுடன் கூடச்சேர்ந்து இரவு சோபை தருகிறதோ; அம்மாதிரி எவர் இந்தக் கதையை ப்ரேமையுடனும், எச்சரிக்கையுடனும், அறிவுடனும் கேட்கிறார்களோ; சொல்கிறார்களோ; அவர்கள் கலியுகத்தில் பாபத்தைத் தொலைக்கும் ஸ்ரீராமச்சந்த்ரனின் பாத கமலங்களின் அன்பர்கள் ஆவார்கள்.

ஸப்னேஹும் ஸாசேஹும் மோஹி பர் ஜௌம்
ஹர் கௌரி பஸாஉ|
தௌ புர்ஹோவு ஜோ கஹேஉம் ஸப் பாஷா
பநிதி ப்ரபாஉ|| 202

ஒருக்கால் ஸ்ரீ சிவனாருக்கும், பார்வதி தேவியாருக்

கும் ஸ்வப்னத்திலாவது உண்மையில் என் மீது அன்புள்ளம் இருக்குமானால் என் பாஷைக் கவிதைக்கு நிச்சயமாக வெற்றியளிக்கும். (பிரபாவமளிக்கும்) இது உண்மையாகும்.

பந்தவும் அவத் புரீ அதி பாவனி|
ஸரஜூ ஸரி கலி கலுஷ நஸாவனி|| 203
ப்ரணவஉம் புர் நர் நாரி பஹோரீ|
மமதா ஜின்ஹ பர் ப்ரபுஹி ந தோரீ|| 204

நான் மிகவும் பவித்திரமான ஸ்ரீஅயோத்யாபுரியையும், கலியுகத்தின் பாபங்களை நாசம் செய்யக் கூடிய ஸ்ரீஸரயூ நதியையும் வணங்குகிறேன். அவத்புரி (அயோத்யாபுரியின்) ஸ்த்ரீ, புருஷர்களையும் மனமார வணங்குகிறேன். ஏனெனில்; அவர்கள் மீது ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்திக்கு அபார பிரேமை, அன்பு உள்ளது.

ஸிய நிந்தக் அக் ஓக் நஸாயே|
லோக பிஸோக் பநாயி பஸாயே|| 205
பந்தவும் கௌஸல்யா திஸி ப்ராசீ|
கீர்தி ஜாஸு ஸகல் ஜக் மாசீ|| 206

ஸ்ரீராமச்சந்த்ரன் துர் மக்களை (எவன் ஸீதையை அவதூறாகப் பேசினானோ அவனையும்) தோஷமில்லாமல் செய்து வைகுண்டம் போகச் செய்தார். ஏனெனில்; தனது நகர வாஸி என்பதற்காக. (மேலும் பாப ஸமூஹங்களை அழித்து அவர்களைத் துயரற்றவர்களாக்கித் தன் இருப்பிடம் போக வைத்தார்) அப்படிப்பட்ட ஸ்ரீராமன் தாயாரான கௌஸல்யாவின் கீர்த்தியைப் பாடுகிறேன். கௌஸல்யா என்னும் அந்தக் கிழக்குத் திசையை வணங்குகிறேன். அவள் புகழ் உலகெங்கும் பரவியுள்ளது. ஏனெனில்; அவள் ஸ்ரீராமனுடைய தாயார்.

ப்ரகடேஉ ஜஹம் ரகுபதி ஸஸி சாரு|
பிஸ்வ ஸுகத் கல கமல் துஸாரு|| 207
தசரத் ராஉ ஸஹித் ஸப் ராணீ|

ஸுக்ருத் ஸுமங்கல் மூர்தி மானீ|| 208
கர்உம் ப்ரணாம் கர்ம மன் பானீ|
கர்ஹு க்ருபா ஸுத ஸேவக் ஜானீ|| 209
ஜின்ஹஹி பிரசி பட் பயஉ பிதாதா|
மஹிமா அவதி ராம பிது மாதா|| 210

கௌஸல்யா எனும் கிழக்குத் திசையின் ஒளியில் உலகமே ஸுகமடைகிறது. ஆனால், தாமரை என்னும் துஷ்ட ஜனங்கள் (துஷ்டர்களைத் தாமரை ரூபத்தில் வர்ணிப்பது) ஸ்ரீராமசந்த்ரன் என்னும் சந்த்ரனைக் கண்டதும் துஷ்டர்களான தாமரை மலர்கள் துக்கமடைகிறது.

ஸகலவிதமான ஸௌபாக்யங்களுடன் விளங்கும், மனைவி மார்களுடன் (ஆனந்த ஸ்வரூபியாக விளங்கும்) அந்தத் தசரத சக்ரவர்த்தியை மனத்தினாலும், வசனத்தினாலும் நான் வணங்குகிறேன். அவருடைய பிள்ளைக்கு (ஸ்ரீராமனுக்கு) நான் ஸேவகன் என்பதை அவர் அறியட்டும், அருளட்டும். எந்த ஸ்ரீராமனே உண்டாக்கி ப்ரம்மாவே வாழ்த்துக் கூறும்படிச் செய்து கொண்டாரோ, எவர் ராமனுடைய பிதா,மாதா என்று கூறும் பாக்யம் பெற்றாரோ; அந்தத் தசரதரை நான் வணங்குகிறேன்.

பந்தவும் அவத் புஆல் ஸத்ய ப்ரேம் ஜேஹி ராமபத்|
பிசுரத் தீன்தயால் ப்ரிய தனு த்ருன் இவ பரிஹரேஉ|| 211

நான் அயோத்யாவின் அரசன் தசரதரை வணங்குகிறேன். ஏனெனில்; அவருக்கு எந்நேரமும் ஸ்ரீராமச்சந்த்ரனின் சரணாரவிந்தங்களிலேயே நினைப்பு. இந்த மஹாத்மாவானவர் தீனதயாளப் ப்ரபுவை விட்டுப் பிரிந்ததே இல்லை. இதுமட்டுமல்ல ஸ்ரீராமன் பிரிந்து வனம் ஏகியதும் தனது அருமை உயிரையும் உடலையுமே புல்லாக எண்ணி த்யாகம் செய்துவிட்டார். இப்படிப்பட்ட ஸ்ரீராமபக்தரை நான் ஸதா வணங்குகிறேன்.

ப்ரணவவும் பரிஜன் ஸஹித் பிதேஹு|
ஜாஹி ராம பத் கூட ஸநேஹு|| 212
ஜோக் போக் மஹம் ராகேஉ கோயீ|

ராம் பிலோகத் ப்ரகடேஉ ஸோயீ|| 213

நான் பரிவாரங்களுடன் ராஜா ஜனகரை வணங்கு கிறேன். அவருக்கு ஏற்கனவே ராமபக்தி மிகுந்து இருந் தது. மறைத்து வைத்து இருந்தார். தனது யோகமாயை யினாலும், போக்யத்தினாலும் மறைத்து வைத்திருந்த அவரது பக்தியானது ஸ்ரீராமசந்த்ரனை நேரில் கண் டவுடன் தானாகவே வெளிப்பட்டு விட்டது.

ப்ரணவவும் ப்ரதம பரத் கே சர்னா|
ஜாஸு நேம் ப்ரத் ஜாயி ந பர்னா|| 214
ராம சரன் பங்கஜ் மன் ஜாஸூ|
லுபுத் மதுப் இவ தஜ்யி ந பாஸூ|| 215

ஸஹோதரர்களில் நான் முதலாக ஸ்ரீபரதனை வணங் குகிறேன். ஏனெனில்; அவருடைய நியம நிஷ்டைகளை யாராலும் வர்ணிக்க முடியாது. ஸ்ரீபரதனுடைய மன மானது எந்நேரமும் ஸ்ரீராமசரணங்கள் என்னும் தாமரை மலரினால் மோஹிக்கப்பட்ட வண்டுகள் போல் ஸ்ரீராம சரணங்களிலேயே ஆழ்ந்து இருந்தது.

பந்தஉம் லசிமன் பத் ஜல் ஜாதா|
சீதல் சுபக் பக்த ஸுக் தாதா|| 216
ரகுபதி கீர்தி பிமல் பதாகா|
தண்ட ஸமான் பயஉ ஜஸ் ஜாகா|| 217

பிறகு நான் ஸ்ரீ லட்சுமணனின் பாதகமலங்களை வணங்குகிறேன். அப்பாதங்கள் குளுமையானவை, அழ கானவை. பக்தர்களுக்கு ஸுகமளிக்க வல்லவை. ஸ்ரீரகு நாதனுடைய கீர்த்தியென்னும் கொடியை உயர உயரப் பறக்கவிட்டு ஆனந்தமடைகிறார். இந்த ஆனந்த மய மான கொடியின் கீழ் லட்சுமணனின் கீர்த்தியும் சிரத் தையும் வெளிப்படுகிறது.

ஸேஷ ஸஹஸ்ரஸீஸ் ஜக் காரன்|
ஜோ அவதரேவு பூமி பய டாரன்|| 218
ஸதா ஸோ ஸானுகூல் ரஹ் மோ பர்|
க்ருபாஸிந்து ஸௌமித்ரி குணாகர்|| 219

ஸ்ரீ லட்சுமணர் ஆயிரம் தலைகளையுடைய சேஷ

நாகமாவார். பூலோகத்தின் பயத்தையும், துக்கத்தையும் நாசம் செய்யவே இவர் பூமியில் அவதரித்தார் என்பது கருத்து. குணத்தில் சிறந்தவரும் ஸௌமித்திரா புத்திரருமான ஸ்ரீலட்சுமணன் ஸதா என்மீது ப்ரஸன்னமாக இருக்கட்டும்.

(ஆயிரம் தலைகளோடு கூடிய ஆதிசேஷன் உலகத்தைத் தாங்குகிறார். அப்படிப்பட்ட சேஷனின் அவதாரம் கொண்டவர்)

ரிபுஸூதன் பத் கமல் நமாமீ|
ஸூர் ஸுசீல் பரத் அனுகாமீ|| 220
மஹாபீர் பிநவஉம் ஹனுமாநா|
ராம் ஜாஸு ஜஸ் ஆப் பகாநா|| 221

ஸ்ரீ சத்ருக்னனை, அவர் பாத கமலங்களை நான் வணங்குகிறேன். அவர் மஹாவீரர். நல்ல ஒழுக்கமும், நற்குணங்களும் கொண்டவர். ஸ்ரீபரதனின் பின்னாலேயே போகக் கூடியவர். இதேபோல் மஹாவீரர் ஸ்ரீஹனுமாரையும் நான் வணங்குகிறேன். இவரைப் பற்றிய ப்ரதாபத்தை ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியே தமது திருவாயினால் புகழ்ந்திருக்கிறார்.

ப்ரணவஉம் பவன்குமார் கல் பன்
பாவக் க்யான்கன் |
ஜாஸு ஹ்ருதய் ஆகார் பஸஹிம்
ராம ஸர் சாப் தர் || 222

நான் அந்த வாயுபுத்திரனை (ஹனுமாரை) நமஸ்கரிக்கிறேன். அவர் துஷ்டரூபியான வனத்தை அழிக்க வல்ல காலாக்கினி (நெருப்பு) போன்றவர். ஸ்ரீ ஹனுமான் ஜ்ஞானத்தின் அபாரமான பொக்கிஷம். அவருடைய ஹ்ருதயம் என்னும் வீட்டில் தனுஸைம் பாணத்தையும் (வில்-அம்பு) கொண்ட ஸ்ரீராமன் நிரந்தரமாகக் குடியிருக்கிறார்.

கபிபதி ரீச் நிஸாசர் ராஜா|
அங்கதாதி ஜே கீஸ் ஸமாஜா|| 223
பந்தஉம் ஸப் கே சரன் ஸுஹாயே|
அதம் ஸரீர் ராம் ஜின்ஹ பாயே|| 224

ராம் பிலோகத் ப்ரகடேஉ ஸோயீ|| 213

நான் பரிவாரங்களுடன் ராஜா ஜனகரை வணங்குகிறேன். அவருக்கு ஏற்கனவே ராமபக்தி மிகுந்து இருந்தது. மறைத்து வைத்து இருந்தார். தனது யோகமாயையினாலும், போக்யத்தினாலும் மறைத்து வைத்திருந்த அவரது பக்தியானது ஸ்ரீராமசந்த்ரனை நேரில் கண்டவுடன் தானாகவே வெளிப்பட்டு விட்டது.

ப்ரணவவும் ப்ரதம பரத் கே சர்னா|
ஜாஸு நேம் ப்ரத் ஜாயி ந பர்னா|| 214
ராம சரன் பங்கஜ் மன் ஜாஸூ|
லுபுத் மதுப் இவ தஜ்யி ந பாஸூ|| 215

ஸஹோதரர்களில் நான் முதலாக ஸ்ரீபரதனை வணங்குகிறேன். ஏனெனில்; அவருடைய நியம நிஷ்டைகளை யாராலும் வர்ணிக்க முடியாது. ஸ்ரீபரதனுடைய மனமானது எந்நேரமும் ஸ்ரீராமசரணங்கள் என்னும் தாமரை மலரினால் மோஹிக்கப்பட்ட வண்டுகள் போல் ஸ்ரீராம சரணங்களிலேயே ஆழ்ந்து இருந்தது.

பந்தஉம் லசிமன் பத் ஜல் ஜாதா|
சீதல் சுபக் பக்த ஸுக் தாதா|| 216
ரகுபதி கீர்தி பிமல் பதாகா|
தண்ட ஸமான் பயஉ ஜஸ் ஜாகா|| 217

பிறகு நான் ஸ்ரீ லட்சுமணனின் பாதகமலங்களை வணங்குகிறேன். அப்பாதங்கள் குளுமையானவை, அழகானவை. பக்தர்களுக்கு ஸுகமளிக்க வல்லவை. ஸ்ரீரகுநாதனுடைய கீர்த்தியென்னும் கொடியை உயர உயரப் பறக்கவிட்டு ஆனந்தமடைகிறார். இந்த ஆனந்த மயமான கொடியின் கீழ் லட்சுமணனின் கீர்த்தியும் சிரத்தையும் வெளிப்படுகிறது.

ஸேஷ ஸஹஸ்ரஸீஸ் ஜக் காரன்|
ஜோ அவதரேவு பூமி பய டாரன்|| 218
ஸதா ஸோ ஸானுகூல் ரஹ் மோ பர்|
க்ருபாஸிந்து ஸௌமித்ரி குணாகர்|| 219

ஸ்ரீ லட்சுமணர் ஆயிரம் தலைகளையுடைய சேஷ

நாகமாவார். பூலோகத்தின் பயத்தையும், துக்கத்தையும் நாசம் செய்யவே இவர் பூமியில் அவதரித்தார் என்பது கருத்து. குணத்தில் சிறந்தவரும் ஸௌமித்திரா புத்திரருமான ஸ்ரீலட்சுமணன் ஸதா என்மீது ப்ரஸன்னமாக இருக்கட்டும்.

(ஆயிரம் தலைகளோடு கூடிய ஆதிசேஷன் உலகத்தைத் தாங்குகிறார். அப்படிப்பட்ட சேஷனின் அவதாரம் கொண்டவர்)

ரிபுஸூதன் பத் கமல் நமாமீ|
ஸூர் ஸுசீல் பரத் அனுகாமீ|| 220
மஹாபீர் பிநவஉம் ஹனுமாநா|
ராம் ஜாஸு ஜஸ் ஆப் பகாநா|| 221

ஸ்ரீ சத்ருக்னனை, அவர் பாத கமலங்களை நான் வணங்குகிறேன். அவர் மஹாவீரர். நல்ல ஒழுக்கமும், நற்குணங்களும் கொண்டவர். ஸ்ரீபரதனின் பின்னாலேயே போகக் கூடியவர். இதேபோல் மஹாவீரர் ஸ்ரீஹனுமாரையும் நான் வணங்குகிறேன். இவரைப் பற்றிய ப்ரதாபத்தை ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியே தமது திருவாயினால் புகழ்ந்திருக்கிறார்.

ப்ரணவஉம் பவன்குமார் கல் பன்
பாவக் க்யான்கன் |
ஜாஸு ஹ்ருதய் ஆகார் பஸஹிம்
'ராம ஸர் சாப் தர் || 222

நான் அந்த வாயுபுத்திரனை (ஹனுமாரை) நமஸ்கரிக்கிறேன். அவர் துஷ்டரூபியான வனத்தை அழிக்க வல்ல காலாக்கினி (நெருப்பு) போன்றவர். ஸ்ரீ ஹனுமான் ஜ்ஞானத்தின் அபாரமான பொக்கிஷம். அவருடைய ஹ்ருதயம் என்னும் வீட்டில் தனுஸைம் பாணத்தையும் (வில்-அம்பு) கொண்ட ஸ்ரீராமன் நிரந்தரமாகக் குடியிருக்கிறார்.

கபிபதி ரீச் நிஸாசர் ராஜா|
அங்கதாதி ஜே கீஸ் ஸமாஜா|| 223
பந்தஉம் ஸப் கே சரன் ஸுஹாயே|
அதம் ஸரீர் ராம் ஜின்ஹ பாயே|| 224

வானரர்களின் அரசன் ஸுக்ரீவன், கரடிகளின் அரசன் ஜாம்பவான், ராட்சஸர்களின் ராஜா விபீஷணன், பின்னும் அங்கதன், மற்றும் பூரா வானர ஸேனைகளையும் நான் வணங்குகிறேன். ஏனெனில்; (இவர்கள் மானிடரல்லாத நீச சரீரம் எடுத்தும் கூடப் பகவத் கைங்கரியம் செய்து கொண்டு ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியின் அருகிலேயே இருந்தார்கள்.) அதாவது; பசு முதலான நீச ஜாதிகளிடத்திலும், ராட்சஸர்களிடத்திலும் ஸ்ரீராமனைப் பெறமுடியும் என்பதற்காக.

ரகுபதி சரண உபாஸக் ஜேதே|
கக ம்ருக்ஸுர் நர் அசுர் ஸமேதே|| 225
பந்தஉம் பத ஸரோஜ ஸப் கேரே|
ஜே பினு காம் ராம் கே சேரே|| 226

பசு, பட்சி(மிருகம், பறவை) தேவதா, மனுஷ்யர் அஸுர ஸமேத யாவரும் ஸ்ரீராமச்சந்த்ரனின் பாதங்களின் உபாஸகர்கள். ஆகவே, நான் இப்படிப்பட்ட பக்தர்களின் சரணங்களை வணங்குகிறேன். ஏனெனில்; இவர்கள் ஸ்ரீராமனுக்கு பற்றற்ற ஸேவகர்களாக இருந்தார்கள்.

சுக் ஸனகாதி பக்த முனி நாரத்|
ஜே முனிபர் பிக்யான் பிஸாரத்|| 227
ப்ரணவவும் ஸப்ஹி தர்னி தரி ஸீஸா|
கர்ஹு க்ருபா ஜன் ஜானி முனீஸா|| 228

சுகதேவரும், சனகாதி முனிவர்களும், நாரதர் போன்ற பரம ஞானிகளும், பரம பக்தர்களும் ஸ்ரீராமச்சந்த்ரனின் புகழ்பாடி வாழ்ந்தார்கள். இப்படிப்பட்ட ஹே முனிவர்களே! உங்களுடைய தாஸனாக என்னைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளவும். (பூமியில் தலை வணங்கி நான் யாவரிடமும் வணங்கிக் கேட்பது யாதெனில்; தாங்கள் என்னையும் உங்களுடைய தாஸனாக ஏற்றுக் கொள்ளவும்)

ஜனகசுதா ஜக் ஜனனி ஜானகீ|
அதிஸய் ப்ரிய கருணா நிதான் கீ|| 229
தாகே ஜுக் பத கமல் மநாவஉம்|
ஜாஸு க்ருபாம் நிர்மல் மதி பாவஉம்|| 230

ராஜா ஜனகரின் புதல்வி ஜகத்தின் மாதா போன்றவள், கருணாநிதியான ஸ்ரீராமச் சந்த்ர மூர்த்தியின் அன்பு மனைவி. ஸ்ரீஜானகி தேவியின் இரு பாத கமலங்களிலும் நான் விழுந்து நமஸ்கரிக்கிறேன். அவருடைய க்ருபையால் நான் நல்ல அறிவும் அன்பும் பெறுவேன்.

புனி மன பசன கர்ம ரகுநாயக்|
சரண கமல் பந்தஉம் ஸப் லாயக்|| 231
ராஜிவநயன் தரேம் தனு ஸாயக்|
பக்த பிபதி பஞ்ஜன் 'ஸுகதாயக்|| 232

நான் மனம், வாக்கு, செயல்களாலும் தாமரை போன்ற கண்களுடையவரும், வில்லையும்-அம்பையும் தரித்தவரும், பக்தர்களின் துயரைப் போக்கி அவர்களுக்கு ஸுகத்தைக் கொடுப்பவருமான ஸ்ரீரகுநாதனின் சரண கமலங்களை முதலில் வணங்குகிறேன்.

கிரா அர்த் ஜல் பீசி ஸம கஹிஅத் பின்ன ந பின்ன|
பந்தஉம் ஸீதா ராம பத் ஜின்ஹஹி பரம ப்ரிய கின்ன|| 233

எந்த வார்த்தையும், பொருளும் கேட்டால் தனிமையாகத் தெரிகிறதோ; எப்படித் தண்ணீரும் அதன் அலைகளும் தனித்தனியாக தெரிகின்றனவோ? ஆனால், வாஸ்தவத்தில் இரண்டுமே ஒன்றேதான் என்பதுபோல ஸ்ரீஸீதா ராமன் அவர்களின் சரணங்களில் வணங்குகிறேன். இவர்களுக்கு தீனர்களிடமும், துன்பமுடையவர்களிடமும் அபாரக் க்ருபையுண்டு, அன்பு உண்டு.

பந்தஉம் நாம ராம் ரகுபர் கோ|
ஹேது க்ருஸானு பானு ஹிமகர் கோ|| 234
பிதி ஹரி ஹர்மய் பேத் ப்ரான் ஸோ|
அகுண் அனூபம் குண நிதான் ஸோ|| 235

நான் ரகுநாதனின் நாமத்தை வணங்குகிறேன். இந்தப் பவித்திர 'ராம' என்னும் நாமத்தில் அக்நி, சூரியன், சந்த்ரன் எல்லாமே அடங்கியிருக்கின்றன. இதுமட்டுமல்ல, இந்தப் பெயரில் ர; ஆ, ம என்னும்

பீஜாட்சர நாமத்தில் ப்ரம்மா, விஷ்ணு, சிவன் மூன்று தெய்வத்தினுடைய விசேஷ அம்சமும் இருக்கிறது. வேதங்களின் உயிர்நாடி. நிர் குணமானது, உபமான மற்றது. நற்குணத்தின் களஞ்சியம். இப்படிப்பட்ட ஸ்ரீ ராம நாமத்தை நான் வணங்குகிறேன்.

மஹாமந்த்ர ஜோயி ஜபத மஹேஸூ|
காசீம் முகுதி ஹேது உபதேஸூ|| 236
மஹிமா ஜாஸு ஜான் கணராஊ|
ப்ரதம பூஜிஅத் நாம ப்ரபாஊ|| 237

இது 'மஹாமந்த்ரம்'. இந்த ஸ்ரீராமனுடைய நாமாவை ஸ்ரீசங்கரரும் ஜபிக்கிறார். எந்த சிவனார் முக்தியளிக்கும் காசி க்ஷேத்திரத்தை புகழ்ந்து பாடுகிறாரோ அந்த சிவனார் ராம மந்திரத்தையே ஜபிக்கிறார். ஸ்ரீகணேசருக்கும் இது தெரியும். ஆக முதல் பூஜையிலேயே 'ராமா' என்னும் அட்சரத்தைச் சொல்லியே பூஜையை ஆரம்பிக்கிறார்கள்.

ஜான் ஆதிகபி நாம் ப்ரதாபூ|
பயவு ஸூத்த கரி உல்டா ஜாபூ|| 238
ஸஹஸ நாம் ஸம ஸூனி ஸிவ் பானீ|
ஜபி ஜேயீம் பிய ஸங்க பவானீ|| 239

ஆதிகவி வால்மீகியானவர் ஸ்ரீராமநாம மஹிமையை நன்கு அறிவார். இவர் தவறுதலாகத் தலைகீழ் மந்திரமாக (மரா,மரா) என்று உச்சரித்து, இதிலேயே ஜபம் செய்து பவித்ரமடைந்தார். இந்த மந்த்ரத்தைச் சிவனானவர் கேட்டு மகிழ்ந்து ஆயிரம் ஜப மந்த்ரங்களுக்கு ஸமானம் ஒரு ஸ்ரீராம நாம மந்த்ரம் என்றார். இதேபோல் பார்வதியும் ஸ்ரீராம நாம ஜபம் செய்து வருகிறாள்.

ஹர்ஷே ஹேது ஹேரி ஹர் ஹீ கோ|
திய பூஷண் திய பூஷண் தீ கோ|| 240
நாம ப்ரபாஉ ஜான் சிவ் நீகோ|
காலகூட் பலு தீன்ஹ அமீ கோ|| 241

இந்தப் பெயரைக் குறித்துப் பார்வதியின் உள்ளத்தில் ப்ரீதி இருப்பதைப் பார்த்து (பார்வதிதேவி ராம

ராம மந்த்ரத்தை ஸதா ஜபிப்பதைக் கண்டு) ஹரன் ஸந்தோஷமடைகிறார். பதிவ்ரதா சிரோமணியான பார்வதி தேவியைச் சிவனார் தனது அர்த்தாங்கினியாகச் செய்து கொண்டு இருக்கிறார். ஸ்ரீ ராம நாம மஹிமையின் காரணத்தினால் காலகூட விஷமும் அவருக்கு அமிர்தமானது என்பதைச் சிவனார் அறியார்.

பர்ஷா ரிது ரகுபதி பக்தி துளஸீ
சாலி ஸுதாஸ் |
ராம நாம் பர் பரன் ஜுக் ஸாவன்
பாதவ் மாஸ் || 242

ஸ்ரீரகுநாதனின் பக்தி, வர்ஷா ருது போன்றது.

சிறந்த பணியாளர்கள் தான்யம் போன்றவர்கள். மேலும், ஸ்ரீ ராமநாமம் என்ற இரு அழகிய நட்சத்திரங்கள் ச்ராவண - பாத்ரபதமாஸம் (ஆவணி - புரட்டாசி) போன்று இன்பத்தைக் கொடுக்கும் என்று ஸ்ரீ துளஸீதாஸர் கூறுகிறார்:-

ஆகர் மதுர் மனோஹர் தோஊ|
பரன் பிலோசன் ஜன் ஜிய ஜோவூ|| 243
ஸுமிரத் ஸுலப் ஸுகத் ஸப் காஹூ|
லோக் லாஹு பர்லோக் நிபாஹூ|| 244

'ராம' என்ற இந்த இரண்டு அட்சரங்களும் மதுரமானவை, மனோஹரமானவை. அது வர்ணமாலை ரூபமான (கவி) சரீரத்தின் இரண்டு கண்கள் போன்றவை. ஸ்மரணை செய்த மாத்திரத்தில் பக்தர்களுக்கு க்ருபை செய்யக் கூடியவை. ஸுகம் தருபவை, ஸுலபமானவை. இந்த உலகில் மட்டும் அல்ல; பரலோகத்திலும் காக்கிறது. (இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் கூட நமக்கு இதம் செய்பவை) (அதாவது வைகுந்தத்திலும் தெய்வீக உடலோடு பகவானின் ஸேவையில் நியமிக்கும்)

கஹத் ஸுனத் ஸுமிரத் ஸுடி நீகே|
ராம லகன் ஸம ப்ரிய துளஸீ கே|| 245
பர்னத் பரன் ப்ரீதி பில்காதீ
ப்ரஹ்ம ஜீவ் ஸம ஸஹஜ் ஸங்காதீ|| 246

இந்த அட்சர மஹிமையைப் பற்றிச் சொன்னாலும், கேட்டாலும், நினைத்தாலும் மிக அழகாக இனிமை யாக இருக்கிறது. ஸ்ரீதுளஸீதாஸருக்கு இந்த அட்சரங்கள் ராம-லட்சுமணரைப் போல் வீரியம், அன்பு வாய்ந் தவை. இதைத் தனித்தனியாக (ர-ம என்று) வர்ணித் தால் அட்சர பேதம், அர்த்தமாற்றம் உண்டாகிவிடும். ஆகவே, இந்த மஹிமையைப் பற்றிக் கூற இயலாது. இது ஜீவனைப் போலவும் ப்ரஹமத்தைப் போலவும் ஸதா கூடவே இருக்கக்கூடியவை. இதற்கு வேறு ஒரு வழியுமில்லை. ஒரே ரூபம், ஒரே பாவம், ஒரே ரஸம்தான்.

நர் நாராயண் ஸரிஸ ஸுப்ராதா |
ஜக் பாலக் பிஸேஷி ஜன த்ராதா || 247
பக்தி ஸுதிய கல் கரன் பிபூஷன் |
ஜக் ஹித் ஹேது பிமல் பிது பூஷன் || 248

இந்த இரு அட்சரங்களும் நர நாராயண் போல் அழகிய ஸஹோதரர்கள் போன்றவை. இவை உல கத்தை ரட்சிக்கக் கூடியவை. விசேஷமாகப் பக்தர் களைக் காக்கக் கூடியவை. இவை பக்தி ரூபம் கொண்ட ஓர் அழகிய பெண்ணின் இரு காதணிகள் ஆகும். (கர் ணபூல்) உலகத்தின் நன்மைக்காக விளங்கும் ஸூர்ய, சந்த்ரன் போன்றவை.

ஸ்வாத் தோஷ் ஸம ஸுக்தி ஸுதா கே |
கமட் ஸேஷ ஸம தர் பஸுதா கே || 249
ஜன் மன் மஞ்ஜு கஞ்ஜ மதுகர் ஸே |
ஜீஹ் ஜஸோமதி ஹரி ஹலதர் ஸே || 250

இவை அழகிய மோட்ச ரூபியான அமிருதமானவை ஹிருதயத்திற்குத் திருப்தியளிக்க வல்லவை. ஆமையைப் போலவும் ஸேஷ நாகத்தைப் போலவும் இந்தப் பூமி யைத் தாங்கக் கூடியவை. பக்தர்களின் ஹிருதயம் என் னும் கமலமலரில் எந்நேரமும் ரீங்காரமிட்டுச் சுற்றும், விளையாடும் வண்டுகளைப் போன்றவை. ஜீவ ரூப மான யசோதா தேவிக்கு ஸ்ரீக்ருஷ்ணனைப் போலவும், பலராமனைப் போலவும் இன்பம் அளிப்பவை.

ஏகு சத்ரு ஏகு முகுடமனி ஸப்
பர்னனி பர் ஜோவு |

துளஸீ ரகுபர் நாம் கே பரன் பிராஜத்
தோவு|| **251**

ஸ்ரீரகுநாதன் நாமத்தைக் கொண்ட இரு அட்சரங்கள் ரொம்ப அழகை, காந்தியை அளிப்பவை. ஒன்று (ரகாரம்) அதாவது (சத்ரரூபத்திலும், குடை) மற்றது (மகாரம்) மகுடமணி ரூபத்திலும் அட்சரங்களிலேயே ச்ரேஷ்டமாக விளங்குகின்றவை என்கிறார் துளஸி,

ஸமுஜத் ஸரிஸ் நாம் அரு நாமீ|
ப்ரீதி பரஸ்பர் ப்ரபு அனுகாமீ|| **252**
நாம ரூப் துயி ஈஸ் உபாதீ
அகத் அநாதி ஸுஸாமுஜி ஸாதீ|| **253**

அறிந்து பார்க்கும்போது நாமம் (பெயரும்) பின்னும் நாமி (பெயரை உடையவரும்) என்ற இரு சப்தங்களும் ஒரேபோல்தான் தோன்றுகின்றன. ஆனால், இதற்குள் யஜமானன், ஸேவகன் போன்ற வித்யாசம் கட்டாயம் இருக்கிறது. (ஒன்று நாமம் (பெயர்) மற்றொன்று நாமீ (பெயரை உடையவர்) இவ்விரண்டும் ஒன்றான பின்னர் ஒரு எஜமானின் பின்னால் ஸேவகன் செல்வது போன்றநிலை ஏற்படுகின்றது. அதேபோல் நாமத்திற்குப் பின்னால் நாமீ செல்கிறான். அதாவது; ப்ரபு ராமரானவர் தன்னுடைய நாமத்தின் பின் தானே ஏகுகிறார். நாமத்தைச் சொன்ன மாத்திரத்தில் அங்கு வந்து விடுகிறார்). எனவே இந்த நாமம், ரூபம் இரண்டும் இறைவனுக்கு உரிய பட்டமாகும். வர்ணிக்க முடியாதவை. இவை (அனாதியானவை) நிரந்தரமாக உலகில் என்றும் இருப்பவை, முதலற்றவை, அழகு வாய்ந்தவை, அழிவற்றவை, சிறந்த புத்தியைக் கொண்டு தான் இவைகளின் தெய்வத் தன்மையையும், அழிவற்ற நிலையையும் அறியலாம்.

கோ பட் சோட் கஹத் அபராதூ|
ஸுனி குன் பேது ஸமுஜிஹஹிம் ஸாதூ|| **254**
தேகிஅஹிம் ரூப் நாம் ஆதீனா|
ரூப் க்யான் நஹிம் நாம் பிஹீனா|| **255**

நாமம், ரூபம் என்று ஏற்பட்டுள்ள இந்த பேதங்களில் எது பெரியது, எது சிறியது என்று சொல்ல முடியாது. சொல்வது குற்றமாகும்.

ஸாது புருஷர்கள் இவைகளின் தாரதம்யத்தை அறி வார்கள். நாமம் இன்றி ரூபம் பெயருக்கு உட்பட்ட தாகத் தெரியவருகிறது. ரூபத்தின் மஹிமையை அள விடமுடியாது. அறிய முடியாது.

ரூப் பிஸேஷ் நாம் பினு ஜானேம்|
கரதல் கத் ந பர்ஹிம் பஹிசாநேம்|| 256
ஸுமிரிஅ நாம் ரூப் பினு தேகேம்|
ஆவத் ஹ்ருதயம் ஸநேஹ் பிஸேஷேம்|| 257

கைகளில் ஒரு பொருளை வைத்துக் காட்டினாலும் அந்தப் பொருளுக்கு பெயரில்லை எனில் மதிப்பில்லை. அதை அடையாளம் காணமுடியாது. அதாவது, ஒரு பெயர் கட்டாயம் இருக்க வேண்டும். அதே போல் ரூபத்தைக் காணாமல் வெறும் பெயர் சொன்ன மாத் திரத்தில் அந்தப் பெயரின் லட்சணம் ரூபம் சிறந்த ப்ரேமையுடன் தன்னைத்தானாகவே நம் மனத்தில் பதித்து வீடுகிறது.

நாம் ரூப் கதி அகத் கஹானீ|
ஸமுஜத் ஸுகத் ந பர்தி பகானீ|| 258
அகுன் ஸகுன் பிச நாம் ஸுஸாகீ|
உபய் ப்ரபோதக் சதுர் துபாஷீ|| 259

நாமத்தைப் பற்றியும் ரூபத்தைப் பற்றியும் கதை கதையாகக் கூறுவது இயலாதது. அதை அனுபவிக்கத் தான் முடியுமே தவிர வர்ணிக்க முடியாதது. நிர்குணம், ஸகுணம் இவற்றிற்கிடையில் ரூபத்தின் நிரந்தர சாட்சி ராம நாமம்தான். இந்த இரண்டின் யதார்த்த ஞானம் உள்ளமனிதர் சிறந்த அறிவாளி எனலாம். இருபக்க மும் பேசுபவராவார்.

ராம நாம் மனிதீப் தரு ஜீஹ் தேஹரீம் த்வார்|
துளஸீ பீதர் பாஹேர்ஹூம் ஜௌம் சாஹ்ஸி
உஜிஆர்|| 260

இராம நாமம் என்னும் மணிரூபமான இந்த விளக்கை, முகரூபமான வாசற்படியில், நாக்கு ரூபமான திண் ணையில் வைத்துவிட்டால், அந்த விளக்கானது உள் ளும், புறமும் தனது ப்ரகாசமான ஒளியைக் காட்டும்.

(காற்றாலும் கூட இந்த ஒளியை அசைக்க முடியாது. அதாவது; மனித ஹ்ருதயத்தில் ஸ்ரீராம நாமம் பதிந்து விட்டால் வேறு எந்த வெளி சக்திகளும் ஒன்றும் செய்ய முடியாது என்பதாகும் என்கிறார் துளஸீ.)

நாம் ஜீஹம் ஜபி ஜாகஹிம் ஜோகீ|
பிரதி பிரஞ்சி ப்ரபஞ்ச பியோகீ|| 261
ப்ரஹ்ம ஸுக்ஹி அனுபவ்ஹிம் அனூபா|
அகத் அநாமய் நாம் ந ரூபா|| 262

ஜானா சஹஉறிம் கூட் கதி ஜேவூ |
நாம் ஜீஹம் ஜபி ஜானஹிம் தேவூ || 263
ஸாதக் நாம் ஜப்ஹிம் லய் லாயேம் |
ஹோஹிம் ஸித்த அனிமாதிக் பாயேம் || 264

யோகிகள் நாக்கினால் பகவன் நாமத்தை ஜபித்து ஸித்தியடைகிறார்கள். அவர்கள் ப்ரம்மாவினால் படைக்கப்பட்ட ப்ரபஞ்சத்தை விட்டுவிட்டு வைராக்யத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் அந்த மாதிரி ப்ரம்ம ஸுகத்தை அங்கு அனுபவிக்கிறார்கள். இந்த ஸுகமானது கூறமுடியாதது. அனுபவிக்க மட்டுமே முடியும். ரோகமற்றது, வேஷமற்றது. ராம நாமத்தின், பகவானின் மறைவான ரகசியத்தை, உண்மையான மஹிமையை அறிய விரும்புபவர்களும் அதை ஜபித்துக் கொண்டு இருக்கிறார்கள். தவ ச்ரேஷ்டர்கள் இந்நாமத்தின் மஹிமையால் அஷ்டமாஸித்தி அடைகிறார்கள், ஸித்தர்களாகிறார்கள்.

ஜப்ஹிம் நாமு ஜன் ஆரத் பாரீ|
மிட்ஹிம் குசங்கட் ஹோஹிம் ஸுகாரீ|| 265
ராம பக்த ஜக் சாரி ப்ரகாரா|
ஸுக்ருதீ சாரிஉ அநக் உதாரா|| 266

சங்கடத்திற்காகப் பயந்த - ஆர்த்தன் ஆகும்

பக்த மானிடர்கள் தமக்குத் துன்பம் வந்தபோதிலும் இந்த நாமத்தை ஜபிப்பார்கள். அப்படி ஜபித்துவருவதால், அவர்களது மிகப்பெரிய கடினமான கஷ்டங்களும் அழிந்துபடும்.

அந்த-

மானிடர்கள் எந்தவிதக் கஷ்டங்களும் விலகி ஸுகப் படுவர். ஸ்ரீராமனின் பக்தர்கள் நான்கு வகைப்படு வார்கள்.

1. அர்த்தார்த்தீ (பொருளை விரும்புபவன்)
2. ஆர்த்தன் (கஷ்டத்திலிருந்து விடுபட எண்ணு கிறவன்)
3. ஜிஜ்ஞாஸு (பகவானை அடைய வேண்டும் என்று விரும்பி எண்ணுபவன்)
4. ஜ்ஞானீ (பகவானை உண்மையில் அறிந்து இயல்பாகவே பஜனை செய்து எண்ணுபவன்)

இவர்கள் யாவரும் பரமாத்மாவின் அன்புக்கு உட் பட்டவர்கள்; ராமபக்தர்கள்; அதாவது ஸித்தியடைந்த வர்கள்; புண்ணியம் செய்தவர்கள்; பாபம் அற்றவர்கள். உதாரத்தன்மை உள்ளவர்கள்.

சஹூ சதுர் கஹும் நாம் அதாரா |
க்யானீ ப்ரபுஹி பிஸேஷி பிஆரா || 267
சஹும் ஜுக் சஹும் ச்ருதி நாம் ப்ரபாவூ |
கலி பிஸேஷி நஹிம் ஆன் உபாவூ || 268

பண்டிதர்களான, அறிவுள்ளவர்களான அந்நால் வர் இந்த நாமத்தின் ஆதரவில்தான் இருக்கிறார்கள். இவர்களில் எவன் எல்லாம் தெரிந்த ஞானியாக இருக் கிறானோ; அவனே பகவானுக்குப் ப்ரியமானவன்.

அதாவது, ஸத்யயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களிலும் ருக், யஜுர், ஸாம, அதர்வண என்னும் நான்கு வேதங்களிலும் இந்த ஸ்ரீராம நாமத்திற்குப் பெருமை உண்டு. ஆனால், இக்கலியுகத்தில் கட்டாயமாக, சிறப்பாக - இந்த நாமத் தின் மஹிமைதான் ஆதரவு; வேறு உபாயமே இல்லை. அதாவது, கலியுகத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டி யது இந்த நாமம் ஒன்றேதான்.

ஸகல காமநா ஹீன் ஜே
ராம் பக்தி ரஸ் லீன் |
நாம் ஸுப்ரேம் பியூஷ ஹ்ருத
தின்ஹஹும் கியே மன் மீன் || 269

அதாவது; ஸம்பூர்ணமான உலக இச்சைகளையெல்லாம் விட்டு, எந்தப் புருஷனானவன் தனது ஆசைகளையெல்லாம் ஒழித்து, ஸ்ரீராம பக்தியென்னும் அற்புத ரஸத்திலேயே திளைத்திருக்கிறானோ, அவன் ஸ்ரீராமனுடைய அழகிய நாமத்தின் ப்ரேமை என்னும் அம்ருத குண்டத்தில் தனது மனத்தை மீனாக மாற்றி வைத்திருக்கிறான்.

(அதாவது அவர்கள் ராமநாமமாகிற அமுதத்தை இடைவிடாது சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள். கண நேரங் கூட அதிலிருந்து தனித்திருக்க விரும்புவதில்லை.)

அகுண் ஸகுண் துயி ப்ரஹ்ம ஸரூபா|
அகத் அகாத் அநாதி அநூபா|| 270
மோரேம் மத் பட் நாமு துஹூ தேம்|
கியே ஜேஹிம் ஜுக் நிஜ் பஸ் நிஜ பூதேம்|| 271

நிர்குணம், ஸகுணம் (சிறப்புக் குணமுற்றவை-குணமுள்ளவை) இரண்டுமே ப்ரம்மத்தின் ஸ்வரூபமானவை, கூற முடியாத தன்மையுடையவை, கம்பீரமானவை, அநாதியானவை, உபமானமற்றவை. என் அபிப்பிராயத்தில் ஸகுணம், நிர்குணம் இரண்டுமே தங்களுக்குள் பலம் பொருந்தியவைதான். ஆனால், அதைவிடச் சிறப்புடையது நாமமே ஆகும். அது தனது பலத்தால் இரண்டையுமே தன் வசத்தில் வைத்துள்ளது.

ப்ரௌடி ஸுஜன ஜனி ஜானஹிம் ஜன்கீ|
கஹஉம் ப்ரதீதி ப்ரீதி ருசி மன் கீ|| 272
ஏகு தாருகத் தேகிஅ ஏகூ|
பாவக் ஸம ஜுக் ப்ரஹ்ம பிபேகூ|| 273

ஸாதுக்கள் என்னுடைய இந்த வார்த்தையை அதிகப் பிரசங்கித்தனம், வேடிக்கைப் பேச்சு என்று எண்ண வேண்டாம்.

அதாவது, கட்டைக்குள்ளே இருக்கும் நெருப்பைப் போன்று நிர்குணம் வெளியே தெரியாது, அதனால் பார்க்க முடியவில்லை. ஸகுணம் வெளியே தெரியும் நெருப்புக்கு ஸமமானது. ஆகவே, அதை நேரிடையாகக் காணமுடிகிறது.

உண்மையில் பார்க்கப் போனால் இரண்டுமே ஒன்று தான். ஆனால், தெரிந்தும்-தெரியாமலும் ஆன வித்தி யாஸத்தினால்தான் வெவ்வேறாகத் தெரிகின்றன. இதே போல்தான் நிர்குணமும்-ஸகுணமும் ஒன்றேதான்.

அறிவுள்ளவர்கள் ஜனங்களின் மனத்தை அறிவார்கள். நான் என்னுடைய மனத்தில் எழும் நம்பிக்கையின் 'ப்ரீ தியின்' இன்பத்தின் வார்த்தைகளைக் கூறுகிறேன். அதாவது, எல்லா ஜ்ஞானிகளின் அனுபவங்களையும் கூறுகிறேன். (ஒரு அக்னியானது வெளியில் எரிகிறது. ஒன்று உள்ளேயே புகைந்து கொண்டு இருக்கிறது. இந்த இரண்டு அக்னிகளைப் போல் நிர்குணம், ஸகுணம் இரண்டுமே ப்ரம்மத்தின் ஞானரூபம். ஒன்று வெளி யில் தெரிகிறது. மற்றது குப்தமாக (மறைவாக) இருக் கிறது.)

உபய அகம் ஜுக் ஸுகம் நாம் தேம்|
கஹேஉம் நாமு பட் ப்ரஹ்ம ராம் தேம்|| 274
ப்யாபகு ஏகு ப்ரஹ்ம அபிநாசீ|
ஸத் சேதன் கன் ஆனந்த ராஸீ|| 275

ஆஸ ப்ரபு ஹ்ருதயம் அசத் அபிகாரீ|
ஸகல் ஜீவ ஜக் தீன் துகாரீ|| 276
நாம் நிரூபன் நாம் ஜதன் தேம்|
ஸோவு ப்ரகடத் ஜிமி மோல் ரதன் தேம்|| 277

இவ்வாறு இருக்கும்போது - இந்த இரண்டையுமே அறிவதில் மிகவும் கஷ்டம் இருக்கிறது, நாமத்தினால் இரண்டும் புரியக்கூடியவைதான். எனவே, நான் நிர் குணமான நாமத்தை, ப்ரம்மாவைக்காட்டிலும், ஸகு ணத்தை, ராமனைக்காட்டிலும் பெரிது என்கிறேன். ஆகவே, நான் ஸாட்சாத் ப்ரம்மாவின் நாமத்தைப் பற் றியே கூறுகிறேன். அந்த நாமமானது ஸச்சிதானந்த ரூபமுள்ளது, ஆனந்தமானது, அவிநாசியான ஈச்வர னைப் போன்றது. நமது உள்ளே ஈச்வரன் இருந்த போதிலும் துக்கம், கஷ்டம் இவைகளை மனிதர்கள் அனுபவிக்காமல் செய்கிறார்கள் ஏன்? அதேபோல் பாவத்தை மனத்தில் அடக்கி வைத்தால் ப்ரயோஜன மில்லை. ஆயினும், அந்த திவ்ய நாம ஸங்கீர்த்தனத்தை ஜபத்தின் மூலமாக ஹிருதயத்திலிருந்து வெளிப்படுத்த

வேண்டும். அப்போதுதான் ஜீவனானது மாயையிருந்து வெளிப்பட்டு, தன் ஸ்வயரூபத்தை அடைகிறது. எப்படி ரத்தினக் கற்களைப்பற்றி அறிந்ததும் அவைகளின் விலைமதிப்பு தெரிகிறதோ; அதேபோல்தான்.

நிர்குண் தேம்ஏஹி பாந்தி பட் நாம் ப்ரபாஉ அபார்|
கஹஉம் நாமு பட் ராம் தேம் நிஜ பிசார் அனுஸார்|| 278

நிர்குணம் மூலமாக இந்தப் பெயர், ராம நாமத்தின் மஹிமை அதிகரித்து இருக்கிறது. இப்போது என்னுடைய யோசனை மூலமாக ராமனை விட ராம நாமத்திற்குத்தான் மஹத்வம் அதிகம் என்கிறேன்.

ராம் பக்த ஹித் நர் தனு தாரீ|
ஸஹி சங்கட் கியே ஸாது ஸுகாரீ|| 279
நாமு ஸப்ரேம் ஜபத் அநயாஸா|
பக்த ஹோஹிம் முத் மங்கல் பாஸா|| 280

ராம் ஏக் தாபஸ் திய தாரீ|
நாம் கோடி கல் குமதி ஸுதாரீ|| 281
ரிஷி ஹித ராம் ஸுகேதுஸுதா கீ|
ஸஹித ஸேனஸுத கீன்ஹி பிபாகீ|| 282

ஸ்ரீராமச்சந்த்ரமுர்த்தியானவர் பக்தர்களுக்காக வேண்டி மனுஷ்ய சரீரம் எடுத்துப் பலவிதமான, எண்ணிற்கடங்காக் கஷ்டங்களையும், துக்கங்களையும், ஸஹித்துக் கொண்டு ஸாதுக்களை ஸம்ரட்சணை செய்தார். ஆனால், எந்தப் பக்தனானவன் பரமாத்மாவின் நாமத்தை மட்டும் ஜபித்துக் கொண்டு இருக்கிறானோ; அவனுக்குத் தானாகவே ஆனந்தமும், மங்களமும் உண்டாகின்றன. ஸ்ரீராமச்சந்த்ரன், முனிவரின் மனைவியான அஹல்யாவை உத்தரணம் செய்தார். அதாவது, அவளைக் கடைத்தேற்றிச் சாப விமோசனம் செய்தார். ஆனால், அவருடைய நாமமோ (ஸ்ரீராமன் என்னும் சக்தியோ, கோடிக் கணக்கான துஷ்டர்களின் கெட்ட குணத்தையும், கெட்ட எண்ணத்தையும் மாற்றியது. விச்வாமித்ர முனிவரின் நன்மை காரணமாகவே ஸ்ரீராமனானவர், ஸுகேதுவின் மகளான தாடகையையும்,

அவள் புத்திரன் ஸுபாஹுவின் ஸைன்யங்கள் உட்பட அனைவரையும் வதம் செய்து கரையேற்றினார். அதாவது; துஷ்டர்களுக்கும் மோக்ஷமளித்தார் எனலாம்.

ஸஹித தோஷ் துக் தாஸ் துராசா|
தலயி நாமு ஜிமி ரபி நிசி நாஸா|| 283
பஞ்ஜேவு ராம் ஆபு பவ் சாபூ|
பவ் பய பஞ்ஜந நாம் ப்ரதாபூ|| 284

தண்டக் பனு ப்ரபு கீன்ஹ ஸுஹாவன்,
ஜன்மன் அமித் நாம் கியே பாவன்|| 285
நிஸிசர் நிகர் தலே ரகுநந்தன்|
நாமு ஸகல கலி கலுஷ் நிகந்தன்|| 286

ஆனாலும், எப்படி ஸூர்யனானவன் இரவை நாசம் செய்து ப்ரகாசம் அளிக்கிறானோ; அதேபோல் ராம நாமம் என்னும் இந்த இரு அட்சரங்களும் தாஸர்களுடைய துக்கத்தையும், நிராசைகளையும் தூர விலக்குகின்றன. தீனர்களுடைய இருட்டை நாமம் என்னும் ஸூர்யன் உடனே விலக்குகிறது. ஸ்ரீராமன் சிவனின் வில்லை உடைத்தார். ஆனால், அவருடைய நாமமானது பவ ஸாகரத்தின் பாபங்களையும் உடைத்து எறிந்து விட்டது. உலகத்தின் நன்மையைப் பாதுகாத்தது. ப்ரபு ஸ்ரீராமசந்த்ரன் பயங்கரமான தண்டகாவனத்தை அழகாகப் பரிசுத்தமாக்கினார். (ஏனெனில்) அங்கு அவர் சென்றதால் அந்த இடம் பரிசுத்தமானது. ஆனால், அவர் நாமமோ; அங்குள்ள ஆயிரக்கணக்கான ஜனங்களின் மனத்தைப் பரிசுத்தமாக்கியது. ஸ்ரீராமசந்த்ரன் ராட்சஸர்களை, அவர்கள் கூட்டத்தை அடியோடு நாசம் செய்தார். ஆனால், அவரது நாமமோ இந்தக் கலியின் ஸர்வ பாபங்களையும் நாசம் செய்ய வல்லதாகிறது.

ஸபரீ கீத் ஸுஸேவகனி ஸுகதி தீன்ஹி ரகுநாத்|
நாம் உதாரே அமித கல் பேத் பிதித் குண் காத்|| 287

ஸ்ரீரகுநாதனானவர் ஸபரக்கும், ஜடாயு என்கிற கழுகிற்கும், தனது ஸேவகர்களுக்கும் நற்கதி (அதாவது முக்தி அளித்தார்.) இது உண்மை. ஆனால், அவரு

டைய திருநாமமோ அநேக பாபிகளையும், துஷ்டர்களையும் உத்தாரம் செய்து கரையேற்றியது. நாம குணத்தினைப் பற்றிய கதை வேதத்திலேயே கூறப்பட்டுள்ளது; ப்ரஸித்தமானது.

ராம் ஸுகண்ட் பிபீஷண் தோவூ|
ராகே சரண் ஜான் ஸபு கோவூ|| **288**
நாம் கரீப் அநேக் நேவாஜே|
லோக் பேத் பர் பிரித பிராஜே|| **289**

ராம் பாலு கபி கடகு படோரா|
ஸேது ஹேது ச்ரமு கீன்ஹ ந தோரா|| **290**
நாமு லேத் பவ ஸிந்து ஸுகாஹீம்|
கர்ஹு பிசாரு ஸுஜன மன் மாஹீம்|| **291**

ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியானவர் ஸுக்ரீவனையும், விபீஷணனையும் தமது காலடியிலேயே அடைக்கலமாக (தாஸனாக) வைத்துக் கொண்டார். இது யாருமறிந்த, வேதமறிந்த உண்மை. ஏனென்றால், அவருடைய திருநாமமானது ஸுக்ரீவன், விபீஷணன் மட்டுமல்ல அநேகமனேகம் ஏழைகளைக் கரைகடக்கச் செய்தது.

கடலைக் கடக்க ஸ்ரீராமனானவர் குரங்கு வர்கங்களையும், கரடிகளையும் உதவிக்கு அழைத்து அவர்களைக் கொண்டு ஸேது பந்தனம் செய்தார். ஸேதுவில் பாலம் அமைக்கச் செய்தார். அதில் சிறிதும் கஷ்டம் கொள்ளவில்லை. ஆனால், அவருடைய ராம நாமமோ ஸம்ஸார ஸாகரம் என்னும் கடலைப் பாலமில்லாமலேயே கடக்க உதவியது. அதாவது, இந்தத் திருநாமத்தால் ஸம்ஸார ஸாகரம் என்னும் கடலின் தண்ணீரே வற்றி விட்டது. பக்தர்கள் ஸுலபமாகக் கரையேறினர். ஆகவே, ஹே! மஹாபுருஷர்களே! நல்ல மனதுடையவர்களே! இதிலிருந்து பகவன் நாமத்தின் மஹிமையைத் தெரிந்து கொள்ளுங்கள். இவைகளில் எது உயர்வுடையது என்று பாருங்கள்.

ராம் ஸகுல் ரண் ராவணு மாரா|
ஸீய ஸஹித் நிஜ புர் பகு தாரா|| **292**
ராஜா ராமு அவத் ரஜதானீ|

காவத் குண் ஸுர முனி பர் பானீ|| **293**

ஸேவக் ஸுமிரத் நாமு ஸப்ரீதீ|
பினு ச்ரம் ப்ரபல் மோஹ தலு ஜீதீ|| **294**
பிரத் ஸநேஹம் மகன் ஸுக் அப்னேம்|
நாம் ப்ரஸாத் ஸோச் நஹிம் ஸப்னேம்|| **295**

ஸ்ரீராமச்சந்த்ரன் யுத்தத்தில் ராவணனை வென்றார். ராவணன் குலத்தை அடியோடு நசித்தார். பின் தேவி ஸீதையுடன் தனது நகரம் அயோத்யை திரும்பினார்; ராஜாவானார் ஸ்ரீராமர். அவரது ராஜதானியானது (அவத்) அயோத்யாபுரி ஆயிற்று. இந்த ராம ராஜ்யத்தின் பெருமையை, அவரது குணங்களைத் தேவதைகளும், முனிவர்களும், ஸுந்தரமான வாணியினால் பாடி ஜபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவரது பக்த தாஸனானவன் அன்போடு அவரது நாமத்தை மட்டுமே உச்சாரணம் செய்தால் போதும். நினைத்த மாத்திரத்தில் மோஹம் எனும் மாயையின் ப்ரபல ஸேனைகள் தானாகவே சிரமமின்றித் தூர விலகி விடுகின்றன. எல்லாவித பாக்யங்களும் பெற்று, மதிமயங்கி ஸ்வப்னத்தில் கூட ஆனந்தத்தில் திளைத்திருக்கிறார்கள். ஏனெனில்; அவர்களுக்கு ராம நாமமே ஆதாரம். அதனால் கவலை கூட வருத்துவதில்லை.

ப்ரஹ்ம ராம் தேம் நாமு பட் பர தாயக் பர தானி|
ராமசரித் ஸத் கோடி மஹம் லிய மஹேச ஜியம் ஜானி|| **296**

நிர்குண ப்ரம்மம், ஸகுண ஸ்ரீராமன் இவர்களையும் விட நாமத்தின் மஹத்துவம் அதிகம். வரங்களைக் கொடுப்பவர்களுக்கும் வரங்களைக் கொடுக்கவல்ல அத்புத நாமம் ஆகும்.

சிவனானவர் தம் உள்ளத்தில் இதனை அறிந்து நூறு கோடி ராமாயணங்களிலிருந்து ''ராமா''! என்னும் இரு எழுத்துக்கள் உள்ள நாமாவை மட்டும் ஸாரமாக்கித் தனியாகப் பிரித்தார்.

(நூறு கோடியிலிருந்து ஒரு கோடியாக்கப்பட்டு,

அந்த ஒரு கோடியிலிருந்து மூன்றாகப் பிரித்து, ஒரு லட்சம் செய்து, ஒரு லட்சத்தை ஆயிரமாகச் செய்து அந்த ஆயிரத்திலும் நூறு எடுத்து, அதில் முப்பத்தி ரெண்டு அட்சரங்கள் கொண்ட ஒரு ச்லோகத்தை எடுத்துக் காட்டினார்.

பின்னும் அதிலிருந்து மூன்றாகப் பிரித்து 'ரகார''மகார' என்னும் இரு அட்சரங்களை மட்டுமே எடுத்தார் எனப்படும்.)

நாம் ப்ரஸாத் ஸம்பு அபிநாஸீ|
ஸாஜு அமங்கல் மங்கல் ராசீ|| 297
சுக் ஸனகாதி ஸித்த முனி ஜோகீ|
நாம் ப்ரஸாத் ப்ரஹ்மஸுக் போகீ|| 298

நாமத்தின் ப்ரபாவத்தினால், அனுக்ரஹத்தினால் சிவன் அவிநாசியாகிறார். பலவிதமான அமங்கல வஸ்துக்களை, வடிவங்களை அணிந்து கொண்டவருமான அவர் பின்னும் மங்கலமானவர் என்று போற்றப்படுகிறார், ஏன்?

சுகதேவர், ஸனகாதி முனிவர்கள், ஸித்திபெற்ற முனிவர்கள், யோகிகள் யாவருமே இந்த ஒரே ஒரு நாம மந்திரத்தின் வசத்தால் எல்லாமே பெற்று இன்புறுகிறார்கள். ப்ரஹ்மானந்தத்தை அனுபவிக்கிறார்கள்.

நாரத் ஜானேவு நாம் ப்ரதாபூ|
ஜகப்ரிய் ஹரி ஹரி ஹரப்ரிய் ஆபூ|| 299
நாமு ஜபத் ப்ரபு கீன்ஹ ப்ரஸாதூ|
பக்த சிரோமணி பே ப்ரஹ்லாதூ|| 300

நாரத முனிவர் ஸ்ரீராமநாமத்தின் மஹிமையை அறிவார் . ஆனால், உலகத்திற்கு விஷ்ணு, ப்ரியமானவர்தான். அந்த ஹரிக்கு ஹரன் ப்ரியமானவர். நாரதரான நீங்களோ அந்தச் சிவன்-விஷ்ணுவின் அன்பை, ப்ரியத்தைப் பெற்றவர்கள்தான்.

ஆயினும், கேவலம் நாமத்தின் உச்சரிப்பினாலேயே ப்ரஹ்லாதன் என்னும் சிறுவன் பக்தர்களிலேயே முகுடமணிபோல் விளங்குகிறானே! பலவிதமான கஷ்டங்

களையும் அச்சிறுவன் ஸ்ரீராம நாமத்தின் மஹிமை யினாலேயே தவிர்த்துக் கொண்டான். தந்தையினால் கொடுமைப்படுத்தப்பட்ட சிறுவன் ப்ரஹ்லாதனை அறிவாரில்லையா?

த்ருவம் ஸக்லானி ஜபேவு ஹரி நாவும்|
பாயவு அசல் அனூபம் டாவும்|| ***301***

பக்த த்ருவனானவன் கேவலம் ராமநாம உச்சரிப்பி லேயே அசைக்கமுடியாத இணையற்ற த்ருவலோகம் என்னும் தனி ஸ்த்தானத்தைப் பெற்றவன்.

(கதையின் ஸாரம்: ஸ்வயம்பு மனுவின், ஸ்த்ரீ சத ரூபா என்பவளுடைய புத்திரன் உத்தானபாதனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். இவர்களில் பெரிய ராணியின் புதல்வன் த்ருவன். ஆனால், இளையவளி டமே ராஜாவிற்கு ஆசை அதிகம்.

ஒரு தினம் சின்ன ராணியுடன் ராஜா உத்தானபா தன் அமர்ந்திருக்கையில்; குழந்தை த்ருவனானவன் ஓடி வந்து அப்பா மடியில் ஏறி உட்கார்ந்தான். இதைக் கண்ட அவன் சிறு தாயார், குழந்தையைக் கீழே இறக்கி விட்டு விட்டு, என் வயிற்றில் பிறந்தவனுக்குத்தான் இந்த ராஜா மடியிலும், ஸிம்மாசனத்திலும் உட்கார அதிகாரம் உண்டு. 'நீ போ' என்று சினந்து கொண்டாள்.

த்ருவன் மனமுடைந்து தபம் செய்யக் காடு ஏகி னான். ராஜா முடிந்த மட்டும் அவனைத் திசை திருப்ப யத்தனித்தான். ஆனால், த்ருவனோ தனது மனம் மாறா மல் ஒரே வைராக்யத்துடன் நிஷ்டையில் ஈடுபட்டு என் றும் நிலைத்திருக்கும் ஒரு ஸ்ரீராமநாமத்தை, அதாவது, பெயரை நினைத்து மனத்தில் இருத்தி, எவருக்கும் கிடைக்க முடியாத ஒரு நிலையான இடத்தை, த்ருவ லோகத்தை நாரதரின் உபதேசத்தால் பெற்றான் என்பது வரலாறு)

ஸுமிரி பவன ஸுத் பாவன் நாமூ|
அப்னே பஸ் கரி ராகே ராமூ|| ***302***
அப்து அஜாமிலு கஜு கணிகாவூ|
பயே முகுத் ஹரி நாம் ப்ரபாவூ|| ***303***

பவன சுதன் அதாவது; வாயுபுத்திரன் ஹனுமான் ஸ்ரீராமனைக் காட்டிலும் ஸ்ரீராமநாமத்தைச் சொல்லியே தன் இஷ்ட தெய்வத்தைத் தனது அடிமையாக்கிக் கொண்டான்.

மேலும், நீசனான அஜாமிலன் என்பவனும், கஜேந்திராழ்வனும், பிங்கலா என்ற வேசியும் கூட ஸ்ரீஹரியின் நாமப்ராவத்தால்தான் முக்தி பெற்றார்கள்.

(இதோ அந்த வரலாறு-

1. அஜாமிலன் என்று ஒரு மகாபாபி இருந்தான். ஒரு தினம் அவன் வீட்டிற்கு ஒரு ஸாது வந்தார். அவன் அந்நேரம் வீட்டில் இல்லை. ஆகவே, அவனுடைய தர்ம பத்தினி ஸாதுவை உபசரித்து சிச்ரூஷை செய்தாள். ஸாது மனம் குளிர்ந்து அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கு 'நாராயணா' என்று பெயர் வை என்று கூறிப் போனார். குழந்தை பிறந்ததும் 'நாராயணா' என்ற பெயரையே அந்த ஸ்த்ரீ வைத்தாள். அஜாமிலன் குழந்தையை மிகுந்த ஆசையுடன் வளர்த்தான். அந்திம காலத்தில் ஒருநாள் விக்கல் வந்தது. 'நாராயணா' ''தண்ணி கொண்டுவா'' என்று பல முறை கூவி அழைத்தான். இப்படித் தன் பிள்ளையைத்தான் அவன் கூப்பிட்டாலும்; அந்த அவனுடைய அந்திம காலத்தில் யமதூதர்கள் வந்தார்கள். யமதூதர்களைக் கண்டதும்; 'நாராயணா' 'நாராயணா' என்று அலறினான். இந்த நாராயணா ஏன்னும் சப்தம் கேட்ட மாத்திரத்தில் யமதூதர்கள் கிட்ட நெருங்கவில்லை. நாராயணா என்றதைக் கேட்டதால்; அவனைப் பாசக் கயிற்றை வீசிப்பிடிக்காமல் தயங்கி நின்றார்கள். பிறகு அந்த யமதூதர்கள் மறைந்து; விஷ்ணு தூதர்கள் தோன்றினர்; அவனை வைகுண்டம் அழைத்துச் சென்றார்கள். இப்படித்தான் குழந்தையின் நாமத்தை உரக்கக் கூவி அதனாலேயே அஜாமிலன் என்ற பாபியும் பரமபதம் எய்தினான்.

2. கஜேந்திரன் யானைக் கூட்டத்துடன் வந்து ஒரு தாமரைக் குளத்தில் குளிக்கலானான். அப்போது ஒரு முதலை அதன் காலைப் பற்றிக் கொண்டது. வெகுகா'லம் வரை இரண்டிற்கும் போராட்டம் நடந்தது. முதலை வாயிலிருந்து யானைக்கு விடுதலை கிடைக்க

முடியவில்லை. இச்சமயம் கூட வந்த யானைக் கூட்டங் களும் ஓர் உதவியும் செய்ய இயலாது தனியாகப் போய்விட்டன.

யானை பூராவும் தண்ணீரில் முழுகும் சமயம் எதி ரில் ஒரு தாமரை தென்பட்டது கஜேந்திரன் அழுது கொண்டே அந்தத் தாமரையை துதிக்கையால் எடுத்து 'ஹே நாராயணா', ஹே ராமா! என்று அலறிக்கொண்டே பூவை எரிந்தது.

அத்தருணம் பகவான் மகாவிஷ்ணு வந்து முதலை யைச் சக்கரத்தினால் அறுத்து, கஜேந்திரனைக் காப் பாற்றினார். 'ராமா' என்ற மந்திரத்தின் ப்ரபாவத்தி னால் யானை உயிர் தப்பிப் பிழைத்தது.

3. அதேபோல் 'பிங்கலா' என்னும் தாஸி தன்னைச் சிங்காரித்துக் கொண்டு இரவு நடுநிசி வரை உட்கார்ந் திருந்தாள். அன்று அவளுக்கு ஒரு கிராக்கியும் வர வில்லை. தானே படுக்கையில் கிடந்தவாறு சிந்தித்தாள்.

'நான் இத்தனை நேரமும், இத்தனை காலமும் பாபி களான சாமி புருஷர்களை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்! இந்த த்யான நினைப்பைக் கடவுளிடம் செலுத்தியிருந்தால்; நான் மோட்ச மார்க்கத்தை எய் தியிருப்பேனே! என்று அழுதாள்.

அவள் உடனே தத்தாத்ரேயரின் கடாட்சம் பெற்று 'ஞானம்' அடைந்து, நற்கதி அடைந்தாள் எள்பது புராணம்.)

கஹெளம் கஹாம் லகி நாம் படாயீ|
ராமு ந ஸக்ஹிம் நாம் குண் காயீ|| *304*

அந்த ஸ்ரீராமனுடைய நாமத்தைப் பற்றிய ப்ரபா வத்தை நான் எங்ஙனம் கூறுவது? ஏனெனில்; ஸ்ரீராம னின் நாமத்தை, அதன் குணத்தைப் பற்றி எண்ணவும், பாடவும் முடியாது.

நாமு ராம் கோ கல்பதரு கலி கல்யான்
நிவாஸு|

ஜோ ஸுமிரத் பயோ பாங்க் தேம் துளஸீ
துளஸீதாஸு|| 305

ராமநாமம் என்பது சிறந்த கல்பக விருட்சம்; இந்தக் கலியுகத்தில் காக்க வல்லது; விரும்பியவை அளிக்க வல்லது, அதாவது; மோட்சத்தை உண்டாக்க வல்லது; மங்களகரமானது. அந்நாமத்தை ஸ்மரணை செய்த மாத்திரத்தில் ஸாதாரண துளஸீ என்னும் மனிதர் 'துளஸீதாஸர்' என்னும் கீர்த்திமான் ஆகிவிட்டார். துளஸியைப் போலப் பவித்ரராகிவிட்டார்.

சஹூம் ஜுக் தீனி கால் திஹூம் லோகா|
பயே நாம் ஜபி ஜீவ் பிஸோகா|| 306
வேத புராண் ஸந்த் மத் ஏஹூ|
ஸகல் ஸுக்ருத் பல் ராம் ஸநேஹூ|| 307

கலியுகத்திற்கு உரிய செய்தி மட்டுமல்ல இது.

1. நான்கு யுகங்களும், அதாவது; ஸத்ய யுகம், (க்ரேதா) த்ரேதா யுகம், த்வாபர யுகம், கலியுகம்.
2. மூன்று காலங்கள், அதாவது; இறந்தகாலம், நிகழ் காலம், எதிர்காலம்.
3. மூன்று லோகங்கள், அதாவது;
ப்ரம்ம லோகம், பூலோகம், பாதாளலோகம். எங்குமே, எல்லா மக்களுமே, ஜனஸ மூஹம் மட்டுமல்ல, அனைத்து ஜீவ ராசிகளுமே ஸ்ரீராம நாமம் என்னும் ஒரு மந்த்ரத்தை உச்சரித்தே கவலையை விட்டு வாழ்கின்றன.

வேதம், புராணம், முனிவர் வாக்கு எல்லாமே புண்ணிய பலனுக்காக வேண்டி ஸ்ரீராம நாமமே சிறந்தது, அதில் பற்று கொள்ள வேண்டும் என்பதை ஒத்துக் கொள்கின்றன.

த்யானு ப்ரதம ஜுக் மக்பிதி தூஜேம்|
த்வாபர் பரிதோஷத் ப்ரபு பூஜேம்|| 308
கலி கேவல் மல் மூல் மலீனா|
பாப் பயோநிதி ஜன் மன் மீனா|| 309

அதாவது, ஸத்ய யுகத்தில் பகவானை த்யானம்

செய்வதாலும், த்ரேதா யுகத்தில் யஜ்ஞம் செய்வதாலும் த்வாபர யுகத்தில் பூஜை புனஸ்காரம் செய்வதாலும் பகவான் ஸந்தோஷமடைகிறார். ஆனால், இந்தக் கலியுகம் பாபத்தின் சுமைதாங்கி. இந்தப்பாவ ஸமுத் திரத்தில் மனிதனுடைய மனமானது மீனாக உலவி வரு கிறது. (அதாவது, இந்தப்பாவச் செயலிலிருந்து தனித் திருக்க விரும்புவதில்லை. எனவே த்யானம், யாகம், பூஜை இவைகளைச் செய்ய முடிவதில்லை.)

நாம் காமதரு கால் கராலா|
ஸுமிரத ஸமன் ஸகல் ஜக் ஜாலா|| 310
ராம நாம கலி அபிமத் தாதா|
ஹித் பரலோக் லோக் பிது மாதா|| 311

இந்தப்பயங்கரமான கலியுகத்தில் ஸ்ரீராமநாமம் என்னும் கல்ப விருட்சத்தை நினைத்தால்; நினைத்த மாத்திரத்தில் உலகத்தின் ஸகல துக்கம், துன்பங்களை யும் நீக்கிவிடும். துன்ப துயரங்களை அது (நாமம்) அழிக்க வல்லது.

இந்தக் கலியுகத்தில் ஸ்ரீராமநாமம் என்பது மன இஷ்டத்தை நமக்கு அளிக்கவல்லது. அதாவது, பரலோ கத்திலும் நமக்கு வேண்டிய நன்மையை அடையச்செய் கிறது. இஹலோகத்திலும் (இவ்வுலகம்) தாய்-தந்தை யைப் போல் நம்மைப் பேணி வளர்க்கிறது.

நஹிம் கலி கர்ம ந பக்தி பிபேகூ|
ராம் நாம் அவலம்பன் ஏகூ|| 312
காலநேமி கலி கபட் நிதானூ|
நாம் ஸுமதி ஸமர்த் ஹனுமானூ|| 313

அதாவது, இந்தக் கலியுகத்தில் எவரிடமும் நல்ல ஒழுங்கான காரியமில்லை, பக்தி இல்லை, ஜ்ஞானமும் இல்லை. இம்மாதிரி நிலையில் உஜ்ஜீவிக்க ஸ்ரீராம நாமம் ஒன்றே ஆதாரம். கபடரூபம் கொண்ட இந்தக் கலியுகத்தின், காலநேமியின் போக்கை மாற்றவே, அழிக்கவே ஸ்ரீராம நாமமே சிறந்தது என்று புத்திமா னும், ஸமர்த்தருமான ஸ்ரீ ஹனுமான் கூறுகிறார்.

ராம் நாம் நர்கேஸரீ கனக்கஸிபு கலிகால்|
ஜாபக் ஜன் ப்ரஹ்லாத ஜிமி பாலிஹி தலி
ஸுர்ஸால்|| 314

ஸ்ரீராமநாமம் ஸ்ரீ நரஸிங்கப் பெருமானாவர். கலியுகமானது ஹிரண்ய கசிபு போன்றது. ஜபம் செய்யும் பக்தர்களோ ப்ரஹ்லாதன் போன்றவர்கள்.

இந்த ஸ்ரீராமநாமமானது கலியுகம் என்னும் அரக்கர்களை வதைத்துத் தேவர்கள் எனப்படும் பக்தர்களைப் காப்பாற்றும்.

பாயம் குபாயம் அநக் ஆலஸ்ஹூம்|
நாம் ஜபத் மங்கல் திஸி தஸ்ஹூம்|| 315
ஸுமிரி ஸோ நாம் ராம குண் காதா|
கர்வும் நாஇ ரகுநாத்ஹி மாதா|| 316

நல்ல அன்பு மனத்துடனோ, அல்லது, கெட்டதான மனத்துடனோ, கோபத்துடனோ, அல்லது, சோம்பலுடனோ, அவர் திரு நாமத்தை ஜபித்தால்; பத்து திசைகளிலிருந்தும் நன்மை பெருகுகிறது. மேலும், பரம கல்யாண குணங்களுடைய ராம நாமத்தின் ஸ்மரணையில் நான் ஸ்ரீ ரகுநாதனைத் தலைவணங்கி நமஸ்கரிக்கிறேன். அவரைப் பற்றிய குணத்தைப் பாடுகிறேன், வர்ணனை செய்கிறேன்.

மோரி ஸுதாரிஹி ஸோ ஸப் பாந்தீ|
ஜாஸு க்ருபா நஹிம் க்ருபாம் அகாதீ|| 317
ராம் ஸுஸ்வாமி குஸேவகு மோஸோ|
நிஜ் திஸி தேகி தயாநிதி போஸோ|| 318

நான் எத்தனை மூர்க்கனாக இருந்தாலும்; ஸ்ரீ ராமன் என்னை மன்னித்து என் தவறுகளைச் சமாளிப்பார். என்னிடம் க்ருபை காட்டுவதில் அவர் சலிப்பதில்லை. ராமனைப் போல உத்தமன் இல்லை, என்னைப் போல் ஹீனமான ஸேவகனும் இல்லை. அப்படி இருந்தும் அந்தத் தயாநிதியான ப்ரபுவானவன் என்னைத் தான் பார்த்துக் காப்பாற்றுகிறார்.

லோகஹூம் பேத் ஸுஸாஹிப் ரீதீ |
பினய் ஸுனத் பஹிசானத் ப்ரீதீ || 319

கனீ கரீப் க்ராம்நர் நாகர் |
பண்டித் மூட் மலீன் உஜாகர் || 320

ப்ரபஞ்சத்திலும், வேதங்களிலும் கூறியிருப்பது என்னவென்றால்; பக்தர்களின் முறையீடுகள் கேட்டவுடன் அதாவது; ஏழையோ, பணக்காரனோ, பட்டிக்காட்டானோ, பட்டணத்தில் வசிப்பவனோ, படித்தவனோ, முட்டாளோ, ஸமூஹத்தில் நிராகரிக்கப்பட்டவனோ, அல்லது கீர்த்தி உள்ளவனோ, யாராக இருந்தாலும் சரி, பக்தி பரவசமான முறையீடு கேட்டவுடனே பரமாத்மாவான ஸ்ரீ ராமன் உடனே ஓடி வந்து துயரைத் துடைக்கிறார்.

ஸுகவி குகபி நிஜ் மதி அனுஹாரீ |
ந்ருபஹி ஸராஹத் ஸப் நர நாரீ || 321
ஸாது ஸுஜான் ஸுசீல் ந்ருபாலா |
ஈச் அம்ஸ் பவ பரம க்ருபாலா || 322

நல்ல கவிகளோ, குணமற்ற கவிகளோ, எல்லா ஜனங்களும் ஸ்த்ரீ புருஷர்களும் தங்கள் தங்கள் புத்தி விலாசப்படி ராஜாவைத் துதி பாடுகிறார்கள். ஆனால், ஸாது, புத்திமான், நன்னடத்தையுடையவர், இறைவனுடைய அம்சத்திலிருந்து உண்டான அருளாளன் தான் ராஜா என்கிறார்கள்.

ஸுநி ஸன்மான்ஹிம் ஸப்ஹி ஸுபானீ |
பனிதி பக்தி நதி கதி பஹிசானீ || 323
யஹ் ப்ராக்ருத் மஹிபால் ஸுபாவூ |
ஜான் சிரோமணி கோஸல்ராவூ || 324

ஆண்டவனானவர் எல்லோருடய அன்பான மொழிகளையும், பக்தர்களின் விதவிதமான பக்தியையும், ப்ரார்த்தனைகளையும் கேட்டபின்; அன்பொழுகும் மொழியினால் தக்கவர்க்குத் தக்கபடி மரியாதை கொடுக்கிறார், மதிப்புக் கொடுக்கிறார். இம்மாதிரிப் பழக்கங்கள் பூலோகத்திலுள்ள ராஜாக்களுக்கே உரிமையானவை. ஆனால், ஸ்ரீ ராமன், அதாவது; கோஸல புரியின் மஹத்தான ராஜா ராமன் இதில் சதுர சிரோமணி போன்றவன் அல்லவா?

ரீஜத் ராம் ஸ்நேஹ் நிஸோதேம் |
கோ ஜக் மந்த் மலின் மதி மோதேம் || 325

ஸ்ரீ ராமன் சுத்தமான ப்ரேமையினால் ஆனந்தப் படுகிறார். ஆனால்; உலகில் என்மாதிரி ப்ரேமையே செய்யத் தெரியாத ஒரு மந்தபுத்தி மூடனுக்கு எப்படி ஸ்ரீராமனைத் துதிக்கத் தெரியும்?

ஸட் ஸேவக் கீ ப்ரீதி ருசி ரகிஹஹிம்
ராம் க்ருபாலு |
உபல் கியே ஜல்ஜான் ஜேஹிம் ஸசிவ்
ஸுமதி கபி பாலு || 326

அப்படியிருந்தாலும், க்ருபாலுவான ஸ்ரீ ராமச்சந்த்ரன் என்போன்ற மூடர்களின் பக்திக்கும் இரங்குகிறார்; ப்ரியம்வைத்திருப்பார். மேலும், கல்லில் கப்பல் செய்தும், புத்தியுள்ள கரடியையும், ஹனுமானையும், அறிவாளி மந்திரியாகவும் செய்து உலகிற்குக் காட்டினார் அல்லவா!

ஹௌம்ஹு கஹாவத் ஸபு கஹத் ராம்
ஸஹத் உபஹாஸ் |
ஸாஹிப் ஸீதாநாத் ஸோ ஸேவக்
துளஸீதாஸ் || 327

ஏல்லோருமே என்னை ஸ்ரீ ராமனின் தாஸன், ஸேவகன் என்கிறார்கள். நானும் கொஞ்சமும் தயக்கம், நாணம் இன்றி 'ஆமாம்' என்கிறேன்.

க்ருபாலுவான பகவான் ஸ்ரீராமன் இந்தச் சிறுசிறு அவதூறுகளை ஸஹித்துக்கொள்கிறார். ஏனெனில்; ஸீதாராமனாகிய ஒரு தலைவருக்குத் துளஸீ போன்ற ஒரு தாஸன் இருந்தார் என்பதும் உண்மை.

அதிபடி மோரி டிடாயீ கோரீ |
ஸுனி அக் நரக்ஹும் நாக் ஸகோரீ || 328
ஸமுஜி ஸஹம் மோஹி அப்டர் அப்நேம் |
ஸோ ஸுதி ராம் கீன்ஹ ஸப்னேம் || 329

என்னுடைய பெரிய அதிகப்ரஸங்கித்தனம், தோஷம்

என்ன என்றால்; நான் செய்த பாபத்திற்கு நரகத்திலும் கூட இடம் கிடைக்காது. நரகங்கூட முகத்தைத் திருப் பிக் கொள்கிறது. எனக்கு நானே என் பாப கர்மங் களை நினைத்துத் துக்கிக்கிறேன்; அதாவது, வருந்து கிறேன். ஆனால், பகவான் ஸ்ரீ ராமச்சந்த்ரன் என்னு டைய நிர்குண ; தோஷங்களைப் பற்றிக் கனவிலும் நினைப்பதில்லை; அப்படிப்பட்ட மஹான் அவர்.

ஸுனி அவலோகி ஸுசித் சக் சாஹீ |
பக்தி மோரி மதி ஸ்வாமி ஸராஹீ || *330*
கஹத் நஸாயி ஹோயி ஹியம் நீகீ |
ரீஜத் ராம் ஜானி ஜன் ஜீ கீ || *331*

என்னுடைய ப்ரபு ஸ்ரீராமச்சந்த்ரன் என்னைப்பற்றி எல்லாமே கேட்டிருக்கிறார்; மனக்கண்ணால் பார்த் திருக்கிறார். அப்படியும் என்னுடைய இந்தப் புத்தியை யும், பக்தியையும் புகழ்ந்தே பேசியிருக்கிறார். என்னை நானே உள்ளுக்குள் நொந்துகொண்டாலும்; (நான் வேண் டுமானால் எப்போதும் ஸ்ரீ ராமனுடைய தாஸன் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறேன்.) இந்த ஒரு நல்ல தாஸனானவனின் உள் விஷயத்தை அறிந்துதான் ஸ்ரீராமன் என்னிடம் ஸந்தோஷம் கொள்கிறார்.

ரஹதி ந ப்ரபு சித் சூக் கியே கீ |
கர்த் ஸுர்தி ஸய் பார் ஹியே கீ || *332*
ஜேஹிம் அக் பதேஉ ப்யாத் ஜிமி பாலீ |
பிரி ஸுகண்ட் ஸோயி கீன்ஹி குசாலீ || *333*

ப்ரபுவின் - மனத்தில் எந்நேரமும் பக்தர்களுடைய நியாயமான முறையீடுகள் நினைவில் இருக்கும். பக் தர்கள் செய்யும் சிறுசிறு தவறுகள் எப்படி அவர் நினை வில் இருக்கும்? அவை மறந்துதான்போகும். ஸுக்ரீவன் வஞ்சகமாக வாலி வதைக்குக் காரணமானான் என் பதை அறிந்தும் பகவான் வாலியை வேடனொருவன் புலியை அடிப்பது போல் அடித்துக் கொன்றார். ஏன்? அப்படிப்பட்ட மஹாபாவம் வாலி செய்திருக்கிறான். ஆகவே, அவனை உடனே அடித்துவிட்டார் ஆண்ட வன் - ஸுக்ரீவனை ஆதரித்தார்.

ஸோயி கர்தூதி பிபீஷன் கேரீ |
ஸப்நேஹும் ஸோ ந ராம் ஹியம் ஹேரீ || *334*

தே பரத்ஹி பேன்டத் ஸன்மானே |
ராஜ் ஸபாம் ரகுபீர் பகாநே || 335

இதேபோல் குலத்ரோஹி என்று இராவணனால் கூறப்படும் விபீஷணனையும் ஸ்ரீ ராமபிரான் காத்தருளினார். விபீஷணனைப் பற்றிய இந்தக் கதையை ஸ்ரீ ராமன் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. ஏனெனில்; விபீஷணன் பரம ராமபக்தன். மேலும், பரதனுடன் சந்திப்பு ஏற்படும் ஸமயத்தில் தன் தம்பிக்கு விபீஷணனைப் பற்றி ப்ரமாதமாகப் புகழ்ந்து பேசிவிட்டு அந்த விபீஷணனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்துவைத்தார். ஸபையிலும் விபீஷணனைப் பற்றிக் குணகானம் செய்தார்.

ப்ரபு தரு தர் கபி டார் பர் தே கியே ஆபு ஸமான் |
துளஸீகஹூம்ந ராம் ஸே ஸாஹிப் சீல்நிதான் ||336

ப்ரபு ஸ்ரீராமச்சந்த்ரன் மரத்தின் கிளையொன்றில் கீழாக உட்கார்ந்திருக்கிறார். அந்தக் கிளையில் குரங்குகள்தான் ஏறித்தாவும். குரங்கிற்கு ஸமமாக அவரும் அதே கிளையில் அமர்ந்திருந்தார். அதாவது; அவர் குரங்கையும் தனக்குச் ஸமமாக நினைக்கிறார். அவ்விதம் ப்ராணிகளையும் நன்றாகக் கருதும் பண்பு அது; அந்த மர்யாதா புருஷோத்தமனான ஸ்ரீ ராமனுடைய இத்தகைய உயரிய சீலம் நிறைந்த நற்குணம் எங்குக் காணக்கிடைக்கும்? அவரைப் போன்ற ப்ரக்ருதி புருஷனைக் காணமுடியுமா? என்கிறார் துளஸீ.

ராம நிகாயீ ராவ்ரீ ஹை ஸப் |
ஹீ கோ நீக் ||
ஜௌம் யஹ் ஸாஞ்சீ ஹை ஸதா தௌ |
நீகோ துளஸீக் || 337

''ஹே! ஸ்ரீராமா! தங்களுடைய கல்யாணமயமான ஸ்வபாவத்தினால் யாவரும் ஸுகம் அடைகிறார்கள். அதாவது; எல்லாருக்கும் மங்களமுண்டாகிறது. அப்படியிருக்க இது உண்மையானால்; துளஸீதாஸனான எனக்கும் நன்மை, உங்கள் க்ருபை கட்டாயம் கிடைக்கும்.

ஏஹி பிதி நிஜ குண் தோஷ் கஹி ஸப்ஹி
பஹுரி ஸிரு நாயி |
பர்நஉம் ரகுபர் பிஸத் ஜஸு ஸுனி கலி
கலுஷ் நசாயி ||338

இம்மாதிரி என்னுடைய பலவிதமான குணதோஷங்களையும் கூறி எல்லோரையும் மதித்துத் தலை வணங்குகிறேன். திரும்பத் திரும்ப ஸ்ரீ ரகுநாதனின் நிர்மலமான கீர்த்தியைப் பாடி வர்ணனை செய்கிறேன். இந்த ஸந்தோஷத்தை அனுபவித்தால், கதையைக் கேட்டால், இக்கலியுகத்தில் பாபங்கள் தானாகவே நகர்ந்து அழிந்து விடும்.

ஜாக் பலிக் ஜோ கதா ஸுஹாயீ |
பரத்வாஜ் முனிபர்ஹி ஸுநாயீ || 339
கஹிஹஉம் ஸோயி ஸம்பாத் பகானீ |
ஸுநஹும் ஸகல் ஸஜ்ஜன் ஸுகு மானீ || 340

முனிவர் யாஜ்ஞவல்க்யர் எந்த அருமையான கதையை முனிச்ரேஷ்டரான பரத்வாஜரை கேட்கச் செய்தாரோ, அதே உரையாடல்களை, ஸம்வாதங்களை, நானும் கேட்டு ஆனந்தமடைந்தேன்; அதே போல் வர்ணிக்கப் போகிறேன். பல பெரிய மனிதர்களும், குணவான்களும் கேட்டு ஸுகத்தைப் பரத்திலும், இஹத்திலும் அனுபவிக்கவேண்டும்.

ஸம்பு கீன்ஹ யஹ் சரித் ஸுஹாவா |
பஹுரி க்ருபா கரி உமஹி ஸுநாவா || 341
ஸோயி சிவ் காகபுசுண்டிஹி தீன்ஹா |
ராம பக்த அதிகாரீ சீன்ஹா || 342

இந்த அருமையான ஸ்ரீ ராம சரித்ரத்தை முதலில் சிவனார் அமைத்தார். பிறகு இதைப் பார்வதி தேவிக்குக் கருணையோடு கூறினார். பிறகு இதே சரித்ரத்தை சிவன் எல்லாவிதத்திலும் தகுதி வாய்ந்தவரும், ஸ்ரீராம பக்தருமான காகபுசுண்டிமுனிவர்க்குக் கொடுத்தார்.

தேஹி ஸன் ஜாக்பலிக் புனி பாவா |
தின்ஹ புனி பரத்வாஜ் ப்ரதி காவா || 343

தே ச்ரோதா பக்தா ஸம்சீலா |
ஸம்வதர்சீ ஜானஹிம் ஹரி லீலா || 344

இதை மீண்டும் காகபுசுண்டி, யாஜ்ஞுவல்க்யருக்குக் கூறினார். அவர் அதை மீண்டும் பரத்வாஜருக்குக் கூறி னார். இம்மாதிரி இருவருமே ஒருவர் கூற ஒருவர் கேட்க ஹரி கதையைக் கூறிக்கூறி ஆனந்தமடைந்தனர். இருவரும் ஸ்ரீ ஹரியின் லீலா விநோதங்களை அறிந்த வரேயாவர்.

ஜானஹிம் தீனி கால் நிஜ் க்யானா |
கரதல் கத் ஆமலக் ஸமானா || 345
ஔர்வு ஜே ஹரிபக்த ஸுஜானா |
கஹஹிம் ஸுனஹிம் ஸமுஜஹிம்பிதி நானா || 346

அம்முனிவர்கள் மூன்று காலங்களில் நடந்த செய் திகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நேரடியாகவே அறிவார்கள். அதுமட்டுமெல்ல; நல்ல குணசரித்ரமுள்ள பகவானுடைய லீலை ரகஸ்யங்களை ஸம்பூர்ணமாக அறிந்த ஹரி பக்தர்கள். எனவே, அவர்கள் இந்த ஸ்ரீராம கதையைப் பலவிதமாகச் சொல்கிறார்கள்; கேட்கிறார் கள்; அறிவார்கள்.

மைம் புனி நிஜ குர் ஸன் ஸுனீ கதா
ஸோ ஸூகர்கேத் |
ஸமுஜீ நஹிம் தஸி பால்பன் தப் அதி
ரஹேஉம் அசேத் || 347

நானும் இதே கதையை வராஹ க்ஷேத்ரத்தில் என் குருநாதர் மூலம் கேட்டிருக்கிறேன். ஆனால், அத் தருணம் நான் சிறுவன். இளம் வயதானதினால் அறிந்து கொள்ள இயலாதவனாக இருந்தேன். அதனால் அப் போது இந்தக்கதையின் மஹிமையை அறிய எனக்குப் போதிய சக்தி இருக்கவில்லை.

ஸ்ரோதா பக்தா க்யான்நிதி
கதா ராம் கை கூட்|
கிமி ஸமுஜௌம் மைம் ஜீவ் ஜட் கலி
மல் க்ரஸித் பிமூட்|| 348

ஸ்ரீ ராமன் கதையைக் கேட்பவர்களும், சொல்பவர்களும் இருதரப்பாருமே அறிவுள்ள மேதைகளாக இருக்கிறார்கள்.

நானோ இந்தக் கலியுகத்தின் பாபச் சுமையால் விழுங்கப்பட்ட மஹாமூடனான ஜட ஜீவன். அப்படிப் பட்ட எனக்கு என்ன தெரியும்?

(ஜடமான நான் ஸ்ரீராமகதையைப் பற்றிய மேன்மையை அறியத்தான் முடியுமா?)

ததபி கஹீ குர் பார்ஹிம் பாரா |
ஸமுஜி பரீ கசு மதி அனுஸாரா || 349
பாஷாபத்த கர்பி மைம் ஸோயீ |
மோரேம் மன் ப்ரபோத் ஜேஹிம் ஹோயீ || 350

பின்னும் என் குருநாதர் திரும்பத் திரும்ப இக் கதையைப் போதித்ததினால்; என் சிறுமூளைக்கு ஏற்ற வாறு கொஞ்சம் அறிவில் எட்டியது. அதேதான் என் கற்பனை எழுத்துத் திறமை மூலம் காவியமாகிறது. இதனால் என் மனத்திற்கு ஒரு ஸந்தோஷமும், ஏற்படுகிறது.

ஜஸ் கசு புதி பிபேக் பல் மேரேம் |
தஸ் கஹிஹஉம் ஹியம் ஹரி கே ப்ரேரேம் || 351
நிஜ் ஸந்தேஹ் மோஹ் ப்ரம் ஹர்னீ |
கர்வும் கதா பவ் ஸரிதா தர்னீ || 352

என்னிடம் புத்தியும், விவேகத்தின் பலமும் உள்ளது. என் ஹிருதயத்தில் ஸ்ரீ ஹரியின் தூண்டுதலால் உந்தப்பட்ட பக்தி ; ப்ரவாஹத்தைக் கொண்டு ஸ்ரீ ராம கதையைச் சொல்கிறேன்; எழுதுகிறேன். என் ஸந்தேஹம், அஜ்ஞானம், ப்ரமை இவைகளைப் போக்கக் கூடிய கதையாக எழுதுகிறேன். அது ஸம்ஸார ரூபியான நதியைக் கடக்கவல்ல படகு போன்றதாகும்.

புத் பிச்ராம் ஸகல் ஜன் ரஞ்ஜனி |
ராம்கதா கலி கலுஷ் பிபஞ்ஜனி || 353
ராம்கதா கலி பந்நக் பர்னீ |
புனி பிபேக் பாவக் கஹூம் அர்னீ || 354

ஸ்ரீ ராம கதையானது பண்டிதர்களுக்கும், பாவலர் களுக்கும், எல்லா மனித ஜாதிகளுக்கும் நிம்மதியான மனத்தையும், ஸந்தோஷத்தையும் கொடுக்கிறது. இந்தக் கலியுகத்தின் பாபங்களை அழித்து இன்பத்தைத் தர வல்லது. இந்த ஸ்ரீ ராம கதையானது கலியுகரூபம் கொண்டதான ஸர்ப்பத்திற்கு எதிரியான மயில் போன் றது. விவேகமாகிற அக்னியை வெளிப்படுத்த வந்த அரணிக்கட்டை போன்றது. (அதாவது அக்ரமத்தையும், துன்பத்தையும், அநியாயத்தையும் அழிக்கவல்லது. அந்த வன்னிமரக்கட்டையைக் கடைந்தால் தீ உண்டாகும், இக்கதையாலே ஜ்ஞானம் உண்டாகும் என்பது)

ராம்கதா கலி காமத் காயீ |
ஸுஜன் ஸஜீவனி மூரி ஸுஹாயீ || 355
ஸோயி பசுதாதல் ஸுதா தரங்கினி|
பய் பஞ்ஜநி ப்ரம பேக் புஅங்கினி || 356

ஸ்ரீராம கதையானது கலியுகத்தில் எல்லா ஸௌ பாக்யங்களும் தரவல்ல, இச்சைகளைப் பூர்த்தி செய்ய வல்ல ஒரு காமதேனுப்பசு. நற்குணவான்களுக்கு அழ கான ஸஞ்ஜீவனி மருந்து போலாகும்.

இந்த ப்ருத்வியில் இது ஓர் அம்ருதமயமான நதி. ஜன்ம-மரண பயத்தைப் போக்க வல்லது. ப்ரமை, அஜ்ஞானம் என்னும் தவளைகளை விழுங்கக்கூடிய பெண் நாகம் போன்றது.

அஸுர் ஸேன ஸம் நரக் நிகந்தினி |
ஸாது பிபுத் குல் ஹித் கிரிநந்தினி || 357
ஸந்த் ஸமாஜ் பயோதி ரமா ஸீ |
பிஸ்வ பார் பர் அசல் சமா ஸீ || 358

இந்த ஸ்ரீராமகதையானது அஸுரர்கள் ஸேனை யைப்போல் நரகத்தை அழிக்கவல்லது. ஸாதுரூபமான ச்ரேஷ்டர்களுக்கு, தேவர்களுக்கு இதத்தையும், ஸுகத் தையும் கொடுக்கவல்ல துர்க்கா தேவி போன்றது.

இது முனி ஜன ஸாதுக்களாகிய க்ஷீரஸமுத்திரத் திற்கு லக்ஷ்மீ தேவி போன்றது. பின்னும் ஸம்பூர்ண

நிலத்தைத் தாங்கவல்ல உறுதிவாய்ந்த, அசையாத ப்ருத்வி (பூமி) போன்றது.

ஜம் கன் முஹம் மஸி ஜக் ஜமுனா ஸீ |
ஜீவன் முகுதி ஹேது ஜனு காஸீ || 359
ராம்ஹி ப்ரிய பாவனி துளஸீ ஸீ |
துளஸிதாஸ் ஹித ஹியம் ஹுலஸீ ஸீ|| 360

இந்த ஸ்ரீராம கதையானது உலகத்தில் ம்ருத்யு பயத்தைப் போக்கவல்ல யமுனை நதியைப் போன்றது. (யம தூதர்களும் அருகே வரமுடியாமல் ஓடிவிடுவார்கள்.) மேலும், ஜீவன்களுக்கு முக்தியளிக்கவல்ல காசி க்ஷேத்ரம் போன்றது. இக்கதை ஸ்ரீராமனுக்குத் துளஸீயின் மேல் உண்டான பவித்ரமான ப்ரியம் போன்றது. இக்கதையானது துளஸீயின் தாயார் ஹுலஸி அன்புடன் ஆசீர்வதிப்பது, இதமளிப்பது போலாகும்.

சிவப்ரிய மேகல் ஸைல ஸுதா ஸீ |
ஸகல ஸித்தி ஸுக் ஸம்பதி ராஸீ || 361
ஸத்குன் ஸுரகன் அம்ப அதிதி ஸீ|
ரகுபர் பக்தி ப்ரேம் பர்மிதி ஸீ || 362

இந்த ஸ்ரீராமகதை. சிவனாருக்கு நர்மதை நதியைப் போல் ப்ரியமானது. இது எல்லாவிதமான ஸித்திகளையும் தரவல்லது. செல்வக்குவியல்! ஸத்குண ரூபமான தேவர்களைப் படைத்துக் காத்த மாதா அதிதி போன்றது. பகவான் ஸ்ரீராமச்சந்த்ரனுடைய பக்திக்கும், அன்புக்கும் சிறந்த எல்லை போன்றது

ராம்கதா மந்தாகினீ சித்ரகூட்
சித் சாரு|
துளஸீ ஸுபக் ஸ்நேஹ் பன் ஸிய
ரகுபீர் பிஹாரு|| 363

ஸ்ரீராமகதை ஒரு மந்தாகினி நதியைப் போன்றது. அவருடைய அழகிய சித்தமே ஒரு சித்ரகூடம். எத்தனையோ அழகும், சீலமும் உள்ள அந்தச் சித்ரகூட வனமே ஸ்நேஹமாகும். அதில் ஸ்ரீஸீதாராமன் விஹாரம் செய்கிறார், (அதாவது; உலாவி வருகிறார்).

ராமசரித் சிந்தாமனி சாரு |
ஸந்த் ஸுமதி திய சுபக் ஸிங்காரு || 364

ஜக் மங்கல் குன்க்ராம் ராம் கே |
தானி முகுதி தன் தர்ம தாம் கே || 365

ஸ்ரீராமச்சந்த்ரனின் சரித்ரம் ஓர் அழகிய சிந்தா மணி; ஸாதுக்களின் புத்தியாகிற நங்கைக்கு அழகு ச்ருங்காரம். (நல்ல குணரூபி ஸ்த்ரீயாகப் பாவிக்கிறார், ஸ்த்ரீகளுடைய ச்ருங்காரம், அலங்காரம்,) ஸ்ரீராமச் சந்த்ரனின் குணஸமூஹமானது ப்ரபஞ்சத்திற்கு மங் களத்தைக் கொடுக்கக் கூடியது. முக்தியையும், தனத் தையும், தர்மத்தையும், ஸௌபாக்கியங்களையும் தவிர வைகுண்ட்டப்ராப்தியையும் கொடுக்க வல்லது.

ஸத்குர் க்யான் பிராக் ஜோக் கே |
பிபுத் பைத் பவ் பீம் ரோக் கே || 366
ஜனனி ஜனக் ஸிய ராம ப்ரேம் கே |
பீஜ ஸகல் ப்ரத் தர்ம நேம் கே || 367

ஞ்ஞானம், வைராக்யம், யோகம் போன்ற மானிட குணங்களுக்கு உலகில் ஸத்குரு போன்றது ராம கதை. ஸம்ஸார்ம், அதாவது; உலக போகங்களைச் சுமக்கும் பயங்கர ரோகத்தைப் போக்கக்கூடிய தேவர்களின் வைத்யர்களான அச்வினி குமாரர்களைப் போன்றது. ஸ்ரீஸீதாராமனுடைய, பெருமையை, அன்பைக் கூறவந்த தாய் தந்தை போன்றது, ஸம்பூர்ண வ்ரதம், தர்மம், நியமங்களுக்கு விதை போன்றது.

ஸமன் பாப் ஸந்தாப் சோக் கே |
ப்ரிய் பாலக் பர்லோக் லோக் கே || 368
ஸசிவ் ஸுபட் பூபதி பிசார் கே |
கும்பஜ் லோப் உததி அபார் கே || 369

இந்த ஸ்ரீராமனானவர் துக்கம், சோகம், பாபத் தைப் போக்க வல்லவர். இவர் கதை இஹ லோகத்தி லும், பரலோகத்திலும் இன்பத்தையளிப்பது; முக்தி யளிக்க வல்லது. ஞ்ஞான ரூபியான ராஜாவின் சூர வீர மந்த்ரி போன்றது. பேராசை என்னும் கரை காணாத கடலைக் குடிக்க, வற்றடிக்க வந்த அகஸ்திய முனி போன்றது.

காம் கோஹ் கலிமல் கரிகன் கே |
கேஹ்ரி ஸாவக் ஜன் மன் பன் கே || 370

அதிதி பூஜ்ய ப்ரியதம் புராரி கே |
காமத் கன் தாரித் தவாரி கே || 371

பக்தர்களின் மனரூபியான வனத்தில் வாஸம் செய்யும் காமம், குரோதம் (சினம்). கலியுகத்தின் பாப ரூபியான யானைகளை அடிப்பதற்குச் சிங்கத்தின் குட்டிகள் போன்று வீரமுள்ளது. இக்கதை சிவனானவர் ப்ரியப்படும்படியான அதிதி (விருந்தாளி). தரித்ரம் அதாவது; ஏழ்மை என்னும் காட்டுத் தீயை அணைக்க வல்ல, விருப்பத்தை நிறைவேற்ற வல்ல நீருண்ட மேகம் போன்றது.

மந்த்ர மஹாமனி பிஷய் ப்யால் கே |
மேடத் கடின் குஅங்க பால் கே || 372
ஹரன் மோஹ தம் தின்கர் கர் ஸே |
ஸேவக் சாலி பால் ஜலதர் ஸே || 373

இந்த ஸ்ரீராம கதையானது, அதாவது; காம, க்ரோத, லோப, ரூபியான விஷப் பாம்புகளின் விஷத்தை எடுக்க உதவும் மணியும்-மந்த்ரமும் ஆக இருக்கிறது. அது எப்போதோ நம் தலையில் எழுதியிருக்கும் கர்ம ரேகைகளை, கடினங்களை அழிக்க வல்லது. அஜ்ஞானம் எனும் அந்தகாரத்தைப் (இருட்டை) போக்கி ஒளியைக் கொடுக்கக்கூடிய ஸூர்ய கிரணங்கள் போன்றது. தாஸன், ஸேவகன் எனப்படும் தான்யங்களுக்கு மேகத்தைப் போல் புத்துயிர் கொடுக்க வல்லது.

அபிமத் தானி தேவதரு பர் ஸே |
ஸேவத் ஸுலப் ஸுகத் ஹரிஹர் ஸே || 374
ஸுகபி ஸரத் நப் மன் உட்கன் ஸே |
ராமபக்த் ஜன் ஜீவன் தன் ஸே || 375

''மனம் விரும்பியதைக் கொடுக்கக்கூடிய தேவதாரு விருட்சம் (கல்ப விருட்சம்) போன்றது. ஸேவை பண்ணுவோமானாலும்ஹரி, ஹரனைப் போல் ஸுலபமாக அருளளிக்கவல்லது; ஸுகத்தையும் கொடுக்கக்கூடியது. நல்ல கவி ரூபமான, குளிர் காலத்து மனரூபமான வான வெளியில் அழகிடும் நட்சத்திரக் கூட்டங்களைப் போல் ஸ்ரீராம பக்தர்கள் என்றென்றும் ஸுகத்துடனும், நல்ல வாழ்க்கையுடனும் விளங்கத்தக்க செல்வம் போன்

றது (அவர்களுக்கு ஸ்ரீராமனின் ஆசி என்றென்றும் நிறைந்திருக்கிறது.)

ஸகல ஸுக்ருத் பல் பூரி போக் ஸே |
ஜக் ஹித் நிருபதி ஸாது லோக் ஸே || 376
ஸேவக் மன் மானஸ் மரால் ஸே |
பாவன் கங்க தரங்க் மால் ஸே || 377

பூரண புண்யங்களின் பலன் சிறந்த போகத்திற்கு ஸமானமானது. உலகிற்குக் கபடமில்லாமல் இதம் செய்வதில் ஸாது முனிவர்கள் மாதிரி ஸ்ரீராமகதை யானது தோஷமில்லாதது; நிர்மலமானது. தாஸர்களின் மனதாகிற மானஸரோவர் என்னும் மஹாஏரியிலுள்ள ஹம்ஸ பட்சி போன்றது. அழுக்கைக் களைந்து சுத்தப் படுத்துவதில் கங்கையின் அலைவரிசைகளைப் போல் பவித்ரமானது.

குபத் குதர்க் குசாலி கலி
கபட் தம்ப பாஷண்ட் |
தஹன் ராம குன் க்ராம்
ஜிமி ஈந்தன் அநல் ப்ரசண்ட் || 378

ஸ்ரீராமச்சந்த்ரனுடைய அற்புதமான குணங்கள் கெட்ட வழியில் போவோர்க்கும், கெட்டவாதங்கள் செய் வோர்க்கும், கெட்ட நடத்தை உள்ளவர்களுக்கும், விற கில் உள்ள நெருப்பைப்போல் தஹிக்க வல்லது. (அக்னி யானது எப்படி விறகுக் கட்டைகளை அழித்துச் சாம் பலாக்குகிறதோ; ''அதேபோல் பாஷண்டிகளுக்கும், துஷ்டர்களுக்கும் ஸ்ரீராமனுடைய குணமானது அக்னி போல் அழிக்கவல்லது.)

ராமசரித் ராகேஸ் கர் ஸரிஸ்
ஸுகத் ஸப் காஹூ |
ஸஜ்ஜன் குமுத் சகோர் சித் ஹித
பிஸேஷி பட் லாஹூ || 379

ஸ்ரீ ராம சரித்ரமானது பூர்ணிமா சந்த்ரனின் கிர ணங்களைப் போல எல்லோருக்கும் ஸுகமளிக்க வல் லது. ஆயினும், விசேஷம் என்னவென்றால்; இந்தச் சரித்ரமானது நன்மக்களுக்குக் குமுதினி மலர் போல

வும், சகோரப் பட்சியின் இதயத் தாபத்தை நீக்கவல்ல சிறந்த இன்பம் கொடுப்பதாகவும், நல்லபயன் அளிப்ப தாகவும் இருக்கிறது.

கீன்ஹி ப்ரச்ன ஜேஹி பாந்தி பவானீ |
ஜேஹி விதி சங்கர் கஹா பகானீ || 380
ஸோ ஸப் ஹேது கஹப் மைம் காயீ |
கதா ப்ரபந்த் விசித்ர பனாயீ || 381

ஸ்ரீ பார்வதி தேவியானவர் எவ்வாறு ஸ்ரீ சிவனைப் பார்த்துக் கேள்விகள் கேட்டாரோ; பின்னும் எவ்வாறு சிவன் பார்வதிக்குப் பதில்களை அளித்தாரோ; அதை யெல்லாம் நான் புது முறைப்படிக் கதையாகக் கவி தையாக எழுதிப் பாடி உரைப்பேன்.

ஜேஹி யஹ் கதா ஸுனீ நஹிம் ஹோயீ |
ஜனி ஆசர்ஜு கரை ஸுனி ஸோயீ || 382
கதா அலௌகிக் ஸுன்ஹிம் ஜே க்யானீ |
நஹிம் ஆசர்ஜு கர்ஹிம் அஸ் ஜானீ || 383

ராம கதா கை மிதி ஜக் நாஹீம் |
அஸி ப்ரதீதி தின்ஹ கே மன் மாஹீம் || 384
நாநா பாந்தி ராம் அவ்தாரா |
ராமாயண் சத் கோடி அபாரா || 385

முதலில் ஸ்ரீராமகதையை யார் கேட்டதில்லையோ; அவர்கள் ஆச்சர்யப்பட வேண்டாம். எந்த ஞானிகள் இக்கதையைக் கேட்கிறார்களோ; அவர்கள் இதை அறிந்து வியக்கமாட்டார்கள். ஸ்ரீராமகதையைத் தவிர்த்து உலகில் எல்லை ஒன்றுமே இல்லை; இதற்கு ஒரு முடிவு இல்லை; இந்த ஸ்ரீராமனது கதையானது அனந்த மானது; முடிவற்றது. அவர்கள் மனத்தில் இத்தகைய தொரு நம்பிக்கை. ஸ்ரீராமனுடைய அவதார மஹிமை பலவாகும். புராணங்கள் கூறுவது என்னவென்றால்; ஸ்ரீராமனைப்பற்றிய கதை ஸ்ரீமத் ராமாயணம் நூறு கோடிக்கு மேல் வ்யாபித்திருக்கிறது; எல்லையில்லா தது.

கல்ப பேத் ஹரி சரித் ஸுஹாயே |
பாந்தி அநேக் முனீஸன்ஹ காயே || 386

கரிய ந ஸம்ஸய் அஸ் உர் ஆனீ |
ஸுனிஅ கதா ஸாதர் ரதி மானீ || 387

கல்ப மாறுதலுக்குத்தகுந்தபடி இந்த ஸ்ரீஹரியின் ஸுந்தர சரித்ரத்தை முனீச்வரர்கள் பலவிதமாகப் பாடி யிருக்கிறார்கள். ஹிருதயத்தில் ஸந்தேகம் கொள்ளாமல் பய பக்தியுடன், மரியாதையுடன், அன்புடன், இந்த ஸ்ரீராம கதையைக் கேளுங்கள்.

ராம் அனந்த அனந்த் குண் அமித்
கதா பிஸ்தார் |
ஸுனி ஆசர்ஜு ந மானிஹஹிம்
ஜின்ஹ கேம் பிமல் பிசார் || 388

ஸ்ரீராமன் முடிவில்லாதவன். ஏராளமான அவருடைய குணமும் அனந்தமானது. அவருடைய கதையின் விரிவோ; எல்லையோ, வரம்போ இல்லாதது. ஆகவே; எவர் எண்ணமும் நிர்மலமானதோ, எவர் இக்கதையைக் கேட்கிறார்களோ; அவர்கள் இதைப்பற்றி ஆச்சர்யப்படுவதற்கில்லை.

ஏஹி பிதி ஸப் ஸம்சய் கரி தூரீ |
சிர் தரி குர் பத பங்கஜ் தூரீ || 389
புனி ஸப்ஹீ பினவஉம் கர் ஜோரீ |
கர்த் கதா ஜேஹிம் லாக் ந கோரீ || 390

இம்மாதிரி நான் (துளஸி) எல்லாவிதமான ஸம்சயங்களையும் ஒதுக்கி உதறிவிட்டு, என் குருநாதரின் சரண கமலங்களின் தூளைத் தலையில் சேர்த்துக் கொண்டு, மீண்டும் கை கூப்பி எல்லோரையும் வணங்கிடுகிறேன். என்னவென்றால்; கதை அமைப்பதில் எக்குறையும், தோஷமும் தொடக்கூடாது என்பதற்காகத் தான். (இருந்தால்; அதை ஸ்ரீராம சரித்ரத்தில் அணுகாமல் பார்த்துக் கொள்ள ப்ரார்த்திக்கிறேன்).

ஸாதர் சிவ்ஹி நாயி அப் மாதா |
பர்னவும் பிஸத் ராம் குன் காதா || 391
ஸம்பத் ஸோரஹ் ஸெள ஏக்தீஸா |
கர்வும் கதா ஹரி பத் தரி ஸீஸா || 392

நான் இப்பொழுது மரியாதையுடனும், அன்புடனும்,

சிவனைக் குறித்துத் தலைவணங்கி விட்டு, ஸ்ரீராமச் சந்த்ரனின் இந்த நிர்மலமான, குணங்கள் செறிந்த கதையைக் கூறப்போகிறேன்.

ஸ்ரீஹரியின் சரணங்களில் தலைவைத்து வணங்கி ஸம்வத், அதாவது; ஆயிரத்து அறுநூற்று முப்பத்தி ஒன்றாம் ஆண்டு இக்கதையைக் குறைவின்றி ஆரம்பிக் கிறேன்.

நௌமீ பௌம பார் மது மாஸா |
அவத் புரீம் யஹ் சரித் ப்ரகாஸா || 393
ஜேஹி தின் ராம் ஜன்ம ச்ருதி காவஹிம் |
தீர்த் ஸகல் தஹாம் சலி ஆவஹிம் || 394

சைத்ரம், அதாவது, சித்திரை மாதம், நவமி திதி, மங்களவாரத்தில், எந்நாளில் ஸ்ரீராமனின் ஜன்மம் உண்டாயிற்றோ; அப்போது ஸ்ரீஅயோத்யா என்னும் மஹா நகரத்தில் இந்த உன்னத சரித்ரத்தின் கதை உதயமாயிற்று. அன்று நடந்தது என்னவென்றால்; எல்லாப் புண்ணிய ஸ்தலங்களும், தீர்த்தங்களும், அயோத்யாவை நாடிப் போய்விட்டன என்று வேதங்கள் கூறுகின்றன.

அஸுர் நாக் கக நர் முனி தேவா |
ஆயி கர்ஹிம் ரகுநாயக் ஸேவா || 395
ஜன்ம மஹோத்ஸவ் ரசஹிம் ஸுஜானா |
கர்ஹிம் ராம் கல் கீர்தி கானா || 396

அஸுரர்கள், நாகர்கள், பட்சிகள், மனிதர்கள், முனிவர்கள், பின்னும் தேவதைகள், யாவருமே ஸ்ரீராமன் அவதரித்த அயோத்யாபுரி வந்து, அவருக்கு ஸேவை செய்யலாயினர்.

புத்திமான் மனிதர்கள் ஸ்ரீராமன் பிறந்த இந்த மஹோத்ஸவத்தைக் கொண்டாடுகிறார்கள். பின்னும் ஸ்ரீராமனின் அற்புதமான புகழைப் புகழ்ந்து பாடுகிறார்கள்.

மஜ்ஜஹிம் ஸஜ்ஜன் ப்ருந்த
பஹு பாவன் ஸர்ஜூ நீர் |
ஜப்ஹிம் ராம் தரி த்யான்
உர ஸுந்தர் ச்யாம் சரீர் || 397

ஸாதுக்கள், பக்தர்கள், அடியார்களின் கூட்டமானது ஸ்ரீராமன் பிறந்த புண்ய தினத்தில் ஸரயூ நதியின் புண்ய தீர்த்தத்தில் நீராடினார்கள். பின்னர் நீலமேக ச்யாமள வர்ணனான ஸ்ரீரகுநாதனை எண்ணி எண்ணி அவர் திருநாமத்தை ஜபிக்கிறார்கள்.

தரஸ் பரஸ் மஜ்ஜன் அரு பானா |
ஹர்யி பாப் கஹ் பேத் புர்ரானா || 398
நதீ புனீத் அமித் மஹிமா அதி |
கஹி ந ஸக்யி ஸாரதா பிமல் மதி || 399

ஸ்ரீ ஸரயூநதியைத் தரிசனம் செய்தாலும், தொட்டாலும், ஸ்நானம் செய்தாலும், நீரைக் குடித்தாலும் எல்லாப் பாபங்களும் தொலையும். தவிர; இந்நதியின் மஹிமை மிகவும் அளவிறந்தது; இதன் பெருமை மிகவும் சிறந்தது; இதை தெளிந்த அறிவுள்ள வாக் தேவி ஸரஸ்வதியாலும் எடுத்துச் சொல்ல முடியாது.

ராம் தாம்தா புரீ ஸுஹாவனி |
லோக் ஸமஸ்த பிதித் அதி பாவனி || 400
சாரி கானி ஜக் ஜீவ் அபாரா |
அவத் தஜேம் தனு நஹிம் ஸம்ஸாரா || 401

இந்தப் பெருமை நிறைந்து விளங்கும் அயோத்யா புரி ஸ்ரீராமச்சந்த்ரனுக்குச் சிறந்த இருப்பிடமாக உடையது. உலகில் இது ப்ரஸித்தம் கொண்டது; தூய்மை உள்ளது. உலகில் உள்ளவைகளில்; அயோத்யாவில் ப்ராணத்யாகம் செய்யும் மானிடருக்கு மீண்டும் இவ்வுலகில் பிறப்பு இல்லை என்பது திண்ணம். நேராக வைகுண்ட்ட ப்ராப்தியே கிடைக்கவல்லது.

இந்த ப்ரபஞ்சத்தில் (அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம், மேலும் ஜராயுஜம்). அதாவது, முட்டையிலிருந்து உண்டானவை, வியர்வையிலிருந்து உண்டானவை, விதையிலிருந்து முளைப்பவை, கருவில் உண்டானவை என இவ்வாறு நால்வகை ஜீவராசிகள் பல உள்ளன. இவைகளில் எந்த ஜீவன்களுக்கு அயோத்யா புரியில் ப்ராணனைவிடும் பாக்யம் கிடைக்கிறதோ; அவைகளுக்கு மீண்டும் பிறப்பு இல்லை என்கிறார். (அதாவது; ஜனனம்- மரணம் என்ற பயத்தை ஒழித்துப்

பகவானுடைய வைகுண்ட்டம் ஏகுகிறார்கள்.)

ஸப் விதி புரீ மனோஹர் ஜானீ |
ஸகல் ஸித்திப்ரத் மங்கல் கானீ || 402
பிமல் கதா கர் கீன்ஹ அரம்பா |
ஸுனத் நஸாஹிம் காம மத் தம்பா || 403

இந்த அயோத்யாபுரியானது ஸகல விதத்திலும் மனத்தைக் கொள்ளை கொள்ளக் கூடியது என்பதாலும்; எல்லா ஸித்திகளையும், எல்லா மங்களங்களையும் கொடுக்கக் கூடியது என்பதாலும்; நான் இந்த நிர்மல மான கதையை ஆரம்பித்தேன். இதைக்கேட்ட மாத்தி ரத்திலேயே காமம், மதம், க்ரோதம் எல்லாம் நஷ்ட மாகி நன்மையை எவரும் அடைவார்கள்.

ராமசரித் மானஸ் ஏஹி நாமா |
ஸுனத் ச்ரவண் பாயிஅு பிச்ராமா || 404
மன் கரி விஷய் அனல் பன் ஜரீ |
ஹோயி ஸுகீ ஜௌம் ஏஹிம் ஸர் பரீ ||405

இந்தக் காவியத்தின் பெயர் ''ஸ்ரீராமசரித மானஸ்'' இதைக் காதால் கேட்ட மாத்திரத்தில் சாந்தியும், ஸுக மும் உண்டாகிறது. மனது ரூபம் கொண்ட மத யானை யானது, ஸம்ஸாரபந்தம் என்னும் விஷயமாகிற காட்டு அக்னியில் எரிந்து துடிக்கும். அது இந்த ஸ்ரீராம சரிதமானஸ் என்னும் தடாகத்திற்கு வந்துசேர்ந்தால்; குளிர்ச்சியும், இதமும் பெற்று வாழும்.

ராமசரித்மானஸ் முனி பாவன் |
பிர்சேவு ஸம்பு ஸுஹாவன் பாவன் || 406
த்ரிபித் தோஷ் துக் தாரித் தாவன் |
கலி குசாலி குலி கலுஷ் நஸாவன் || 407

இந்த ஸ்ரீராம சரிதமானஸ் என்பது முனிவர்களுக்கு ப்ரியமானது. இந்த அருமையான, ஸுகமான காவி யத்தை அமைத்துக் கொடுத்தவர் தூய உள்ளமுடைய சிவனார் ஆவார்.

இந்தக் காவியமானது மூன்று விதமான தோஷங் களையும், துன்பம், தரித்ரத்தையும், மேலும்; கலியுகத்

தின் வலிமையால் சீரழியும் துன்மார்க்கங்களையும், பாபத்தையும் அழிக்க வல்லது.

ரசி மஹேச் நிஜ மானஸ் ராகா |
பாயி ஸுஸம்உ சிவா ஸன பாஷா || 408
தாதேம் ராமசரித்மானஸ் பர் |
தரேஉ நாம் ஹியம் ஹேரி ஹர்ஷி ஹர் || 409

ஸ்ரீ மஹாதேவ சம்புவானவர் இக்கதையை அமைத்து, தமது மனத்துள் வைத்திருந்தார். தக்க ஸம்யம் பார்த்துப் பார்வதி தேவியிடம் இதைப்பற்றி ப்ரசாரம் செய்தார். தன் மனத்தில் இடம் கொண்ட இந்த அழகான ரசனைக்குச் சம்புவானவர் ''ராம சரிதமானஸ்'' என்று ஸுந்தர நாமம் சூட்டினார்.

கஹஉம் கதா ஸோயி ஸுகத் ஸுஹாயீ |
ஸாதர் ஸுனஹு ஸுஜன் மன் லாயீ || 410

அவர் இயற்றிய இதேஸ்ரீராமச்சந்த்ரனின் கதையை மானிட ஹிருதயத்திற்கு ஸுகம் கொடுக்கவல்ல வகையில், அன்போடு நான் மரியாதையுடன் உங்களுக்குக் கூறுகிறேன். ஹே ப்ரபுக்களே! பக்தர்களே! இதை மனம் வைத்துக் கேட்பீர்களாக!!

ஜஸ் மானஸ் ஜேஹி பிதி பயவு
ஜக் ப்ரசார் ஜேஹி ஹேது |
அப் ஸோயி கஹஉம் ப்ரஸங்க் ஸப்
ஸுமிரி உமா ப்ருஷகேது || 411

இந்த ஸ்ரீராமசரிதமானஸ் கதையானது எந்த மாதிரி எழுதப்பட்டதோ; எக்காரணத்தினால் உலகில் ப்ரசாரமானதோ; அதே முறையில் அதைப்பற்றி நான் (துளஸி) உமா மஹேச்வரனான ஈச்வரனை ஸ்மரணை செய்து கொண்டு கூறுகிறேன்.

சம்பு ப்ரஸாத் ஸுமதி ஹியம் ஹுலஸீ |
ராமசரித்மானஸ் கபி துளஸீ || 412
கர்யி மனோஹர் மதி அனுஹாரீ |
ஸுஜன் ஸுசித் ஸுனி லேஹு ஸுதாரீ || 413

ஸ்ரீ சிவனாரின் க்ருபையால் அவர் (துளஸியின்) மனத்தில் ஸுந்தரமான புத்தி விகாஸமானது. ஆகவேதான், துளஸீதாஸர் என்பவர் இந்த ''ஸ்ரீராம சரிதமானஸ்'' எழுதும் ஒரு கவியானார். (அதாவது, சிவனின் க்ருபையால் துளஸீ தோன்றினார். அவர் மூலம் ஸ்ரீராமசரித மானஸ் தோன்றியது).

துளஸீ இந்தக் காவியத்தைத் தன் மனத்திற்கு, புத்திக்கு உகந்தபடி, மனத்தில் மோஹம் கொள்ளும்படி தான் அமைத்திருக்கிறார். பின்னும் ஹே ப்ரபுக்களே! நல்லோரே! இதை நல்ல மனத்துடன் கேட்டும், படித்தும் இதில் உள்ள குறைகளைச் சீர் செய்து கொள்ளுங்கள்.

ஸுமதி பூமி தல் ஹ்ருதய் அகாதூ |
பேத் புராண் உததி கன் ஸாதூ || 414
பர்ஷஹிம் ராம ஸுஜஸ் பர் பாரீ |
மதுர் மனோஹர் மங்களகாரீ || 415

அழகான ஸாத்வீக புத்தியானது பூமி. ஹிருதயமானது அதன் ஆழமான இடம். வேதம், புராணம் எல்லாம் ஸமுத்ரம். ஸாது முனிவர்கள் மேகக் கூட்டங்கள். அந்த ஸாதுரூபமான மேகங்கள் ஸ்ரீராமருடைய கீர்த்தியாகிய அழகிய, இனிய மங்களகரமான ஜலத்தைக் கொண்டு மழையாகப் பொழிகிறது.

லீலா ஸகுன் ஜோ கஹஹிம் பகானீ |
ஸோயி ஸ்வச்சதா கர்யி மல் ஹானீ || 416
ப்ரேம பக்தி ஜோ பர்னி ந ஜாயீ |
ஸோயி மதுர்தா ஸுஸீதல்தாயீ || 417

ஸகுண லீலைகளைப் பற்றி (ஸகுண-நற்குணமான) விஸ்தீர்ணமான வர்ணனை செய்கிறார்கள். அதுவே ஸ்ரீராமனுடைய கீர்த்தி என்னும் பெயர் கொண்ட சுத்தமான தண்ணீர். அந்தத்தண்ணீர் அழுக்கை அகற்றி விடுகிறது. ஸ்ரீராம பக்தி என்னும் வர்ணனை எந்த ஜலத்தில் தென்படுகிறதோ; அதுதான் நிர்மலமான தண்ணீர்; குளிர்ந்த தண்ணீர்.

ஸோ ஜல் ஸுக்ருத் ஸாலி ஹித் ஹோயீ |
ராம பக்த ஜன் ஜீவன் ஸோயீ || 418

மேதா மஹி கத் ஸோ ஜல் பாவன் |
ஸகிலி ச்ரவன் மக் சலேஉ ஸுஹாவன் || 419
பரேஉ ஸுமானஸ் ஸுதல் திரானா |
ஸுகத் ஸீத் ருசி சாரு சிரானா || 420

ஸ்ரீராமனின் புகழ்மயமான அந்த ஜலமானது நற் காரியங்களாகிற தானியங்களுக்கு (புண்ய ஆத்மாவான பக்தர்களுக்கு) இதத்தைக் கொடுக்க வல்லது. அதாவது; ஸ்ரீராம பக்தர்களுடைய ஜீவனைப் போன்றது. இந்த ஸுந்தரமான அழகிய பவித்ர ஜலமானது புத்தி ரூபி யான பூமியில் விழுந்து கலந்து காது வழியாகச் சென்று, ஹிருதயமாகிய சிறந்த இடத்தில் நிறைந்து, நிலைத்து இன்பத்தைச் சேர்த்துக் கேட்க வல்லதாகிறது. இப் படியே ஸ்ரீராம கீர்த்தியெனும் அந்த ஜலம் மானஸ் என்ற (பூமியில்) இடத்தில் பூர்ணமாகி ஸ்திரமடைந்து சரத்ருதுவின் வருகையை இன்பமாகவும், ஸுகமாகவும் காண்பிக்கிறது.

ஸுடி ஸுந்தர் ஸம்வாத் பர் பிர்சே
புத்தி பிசாரி |
தேயி ஏஹி பாவன் ஸுபக் ஸர் காட்
மனோஹர் சாரி || 421

இந்த அழகான கவிதைக் கதையில் தனது புத்தியால் ஆராய்ந்து நான்குவித ச்ரேஷ்டமான, அழகான- சிறப் புள்ள- ஸம்பாஷணைகள் நடந்தவைகளை வைத்து ஆக் கியுள்ளார்.

1. சிவ-பார்வதி ஸம்வாதம்
2. காக புசுண்டி-கருடன் ஸம்வாதம்
3. யாஜ்ஞவல்க்யர்-பரத்வாஜர் ஸம்வாதம்
4. கோஸாயீஜி பின்னும் பக்தர்கள்

(துளஸீதாஸர்-ஸாதுக்கள்)
(இவர்கள் யாவரும் சேர்ந்துதான் இச்சரிதத்தை நல்ல புத்தித் திறமையுடன் அமைத்திருக்கிறார்கள்). இந்த ஸம்பாஷணைகளே இந்தப் பவித்ரமான தடாகத்தின் நான்கு கட்டங்களாகும். (இந்நால்வகையிலும் சிக்காத விஷயங்கள் இல்லை; இந்த நான்கு கட்டமும் பவித் ரமானவை.

ஸப்த ப்ரபந்த ஸுபக் ஸோபானா |
க்யான் நயன் நிர்கத் மன் மானா || 422

ரகுபதி மஹிமா அகுண் அபாதா |
பர்னப் ஸோயி பர் பாரி அகாதா || 423

இந்த ஏழு காண்டங்களும் இந்த மானஸ ஸரோவரின் ஏழு படிக்கட்டுகள். (ஏழு காண்டங்களும் இந்தக் காவியத்தின் அழகான ஏணிப்படிகள்) இந்தக் காவியத்தை ஜ்ஞானக் கண்களுடன் காணவேண்டும்; படிக்க வேண்டும்; அப்போதுதான் மனத்தில் படியும்; மகிழ்வு பிறக்கும். ஸ்ரீராமச்சந்த்ரனின் மூன்று குணங்களிலும் வேறுபட்ட ச்ரேஷ்டமான, தடையில்லாத ஒரு மஹிமை இதில் கிட்டும். ஸ்ரீராம சரிதமெனும் ஜலத்தின் ஆழத்தில் நீங்கள் இவைகளைப் பார்க்கலாம்.

ராம் ஸீய ஜஸ் ஸலில் ஸுதாஸம் |
உபமா பீசி பிலாஸ் மனோரம் || 424
புர்யினி ஸகன் சாரு சௌபாயீ |
ஜுகுதி மஞ்ஜு மனி ஸீப் ஸுஹாயீ || 425

ஸ்ரீராமச்சந்த்ரன், ஸீதா தேவி இவர்களின் கீர்த்தி அமுதத்திற்கு ஈடான தண்ணீர். (அம்ருதத்தைப்போல் ருசியுள்ளது.) இதில் கொடுக்கப்பட்ட உபமானங்களே நம்மனத்தைக் கவரும் அலைகளின் மனோஹர விளையாட்டுகள்

இதன் அழகிய நாலடிப் பாடல்களின் வரிகள் அடர்ந்து பரவிய மலர்ந்த தாமரைகள். கவிதையில் அமைத்திருக்கும் யுக்திகள் அழகானது முத்துக்கள் நிறைந்த சிப்பி போன்றவை. (அதாவது, பாடலின் அமைப்பு இத்துணை அழகாகவும்-கோர்வையாகவும் இருக்கிறது என்று துளஸீ கூறுகிறார்.)

சந்த் ஸோர்டா ஸுந்தர் தோஹா |
ஸோயி பஹுரங்க் கமல் குல் ஸோஹா || 426
அர்த் அநூப் ஸுபாவ் ஸுபாஸா |
ஸோயி பராக் மகரந்த் ஸுவாஸா || 427

சந்த், ஸோரடா என்னும் இந்த அழகான கவிதை வரிகள்; தோஹா என்பவையும் அழகிய பன்னிறக் கமல புஷ்பங்களைப் போன்றவை. (நீர் நிறையவும் கமலப்பூ கொஞ்சமாகவும் இருக்கும் தடாகத்தைப் போன்றது. சந்த், ஸோரடா, தோஹா என்பன. அதாவது;

இந்த ஓர் எல்லைக்குள் உள்ள இந்தக் கமலப்பூ போல் இந்தக் கவிதைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன). இதில் உள்ள விசேஷமான இணையற்ற அர்த்தங்கள் கருத்துக்கள், அழகிய மொழிகள்யாவும் புஷ்பங்களின் மத்தியில் உள்ள மகரந்தப் பொடிகள் போன்றவை, மணமுள்ளவை. அம்மகரந்த புஷ்பரஸங்கள்.

ஸுக்ருத் புஞ்ஜ் மஞ்ஜுல அலி மாலா |
க்யான் பிராக் பிசார் மராலா || 428
துனி அவ்ரேப் கபித் குன் ஜாதீ |
மீன் மனோஹர் தே பஹுபாந்தீ || 429

புண்யச்செயல்களின் ஸமூஹம் ஸுந்தர வண்டுக் கூட்டங்கள். ஜ்ஞானம், வைராக்யம், எண்ணம் என்பவை ஹம்ஸப் பட்சிகள். இதில் கவிதையின் நயமான ஒலி, சிலேடை முதலிய அணிகள், குணம் -ஜாதி என்பவை பல்வகைப்பட்ட மனங்கவர் மீன்கள். (த்யானம், ஜ்ஞானம், குணம், ஜாதி என்பன நான்கும் நான்கு விதமான மீன்கள். எப்படி அழகான ஒளிமயமான மீன்கள் நன்றாகக் கூட்டம் கூட்டமாக நீரில் நீந்தி ஒரே மாதிரி ஓடுகின்றனவோ; அதேபோல் இந்தக் கவிதைகளின் கோர்வைத் தொடர்கள் மீன்களின் தொடர்களைப் போல் குணமுள்ளவை; அழகுள்ளவை.)

அர்த் தர்ம காமாதிக் சாரீ |
கஹப் க்யான் பிக்யான் பிசாரீ || 430
நவ்ரஸ் ஜப் தப் ஜோக் பிராகா |
தே ஸப் ஜலசர் சாரு தடாகா || 431

அர்த்தம், தர்மம், காமம், மோட்சம் என்னும் இந்த நான்குவிதப் பலன்களும், ஜ்ஞானம், விஜ்ஞானத்தை எண்ணிச் சொல்வது. காவியத்தின் நவரஸங்கள், ஜபம், தபம், ஜ்ஞானம், வைராக்யம், ப்ரஸங்கம் ஆகியவை இந்த ஸுந்தரமான, அதாவது காவியமென்னும் அழகிய தடாக நீரில் வாழும் உயிரினங்கள் ஆகும்.

ஸுக்ருதீ ஸாது நாம் குன் கானா |
தே பிசித்ர ஜல்பிஹக் ஸமானா || 432
ஸந்த்ஸபா சஹும் திஸி அம்வராயீ |
ச்ரத்தா ரிது பஸந்த் ஸம் காயீ || 433

புண்யாத்மாக்கள், கர்மவாதியான ஸாது ச்ரேஷ்டர்கள் ஸ்ரீராமனின் குணத்தைப்பாடும் விசித்ர ப்ரதாபமான இந்தத் தடாகத்தில் வாழும் நீர்ப்பறவைகள். இந்த ஸஜ்ஜனங்களின் கூட்டமே இத்தடாகத்தின் நான்கு புறமும் சூழ்ந்திருக்கும் மாந்தோப்புகள் போன்றவை. அவர்களுடைய ஒரு தலைப்பட்ட ச்ரத்தையானது ருதுக்களில் சிறந்த வஸந்த ருது போன்றது.

பக்தி நிரூபன் பிபித் பிதானா |
சமா தயா தம் லதா பிதானா || 434
ஸம் ஜம் நியம் பூல் பல் க்யானா |
ஹரிபத் ரதி ரஸ் பேத் பகானா || 435

பலவிதமான பக்தி விசாரங்களை வெளிப்படுத்தலும், பொறுமை, கருணை, புலனடக்கமும் ஆகியவை கொடிகளுக்குரிய மண்டபம். மனஅடக்கம், புலனடக்கம் (யமம்) அதாவது, ஹிம்சை செய்யாதிருத்தல், உண்மை பேசல், திருடாதிருத்தல், ப்ரம்மசரியம், தானம் வாங்காமையும், நியமங்களாவன. சுத்தம், ஸந்தோஷம், தவம், அத்யயனம், ஈச்வரத்யானம் ஆகியவையும் அங்குள்ள ஜ்ஞானமாகிற பழங்கள், பூக்கள்.

தன்னைத்தானே தெரிந்து கொள்வது ஒருவித மதுர ரஸம். ஸ்ரீராமச்சந்த்ரனின் பாதாரவிந்தங்களில் மனத்தை ஈடுபடுத்துதல் அப்பழத்தின் ரஸம் என்று வேதங்கள் கூறுகின்றன.

ஔர்உ கதா அநேக் ப்ரஸங்கா |
தேயி சுக் பிக் பஹு பர்ன பிஹங்கா || 436

இந்த ஸ்ரீ ராம கதையில் இன்னும் என்னென்ன கதைகள் இடம் பெற்றிருக்கின்றனவோ; அவைகள் யாவும் கிளிகள், குயில்கள் போலவும், உள்ள பலவிதமான வண்ணப்பட்சி ரூபங்களைப் போன்றவை.

புலக் பாடிகா பாக் பன் சுக்
ஸுபிஹங்க் பிஹாரு |
மாலீ ஸுமன் ஸ்நேஹ் ஜல் ஸீஞ்சத்
லோசன் சாரு || 437

கதைகேட்கும் ஸந்தோஷத்தினால் நமது தேஹமானது புளகாங்கிதமடைகிறது. அது ஒரு புஷ்ப நந்தனவனம் போன்றது. காதுகளால் கேட்பதும் இந்தப் பூங்கா பற்றியதுதான். கேட்டமாத்திரத்தில் நம்மை நாமே மறக்கும் தன்மை ஒரு வனம் போன்றது. இதிலவரும் ஸுகமே அழகிய பட்சிகள் விளையாடும் இடமாகும். நிர்மல மான மனமே தோட்டக்காரன். அன்பு ரூபமான ஜலத்தினால் அழகிய கண்களின் மூலமாக அதில் ஒரே த்யானத்துடன் நீரைப் பாய்ச்சுகிறான்.

ஜே காவஹிம் யஹ் சரித் ஸம்பாரே |
தேயி ஏஹி தால் சதுர் ரக்வாரே || 438
ஸதா ஸுன்ஹிம் ஸாதர் நர் நாரீ |
தேயி ஸுர்பர் மானஸ் அதிகாரீ || 439

எவர் இந்த சரித்ரம் என்னும் தடாகத்தை அழகு படுத்தப் பாடுபடுகிறார்களோ; அவர்களே இந்த நிர் மலமான தடாகத்தின் திறமையுள்ள பாதுகாப்பாளர ஆவர்.

(ஜ்ஞானம், உபாஸனம், காமம், தினசர்யா போன்ற நான்கு உத்திகளையும் கடைப்பிடிக்கும் வித்யாதரர் களான சிவன், காகபுசுண்டி, யாஜ்ஞவல்க்யர் பின்னும் கோஸாயீஜி இவர்கள் நால்வரும் இந்தத் தடாகத்தைக் காப்பாற்றும் நான்கு ரட்சகர்கள். ஸ்ரீராமாயணம் என் னும் இந்தத் தடாகத்தில் காவல் புரியும் பாதுகாப் பாளர் ஆவர்.)

எந்த ஆண்களும், பெண்களும் இக்கதையை அன்பு டன், பணிவுடன் கேட்டு ஆனந்திக்கிறார்களோ; அவர் களே இந்த மானஸரோவர் தடாகத்தின் ரட்சகர்கள்; அதிகாரிகள்; சிறந்த தேவதைகள் ஆவர்.

அதி கல் ஜே பிஷயீ பக் காகா |
ஏஹி ஸர் நிகட் ந ஜாஹிம் அபாகா || 440
ஸம்புக் பேக் ஸேவார் ஸமானா |
இஹாம் ந பிஷய் கதா ரஸ் நானா || 441

எத்தகைய குற்றம் உள்ள விஷயங்கள் உள்ளனவோ; இவைகளே கொக்குகளும், காகங்களும் ஆகும். இந்த

அபாகயம் செய்த ஜீவன்கள் இந்த மானஸரோவர் அருகில் வரக்கூட லாயக்கில்லாதவை. ஏனெனில்; இந்த மானஸஸரஸில் நத்தை, தவளை, பாசி இவை களுக்கு ஸமமான (இச்சை) விஷயரஸத்தைக் கூறும் கதைகள் இல்லை. (காகம் போன்ற சில பண்டிதர்கள் காகம் கரைவது போல்தன் வயிற்றுக்கு ஏதேனும் கிடைக்கும்போது மட்டும் கரைவார்கள். மிகுதி நேரத் தில் உள்ளத்தில் வஞ்சனையுடன் வாழ்வார்கள்.)

(கொக்கானது பிறர் ஸாதகத்திற்காக இல்லை. தண் ணீரிலிருந்து எப்போது மீன் வரும்? எப்போது தனக்கு உண்ண உணவு கிடைக்கும் என்று காத்திருக்கும். மேலே நல்லவர்கள்போல், ஸாதுபோல் தோற்றமளிக்கும். ஆனால், உண்மை இல்லை. இபபடி நல்ல குணமற்ற பாஷண்டிகள் ஸ்ரீமத்ராமாயணத்தைப் பாராயணம் செய்வது போல் பாசாங்கு செய்கிறார்கள். இவர்கள் அசலில் காகத்தைப் போலவும், கொக்கு போலவும் குண முள்ளவர்கள். தவளை, சம்புகி போன்ற சிறு சிறு ஜீவன்கள் இந்தத் தடாகத்தின் சுத்தத் தண்ணீரைக் கலக்கப் புழு போல் கூடித்திரிகின்றன. அதாவது; கெட்டவர்கள் ராமசரிதமானஸ் என்னும் தடாகத்தைக் குழப்ப விரும்புகிறார்கள். ஆனால், அது நடக்காத காரியம் என்கிறார் துளஸீ)

தேஹி காரன் ஆவத் ஹியம் ஹாரே |
காமீ காக் பலாக் பிசாரே || 442
ஆவத் ஏஹிம் ஸர் அதி கடிநாயீ |
ராம் க்ருபா பினு ஆயி ந ஜாயீ || 443

இம்மாதிரியான காரணம் உள்ள புருஷர்களுக்கு, அதாவது; கொக்கைப் போலவும், காகத்தைப் போல வும் உள்ள விஷய இச்சை கொண்டவர்களுக்கு, இந்த ஸ்ரீராம சரித மானஸரோவரில் இடமே இல்லை. இந் தத் தடாகத்தில் வந்து அமைவது இந்தப் பாபி ஜன்மங் களுக்கு மிகவும் கஷ்டம். ஸ்ரீராமனுடைய க்ருபையில் லாமல் இவர்கள் இங்கு வரமுடியாது. (அதாவது; பாபிகளுக்கு ஸ்ரீராமாயணத்தை அனுபவிக்கக்கூட யோக் யதை இல்லை. பக்தர்களுக்கும், ஸ்ரீராம க்ருபை உள்ள வர்களுக்கும் மட்டுமே ஸ்ரீமத் ராமாயணம் படிக்கவோ, கேட்கவோ அதிகாரம் உண்டு என்கிறார் துளஸீ.)

கடின் குஸங்க் குபந்த் கராலா |
தின்ஹ கே பசன் பாக் ஹரி ப்யாலா || 444
க்ருஹ் காரஜ் நானா ஜஞ்ஜாலா |
தே அதி துர்கம் சைல் பிஸாலா || 445

கெட்ட ஸஹவாஸம் பயங்கரமான கெட்ட வழியாகும். கெட்ட மார்க்கத்தில் செல்பவருடன் தோழமை கொள்வது மிகவும் தீமையைத் தருவன. அவர்களுடைய துர்வசனங்கள் அத்தனை கொடிய ம்ருகங்கள் போன்றவை. எப்படிச் சிங்கமோ, புலியோ, பாம்போ பயங்கரமானவையோ; அதேபோல் இவர்கள் கூறும் வசனங்களும் பயங்கரமானவைதான்.

வீட்டுச் செயல்களும், வீட்டாரின் விதவிதமான சூழல்களும் மிகவும் செல்லமுடியாததொரு பெரிய மலைகள்தான்.

(நற்குடி, நல்லவீடுகளில் கலகம் ஏற்பட்டு மேரு பர்வதத்தைப் போல் துன்பம் உண்டாவதற்குக் காரணம் இம்மாதிரி பாவிகளினால்தான்.)

பன் பஹு விஷம மோஹ் மத் மானா |
நதீம் குதர்க் பயங்கர் நானா || 446

இவர்கள் செல்லும் வழியானது காமம், மதம், க்ரோதம், மோஹம், மானம் போன்றவை; விஷய ஸுகங்களுக்கு இழுத்துச் செல்லும் காடுகள். இவர்களின் குதர்க்கமான போக்குகளும், செயல்களும் ஒரு பயங்கரமான நதிகள்.

ஜே ச்ரத்தா ஸம்பல் ரஹித் நஹிம்
ஸந்தந்ஹ கர்ஸாத் |
தின்ஹ கஹும் மானஸ் அகம் அதி
ஜின்ஹஹி ந ப்ரிய ரகுநாத் || 477

எவரிடம் ச்ரத்தை ரூபமான வழிச்செலவுகள் இல்லையோ; அதாவது; (எவரிடம் ஸ்ரீராம சரிதத்தின் மீது ச்ரத்தை இல்லையோ) மேலும்; நல்லவர்களின், மேன்மக்களின் சேர்க்கையில்லையோ; எவருக்கு ஸ்ரீரகுநாதன் ப்ரியமானவர் இல்லையோ; அப்படிப்பட்டவர்

களுக்கு இந்த மானஸ ஸரோவர் என்னும் தடாகம் ஆழம் காணமுடியாத, செல்லமுடியாத குளமாகும். (அதாவது, ச்ரத்தை, ஸத்ஸங்கம், பகவானிடம் பக்தி இவை இல்லாது போனால் இதைப் பெறமுடியாது)

ஜௌம் கரி கஷ்ட ஜாயி புனி கோயீ |
ஜாத்ஹிம் நீத் ஜூடாயீ ஹோயீ || 448
ஜட்தா ஜாட் விஷம உர் லாகா |
கயேஹும் ந மஜ்ஜன் பாவ் அபாகா || 449

எவரேனும் கஷ்டப்பட்டு அந்தத் தடாகத்தில் குளிக்கப் போனாலோ; அவர்களைத் தூக்கம் என்னும் நோய் (குளிர்) போர்த்திக் கொண்டு விடுகிறது. அதாவது; மூர்க்கத்தனமான குணம் அவனைப் போர்வைபோல் போர்த்திக் கொண்டு விடுகிறது. இந்தப் பயங்கரமான மூடத்தனமான நோயினால் (குளிரினால்) உந்தப்பட்டவர்களான பாக்யமற்ற மனிதர் தடாகத்தின் அருகில் போயும் குளிக்க முடியாமல் திரும்பி வந்துவிடுகிறார்கள்.

(அதாவது; ஸ்ரீராம சரித்ரம் என்னும் தடாகத்தைப் பக்தர்கள்தான் அடைகிறார்கள். பாபிகள் அதை அறிந்து ஸ்ரீராமனிடம் முழுவதும் ஐக்யமாகாமல் உலகப் பற்றினால் அவதிப்படுகிறார்கள். ஆகவே; ஸ்ரீராமன் அருகில் இருந்தும் அவனை அடைய முடியாமல் அவதிப்படுகிறார்கள்.)

கரி ந ஜாயி ஸர் மஜ்ஜன் பானா |
பிரி ஆவயி ஸமேத் அபிமானா || 450
ஜௌம் பஹோரி கோஉ பூசன் ஆவா |
ஸர் நிந்தா கரி தாஹி புஜாவா || 451

அதனால் இப்படிப்பட்ட சில பாபிகள் தடாகத்தின் அருகில் சென்றும் கர்வத்தினாலும், அகம்பாவத்தினாலும் ஸ்நானம் செய்யாமலும், நீரைப் பருகாமலும் வந்து விடுகிறார்கள். இம்மாதிரி அபிமானிகளிடம் ஸ்ரீராமன் கதையைப் பற்றி நாம் கேட்டால்; அவர்கள் கூறும் பதில் இதுதான். தங்கள் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்னாமல்;

ஹே நண்பர்களே! இதுதான் கதையா? இதுதான்

கேட்க வேண்டிய கதையா? தலைகால் ஒன்றுமே தெரியவில்லையே? என்று நிந்திக்கிறார்கள். இந்தவித மானது அறிவீனர்களின் வீண்வாதம் ஆகும்.

ஸகல் விக்ன ப்யாப்ஹிம் நஹிம் தேஹீ |
ராம் ஸுக்ருபாம் பிலோக்ஹிம் ஜேஹீ || 452
ஸோயி ஸாதர் ஸர் மஜ்ஜனு கர்யீ |
மஹா கோர் த்ரயதாப ந ஜர்யீ || 453

எல்லா இடையூறுகளும் அவர்களைச் சூழ்வதில்லை, தொல்லை தருவதில்லை. அதாவது; ஸகல விக்னங்களையும் வர ஒட்டாமல் ஸ்ரீராமனானவர் பக்தர்களைக் காப்பாற்றுகிறார். எவர்களை அழகிய கருணைக் கண் கொண்டு பார்க்கிறாரோ; அவர்களே மானஸஸரஸில் ஸ்நானம் செய்கிறார்கள். (அவர் க்ருபை இருந்தால்; மனிதருக்கு ஒரு துன்பமும் இல்லை. இப்படி யார் ஒருவர் இந்த மானஸரோவரில் பக்தி ச்ரத்தையுடன் சிந்தை உகந்து முழுகி எழுகிறார்களோ; அவர்கள்) மஹா கோரமான மூன்று விதப் பாபங்களிலிருந்தும் விடுபட்டுப் போகின்றனர். ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் (அதாவது; உடலாலும், எதிர்பாரா ஆபத்துக்களிலிருந்தும்; இயற்கைச் சீற்றங்களிலிருந்தும்; பசு, ஸர்ப்பம் போன்ற ஜீவராசிகளாலும் காப்பாற்றப் படுவார்கள்.)

தே நர் யஹ் ஸர் தஜஹிம் ந காவூ |
ஜின்ஹ கேம் ராம சரன் பல் பாவூ || 454
ஜோ நஹாயி சஹ ஏஹிம் ஸர் பாயீ |
ஸோ ஸத்ஸங்க் கர்உ மன் லாயீ || 455

அதாவது; ஸ்ரீராமனுடைய சரண கமலங்களில் ப்ரியமுள்ள மானிடர்கள் (பக்தி ச்ரத்தையுள்ளவர்கள்) இந்த ராம சரித ஸரோவரை எப்போதும் விடமாட்டார்கள். ஏ ஸஹோதரா! யார் இந்த ராமசரித ஸரோவரில் ஸ்நானம் செய்ய விரும்புகிறார்களோ; அவர்கள் ஸத்ஸங்கத்தில் ஈடுபடுவர். (ஏ ஸஹோதரா! ஆகவே, இந்த ஸரோவரில் மூழ்கி எழு. பின்னும் மனம் வைத்து ஸத்ஸங்கத்தில் ஈடுபட்டுப் போவாயாக!)

அஸ் மானஸ் மானஸ் சக் சாஹீ |
பயி கபி புத்தி பிமல் அப்காஹீ || 456

பய்உ ஹ்ருதயம் ஆனந்த் உசாஹூ |
உம்கேஉ ப்ரேம் ப்ரமோத் ப்ரபாஹூ || 457

இம்மாதிரியான மானஸஸரஸைக் காணவேண்டு மானால் நமது ஹிருதயத்தில் கண்கள் தேவை. அக் கண்களினால் நோக்கினதால்தான், நீராடினதால் கவி யினுடைய புத்தியானது சுத்தமாகவும், நிர்மலமாகவும் ஆகியது. அவர் ஹிருதயத்தில் ஆனந்த வெள்ளம் பெரு கியது; உற்சாகம் நிறைந்தது; ப்ரேமை, மகிழ்வு என் னும் தாரை பொங்கி வழிகிறது. (அதாவது; ஸ்ரீராமப் ப்ரவாஹத்தில் (பக்தியில்) மூழ்கியவர்களுக்கு வேறு எதிலும் த்யானம் இருப்பதில்லை என்கிறார் துளஸீ).

சலீ ஸுபக் கபிதா ஸரிதா ஸோ |
ராம பிமல் ஜஸ் ஜல் பரிதா ஸோ || 458
ஸர்ஜூ நாம் ஸுமங்கல் மூலா |
லோக் பேத் மத் மஞ்ஜுள் கூலா || 459

இந்த ஸ்ரீராம சரித மானஸ ஸரஸிலிருந்து அழ கான கவிதை ரூபமான நதி ப்ரவஹித்து ஓடுகிறது. அதில் ஸ்ரீராம கீர்த்தியெனும் உஜ்வலமான நீர் நிரம்பி வழிகிறது. இந்த மூலக் கவிதையின் அதாவது ; மூல நதியின் பெயர் ஸரயூ என்பதாகும். பூரணமான மங் களத்திற்கு ஆணி வேராக ஆகிறது.

அதன் இரு கரைகளுக்கும் பெயர் ஒன்று சாஸ்த்ரம் (உலகமதம்) என்பது; மற்றொன்று வேதம் (வேதமதம்) என்பது. அதாவது, வேதமும், சாஸ்த்ரமும் நிர்ணயித் தது இந்த ஸ்ரீராம சரிதம் என்னும் காவியம்.

நதீ புனீத் ஸுமானஸ் நந்தினி |
கலிமல் த்ருன தரு மூல் நிகந்தினி || 460

அதாவது, மானஸரோவரின் மகள்தான் ஸரயூநதி. இந்த நதியானது மிகவும் பவித்ரமானது; சுத்தமானது. கலியுகத்தின் பாவம் என்னும் புற்களையும் விருட்சங் களையும், அடியோடு வேரோடு பிடுங்கி எரியவல்லது.

ஸ்ரோதா திரிபித் ஸமாஜ் புர
க்ராம் நகர் துஹூம் கூல் |
ஸந்த்ஸபா அனுபம் அவத்
ஸகல் ஸுமங்கல் மூல் || 461

சிறு சிறு ஊர்களிலும், க்ராமங்களிலும், நகரங்களிலும் இக்கதையைக் கேட்கும் மக்கள் நிறைய இருக்கிறார்கள். இந்த மக்கள் இந்த ஸரோவரில் இரு பக்கங்களிலும் இருக்கிறார்கள். (விஷயப்பற்றுகளில் இச்சை கொண் டவர் அதிகம் நகரங்களில் வசிக்கிறார்கள். அடுத்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் சிற்றூர்களில் வசிக்கிறார்கள். பின்னும் அனுபவிக்க வசதியில்லாத சிலர் க்ராமங் களில் வசிக்கிறார்கள்.) இந்நகரங்களில் அதாவது; இந்த ஸரயூநதியின் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள நகரங்களில் மிகவும் ச்ரேஷ்டமானதும், புண்ணியமா னதுமான ஒரு நகரம் உண்டு. அதுதான் ஸ்ரீரகுநாதர் பிறந்த ஜன்மபூமி ‘அயோத்யா’ என்பது.

ராமபக்தி ஸுரஸரித்ஹி ஜாயீ |
மிலீ சுகீர்தி ஸரஜு ஸுஹாயீ || 462
ஸானுஜ் ராம ஸமர் ஜஸு பாவன் |
மிலேஉ மஹாநது ஸோன் ஸுஹாவன் || 463

ஸகல விதங்களிலும் பெருமை வாய்ந்த இந்தச் சரித் ரம் பேசும் ஸரயூ நதியானது ஸ்ரீராமபக்தி ரூபமான கங்கை நதியில் தானாகவே சேர்ந்து விட்டது.

சின்னத்தம்பி லட்சுமணன் கூட ஸ்ரீராமனின் பவித் ரமான யுத்தத்தின் வர்ணனையெனும் புகழ், ரக்த தாரையெனும் மஹா நதியாகி இந்நதியுடன் வந்து ஸங் கமமாகிறது.

ஜுக்பிச் பக்தி தேவ்துனி தாரா |
ஸோஹதி ஸஹித் சுபிரதி பிசாரா || 464
த்ரிபித் தாப் த்ராஸக் திமுஹானீ |
ராம ஸரூப் ஸிந்து ஸமுஹானீ || 465

ஸரயூ நதி, சோணப்ரவாஹம் என்ற இரண்டு நதி களுக்கும் இடையே பக்தி ரூபமான கங்கை நதியின் தாரை ஓடுகிறது; ஜ்ஞான-வைராக்யத்தோடு விளங்கு கிறது. இந்த மூன்று நதிகளின் தாரைகளும் மூன்று விதமான மக்களின் பாபத்தைத் துடைக்கவல்ல மூன்று முகங்கள் கொண்ட நதியாகி, ஸ்ரீராமன் என்னும் மஹா ஸமுத்ரத்தில் தானாகவே கலக்கிறது.

மானஸ மூல் மிலீ ஸுர்ஸரிஹீ |
ஸுனத் ஸுஜன் மன் பாவன் கரிஹீ || 466
பிச் பிச் கதா பிசித்ர பிபாகா |
ஜனு ஸரிதீர் தீர் பன் பாகா || 467

ஏற்கனவே இந்தப் புகழ் வாய்ந்த ஸரயூ நதியின் மூல க்ஷேத்திரத்தின் பெயர் (ஸ்ரீராமசரித) மானஸ். பின்னும் இது (ஸ்ரீராம) பக்திரூபமான கங்கையில் கலந்திருக்கிறது. இது கேட்ட மாத்திரத்தில் பக்தர்களின் மனத்தைச் சுத்தமாக்கி இதமளிக்கும். இந்த மானஸ் நதியின் நடு நடுவில் என்ன என்ன விசித்ரச் சிறு கதைகள் அமைந்திருக்கின்றனவோ; அவைகள் நதியின் கரையில் அமைந்துள்ள சிறுசிறு உபவனங்கள் போன்றவை ஆகும்.

உமா மகேஷ் பிபாஹ் பராதீ |
தே ஜலசர் அகனித் பஹுபாந்தீ || 468
ரகுபர் ஜன்ம அனந்த் பதாயீ |
பம்வர் தரங்க மனோஹர்தாயீ || 469

ஸ்ரீராமசரிதமானஸ் என்னும் இந்த அழகான நதியில் பல அற்புதங்கள் கலந்திருக்கின்றன. இவைகளில் சிவ-பார்வதியின் திருமண ஊர்வலமும் ஒன்று. இந்நதியில் வாழும் எண்ணற்ற நீர்வாழ்வன போல் இவர்கள் கதையும் ஸ்ரீராமகதையென்னும் நதியில் கலந்திருக்கிறது. ஸ்ரீராமஜன்மம் என்னும் ஆனந்தமான ஆசீர்வதிக்கத் தக்க விருத்தாந்தம் இந்த மணல் நதியின் மனோஹரமான சுழல்களும், அலைகளும் ஆகும்.

பாலசரித் சஹு பந்து கே பந்ஜ
பிபுல் பஹுரங்க் |
ந்ருபராணீ பரிஜன் ஸுக்ருத்
மதுகர் பாரிபிஹங்க் || 470

இதில் நான்கு ஸஹோதரர்களின் பால சரித்ரமானது (இளமைக் கதைகள்) (அதாவது ஸ்ரீராம, லட்சுமண, பரத, சத்ருக்னனின்) கதை இந்த மானஸ் நதியில் மலர்ந்துள்ள கமல புஷ்பங்கள். பல வர்ணம் கொண்ட கமல மலர்கள் ராஜா, ராணி மற்றும் குடும்பத்தினரின் (ரகுகுலவம்சத்தவர்) புண்ணியங்களே. இந்த

நதியில் வாழும் நீர்வாழ் பறவைகள் ஆகும்; மொய்க்கும் வண்டுகளாகும்.

ஸீய ஸ்வயம்பர் கதா ஸுஹாயீ |
ஸரித் ஸுஹாவனி ஸோ சபி சாயீ || 471
நதீ நாவ் படு ப்ரஸ்ன அனேகா |
கேவட் குஸல் உதர் ஸபிபேகா || 472

ஸ்ரீ ஜானகி தேவியின் ஸ்வயம்வரத்தின் அழகிய கதையானது இந்த மானஸ் நதியின் அழகைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்கிறது. இந்தக் கவிதை ரூபமான மானஸ் நதியில் சிந்தனையைத் தூண்டும் அழகுக் கேள்விகளே படகுகள் ஆகும். அவைகளுக்கு விவேகமான பதிலே திறமையுள்ள படகோட்டி.

ஸுனி அனுகதன் பரஸ்பர் ஹோயீ |
பதிக் ஸமாஜ் ஸோஹ் ஸரி ஸோயீ || 473
கோர் தார் ப்ருகுநாத் ரிஸானீ |
காட் ஸுபத்த ராம் பர்பானீ || 474

நதிக்கரையில் விசாரம் செய்யும் ஸமூஹக் கூட்டங்கள் இக்கதையைக் கேட்டதும், கேட்கப்படாததுமான பல சர்ச்சைகளை, பல கதைகளைச் செல்லும் போது சொல்லிக் கொள்கிறார்கள். இதனால் அங்குக் கரையில் தங்கியுள்ள வழிப்போக்கர்களின் ஸ்தலம் அழகுடன் விளங்குகிறது.

இத்தருணம் ஸ்ரீபரசுராமனின் கோபமானது நதியின் பயங்கரப் ப்ரவாஹம் போல் உள்ளது; கோரமாகவும் உள்ளது. இதற்கு எதிரில் ஸ்ரீராமனின் அடக்கமான, அழகான, சிறந்த, மதுர வார்த்தைகள் தீர்த்தமாகும் சாந்தமான கட்டங்களைப் போல் இருக்கின்றன. (அதாவது; அவர் கூறும் மொழிகள் த்ருடமாகவும், நிச்சயமாகவும் உள்ளன. ஸ்ரீபரசுராமனாலும் இந்த அமைதியைத் தாங்க முடியவில்லை என்கிறார் துளஸீ (ஒவ்வொரு ஸம்பவமும், வார்த்தையும், ஸரயூ நதியையும், அயோத்தியா புரியையும் உபமானமாக வைத்தே சொல்லப்பட்டது என்பதே உண்மை).

ஸானுஜ் ராம் பிபாஹ் உசாஹூ |
ஸோ சுப் உமக் ஸுகத் ஸப் காஹூ || 475

கூஹத் ஸுனத் ஹர்ஷஹீம் புலகாஹீம் |
தே ஸுக்ருதீ மன் முதித் நஹாஹீம் || 476

ஸஹோதரர்களுடன் கூட ஸ்ரீராமச்சந்த்ரனின் திருமண வைபவ உற்சாகமே இந்தக் கதை நதியின் மங்களகரமான ப்ரவாஹ மாகும். எல்லாருக்கும் ஸுகம் தருவது. ஸஹோதரர்களுடன் ஆனந்தமயமான ஸ்ரீராம விவாஹம் கண்டு மக்கள் உற்சாகத்தால் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்கள். இந்தப் பெருமை வாய்ந்த சிறப்பானது எல்லோருக்கும் ஸுகத்தைக் கொடுக்கும் நதியின் அலைகள் போன்றது. எவர் இக்கதையைக் கேட்டும், படித்தும் புளகாங்கிதம் அடைகிறார்களோ, அவர்களே புண்யாத்மாக்கள். அவர்கள் ஸந்தோஷமடைந்து இந்த நதியில் ஸ்நானம் செய்பவர்கள் ஆகிறார்கள்.

ராம் திலக் ஹித் மங்கள் ஸாஜா |
பரப் ஜோக் ஜனு ஜுரே ஸமாஜா || 477
காயீ குமதி கேகயி கேரீ |
பரீ ஜாஸு பல் பிபதி கனேரீ || 478

அதாவது, விழாக்காலங்களில் இந்நதிப் பகுதியில் மக்கள் ஒன்று கூடுவதுபோல- ஸ்ரீராமச்சந்த்ரனின் பட்டாபிஷேக வைபவங்களின் மங்கள அலங்காரமானது, மலைமுகட்டில் ஸமூஹமே ஒன்று கூடி ஆர்வரிப்பது போல் விளங்கியது. இந்தக் கதை ரூபமான ஸரயூ நதியில் பாசி பிடித்தாற்போல மாசு படிந்தது. கைகேயி என்னும் புத்தியற்ற ஸ்த்ரீயினால் பெரிய விபத்துக்கள் ஏற்பட்டன.

ஸமன் அமித் உத்பாத் ஸப்
பரத்சரித் ஜப்ஜாக் |
கலி அக கல் அவகுண் கதன்
தே ஜல்மல் பக் காக் || 479

பரதனுடைய சரித்ரமானது ஜப யஜ்ஞரூபியான ஒரு ச்ரேஷ்ட தபஸ்வி போன்றது. பலவிதமான கஷ்டங்களையும், துக்கங்களையும் போக்கிச் சாந்தியளிக்க வல்லது. கலியுகத்தின் பாபங்களும் சீர்கேடான கதைகளும் துஷ்டர்களின் 'இந்த ஸரயூ நதியின் சேறாகும். அசுத்தத்தைச் சேர்க்க வல்ல கொக்காகவும், காகமா

கவும் ஆகிறது. இதை அழிக்க வல்லது ஸ்ரீபரதனின் சரித்ரம்.

கீர்தி ஸரித் ஸஹூம் ரிது ரூரீ |
ஸமய் ஸுஹாவனி பாவனி பூரீ || 480
ஹிம ஹிமஸைல ஸுதா சிவ ப்யாஹூ |
ஸிஸிர் ஸுகத் ப்ரபு ஜன்ம உசாஹூ || 481

இந்தக் கீர்த்தி ரூபமான நதி ஆறு ருதுக்களிலும் அழகு நிரம்பி வழிகிறது. எல்லாச் சமயங்களிலும் இதன் அழகும், பவித்ரமும் எல்லையற்று விளங்கு கிறது. இதில் சிவ-பார்வதியின் திருமணம் ஹேமந்த ருதுவாகும்.

ஸ்ரீராமச்சந்த்ரனின் திரு அவதார தினமானது சிசிர ருது போன்றது. (ஹேமந்த ருதுவில் சிவனார் மூன்று உலகத்தையே நடுக்கமுற வைத்தார். (யதா பயவு கோப் கம்பவு தீன்லோகா) அதாவது; காமதஹனம் போன்ற பயங்கர ஸந்தர்ப்பத்தை ஏற்றுப் பின்னால் சிவனார் நடுங்கவைத்துப் பெருமையடைந்தார்.)

பர்னப் ராம பிபாஹ் ஸமாஜூ |
ஸோ முத் மங்கலமய் ருதுராஜூ || 482
க்ரீஷ்ம துஸஹ் ராம பன்கவ்னூ |
பந்த்கதா கர் ஆதப் பவ்னூ || 483

ஸ்ரீராமச்சந்த்ரனின் விவாஹ வர்ணனை, ஸமூ ஹம் கொண்ட பேரானந்தமானது ருதுக்களில் ச்ரேஷ்ட மான வஸந்த ருதுவாகும். ஸ்ரீராமச்சந்த்ரனின் வனம் ஏகும் படலம் க்ரீஷ்ம ருது போன்றது. இதன் மற்ற வழிக்கதைகள் கொடுமையான, தீட்சணமான வெய்யி லும், அனல் காற்றும் போன்றவை.

பர்ஷா கோர் நிஸாசர் ராரீ |
ஸுர்குல் சாலி ஸுமங்கல்காரீ || 484
ராம ராஜ் ஸுக் பினய் படாயீ |
பிஸத் ஸுகத் ஸோயி ஸரத் ஸுஹாயீ || 485

அரக்கர்களுடன் கூடச்செய்யும் பயங்கர யுத்தமா னது வர்ஷ ருதுவைப் போன்றது. ஏனெனில், அந்த

வர்ஷ ருதுவானது தேவதா ரூபியான தான்யங்களுக்கு மங்கலத்தை உண்டாக்கவல்லது. (அதாவது, அவர்களுடைய க்ஷேமத்தை உட்கொண்டது).

ஸ்ரீராமபிரானின் ராஜ்ய காலத்தின் ஸுகமும், நீதியும், பெருமைகளும், ஸகல விதத்திலும் இன்பத்தை அளிக்கவல்ல சரத் ருது போன்றது.

ஸதீ சிரோமனி ஸிய குன்காதா |
ஸோயி குண் அமல் அனூபம் பாதா || 486
பரத் ஸுபாஉ ஸுசீதல்தாயீ |
ஸதா ஏகரஸ் பர்னி ந ஜாயீ || 487

ஸதி சிரோமணி ஸீதாதேவியின் குண விசேஷமான கதைகள் இந்த ஜலத்தின் நிர்மலமான பகுதி. உபமானம் இல்லாத, அத்புத, ஆனந்தமான பகுதி நீர். ஸ்ரீபரதனுடைய ஸ்வபாவமோ, ஆழ்ந்த நீரின் குளிர்ச்சி போன்றது. இதை வர்ணிக்கவே முடியாது. எப்பொழுதும் ஒரே மாதிரியானது.

அவலோக்னி போல்னி மில்னி
ப்ரீதி பரஸ்பர் ஹாஸ் |
பாயப் பலி சஹு பந்து கீ ஜல்
மாதுரீ ஸுபாஸ் || 488

நான்கு ஸஹோதரர்களும் ஒருவர்க்கொருவர் பார்ப்பது, பேசுவது, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நோக்கி ப்ரேமையுடன் சிரிப்பது இதெல்லாம் இந்த நான்கு ஸஹோதரர்களின் ச்ரேஷ்டமான பிள்ளைத்தனம்; ஸஹோதர வாஞ்சை. இதுதான், இந்த (எண்ணம்) பாவம்தான், இந்த ஸரயூ நதியின் தெவிட்டாத இன்பமும், பின்னும் மணமுமாகும் என்று கூறுகிறார் துளஸீ.

ஆர்தி பினய் தீனதா மோரீ |
லகுதா லலித் ஸுபாரி ந தோரீ || 489
அத்புத் ஸலில் ஸுனத் குணகாரீ |
ஆஸ பிஆஸ் மனோமல் ஹாரீ || 490

என்னுடைய துயரம், வினயம், இரக்கமனம் எல்லாமே இந்த நிர்மல நீரில், அதாவது; இந்த ஸரயூ நதி.

யில் கலந்து மென்மையாகிவிட்டன. இதில் தோஷம் காணமுடியாது; நன்மைதான் காண்பேரம். இந்த அத்புதமான ஜலமானது கேட்ட மாத்திரத்தில் குணமளிக்க வல்ல சக்தி பெற்றிருக்கிறது. நம்பிக்கை என்னும் தாகத்தைத் தணிக்கக் கூடியது; மனத்தில் உள்ள அழுக்குகளைக் களைந்து விடுவது.

ராம ஸுப்ரேம்ஹி போஷத் பானீ |
ஹரத் ஸகல் கலி கலுஷ க்லானீ || 491
பவ ச்ரம் ஸோஷக் தோஷக் தோஷா |
ஸமன் துரித் துக் தாரித் தோஷா || 492

இந்த நீரானது ராமப்ரேமையை அதிகரிக்கச் செய்கிறது; புஷ்டியாக்குகிறது; கலியுகத்தின் பாபங்களையும்; வருத்தங்களையும் அகற்றுகிறது. உலகில் சிற்றின்பத்தாலும், ஜன்ம, மரணத்தாலும் மிகவும் களைப்படைந்த மானிடஜாதிக்கு இந்த நீர் ஸுகத்தைக் கொடுக்கிறது. ஸந்தோஷிகளுக்கு ஸந்தோஷம் தருகிறது. மேலும், எப்படி வியாதியினால் பீடிக்கப்பட்டோருக்கு இன்னமுதம் ஸந்தோஷத்தைக் கொடுக்கிறதோ; அம்மாதிரி பவபயத்தால் தவிக்கும் வியாதியஸ்தருக்கு இந்த நீர் இதமளிக்கிறது. இது தவிர அபத்யமான தோஷம், தரித்ரம், துக்கம் ஆகிய எல்லாவிதப் பாபங்களையும் அகற்றுகிறது.

காம் கோஹ் மத மோஹ் நஸாவன் |
பிமல் பிபேக் பிராக் படாவன் || 493
ஸாதர் மஜ்ஜன் பான் கியே தேம் |
மிட்ஹி பாப் பரிதாப் ஹியே தேம் || 494

இந்த ஜலமானது காமம், க்ரோதம், மதம், மோஹம் போன்ற தீய மனோ பாவங்களை அழிக்கிறது. ப்ரகாசமான ஜ்ஞான, வைராக்யத்தை அளிக்கவல்லது; பெருக்கவும் செய்கிறது. தவிர, மரியாதையான மனத்துடன் இதில் முழுகி எழுந்தால், இதைக் குடித்தால் நமது பாபமும், துக்கமும் ஹிருதயத்தைவிட்டு விலகுகிறது.

ஜின்ஹ ஏஹிம் பாரி ந மானஸ் தோஏ |
தே காயர் கலிகால் பிகோஏ || 495
த்ருஷித நிர்கி ரபி கர் பவ் பாரீ |
பிரிஹஹிம் ம்ருக் ஜிமி ஜீவ் துகாரீ || 496

எவர் ஒருவர் ஸ்ரீராமனின் புகழாகிய இந்த ஜலத்தினால் தனது மன அழுக்கைத் துடைக்கவில்லையோ; அம்மாதிரி ஒரு கோழைக்கு, கயவனுக்குக் கலிகாலத்தின் ரோகமானது நஷ்டமளித்துவிடும். இவர்கள் அறிந்தும் அறியாதவர் போல் அநியாயம் செய்வதால் அழிந்து போகிறார்கள். அதாவது; ஸ்ரீராம பக்தியை மறந்து சுயநலமாகி நாசமடைகிறார்கள். தாகத்தால் தவிக்கின்ற ஒரு மான் ஸூர்யன் பட்ட இடத்தில் உண்டாகும் கானல் நீரைக் கண்டு, அது ஜலம் என்று எண்ணி, ஓடிஓடி எங்கும் அடைக்கலமின்றி எப்படி வெய்யிலில் தவிக்கிறதோ; அதேபோல் அறிவற்ற மூடர்கள் பாபம் கலி என்னும் பயங்கர ஸூர்ய நிழலை நோக்கிப் புலன் விஷயங்களின் பின்னால் ஓடிக் கொண்டே இருக்கிறார்கள்; வருந்துகிறார்கள். இதில் அவர்களுக்கு அழிவு தான் மிஞ்சுகிறது.

மதி அனுஹாரி ஸுபாரி குண் கன்
கனி மன் அன்ஹவாயி |
ஸுமிரி பவானீ ஸங்கர்ஹி கஹ்
கபி கதா ஸுஹாயி || 497

நம் மனத்தின் அறிவுப் போக்குப்படி ஸுந்தர, பவித்ர, ஜலத்தில் குணம், நற்குணம் கொண்ட மனத்தை நீராட்டி, சிவனையும்-பார்வதி தேவியையும் ஸ்மரணை செய்து கொண்டே துளஸீ கவியானவர் தனது ஸுந்தரக் கதையை ஆரம்பிக்கிறார்

அப் ரகுபதி பத் பங்கருஹ் ஹியம்
தரி பாயி ப்ரஸாத் |
கஹம் ஜுகல் முனிபர்ய கர்
மிலன் ஸுபக் ஸம்பாத் || 499

இப்போதுதான் ஸ்ரீராமச்சந்த்ரனின் சரண கமலங்களை ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு, அவருடைய ஸந்தோஷத்தையும், அருளையும் பெற்றுக் கொண்டு, இரண்டு முனி ச்ரேஷ்டர்களின் சந்திப்பைப் பற்றிய அழகான ஸம்வாதங்களை வர்ணனை செய்கிறேன்.

பரத்வாஜ் ஜிமி ப்ரக்கைய் |
யாஜ்ஞவல்க்ய முனிபாய் || 499

ப்ரதம முக்ய ஸம்வாத் ஸோயீ |
கஹி ஹோ ஹேது புஜாயீ || 500

எவ்விதம் பரத்வாஜ முனியானவர் யாஜ்ஞவல்க் யரிடம் கேள்விகளும், ஸம்பாஷணைகளும் செய்ய ஆரம்பித்தாரோ; அதையே முக்கியமான மூல ஸம் வாதம் என்று எண்ணிக் கொண்டு இதை நான் கூறு கிறேன் என்கிறார் துளஸீ.

யஹி த்விஜே விஷ்ராம்மே |
பார்வதீ சிவ ப்யாஹூ || 501
வர்ணஹர ப்ரேம் ஸமேத ஜன் |
தாயக் அமித உசாஹூ || 502

இவர்கள் இருவரும் விச்ராந்தியாக ப்ரேமையுடனும், ச்ரத்தையுடனும், உற்சாகத்துடனும், சிவ-பார்வதியின் திருமண வைபவத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்.

பரத்வாஜ முனி பஸஹிம் ப்ரயாகா |
தின்ஹஹி ராம பத் அதி அனுராகா || 503
தாபஸ் ஸம் தம் தயா நிதானா |
பரமார்த பத் பரம் ஸுஜானா || 504

ஸ்ரீபரத்வாஜ முனிவர் ப்ரயாகையில் வசிக்கிறார். அவருக்கு ஸ்ரீராமனின் சரண கமலங்களில் அதிகப் பற்று. அவர் தபஸ்வி மட்டுமல்லாமல் சாந்த குண முடையவர்; இந்த்ரியங்களை ஜெயித்தவர்; தயையின் அவதாரம்.

பாரலௌகிக மார்க்கத்திற்கு வழிகாட்டுவதில் மிகச் சிறந்தவர்.

மாக் மகர்கத் ரபி ஜப் ஹோயீ |
தீர்தபதிஹிம் ஆவ் ஸப் கோயீ || 505
தேவ் தனுஜ் கிம்நர் நர் ச்ரேநீம் |
ஸாதர் மஜ்ஜஹிம் ஸகல் த்ரிபேநீம் || 506

ஸூர்யன் மகரராசிக்குச் செல்லும்போது (அதாவது மாக மாதத்தில்) எப்பொழுது மகர சங்கராந்தி உண்டாகிறதோ; அன்று எல்லோரும் ப்ரயாகையில்

நீராட வருகிறார்கள்; இப்படி ஒரு ஐதீகம். என்ன வென்றால்; இந்த மகர சங்கராந்தி தினத்தில் தேவதை கள், ராட்சதர்கள், கின்னரர்கள், மனுஷ்யர்கள், எல் லோருமே அகமகிழ்ந்து பக்தி ச்ரத்தையுடன் த்ரிவேணி என்னும் ப்ரயாக க்ஷேத்ரத்தில் ஸ்நானம் செய்ய வரு கிறார்கள்.

பூஜஹிம் மாதவ் பத் ஜல்ஜாதா |
பர்ஸி அகய் படு ஹர்ஷஹிம் காதா || 507
பரத்வாஜ் ஆச்ரம் அதி பாவன் |
பரம ரம்ய முனிபர் மன் பாவன் || 508

த்ரிவேணி ஸ்நானம் முடிந்தபின், மக்கள் ஸ்ரீவேணீ மாதவருடைய சரண கமலங்களை நமஸ்கரித்தபின் அட்சயவிருட்சம் எனப்படும் பெரிய ஆலமரத்தையும் தொட்டு வணங்கி ஆனந்தமடைகிறார்கள்.

அங்குதான் முனி பரத்வாஜரின் பவித்ரமான ஆச்ரமம் அமைந்திருக்கிறது. அதி மனோஹரமானது அந்த ஆச்ரமம். அது மட்டுமன்றி முனிவர்களின் மனத்தை ஆட்கொள்ளவல்லது.

தஹாம் ஹோயி முனி ரிஷய ஸமாஜா |
ஜாஹிம் ஜே மஜ்ஜன் தீர்தராஜா || 509
மஜ்ஜஹிம் ப்ராத் ஸமேத் உசாஹா |
கஹஹிம் பரஸ்பர் ஹரி குன் காஹா || 510

தீர்த்தராஜாவான அந்த ப்ரயாகை உள்ள இடத் தில், அதாவது; பரத்வாஜர் ஆச்ரமத்தின் அருகில், ஒரு ஸாதுக் கூட்டமே இருக்கிறது. அவர்கள் ப்ரயாகை யில் ஸ்நானம் செய்கிறார்கள். விடியற்காலை தெளிந்த மனத்துடன் எழுந்து பரஸ்பரம் பகவானுடைய குணத் தைப் பற்றிப் பாடிவிட்டே பின்னர் சாப்பிடப் போகி றார்கள்

ப்ரம்ம நிருபன் தர்ம பிதி
பர்னஹிம் தத்வ பிபாக் |
கஹஹிம் பக்தி பகவந்த் கை
ஸஞ்ஜுத் க்யான் பிராக் || 511

1. ப்ரஹ்ம நிருபணம் (அதாவது வேதாந்தம்)

2. தர்ம விதி-மீமாம்ஸம் (கர்மகாண்ட மீமாம்ஸம்)
3. தத்வ விபாகம் (சாங்க்ய சாஸ்த்ரம்)
4. பக்தி (உபாஸனா)
5. ஜ்ஞானம், வைராக்யம் எல்லாமும் சேர்ந்த மனத்துடன் பகவானை ப்ரார்த்திக்கிற வர்ணனை செய்கிறது.

ஏஹி ப்ரகார் பரி மாக் நஹாஹீம் |
புனி ஸப் நிஜ் நிஜ் ஆச்ரம் ஜாஹீம் || 512
ப்ரதி ஸம்பத் அதி ஹோயி அனந்தா |
மகர மஜ்ஜி கவனஹிம் முனிப்ருந்தா || 513

இதேவிதமாக அதாவது; முழு மகர சங்கராந்தியன்று தொடங்கி, மாதம் பூராவும் முனிவர்கள் பவித்ரமான இந்த த்ரிவேணி நதியில் நீராடித் தங்கள் தங்கள் ஆச்ரமம் ஏகுகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் இதே போல் ஆனந்தமாக மகர சங்கராந்தியன்று முனிவர்கள் கூட்டம் அவசியம் ஸ்நானம் செய்ய த்ரிவேணி போகிறார்கள்.

ஏக் பார் பரி மகர நஹாயே |
ஸப் முனீஸ் ஆச்ரமன்ஹ ஸிதாயே || 514
ஜாக்பலிக் முனி பரம் பிபேகீ |
பரத்வாஜ் ராகே பத் டேகீ || 515

ஒருமுறை இதே மகர (மாதம் பூராவும்) சங்கராந்தியன்று எல்லா முனிவர்களும் ஸ்நானம் செய்து, தங்கள் தங்கள் ஆச்ரமம் சென்றனர். மஹாமேதாவியும், அறிவுக்களஞ்சியமுமான யாஜ்ஞவல்க்ய முனிவரைக் கண்டவுடன் பரத்வாஜர் அவர் காலில் விழுந்து தன் சிரத்தை அவர் பாதங்களில் வைத்தார்.

ஸாதர் சரண் ஸரோஜ் பகாரே |
அதி புனீத் ஆஸன் பைடாரே || 516
கரி பூஜா முனி ஸுஜஸு பகானீ |
போலே அதி புனீத் ம்ருது பானீ || 517

அன்புடன், மரியாதையுடன், வணக்கத்துடன் பரத்வாஜ முனியானவர் யாஜ்ஞவல்க்யரை ஆஸனத்தில் அமர்த்தினார். அவரது பாதங்களைக் கழுவிப் பாத பூஜை செய்தார். பின்னர் முனிவரை ஏகமாகப் புகழ்ந்து பேசி மெதுவாகக் கேட்கலானார்.

நாத் ஏக் ஸம்ஸவு பட் மோரேம் |
கர்கத் பேததத்வ ஸபு தோரேம் || 518
கஹத் ஸோ மோஹி லாகத் பய் லாஜா |
ஜௌம் ந கஹஉம் பட் ஹோயி அகாஜா || 519

ஹே நாதரே! ப்ரபுவே! என் மனத்தில் ஒரு பெரிய ஸந்தேஹம் இருக்கிறது. வேதங்களின் தத்வமெல்லாம் தங்கள் கைப்பிடியில் இருக்கிறது. தாங்கள் வேதத்தின் தத்வங்களை அறிந்தவர்கள் ஆனதினால் தாங்களே எனது ஸந்தேஹத்தைத் தீர்த்து வைக்க முடியும். எனக்குக் கூறவே பயமாகவும், லஜ்ஜையாகவும் இருக்கிறது. இத்தனை பெரிய முனிவன்; இவனுக்கு இது கூடத் தெரியவில்லையே என்று தேவரீர் நினைக்கலாம். நான் கூறுவதைத் தவறாக எண்ண வேண்டாம். என் அறிவுக்கு எட்டாததினால் லஜ்ஜையுடன் தங்களிடம் கேட்கிறேன். தங்களை நான் பரிட்சிப்பதாக நினைக்கக் கூடாது. லஜ்ஜைக்குக் காரணமும் இதுதான் - அதாவது; இவ்வளவு ஆயுசும் கழிந்துவிட்டதே. இன்னும் ஜ்ஞானம் ஏற்படவில்லையே என்பதுதான். நீங்கள் சொல்லாவிட்டால் ; அஜ்ஞானியாக ஆகவேண்டியதுதான்.

ஸந்த் கஹஹிம் அஸி நீதி ப்ரபு
ச்ருதி புரான் முனி காவ்|
ஹோயி ந பிமல் பிவேக் உர
குர் ஸன் கியேம் துராவ் || 520

ஹே ப்ரபோ! ஸாதுக்களும் கூறுகிறார்கள், வேத புராணங்கள் கூடக் கூறுகின்றன. என்னவென்றால்; குருவிற்குக் கூடத் தெரியாமல் மனத்தில் ஸந்தேஹத்தை நிரப்பி வைத்திருந்தால்; மனித உள்ளத்தில் ப்ரகாசமான ஜ்ஞானம் தோன்ற முடியாது. எதையும் கேட்டு அறிவதே நல்லது. குறையே வேண்டாம் என்கிறார்கள் முனிவர்களும்.

அஸ பிசாரி ப்ரகட்உம் நிஜ் மோஹூ |
ஹர்ஹு நாத் கரி ஜன் பர் சோஹூ || 521
ராம் நாம் கர் அமித் ப்ரபாவா |
ஸந்த் புரான் உபனிஷத் காவா || 522

இம்மாதிரியான விசாரம் மனத்தில் எழுந்ததால்; என் அஜ்ஞானத்தைத் தங்கள் முன்னால் வெளியிட்டேன். நாதனே! தாஸனான என் மீது க்ருபை கூர்ந்து இந்த அஜ்ஞானத்தை விலக்க வேண்டும். ஸ்ரீராம நாமத்திற்குப் பெரும் ப்ரபாவம் கீர்த்தி இருக்கிறது. முனிவர்கள், புராணங்கள், இன்னும் உபநிஷத்துக்கள் எல்லை காண முடியாத இந்த ஸ்ரீராம நாமத்தைப் பாடியிருக்கின்றன.

ஸந்தத் ஜபத் ஸம்பு அபினாசீ |
சிவ் பகவான் க்யான் குண் ராசீ || 523
ஆகர் சாரி ஜீவ் ஜக் அஹஹீம் |
காஸீம் மர்த் பரம பத் லஹஹீம் || 524

கல்யாணஸ்வரூபனும், அவிநாசியும், ஜ்ஞானத்தின், குணத்தின் பொக்கிஷமுமான சிவபிரான் இடையறாது ஸ்ரீராமநாமத்தை ஜபிக்கிறார். ஜகத்தில் வாழும் நான்கு இனத்தில் உள்ள ஸகல ஜந்துக்களும் காசியில் இறந்தால் பரமபதம் அடைகிறார்கள். ஏனெனில்; அதே சிவநாமத்தினால் உண்டாகும் அந்தப் பலனை எண்ணி ஸ்ரீராமநாமத்தையும் ஜபிக்கிறார்கள். அதாவது; சிவனால் ராம நாமத்தின் மஹிமை சொல்லப் படுகிறது.

ஸோபி ராம் மஹிமா முனிராயா |
சிவ் உபதேஸு கர்த் கரி தாயா || 525
ராமு கவன் ப்ரபு பூசவும் தோஹீ |
கஹிஅ புஜாயி க்ருபாநிதி மோஹீ || 526

எல்லாம் இந்த ஸ்ரீராம நாமத்தின் மஹிமைதான் என்ன? ஹே முனிராஜரே! சிவனார் காசியில் இறக்கும் ஜீவர்களுக்கு ராமநாமத்தைப் பற்றித் தயவு கொண்டு உபதேசம் செய்கிறார். இதனால் அவர்களுக்குப் பரமபதம் கிடைக்கிறது. அந்த ராமன் யார்? ஸ்வாமி! தயாநிதியே! நீரே எனக்கு எல்லாமே விவரமாகச் சொல்ல வேண்டும். தங்களிடந்தான் கேட்கிறேன்.

ஏக் ராம் அவதேஸ் குமாரா |
தின்ஹ கர் சரித் பிதித் ஸம்ஸாரா || 527

நாரி பிரஹம் துகு லஹேஉ அபாரா |
பயவு ரோஷு ரன் ராவணு மாரா || 528

ஓர் ராமன் இருந்தான். அயோத்யாவின் ராஜா வான தசரதரின் புத்ரன். அவன் சரித்ரம் உலகப் ப்ர ஸித்தமானது. ஸ்த்ரீ வியோகத்தினால் அதாவது, பிரி வாற்றாமையால், மிகவும் வருந்தினார்; அபாரக்கோபம் கொண்டார்; அதனால் அரக்கர் குலத்தையே, ராவ ணாதியரை அடியோடு அழித்தார்.

ப்ரபு ஸோயி ராம் கி அபர் கோவு
ஜாஹி ஜபத் த்ரிபுராரி |
ஸத்யதாம் ஸர்பக்ய தும்ஹ
கஹஹு பிபேகு பிசாரி || 529

ப்ரபோ! அதே ராமன்தான் பரமாத்மாவான ராமனா? இல்லை,வேறு எவரேனும் உளரா? எவரைச் சிவனார் எப்போதும் ஜபிக்கிறாரோ; அந்த ராமன் தானா? தாங்கள் ஸத்யத்தின் இருப்பிடம்; ஸர்வஜ்ஞர்; ஜ்ஞானத்தை எல்லாம் திரட்டி என்னிடம் கூறுவீராக.

ஜைஸேம் மிடை மோர் ப்ரம் பாரீ |
கஹஹு ஸோ கதா நாத் பிஸ்தாரீ || 530
ஜாக்பலிக் போலே முஸுகாயீ |
தும்ஹஹி பிதித் ரகுபதி ப்ரபுதாயீ || 531

ஏ தலைவனே! என்னுடைய அஜ்ஞானம் விலகட் டும்; ஸந்தேஹம் திரட்டும். ஹே ஸ்வாமி! தாங்கள் விஸ்தாரமாக இக்கதையை எனக்குக் கூறுங்கள், என்ற தும்; யாஜ்ஞவல்க்ய முனிவர் சிரித்துக் கொண்டே பரத் வாஜரிடம்; முனிவரே! உங்களுக்கு ரகுபதியின் அபார மான பெருமை பற்றித் தெரிந்திருக்குமே!

ராமபக்த தும்ஹ மன் க்ரம் பானீ |
சதுராயீ தும்ஹாரி மைம் ஜானீ || 532
சாஹஹு ஸுனை ராம குண் கூடா |
கீன்ஹிஹு ப்ரஸ்ன மன்ஹும் அதி மூடா ||533

மேலும், நீங்கள் ''மனத்தாலும், வார்த்தையாலும், செயலாலும், ஸ்ரீராம பக்தன்தான். நான் உம் அறி

வைப் பற்றித் தெரிந்து கொண்டேன். நீங்கள் ஸ்ரீராம னுடைய ரஹஸ்யமான, கம்பீரமான, குணாதிசயங் களைக் கேட்க விரும்புகிறீர் அல்லவா? நீர் ஏற்கனவே எல்லாம் அறிந்தவர்தான். பின்னும் முட்டாளைப் போல் கேட்கிறீரே! ஏன்?

தாத ஸுன்ஹு ஸாதர் மனு லாயீ |
கஹஉம் ராம் கை கதா ஸுஹாயீ || 534
மஹாமோஹு மஹிஷேஸு பிஸாலா |
ராம்கதா காலிகா கராலா || 535

"ஹே அப்பனே!" மனம் வைத்து அன்புடன் நன் றாகக் கேள்! நான் ஸ்ரீராமனுடைய ஸுந்தரமான கதையை வர்ணனை செய்து கூறுகிறேன்; கேள்! அஜ் ஞானம் என்னும் பயங்கர மகிஷாஸுரனை வதைக்க வேண்டி வந்தது ஸ்ரீராமகதை. அது ஒரு காளி; அதா வது; துர்காதேவி போன்று அழிக்கவந்தது.

ராமகதா சசி கிரன் ஸமானா |
ஸந்த் சகோர் கர்ஹிம் ஜேஹி பானா || 536
ஐஸேயி ஸம்ஸய கீன்ஹ பவானீ |
மஹாதேவ் தப் கஹா பகானீ || 537

மேலும், இந்த ஸ்ரீராமகதையானது சந்த்ரனுடைய ஒளிவீசும் கிரணங்கள் போன்றது. இதை அடைந்து இன்பமுற, சகோரப் பட்சிகள் போன்ற ஸாதுக்கள் காத்திருக்கிறார்கள்; பானம் செய்கிறார்கள். இம் மாதிரிதான் ஒருமுறை பார்வதி தேவி ஸந்தேஹத்து டன் விஷயங்களைக் கேட்டாள். அதற்குச் சம்புவான வர் விவரமாக எடுத்துரைத்தார்.

கஹவும் ஸோ மதி அனுஹாரி அப்
உமா ஸம்பு ஸம்பாத் |
பயஉ ஸமய் ஜேஹி ஹேது ஜேஹி ஸுனு
முனி மிடிஹி பிஷாத் || 538

இப்பொழுது இப்படியாக நான் என் புத்திக்கு ஏற்ற படி சிவ- பார்வதியின் ஸம்பாஷணைகளை அப்படியே வர்ணனை செய்கிறேன். எந்த நேரத்தில் நிகழ்ச்சிகள்

ஏற்பட்டனவோ; எந்தெந்த காரணத்தினால் இக்கதைக்கு விசேஷம் ஏற்பட்டதோ; எல்லாமே ஹே முனி ச்ரேஷ்டரே! நான் சொல்லுகிறேன். நீர் கேட்டுக் கொள்ளும். இதனால் எல்லாத் துயரங்களும் அழிந்து போகும்.

ஏக் பார் த்ரேதா ஜுக மாஹீம் |
ஸம்பு கயே கும்பஜ ரிஷி பாஹீம் || 539
ஸங்க ஸதீ ஜக்ஜனனி பவானீ |
பூஜே ரிஷி அகிலேஸ்வர ஜானீ || 540

ஒரு முறை த்ரேதா யுகத்தில் சிவன், அகஸ்திய ருஷியிடம் சென்றார். அவருடன் தட்ச ப்ரஜாபதியின் புத்ரியான ஸதி கன்யாவான ஜகத் ரட்சகி, மாதா பவானியும் கூட இருந்தாள், ருஷியானவர் உலகமெல்லாவற்றிற்குமே சிவன்தான் தலைவர் என்பதைத் தெரிந்து கொண்டு சிவனுக்குப் பூஜை செய்தார்.

ராமகதா முனிபர்ஜ் பகானீ |
ஸுனீ மஹேச் பரம ஸுகு மானீ || 541
ரிஷி பூசீ ஹரீபக்தி ஸுஹாயீ |
கஹீ ஸம்பு அதிகாரீ பாயீ || 542

அகஸ்திய முனிவரானவர் பக்தியுடனும், ச்ரத்தையுடனும் ஸ்ரீராமகதையை வர்ணனை செய்தார்.

இதைப்போன்ற ஸுகம் வேறு ஏதுமில்லை என்ற எண்ணத்துடன் ஸுகத்துடன் இக்கதையைச் சிவனார் கேட்டார். அப்பொழுது, ருஷியானவர் சிவனிடம் அழகுள்ள (ஹரி) ராமபக்தியைப் பற்றி விவரம் கேட்டார். அப்போது சிவபிரான் அவரே தகுதியுள்ளவர் என்றெண்ணி ஸ்ரீராமருடைய கீர்த்தியைப் பற்றி, ராமனிடம் உள்ள பக்தியைப் பற்றி, அவருடைய அவதார மஹிமையைப் பற்றிக் கூறினார்.

கஹத் ஸுனத் ரகுபதி குண் காதா |
கசு தின் தஹாம் ரஹே கிரிநாதா || 543
முனிஸன் பிதா மாகி த்ரிபுராரீ |
சலே பவன ஸங்க் தச்சகுமாரீ || 544

ஸ்ரீராமச்சந்த்ரனான ரகுபதியின் கதையை சொல்லிக்

கொண்டும், கேட்டுக் கொண்டும் நாள் முழுவதும் சிறிது காலம் வரை ஸ்ரீகிரிநாதனான சிவன் அங்கு வசித்தார். பின்பு அகஸ்திய முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு தனது பத்தினி தட்ச குமாரி ஸதிதேவியுடன் கைலாஸம் சென்றார்.

தேஹி அவசர் பஞ்ஜன் மஹிபாரா |
ஹரி ரகுவம்ஸ லீன்ஹ அவதாரா || 545
பிதா பசன் தஜி ராஜு உதாஸீ |
தண்டக் பன் பிசரத் அபிநாசீ || 546

அதேசமயம் ப்ருத்வியின் பாரத்தை இறக்கிட விஷ்ணு பகவானானவர் ரகு வம்சத்தில் அவதாரம் எடுத்து விட்டார். அவிநாசியான அந்தப் பகவான் தன் தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக, ராஜ்யத்தையும் துறந்து, முனிபோலகித் தண்டகாவனம் எனும் கானகம் ஏகினார்.

ஹ்ருதயம் பிசாரத் ஜாத் ஹர் கேஹி
பிதி தர்ஸனு ஹோயி |
குப்த ரூப் அவதரேஉ 'ப்ரபு கயேம்
ஜான் ஸபு கோயி || 547

சிவன் தனக்குத்தானே நினைத்தவாறு கூறுகிறார்; சொல்கிறார்; எப்படி ராமனை நான் தரிசிப்பேன்? அந்தப்ரபு! குப்த ரூபமாக இங்கு அவதாரம் எடுத்துப் பிறந்து விட்டாரே! நான் அங்குப் போனால் எல்லாரும் அதிசயிப்பார்கள். அவரை எல்லோரும் தெரிந்து கொண்டு விடுவார்கள். (அவர்தான் பரப்ரம்மம் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிடும்.)

சங்க்ர் உர அதி சோபு ஸதீ ந ஜானஹிம்
மர்மு ஸோயி |
துளஸீ தர்ஸன லோபு மன் டரு லோசன்
லாலசீ || 548

சிவனின் ஹிருதயத்தில் இவ்விஷயம் பற்றிப் பெரும் துயரம் மூண்டது. ஸ்ரீராமன் அவதரித்ததை எப்படியாவது போய்க் காண வேண்டுமென்று மனத்தில் வேதனை, என்னவென்றால்; உலகே பரப்ரம்மமான

ஸ்ரீராமன் மானிடனாக அவதரித்ததை அறியக்கூடாது அல்லவா! அப்படிச் சிவன் அங்கு ஸ்ரீராம தரிசனம் செய்யப் போனால்; உலகம் அறிந்துவிடுமே! இதுவே அவர் தனது இந்த ரகஸ்ய ஆவலைத் தன் மனைவி ஸதியிடமும் கூறாமல் இருந்தார். ஸதிதேவிக்கும் இந்த ரஹஸ்யம் தெரியாது; அதனால் வேதனையுறுகிறார். அதே சமயம் ஸ்ரீராம தரிசனத்திற்காக வேண்டி அவர் கண்கள் மிகவும் ஆவலுறுகின்றன. எப்படியாவது நாம் கண்ட ரஹஸ்யம் தெரிந்துவிடுமோ; என்ற பயமும் இருந்தது.

ராவண் மரண் மனுஜ் கர் ஜாசா |
ப்ரபு பிதிபசனு கீன்ஹ சஹ் ஸாசா || 549
ஜௌம் நஹிம் ஜாவும் ரஹ்யி பசிதாவா |
கரத் பிசாரு ந பனத் பனாவா || 550

ராவணனுடைய மரணமோ மனுஷ்யனின் கைகளில்தான் என்று எழுதியிருக்கிறது. அப்படி ப்ரம்மாவிடம் வரம் பெற்றான். அதனால்தான் ப்ரபுவான ஸ்ரீராமன் ப்ரம்மாவின் வார்த்தையை ஸத்தியமாக்கக் கிளம்பினார். (அதாவது, ப்ரம்மாவினால் எழுதப்பட்ட அரக்கனின் தலை எழுத்தை நிஜமாக்கவே அவதாரமெடுத்தார் மானிடராக.) இவர் இம்மாதிரி அவதாரமெடுத்து ராவண வதை செய்யாது போனால், இம்மாதிரி முடிவே ஏற்பட்டிருக்காது. எல்லோருக்கும், மக்களுக்கும் துயரமேற்படும். பின்பு அழுது பயனில்லாமல் போகும். ஆகவே, தான் இந்த ஸ்ரீராமாவதாரம் உண்டானது.)

நான் அவரருகில் செல்லமாட்டேன். சென்றால் பச்சாத்தாபம் வந்துவிடும் என்று தனக்குள் சிந்திக்கலானார் சிவபெருமான். ஆனால், அவருக்கு வேறு ஒரு யுக்தியும் தோன்றவில்லை.

ஏஹி பிதிபயே ஸோச்பஸ் ஈஸா |
தேஹி ஸமய் ஜாயி தஸ்ஸீஸா || 551
லீன்ஹ நீச மாரீச்ஹி ஸங்கா |
பயஉ துரத் ஸோயி கபட குரங்கா || 552

இம்மாதிரி சிவன் நினைத்துக் கொண்டு இருந்த

மாத்திரத்தில்; நீசன் ராவணன், நீசனான மாரீசனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்தான். உடனே அந்த மாரீசன் கபடமானாக மாறிடவேண்டிக் கேட்டுக் கொண்டான்; மாரீசனும் மானானான்.

கரி சலு மூட ஹரீ பைதேஹீ |
ப்ரபு ப்ரபாஉ தஸ் பிதித் ந தேஹீ || 553
ம்ருக பதி பந்து ஸ்ஹித் ஹரி ஆயே |
ஆச்ரமு தேகி நயன ஜல் சாஏ || 554

ராவணனான இந்த அரக்கர் குல அரசன் கபடமாக ஏமாற்றி வைதேஹியை அபஹரித்தான். ஸ்ரீராமச்சந்த்ரனுடைய உண்மையான மஹிமை என்னவென்பதை அவன் அறிந்தானில்லை. மானான மாரீசனைக் கொன்று, ஸ்ரீராமன் ஸஹோதரன் லட்சுமணன் ஸஹிதமாக மீண்டும் பர்ணகுடிசை வந்தபொழுது, ஆச்ரமம் காலியாக இருந்ததைக் கண்டு, ஆச்ரமத்தில் ஜானகி இல்லாததால் துக்கமடைந்து சோர்ந்தார். அவர் கண்களில் கண்ணீர் பெருகியது.

பிரஹ் பிகல் நர் இவ ரகுராயீ |
கோஜத் பிபின் பிரத் தோஉ பாயீ || 555
கப்ஹூம் ஜோக் பியோக் ந ஜாகேம் |
தேகா ப்ரகட் பிரஹ் துகு தாகேம் || 556

ஜானகியின் பிரிவாற்றாமையால் மனுஷ்யனைப் போல் கலக்கமடைந்தார். பிரபு ஸ்ரீராமச்சந்த்ரன் தம்பியுடன் கூட வனத்தில் ஸீதா தேவியைத் தேடி அலைகிறார். இந்தப் பிரிவாற்றாமை வேதனையானது எல்லாம் அறிந்த ப்ரபுவின் ஒரு லீலைதான். அதாவது; ஸர்வேச்வரனான பெருமானுக்கு ஸுகம், துக்கம், பிரிவு-சேர்க்கை எல்லாமே மாயை போல்தான். ஆனாலும், அவரது விரஹ வேதனை நேரடியாகவே காணப்பட்டது.

அதி பிசித்ர ரகுபதி சரித்
ஜான்ஹிம் பரம ஸுஜான் |
ஜே மதிமந்த பிமோஹ் பஸ்
ஹ்ருதயம் தர்ஹிம் கசு ஆன் || 557

நீ ஸ்ரீராமச்சந்த்ரனின் கதை மிகவும் விசித்ரமானது.

இந்தக் கதையைப் பற்றிய வைபவம் தன்னைப் புத்தி சாலிகள் மட்டுமே அறிவார்; அறியக்கூடும். அறிவு குறைந்தவர் -விசேஷமாக மோஹ வலையில் சிக்கி மனத்தில் வேறு ஓர் எண்ணத்தை எண்ணி அமர்ந் திருப்பர்.

(1. அனேக விதமான தபஸ்வி வேஷங்களில் அவரின் சாந்த ரஸம் சிரேஷ்டமாக, வெண்மையாக விளங்கு கிறது.
2. தனுஸைக் கையில் எடுத்து, அம்பைத் தொடுத்தா ரானால்; வீரரஸமான சிகப்பு வர்ணம் தென்படு கிறது.
3. பிரியதமாவுடன் கூடி இருக்கும் காலத்தில் ச்ருங்கார ரஸமான நீல வர்ணம் தென்படுகிறது.
4. மாரீச வதத்தின்போது கோபத்தினால் எங்கும் கருமை நிறம் தென்படுகிறது. அவரது ரௌத்ர ரஸம் அதில் காணப்படுகிறது.
5. ஜானகியின் வியோகத்தால் துயருறும்பொழுது கருணரஸமான மஞ்சள் வர்ணம் தென்படுகிறது.
6. விரஹத்தினால் வெறுப்படைந்து உயிர்த்யாகம் செய்ய நினைப்பது பீபத்ஸம் ரஸமாக, தாமிர வர்ணமா கிறது.

இம்மாதிரி ஸ்ரீராமனின் பலவித இயற்கைக் குணங் களை ஒவ்வொரு ரஸத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்க அறிஞர்களானவராலும், சிவனாலும்தான் முடியும்.

எவருக்கு இந்த அருமைக் குணங்களையும், சரித் திரங்களையும் அறியச் சக்தி இல்லையோ; அவர்கள் அஜ்ஞானிகள். இதயத்தில் ஒன்று நினைப்பார்கள்; வெளியே ஒன்று பேசுவார்கள். இவர்கள் மூடர்கள்.)

ஸம்பு ஸமய தேஹி ராம்ஹி தேகா |
உபஜா ஹியம்அதி ஹர்ஷு பிஸேஷா || 558
பரிலோசன் சவி ஸிந்து நிஹாரீ |
குஸமய் ஜானி ந கீன்ஹி சின்ஹாரீ || 559

சிவபிரான் இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீராமனைப் பார்த்தார் அவரது ஹிருதயத்தில் மிகுந்த மகிழ்வுச் சுமை ஏற்பட்டது, அந்தக் காந்திக் கடலினை, ஸ்ரீராம

னைச் சிவன் கண்ணாரக் கண்டார். ஆனால்; இது தகுந்த சமயம் இல்லை என்றுணர்ந்து பரிசயம் செய்து கொள்ளவில்லை. (சிவனுக்கு ஸ்ரீராமனின் இந்த நிலை பெருங் கவலையை உண்டாக்கியது. ஸ்ரீராமனுடைய கண்களில் கடல் போல் கண்ணீர் பெருகியதைக் கண்ட் சிவன் இதில் ஏதோ விபத்து நடக்கப் போகிறது என் பதைத் தீர்மானித்தார். ஸதி தேவியும் இதைக் கண்டு ஆடிவிட்டார். கரன், தூஷன், த்ரிசிரா முதலிய அரக் கர் கூட்டம் அழியும் நேரம் வந்துவிட்டது. ஸ்ரீராமனுக் குச் சமாதானம் கூறி நாம் சென்றால்; அந்த அரக் கர்கள் மறைந்து ஓடிவிடுவார்கள். அவர்கள் இப்போது ஸ்ரீராமன் கையால் அழிவார்கள் என்று சிவனார் பார்வதிக்குச் சமாதானம் கூறினார். அதாவது; ஸ்ரீராம னுக்குக் கோபம் வரத்தான் வேண்டும். அரக்கர் குலம் அழியத்தான் வேண்டும் என்கிறார்.)

ஜய் சச்சிதானந்த ஜக் பாவன் |
அஸ் கஹி சலேஉ மனோஜ் நஸாவன் || 560
சலே ஜாத் சிவ ஸதீ ஸமேதா |
புனி புனி புலகத் க்ருபாநிகேதா || 561

ஸச்சிதானந்தனான, உலகைப்பவித்ரமாக்கும் ஹே ப்ரபு! உனக்கு ஜயமுண்டாகட்டும். (ஸத்யத்தையும், ஆனந்தத்தையும், ரூபத்தையும் கொடுக்கவல்ல ஜகத் ரட்சகனான தாங்கள் இந்தச் சரித்ரத்தை உலகத்தைக் காக்கும் பொருட்டுச் செய்கிறீர்கள் என்பதை நாம் அறிவோம்) என்று கூறியவாறு காமனை அழித்த சிவ னார் மனைவியுடன் தன்னிருப்பிடம் ஏகினார். கரு ணைக் கடலான சிவபிரான் திரும்பத்திரும்ப ஸந்தோ ஷத்தினால் புளகாங்கிதம் அடைந்து செல்லலானார்.

ஸதீம் ஸோ தஸா சம்பு கை தேகீ |
உர் உபஜா ஸந்தேஹூ பிஸேஷீ || 562
சங்கரு ஜகத்பந்த்ய ஜகதீஸா |
ஸுர் நர முனி ஸப் நாவத் ஸீஸா || 563

சிவனாருடைய இந்தப்போக்குகளையும், விவரங் களையும் கண்ட ஸதி தேவிக்கு ஏற்கெனவே ஸந்தே ஹம் ஏற்பட்டது. அவர் மனதுக்குள்ளேயே ஏதேதோ சொல்லிக்கொண்டார். சிவன் பின்னும் புளகாங்கிதம்

அடைந்து மெய்ம்மறந்த நிலையில் இருப்பதைக் கண்ட ஸதி தேவி தேவர், மனிதர், முனிவர் மற்றும் உலகமே தலை வணங்கும் தாங்கள், ஈச்வரனான தாங்கள்! யாரைக் கண்டு தலை வணங்குகிறீர்கள்? என்றாள்.

தின்ஹ ந்ருபஸுத்ஹி கீன்ஹ பர்நாமா |
கஹிஸச்சிதானந்த பர்தாமா || 564
பயே மக்ன சபி தாஸு பிலோகீ |
அஜ்ஹும் ப்ரீதி உர் ரஹ்தி ந ரோகீ || 565

எல்லாம் அறிந்த ஜ்ஞானியான சம்பு தசரத புத்ரரான ராஜ புத்ரரைக் கண்டு, ஸச்சிதானந்த பரந்தாமனே! என்று சொல்லி, மனம் குளிர்ந்து, அந்தப் புத்திரரை நமஸ்காரம் செய்கிறார். அது மட்டுமல்ல; அவரது ஸுந்தர ரூபலாவண்யத்தைக் கண்டு மயங்குகிறார் அவர் ஹிருதயத்தில் எழும் அன்பைத் தடை செய்ய முடியாமல் தவிக்கிறார். (ஏனெனில்; ஹரியும் - சிவனும் ஒன்றல்லவா) இதுவரை அவருடைய ஹிருதயத்தில் பிரியத்தை அடக்கப் பார்த்தும் அது அடங்கின பாடில்லை.

ப்ரம்ஹ ஜோ ப்யாபக் பிரஜ்
அஜ் அகல் அநீஹ் அபேத் |
ஸோ கி தேஹ் தரி ஹோயி நர்
ஜாஹி ந ஜானத் பேத் || 566

ப்ரம்மம் என்பது ப்ரம்மாண்டத்தில் எல்லா இடத்திலும் வ்யாபித்து இருக்கிறது. அது உலகில் ரோகமில்லாமலும், மாயை இல்லாமலும், பிறப்பு இல்லாமலும், புலன்களுக்கு இலக்காகாமலும், ஆசையற்றும், வேறுபாடு இல்லாமலும் இருக்கும். அந்தப்ரம்மம் உடலைத் தாங்கி மனிதனாக ஆக முடியுமா என்பதைப் பற்றித் தங்களால் அறிந்திட முடியுமா? முடியாது!

பிஷ்ணு ஜோ ஸுர் ஹித் நர்தனு தாரீ |
ஸோவு ஸர்பக்ய ஜதா த்ரிபுராரீ || 567
கோஜயி ஸோ கி அக்ய இவ நாரீ |
க்யான்தாம ஸ்ரீபதி அஸுராரீ || 568

விஷ்ணுவானவர் தேவர்களின் துயர் தீர்க்க, நன்

மைக்காக மனுஷ்யரூபம் கொண்டு இருக்கிறார். என் கணவர் திருபுராரி போல் அவரும் ஸர்வஜ்ஞர், ஜ்ஞா னக் களஞ்சியம், லட்சுமி நாயகன், எல்லாம் அறிந்த வர், அஸுரர்களின் சத்ரு அவர் அஜ்ஞானிபோல் மனைவியைவிட்டுப் பிரிந்து வருந்தி அவளைத் தேடித் திரிகிறார். ஏன்? அந்த லக்ஷ்மீ பதியானவர் ராட்சதர் களை ஒழிக்க வந்தவராயிற்றே!

சம்புகிரா புனி ம்ருஷா ந ஹோயீ |
சிவ ஸர்பக்ய ஜான் ஸபு கோயீ || 569
அஸ் ஸம்சய மன் பயஉ அபாரா |
ஹோயி ந ஹ்ருதயம் ப்ரபோத் ப்ரசாரா || 570

சிவனுடைய வார்த்தையோ பொய்யாகாது. எல் லாம் தெரிந்தவர்; எல்லாம் அறிந்தவர் என்று உலகம் அறியும். அப்படி இருக்க அவர் மனத்தில் ஏன் இப்படி ஒரு ஸந்தேஹம் எழுந்தது? அதாவது; ஸ்ரீராமனுடைய அவதாரத்தில் ஏதேனும் ஸந்தேஹம் உள்ளதா? சம்பு குழம்புகிறாரே. மனத்தில் ஸந்தேஹம் உற்பத்தியா னால் ஹிருதயத்தில் ஜ்ஞானம் மறைந்து போகுமே.

ஜத்யபி ப்ரகட் ந கஹேஉ பவானீ |
ஹர் அந்தர்ஜாமீ ஸப் ஜானீ || 571
ஸுனஹி ஸதீ தவ நாரி ஸுபாவூ |
ஸம்ஸய் அஸ ந தரிஅ உர் காவூ || 572

எப்படியும் இந்த வார்த்தைகளை, மனச்சுமையைப் பார்வதி சிவனிடம் வெளியிடவில்லை. ஆயினும்; அந் தர்யாமியான சிவன் பார்வதியின் உள் நோக்கம் அறிந்து கொண்டார். பிறகு அவர் ''கேள், ஸதி! உன் ஸ்த்ரீ ஜன்மத்தின் ஸந்தேஹம் இது, ஸ்வபாவம் இது. மனத்தில் இம்மாதிரி இனி ஸந்தேஹம் வைக்காதே; குழப்பாதே!

ஜாஸு கதா கும்பஜ ரிஷி காயீ |
பக்தி ஜாஸு மைம் முனிஹி ஸுனாயீ || 573
ஸோயி மம இஷ்டதேவ் ரகுவீரா |
ஸேவத் ஜாஹி ஸதா முனி தீரா || 574

எவர் கதையைக் குடமுனியான அகஸ்தியர் கூறி

னாரோ; எவருடைய பக்தியைப் பற்றி நான் அவரிடமும், மற்றவரிடமும் கூறினேனோ; அந்த என்னுடைய பரமபூஜ்ய இஷ்ட தேவன், என் மஹாராஜன் ஸ்ரீராமச்சந்த்ரன்தான். அவர் என் பக்திக்கு உகந்தவர்; எவரை ஸதா முனிவர்களும், தேவர்களும் வணங்கிச் சேவை செய்கிறார்களோ; அவர்தான் இந்த ஸ்ரீராமச் சந்த்ரமூர்த்தி; வேறு யாரும் இல்லை.

முனி தீர ஜோகீ ஸித்த ஸந்தத் பிமல
மன் ஜேஹி த்யாவ்ஹீம் |
கஹி நேதி நிகம புராண் ஆகம
ஜாஸு கீர்தி காவ்ஹீம் || 575
ஸோயி ராமு ப்யாபக் ப்ரஹ்ம புவன
நிகாய் பதி மாயா தனீ |
அவதரேஉ அப்னே பக்த ஹித் நிஜதந்த்ர
நித ரகுகுலமனீ ||576

ஞானிகளும், முனிகளும், ஸித்தர்களும், யோகிகளும், வெள்ளை மனத்துடன் நிரந்தரமாக யாரைத் த்யானம் செய்கிறார்களோ;' இல்லை இல்லை 'என்றே கூறியபடி பின்னும் வேத சாஸ்த்ரங்கள் எல்லாமே எவர் புகழைப் பாடுகின்றனவோ; அதே ஸ்ரீராமன் தான் இவர்! எங்கும் எல்லா இடத்திலும் பரவி இருப்பவர் இவரே! ப்ரம்மாண்டங்களுக்கெல்லாம் தலைவன்! மாயா பதியாக இருக்கிறார். சுதந்த்ரமான புருஷர்; ப்ரம்ம ரூபன். மாயையின் காரணமாக உலக நன்மைக்காக வேண்டி அவதாரம் எடுத்திருக்கிறார். தனது பக்தர்களுக்காக உலகில் அவதாரம் எடுத்த இவர் தான் ரகுகுல சூடாமணியான ஸ்ரீராமர்.

லாக் ந உர் உபதேஸு ஜதபி
கஹேஉ சிவம் பார் பஹு |
போலே பிஹஸி மஹேசு ஹரி
மாயா பலு ஜானி ஜியம் || 577

ஸதியின் மனத்தில் எந்த விதமான உபதேசங்களும் நிலைபெற்று இருக்கவில்லை. இருந்தும் சிவனானவர் பலமுறை உபதேசம் செய்திருக்கிறார். பின்னும் பகவானுடைய மாயாசக்தியைத் தனக்குள் அறிந்தவரும், பகவானின் மாயாரூபத்தின் மஹிமையையும் அறிந்த

வருமான சிவன் சிரித்துக் கொண்டே கூறலானார்.

ஜௌம் தும்ஹரேம் மன்அதி ஸந்தேஹூ |
தௌ கின் ஜாயி பரீசா லேஹூ || 578
தப் லகி பைட் அஹஉம் பட்சாஹீம் |
ஜப் லகி தும்ஹ ஐஹஹு மோஹி பாஹீம் ||579

அதாவது, என்னவேனும் உன் மனத்தில் ஸந்தே ஹம் இருக்குமானால்; அதைப் பரீட்சை செய்து பார். நீ திரும்பி வரும்வரை நான் இந்த ஆலமரத்தடி நிழ லிலேயே உனக்காக உட்கார்ந்து காத்திருக்கிறேன். (நீ எப்போது வர நினைக்கிறாயோ; அப்போது வரலாம். அதாவது, ஸ்ரீராமனுடைய மாயரூபம் ஸத்யமா, அஸத் யமா என்று தெரிந்து வா. அதுவரை நான் இந்த நிழலிலேயே காத்திருக்கிறேன்)

ஜைஸேம் ஜாயி மோஹ் ப்ரம பாரீ |
கரேஹு ஸோ ஜதனு பிபேக் பிசாரீ || 580
சலீம் ஸதீ சிவ ஆயஸு பாயீ |
கர்ஹிம் பிசாரு கரௌம் கா பாயீ || 581

''உன்னுடைய மனப்ராந்தி போகவும், அஜ்ஞானம் அகலவும். போய் யத்தனம் செய். ஆனால், நிதான மாக யோசனை செய்து பரீட்சையில் இறங்கு, என் றதும்;

சிவனின் ஆஜ்ஞை பெற்று ஸதி சென்றாள். இங்கு வந்தவுடன் ஸஹோதரா! நான் என்ன செய்வேன்? எப்படிப் பரீட்சை செய்வேன்? என்று யோசிக்கலானுள்.

இஹாம் சம்பு அஸ மன் அனுமானா |
தச்சஸுதா கஹும் நஹிம் கல்யானா || 582
மோரேஹு கஹேம் ந ஸம்ஸய ஜாஹீம் |
பிதி பிபரீத பலாயீ நாஹீம் || 583

சிவன் மனத்தினுள் யோசிக்கலானார். தட்ச கன்

யையான, ஸதியான பார்வதி இப்படிச் செய்வது நல்லது இல்லை, கெடுதல்தான் வரும். நான் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவள் ஸந்தேஹம் தீரவில்லை. (அதாவது, பகவான் ஸ்ரீராமனைப் பரீட்சிக்கப் போகிறாள்) ப்ரம்மன் எழுத்தின்படிதான் எல்லாமே நடக்கும். விதியைத் தாண்டி ஒரு விலக்கும் கிடையாது. ஆகவே, ஸதி இவ்வாறு ஸ்ரீராமன் இருப்பிடம் போவது நல்லது இல்லை என்கிறார்.

ஹோயிஹி ஸோயி ஜோ ராம் ரசி ராகா |
கோ கரி தர்க படாவை சாகா || 584
அஸ்கஹி லகே ஜபன் ஹரி நாமா. |
கயீ ஸதீ ஜஹம் ப்ரபு ஸுக தாமா || 585

ஸ்ரீராமன் எதை எண்ணி, எதை நிச்சயித்து வைத்திருக்கிறாரோ; அதுதான் நடக்கும். இம்மாதிரி தனக்குள் எண்ணமிட்ட சிவனார், ஸ்ரீராம பகவான் நாமத்தை ஜபித்துக் கொண்டே ஏகினார்.

ஸதி தேவியானவள் ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தி துயரத்துடன் இருந்த இடம் நாடிச் சென்றார். (ஸுக ஸாகரமான ஸ்ரீராமனின் மன வேதனையை அறிந்த ஸதி, அவரைத் தெய்வமாகவே இங்கு கண்டாள். ஸீதா வியோகத்தில் துன்பமான தோற்றம்)

புனி புனி ஹ்ருதயம் பிசாரு கரி
தரி ஸீதா கர் ரூப் |
ஆகேம் ஹோயி சலி பந்த் தேஹிம்
ஜேஹிம் ஆவத். நரபூப் || 586

திரும்பத் திரும்ப க்லேசத்தினால் உந்தப்பட்ட ஸதி தேவியானவள் ஸீதையின் ரூபம் கொண்டு ஸ்ரீராமச் சந்த்ரன் வரும் வழியில், தன் எண்ணப்படி எதிரில் சென்று நடக்கலானாள். மனுஷ்யர்களின் ராஜாவான, தேவேச்வரரான ஸ்ரீராமன் எதிரில் வந்து கொண்டிருந்தார்.

லசிமண் தீக் உமாக்ருத வேஷா |
சகித பயே ப்ரம ஹ்ருதயம் பிஸேஷா || 587
கஹி ந ஸக்த கசு அதி கம்பீரா |
ப்ரபு ப்ரபாஉ ஜானத் மதிதீரா || 588

ஸ்ரீலட்சுமணன் ஸதியின் இந்த ரூபத்தைப் பார்த்துப் பயந்து விட்டார் அவருக்கு ப்ரமிப்பும், ஆச்சர்யமும் உண்டாயிற்று. (அவதாரத்தில் ஸீதையானவள் ராவண வதத்திற்குப் பின்னால்தான் கிடைப்பாள். ஆனால், இங்கு முன்னாலேயே எப்படி ஸீதை வந்தாள்?) மிகவும் ஆழ்ந்த அறிவும், திறனும் உள்ள லட்சுமணன் யோசிக்கலானார். பின்னர் ஸர்வஜ்ஞரான ஸ்ரீராமபிரான் இருக்க; நாம் ஏன் சிந்திக்க வேண்டும்? என்று நினைத்தவாறு சும்மா இருந்தார். ப்ரபுவே பார்த்து நியமிக்கட்டும். நான் ஏன் நடுவில் பேச வேண்டும் என்று லட்சுமணன் எண்ணினார்.

அவர் ஸ்ரீராமனின் ப்ரபாவத்தை அறிந்தவர்.

ஸதீ கபடு ஜானேவு ஸுரஸ்வாமீ |
ஸப்தர்ஸீ ஸப் அந்தர்ஜாமீ || 589
ஸுமிரத் ஜாஹி மிடஇ அக்யானா |
ஸோயி ஸர்பக்ய ராமு பக்வானா || 590

ஜீவராசிகளின் உயிரினுள் புகுந்து எல்லாமே அறிந்து கொள்ளும் சக்தி வாய்ந்த, தேவதைகளுக்கும் தெய்வமான ஸ்ரீராமச்சந்த்ரன்; ஸதிதேவியின் இந்தக் கபடமான நாடகத்தை அறிந்து கொண்டும் வாளாவிருந்தார். அந்தர்யாமியான அவரை நினைத்தமாத்திரத்திலேயே அஜ்ஞானம் அழிந்துவிடும். அவருக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. நம் ஹிருதயத்தில் அந்தரங்கத்தையும் அறியக்கூடிய பரமாத்மா அவர்.

ஸதீ கீன்ஹ சஹ தஹம்ஹும் துராஊ |
தேக்ஹு நாரி ஸுபாவ் ப்ரபாஊ || 591
நிஜ மாயா பலு ஹ்ருதயம் பகானீ |
போலே பிஹஸி ராமு ம்ருது பானீ || 592

பெண் தர்ம முறைப்படி தான் யாரென்பதை மிகவும் முயன்று மறைக்க விரும்பிய ஸதியை அறிந்து கொண்ட ப்ரபு ஸ்ரீராமனானவர் சிரித்துக் கொண்டே ம்ருதுவான குரலில் பேசினார்:-

ஜோரி பானி ப்ரபு கீன்ஹ ப்ரணாமூ |
பிதா ஸமேத் லீன்ஹ நிஜ நாமூ || 593

கஹேஉ பஹோரி கஹாம் ப்ருஷகேதூ |
பிபின் அகேலி பிர்ஹு கேஹி ஹேதூ || 594

ஸதியை அங்கு கண்டவுடன் ப்ரபுவான ஸ்ரீராமன் தன் தந்தையுடன் தனது பெயரில், குலத்தின் ப்ரதாபத்தைச் சொல்லிக் கை கூப்பி ப்ரணாமம் செய்து கேட்கலானார். தேவி! தாங்கள் இப்படி இந்த ஸ்தலத்திற்குத் தனியாக எதற்காக வந்தீர்கள்? சிவனார் எங்கு இருக்கிறார்? தர்மத்தின் கொடியான பதியைப் பிரிந்து இவ்வாறு தனியாகக் கானகத்தில் அலைவதின் மர்மம் என்ன? (பதிவிரதா ஸ்த்ரீகள் கணவனைப் பிரிந்து தனியாக வருவது தவறு என்பதைச் சுட்டுகிறார்).

ராம பசன் ம்ருது கூட் ஸுனி
உபஜா அதி ஸங்கோசு |
ஸதீ ஸபீத் மஹேஸ் பஹிம் சலீம்
ஹ்ருதயம் பட் ஸோசு || 595

ஸ்ரீராமனுடைய இந்த அழகான, ரகஸ்யம் நிறைந்த கேள்வியானது ஸதி தேவியை அயர்த்திவிட்டது; லஜ்ஜையினால் அவள் உடல் சிலிர்த்தது. (தான் யாரென்பதைப் பகவான் அறிந்துவிட்டார் என்ற வெட்கம்.) ஆகவே, பேசாமல் திரும்பிச் சிவனிடமே வந்து சேர்ந்தார். அவளது ஹிருதயத்தில் மிகுந்த கவலை உண்டாயிற்று.

மைம் சங்கர கர் கஹா ந மானா |
நிஜ அக்யானு ராம பர் ஆனா || 596
ஜாயி உதரு அப் தேஹஉம் காஹா |
உர் உபஜா அதி தாருண தாஹா || 597

''அதாவது; சங்கரனான நான் கூறியும் நீ கேட்கவில்லை. உன் அறியாமைத் தனத்தினால் ஸ்ரீராமனிடம் சென்றாய். அவரிடம் போய் என்ன கேட்பது? என்ன சொல்வது என்று தெரியாமல் தயங்குகிறாய் தேவி'' என்றார் சிவன். ஸதியின் உள்ளத்தில் மிகவும் பயங்கரமான பொறாமை உண்டாயிற்று.

ஜானா ராம ஸதீம் துகு பாவா |
நிஜ ப்ரபாஉ கசு ப்ரகடி ஜனாவா || 598

ஸதீம் தீக் கௌதுகு மக் ஜாதா |
ஆகேம் ராமு ஸஹித் ஸ்ரீ ப்ராதா || 599

அதாவது; தான் யார் என்பதை ஸதிக்கு நிரூபித்துக் காட்ட ஸ்ரீராமனானவர் எண்ணினார். ஸதி ரொம்ப துயரத்துடன் இருப்பதைக் கண்ட ராமன்; அவள் எதிரில் ஸீதா. லட்சுமண ராமனாகத் தோற்றமளித்தார். ஸதி வழியில் சென்று கொண்டிருக்கும்போது இம் மகிழ்ச்சி நிலையைப் பார்த்தார். அதாவது; ஸ்ரீராமன் ஸீதாலட்சுமணருடன் முன்னால் சென்று கொண்டிருந் தார். ஸதி ஸ்ரீராமனின் ஸச்சிதானந்த ரூபத்தைப் பார்த்தாள். அவரிடமிருந்து வருத்தக் குறி விலகியது; அவர் இயல்பாகவே இருந்தார்.

பிரி சித்வா பாசேம் ப்ரபு தேகா |
ஸஹித் பந்து ஸிய ஸுந்தர பேஷா || 600
ஜஹம் சிதவ்ஹிம் தஹம் ப்ரபு ஆஸீனா |
ஸேவஹிம் ஸித்த முநீஸ் ப்ரபீனா || 601

ஸதியானவர் பின்னால் நோக்கினார்; அங்கும் ஸ்ரீராமன்; லட்சுமணன், ஸீதையுடன் தோற்றமளித்தார் எங்கு எங்கு ஸதிதேவி தனது திருஷ்டியைச் செலுத்தினாரோ; அங்கெல்லாம் ஸ்ரீராமன் மயமாகவே இருந்தது. ப்ரபு அமர்ந்திருக்க, ருஷி முனிவர்கள், ஸித்தர்கள் ஸேவை செய்யும்படியான அனேகக் காட்சிகளைக் கண்டார்.

தேகே சிவ பிதி பிஷ்ணு அனேகா |
அமித ப்ரபாஉ ஏக் தேம் ஏகா || 602
பந்தத் சரண கர்த ப்ரபு ஸேவா |
பிபித பேஷ் தேகே ஸப் தேவா || 603

சிவன், விஷ்ணு ப்ரம்மா முதலிய மூன்று தேவர்களும் ஒருவரைவிட ஒருவர் அமிதமான ப்ரபாவமுள்ளவர்கள். அவர்கள் கீர்த்திக்கு எதிரே இல்லை. அதாவது; எல்லையில்லாத பெருமை படைத்தவர்கள். இப்படிப்பட்ட பல தேவதைகளும் வித விதமான ரூபங்களைத் தரித்துக் கொண்டு ப்ரபுவான ஸ்ரீராமச்சந்த்ரனின் சரணங்களை நமஸ்கரிக்கிறார்கள்; ஸேவை செய்கிறார்கள்.

ஸதீ பிதாத்ரீ இந்திரா
தேகீம் அமித் அனூப் |
ஜேஹிம் ஜேஹிம் பேஷ் அஜாதி ஸுர்
தேஹி தேஹி தன் அனுரூப் || 604

எண்ணற்ற, இணையற்ற ஸதியானவள் தன்னுள் வித்யாதரியான ஸரஸ்வதியையும், லக்ஷ்மியான இந்திராவையும் பார்த்தாள். எந்தெந்த வடிவத்தில் ப்ரம்மா முதலான தேவர்கள் இருந்தனரோ; அதேபோல், அதற்குத் தகுந்த வடிவத்தில் எல்லாச் சக்தி தேவியர் இருந்ததையும் பார்த்தாள்.

தேகே ஜஹம் தஹம் ரகுபதி ஜேதே |
சக்தின்ஹ ஸஹித் ஸகல ஸுர் தேதே || 605
ஜீவ சராசர் ஜோ ஸம்சாரா |
தேகே ஸகல் அனேக ப்ரகாரா || 606

அதாவது; ஜானகியுடன் ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியானவர் எங்கும் வியாபித்துக் காணப்பட்டதை யாவரும் கண்டனர். அதாவது; ஸுரர், அஸுரர், அமரர் யாவரும் தங்கள் தங்கள் சக்தியுடன் கூட ஸ்ரீராமனைத் தரிசித்தார்கள். உலகில் வாழும் ஸகல உயிர் ராசிகளும் இக்காட்சியைக்கண்டன; பார்வதியும் கண்டாள். (இப்படிப்பட்ட இறைவனைச் சோதிக்க வேண்டிய பார்வதி செய்த முயற்சி தோல்வியடைந்துவிட்டது. அண்ட சராசர பதியான ஸ்ரீராமன் நாராயணன்தான்; ஸ்ரீராமனாக அவதரித்து இருக்கிறார் என்பதைப் பார்வதி அறிந்து கொண்டாள்.)

பூஜஹிம் ப்ரபுஹி தேவ் பஹு பேஷா |
ராம ரூப் தூஸர் நஹிம் தேகா || 607
அவலோகே ரகுபதி பஹுதேரே |
ஸீதா ஸஹித் ந பேஷ் கனேரே || 608

தேவதைகள் பகவானைப் பலப்பல ரூபமாக வடிவங்களைத் தரித்து வந்து பார்த்தார்கள்; பூஜித்தார்கள். ஆனால், ஸ்ரீராமரின் மற்றொரு ரூபத்தை யாரும் பார்க்கவில்லை. அதாவது; ஜானகியுடன்கூடிய ஸ்ரீரகுபதியாகவே, எங்கும் நிறைந்திருக்கும் ஒரே வேஷம் கொண்ட ஸ்ரீராமனையே பார்த்தார்கள்.

ஸோயி ரகுபர ஸோயி லசிமனு ஸீதா |
தேகி ஸதீ அதி பயீம் ஸபீதா || 609
ஹ்ருதய கம்ப தன் சுதிகசு நாஹீம் |
நயன மூதி பைடீம் மக் மாஹீம் || 610

அதே ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியை ஸஹோதரன் லட்சுமணனுடனும், ஜானகி தேவியுடனும் ஒன்றாகக் கண்ட ஸதி பயந்துவிட்டாள். (துளஸீதாஸர் முதலில் ஸ்ரீராமனை ரூபவான் என்று கூறினார். பிறகு ஸீதாஸமேத ராமனைக் கூறினார். பின் லட்சுமண ஸமேத ராமனைக் கூறினார். அதாவது; மூன்று பாவங்களை (கருத்துகளை) இதில் கொண்டு வந்தார். அத்வைத, த்வைத, விசிஷ்டாத்வைதம் என்பவையே அவை.

இந்த மூன்று மதங்களையும் ஸ்ரீமத்ராமாயணத்தில் இடத்திற்குத் தக்கவாறு துளஸீ சேர்த்திருக்கிறார். தனியாக ஸ்ரீராமன் நித்யம், மாயா ஸீதா ஸமேத ஸ்ரீராமன் நித்யம், ஜீவனான லட்சுமணன் கூட நித்யம்.)

இப்படியாக மூன்றுவித குணங்களைக் கண்ட ஸதி தேவி உடல் நடுங்கினாள்; அவள் நினைவு இழந்தாள். கண்களை மூடிக்கொண்டு வழியிலேயே உட்கார்ந்து விட்டாள்.

பஹுரி பிலோகேஉ நயன உகாரீ |
கசு ந, தீக் தஹம் தச்சகுமாரீ || 611
புனி புனி நாயி ராம பத ஸீஸா |
சலீம் தஹாம் ஜஹம் ரஹே கிரீஸா || 612

இவ்விதம் நடந்தபின் தட்சகுமாரியான பார்வதி கண்விழித்துப் பார்த்தாள். ஆனால்; அவள் கண்டது எதுவுமே எதிரில் இல்லை. (ஸ்ரீராம லட்சுமணர் மட்டுமே தென்பட்டனர்.) திரும்பத் திரும்ப ஸதியானவள் ஸ்ரீராமனின் பாதங்களில் தலைகுனிந்து வணங்கி விட்டு, அங்கிருந்து கிரீசரான சிவனிடம் போய்ச் சேர்ந்தாள்.

கயீ ஸமீப் மஹேஸ் தப் ஹம்ஸி
பூசீ குஸ்லாத் |

லீன்ஹி பரீசா கவன பிதி கஹஹு
ஸத்ய ஸப் பாத் || **613**

எப்போது ஸதியானவள் சிவனிடம் சென்றாளோ, அப்போது; சிவனார் சிரித்துக் கொண்டே குசலப்ரச்னம் கேட்டார். ''தேவி! நீ ஸ்ரீராமனைப் பரீட்சிக்கச் சென்றாயல்லவா? அது எவ்வளவு தூரம் நடந்தது? என்ன மாதிரி நடந்தது? எல்லாம் நீ உண்மையாக என்னிடம் கூறுவாயாக,'' என்றார்.

ஸதீம் ஸமுஜி ரகுபீர் ப்ரபாஊ |
பய பஸ் சிவ ஸன கீன்ஹ துராஊ || **614**
கசு ந பரீசா லீன்ஹி கோஸாயீம் |
கீன்ஹ ப்ரனாமு தும்ஹாரிஹி நாயீம் || **615**

ஸதியானவள் ஸ்ரீராமனின் ப்ரபாவத்தை அறிந்தவள். ஆகவே, பயந்து கொண்டு சிவனிடம் மறைக்க ஆரம்பித்தாள். ஸ்வாமி! நான் அவரை ஒன்றும் பரீட்சிக்கவில்லையே! மேலும், தங்களைப் போல் நானும் போய் அவரை நமஸ்கரித்து வந்துவிட்டேன்'' என்றாள்.

ஜோ தும்ஹ கஹா ஸோ ம்ருஷா ந ஹோயீ |
மோரேம் மன் ப்ரதீதி அதி ஸோயீ || **616**
தப் சங்கர் தேகேஉ தரி த்யானா |
ஸதீம் ஜோ கீன்ஹ சரித் ஸபு ஜானா || **617**

''தேவி! நீ சொல்வதெல்லாம் பொய்யாக இருக்க முடியாது என்பதால், என் மனத்தில் பூரண நம்பிக்கை ஏற்படுகிறது என்று நான் எண்ணுகிறேன். அப்பொழுது சிவன் தனக்குள் த்யானம் செய்து பார்த்ததில்; பார்வதி நடந்துகொண்ட விதத்தை அறிந்து கொண்டார்.

பஹுரி ராமமாய்ஹி சிரு நாவா |
ப்ரேரி ஸதிஹி ஜேஹிம் ஜூண்ட் கஹாவா || **618**
ஹரி இச்சா பாவீ பல்வானா |
ஹ்ருதயம் பிசாரத் சம்பு ஸுஜானா || **619**

சிவன் மனத்தில் த்யானித்தபடி ஸ்ரீராமனின் மாயைக்கு, தலைவணங்கினார். பின் ஸ்ரீராமன்தான் ஸதியைத் தூண்டிவிட்டுப் பொய் சொல்லச் செய்தார். ஸ்ரீமந்

நாராயணனுடைய இந்த விருப்பப்படியான எதிர்காலம் வலுவுள்ளது. நன்மையே விளைக்கும். (ஆனாலும், அவர் அந்தர்யாமி. அவர் விருப்பம் எதுவோ; அதுபோல் நடக்கட்டும் என்று எண்ணிக்கொண்டார்.)

ஸதீம் கீன்ஹ ஸீதா கர் பேஷா |
சிவ உர் பயஉ பிஷாத் பிஸேஷா || 620
ஜௌம் அப்கர்உம் ஸதீ ஸன் ப்ரீதீ |
மிடயி பக்தி பது ஹோயி அநீதீ || 621

ஸதி தேவி ஸீதாவின் வேஷம் பூண்டு பொய் சொன்னாளே என்பதை எண்ணிச் சிவபெருமான் வருத்தம் கொண்டார். தன்னுடைடைய உபதேசத்தினால் ஸாமான்ய துக்கமுண்டாகாது. பிறகு நினைத்தார்; இப்படிப்பட்ட ஸ்த்ரீயை நான் எப்படி விரும்ப முடியும்? முன்போல் ஸதியிடம் நான் அன்பு செலுத்தினால் என் பக்தி மார்க்கம் தடைபடும். அநீதி உண்டாகும். ஆகவே; நான் என்ன செய்ய? என்று கலங்குகிறார்.

பரம புநீத் ந ஜாயி தஜி கியேம்
ப்ரேம் பட் பாபு |
ப்ரகடி ந கஹத் மஹேஸ் கசு ஹ்ருதயம்
அதிக் ஸந்தாபு || 622

ஸதி பரம பவித்ரமானவள். ஸதியிடம் சிவனுக்கு அதிகப் ப்ரேமை, பற்று. இந்த அன்பை அவரால் விடவும் முடியவில்லை. ஆனால், இத்தருணம் அன்பைக் காட்டினாலும் மகாபாவம். ஆகவே, சிவனாரினால் வெளிப்படையாக ஒன்றுமே கூறமுடியவில்லை. ஹிருதயத்தில் துன்பத்தைச் சுமந்துகொண்டு துயரத்துடன் தோன்றினார்.

தப் சங்கர் ப்ரபு பத் சிரு நாவா |
ஸுமிரத் ராமு ஹ்ருதயம் அஸ் ஆவா || 623
ஏஹிம் தன் ஸதிஹி பேட் மோஹி நாஹீம் |
சிவ ஸங்கல்பு கீன்ஹ மன் மாஹீம் || 624

இத்தருணம் சிவன் மனக்லேசத்துடன் ஸ்ரீராமச் சந்த்ரனின் பாத கமலங்களில் நினைவு வைத்துத் தலை வணங்கினார். உடனே அவர் மனத்தில் ஓர் எண்ணம்

உதயமானது. அதாவது; ஸதியானவள் இந்த ரூபத்துடன் என்னிடம் வந்து சேரக்கூடாது. வேறு குலம் எடுத்தாலே அன்றி நான் அவளின் இந்த ஸ்வரூபத்தை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று மனத்தில் ஸங்கல்பம் செய்து கொள்கிறார். (அதாவது; கணவன்-மனைவி என்ற முறையில் அவளைச் சந்திக்க முடியாது என்பதுவேயாகும்.)

அஸ் பிசாரி சங்கரு மதிதீரா |
சலே பவன் ஸுமிரத் ரகுபீரா || 625
சலத் ககன் பை கிரா ஸுஹாயீ |
ஜய மஹேச் பலி பக்தி த்ருடாயீ || 626

நிலையான புத்தியுள்ள சங்கரன் இம்மாதிரி மனத்தில் ஆலோசித்து நான் செய்வது நிச்சயமானது. என் காரியம் என்றும் தடைபெறாது என்று ஸ்ரீராமனை நினைத்துக் கொண்டே தன் இருப்பிடம் கைலாஸம் சென்றார். அப்போது ஆகாயத்தில் இருந்து ''ஹே மஹேசனே! உமக்கு ஜயம் உண்டாகட்டும். நீர் நல்ல காரியம் செய்தீர். உமது பக்தி நிரூபணமாயிற்று; நல்ல உறுதியானது,'' என்பதாக ஒர் அழகிய அசரீரி எழுந்தது.

அஸ் பன தும்ஹ பினு கர்யி கோ ஆனா |
ராமபக்த ஸமர்த் பக்வானா || 627
ஸுனி நப்கிரா ஸதீ உர் ஸோசா |
பூசா சிவ் ஹி ஸமேத் ஸகோசா || 628

''இம்மாதிரியான சபதம் உம்மைத் தவிர வேறு யாரால் செய்ய முடியும்? நீர் ஸ்ரீராமனின் பக்தர்; திறமைசாலி; நீர்தான் பகவான். இம்மாதிரி; ஆகாசவாணியைக் கேட்ட ஸதியின் உள்ளத்தில் கவலை உண்டாயிற்று. அதனால் அவள் சிவனிடம் வெட்கத்துடன் கேட்கிறாள்.

கீன்ஹ கவன் பன் கஹு க்ருபாலா |
ஸத்யதாம் ப்ரபு தீனதயாளா || 629
ஜதபி ஸதீம் பூசா பஹு பாந்தீ |
ததபி ந கஹேஉ த்ரிபுர் ஆராதீ || 630

ஹே தயாஸாகர! எம்மாதிரியான சபதம் தாங்கள் செய்தீர்கள்? நீங்கள் ஸத்தியத்தின் இருப்பிடம். தீனர்களுக்கு இரங்குபவர். அப்படியிருக்க என்னிடம் கூறலாமே! இம்மாதிரி பார்வதி தேவி பலமுறை கேட்டும்; த்ரிபுரம் எரித்த சிவனார் தனது அந்தரங்க சபதத்தை ஸதியிடம் கூற மறுத்துவிட்டார்.

ஸதீம் ஹ்ருதயம் அனுமான் கிய
ஸபு ஜானேவு ஸர்பக்ய |
கீன்ஹ கபடு மைம் சம்பு ஸன்
நாரி ஸஹஜ் ஜட் அக்ய || 631

இத்தருணம் ஸதிதேவி மனத்தில், ''ஸாதாரணமாக ஸ்த்ரீ ஸ்வபாவத்தினால் நான் என்ன தோஷம் செய்தேனோ; அதைப் பகவான் சிவன் நன்கு அறிந்துவிட்டார். நான் சிவனாரிடம் கபடமாக நடந்து கொண்டுவிட்டேன். அவர் ஸர்வஜ்ஞர், அந்தர்யாமி, அப்படியிருக்க நான் ஸ்ரீராமனைப் பரீட்சிக்கச் சென்றது தவறுதான் என்பதை உணர்கிறேன். என் பெண் புத்தியினால் சிவன் வருத்தமடைந்தார்.

ஜலு பய ஸரிஸ் பிகாயி தேக்ஹு
ப்ரீதி கி ரீதி பலி |
பிலக் ஹோயி ரஸு ஜாயி கபட்
கடாயீ பரத் புனி || 632

அதாவது; நீரும் - பாலுடன் சேர்ந்து ஒரே மாதிரியான தன்மை கொண்டதாக ஆகிறது; விற்பனை ஆகிறது. இந்தப் ப்ரீதியின் ரீதியும் - (கொள்கையும்) அப்படித்தான் அற்புதமானது. தண்ணீரும்-பாலும் சேர்ந்து இருந்தாலும்; கொஞ்சம் புளிப்புப் பட்டதும் பாலானது கெட்டுப் போய் இன்சுவை (ரஸம்) அதிலிருந்து தனியாகி விடுகிறது. அதேபோல், நாங்கள் இருவரும் பாலும், நீரும்போல் ஒன்று சேர்ந்து இருக்கும்போது புளிப்பு என்னும் ஒரு கபட பாவம் என் மனத்தில் தோன்றிப் பாலைத் தனியாக்கிவிட்டது. அதாவது, ஈச்வரனை விட்டு என்னை அகற்றிவிட்டது.

ஹ்ருதயம் ஸோசு ஸமுஜத் நிஜ கர்னீ |
சிந்தா அமித ஜாயி நஹிம் பர்னீ || 633

க்ருபாஸிந்து சிவ பரம அகாதா |
ப்ரகட் ந கஹேஉ மோர் அபராதா || 634

தான் செய்த பாவ காரியத்தைப் பற்றி மனத்தில் எண்ணி ஸதி துக்கித்தாள். கொஞ்சமும் வெளியில் கூறவில்லை, அவ்வளவு கவலை இருந்தது; அதை வர்ணிக்கவே முடியாது. ஏனெனில், என் ஸ்வாமியான சிவன் கருணையின் கம்பீரமான ஆழ்ந்த கடலைப் போன்றவர், சிந்தனையாளர். இதை வெளிப்படுத்தியதில் என்னிடம் குற்றம் கூறாதவர்.

சங்கர ருக் அவலோகி பவானீ |
ப்ரபு மோஹி தஜேஉ ஹ்ருதயம் அகுலானீ || 635
நிஜ அக் ஸமுஜி ந கசு கஹி ஜாயீ |
தபயி அவாம் இவ உர் அதிகாயீ || 636

சிவனாரின் செய்கைகளிலிருந்தும், அவரது போக்கிலிருந்தும் அவரது நோக்கத்தை ஸதிதேவி தெரிந்து கொண்டாள். அதாவது;''சிவன் என்னைக் கட்டாயம் பிரித்துவிடப் போகிறார், அவர் என்னை த்யாகம் செய்துவிட்டார்'' என எண்ணும்போது அவள் ஹிருதயத்தில் மிகவும் வ்யாகுலமடைந்தாள். ஸதி தனது பாப காரியத்தைத் தானே உணர்ந்தாள். ஆகவே, மௌனமாக இருந்தாள். அவள் மனம் குயவன் சூளையில் வேகும் நெருப்பைப் போல் உள்ளுக்குள்ளேயே கொழுந்துவிட்டு எரிந்தது. ஒன்றும் கூறவும் முடியவில்லை.

ஸதிஹி ஸஸோச ஜானி ப்ருஷகேதூ |
கஹீம் கதா ஸுந்தர ஸுக ஹேதூ || 637
பர்னத் பந்த பிபித் இதிஹாஸா |
பிஸ்வநாத் பஹுஞ்சே கைலாஸா || 638

துக்கமடைந்திருக்கும், வ்யாகுலமுற்றிருக்கும் ஸதிக்கு ஸந்தோஷமளிக்க நினைத்தார் வ்ருஷகேது. (சிவன்) ஆகவே, அவளுக்கு ஸுகம் தர எண்ணி வழியெல்லாம் அழகழகான கதைகளைக் கூறிக்கொண்டே, இதிஹாஸ சரித்ரங்களைக் கூறிக்கொண்டே விச்வநாதரான சிவன் கைலாஸம் சென்றடைந்தார்.

தஹம் புனி சம்பு ஸமுஜி பன் ஆபன் |
பைடே பட தர் கரி கமலாஸன் || 639
சங்கர் ஸஹஜ ஸரூபு ஸம்ஹாரா |
லாகி ஸமாதி அகண்ட அபாரா || 640

கைலாஸம் சென்றதும் சிவன் தனது பழைய பிரதிஜ்ஞையை நினைவுபடுத்திக் கொண்டு, ஓர் ஆலமரத்தடியில் பத்மாஸனம் போட்டு உட்கார்ந்து கொண்டார்.

தபஸிற்கு அவர் உட்கார்ந்ததும்; தன்னை மறந்து பழைய சம்புவானார். என்றுமே மீள முடியாத, மிகவும் நீண்ட ஸமாதியில் அவர் ஆஸனம் போட்டு அமர்ந்து கொண்டார். (இனி அவரை யாருமே எழுப்ப முடியாது.)

ஸதீ பஸ்ஹிம் கைலாஸ் தப் அதிக
ஸோசு மன் மாஹிம் |
மர்மு ந கோஊ ஜான் கசு ஜுக
ஸம திவஸ் ஸிராஹிம் || 641

ஸதியானவள் மிகவும் துக்கத்துடன் கைலாஸத்தில் வாழ ஆரம்பித்தாள். அவளது மனத்தில் பெரும் துயரச் சுமை. தான் செய்த காரியம் மிகவும் கெட்டது; யாருக்கும் தெரியாதது; பகவான் சிவன் மட்டுமே அறிவார்; யாவரும் அறிந்தாரில்லை; ஆகவே, ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்து வந்தாள்.

நித நவ ஸோசு ஸதீ உர் பாரா |
கப் ஜைஹஉம் துக் ஸாகர் பாரா || 642
மைம் ஜோ கீன்ஹ ரகுபதி அபமானா |
புனி பதிபசனு ம்ருஷா கரி ஜானா || 643

ஸதிதேவியின் மனத்தில் தினம் புதிது புதிதாகப் பெரிய பெரிய எண்ணங்கள் தோன்றின. இம்மாதிரியான துக்கஸாகரத்தை நான் என்று, எப்பொழுது தாண்டப் போகிறேன்? நான் ஒரு துர்ப்பாக்யவதி. முதலில் ஸ்ரீரகுநாதனை அவமானப்படுத்தினேன். இரண்டாவது என் பதி தேவரிடம் அஞ்சாமல் பொய்யைக் கூறினேன். (ஆகவே, எனக்கு இனி நல்லகாலம் ஏது? நாசகாலமே என் எதிரில் தாண்டவமாடுகிறது.)

ஸோ பலு மோஹி பிதாதாம் தீன்ஹா |
ஜோ கசு உசித் ரஹா ஸோயி கீன்ஹா || 644
அப் பிதி அஸபூஜிஅ நஹிம் தோஹீ |
சங்கர் பிமுக் ஜிஆவஸி மோஹீ || 645

நான் செய்த பாப கர்மாக்களுக்காக விதாதாவானவன் (ப்ரம்மா) எனக்குத்தகுந்தபடி எம்மாதிரி தண்டனை தர வேண்டுமோ; அதைக் கொடுத்துவிட்டான்.

பின்னும் ஹே விதாதா? சங்கரரிடமிருந்து பிரிந்து போன பின்னும் எனக்கு வாழ்வு வேண்டுமா? ஏன் என்னை இன்னும் உயிர் வாழ விடுகிறாய்?

கஹி ந ஜாயி கசு ஹ்ருதய க்லானீ |
மன் மஹூம் ராம்ஹி ஸுமிர ஸயானீ || 646
ஜௌம் ப்ரபு தீனதயாலு கஹாவா |
ஆர்தி ஹரன் பேத் ஜஸு காவா || 647

ஸதியினுடைய ஹிருதயத்தின் துக்கத்தையும் சொல்ல இயலாது. புத்திசாலியான ஸதியானவள் அறிவுடன் ஸ்ரீராமச்சந்த்ரனை ஸ்மரணை செய்து கூறினாள். ஹே ப்ரபு! தங்களை யாவரும் தீனதயாளு என்று அழைக் கிறார்கள். பின்னும் வேதமானது தாங்கள் ஸகல துக் கத்தையும் போக்கவல்லவர் என்று தங்களைப் பற்றிப் புகழ்ப் பறை சாற்றுகிறது.

தௌ மைம் பினய் கர்உம் கர் ஜோரீ |
சூடவு பேகி தேஹ் யஹ் மோரீ || 648
ஜௌம் மோரேம் சிவ சரன் ஸனேஹூ |
மன் க்ரம பசன் ஸத்ய ப்ரது ஏஹூ || 649

ஆகவே, ''ஹே ப்ரபு ஸ்ரீராமச்சந்த்ரா! நான் என் இரு கரங்களையும் கூப்பி வணங்கி, உங்களிடம் ப்ரார்த்தனை செய்கிறேன். என் இந்த உடலானது சீக் கிரம் அழியட்டும். நான் உண்மையில் சிவனாரின் ப்ரிய பத்தினியானால்; மனம், வசனம், செயலால் அவரையே, அவர் திருவடிகளையே நினைப்பது உண் மையானால்; என்னை, என் உடலைச் சீக்கிரம் அழித்து விடும்.

தௌ ஸப்தர்ஸீ ஸுனிஅ ப்ரபு கர்வு
ஸோ பேகி உபாயி |
ஹோயி மர்னு ஜேஹிம் பினஹிம் ச்ரம
துஸஹ் பிபத்தி பிஹாயி || 650
ஏஹி பிதி துகித் ப்ரஜேஸ்குமாரீ |
அகதநீய தாருண் துகு பாரீ || 651
பீதே ஸம்பத் ஸஹஸ் ஸதாஸீ |
தஜீ ஸமாதி சம்பு அபிநாசி || 652

எல்லாவற்றையும் பார்க்கும் ப்ரபுவே! கேளும்; பதியைப் பிரிந்த துயரம் விலக எனக்குச் சீக்கிரம் மரணம் நேரும் உபாயத்தைச் செய்யவேண்டும். தட்ச புத்ரியான ஸதியின் துக்கத்தைக் கூறிமுடியாது. எழு பத்தி ஏழு ஆயிரம் வருடங்கள் கழிந்த பின்பு அழிவற்ற சம்பு இப்போதுதான் கண்களைத் திறந்து ஸமாதியைக் கலைத்தார்.

ராம நாம சிவ ஸுமிரன் லாகே |
ஜானேவு ஸதீம் ஜகத்பதி ஜாகே || 653
ஜாயி சம்பு பத பந்தனு கீன்ஹா |
ஸன்முக சங்கர ஆஸனு தீன்ஹா || 654

சிவன் கண்களைத் திறந்தவாறு ராம நாமத்தை ஜபிக்க ஆரம்பித்தார். இதையறிந்த ஸதி, சிவனாரின் விழிப்புணர்ச்சியை அறிந்து சிவனின் சரணங்களில் விழுந்து வுணங்கினார். அப்போது சிவன் ஸதியைத் தன் எதிரில் அமரும்படிச் சொல்லி ஆஸனம் தந்து அருளினார்.

லகே கஹன் ஹரிகதா ரஸாலா |
தச்ச ப்ரஜேஸ் பயே தேஹி காலா || 655
தேகா பிதி பிசாரி ஸப் லாயக் |
தச்சஹி கீன்ஹ ப்ரஜாபதி நாயக் || 656

இங்கு சிவன் தனது பத்தினிக்கு ஸ்ரீராமனின் ரஸமான கதைகளையெல்லாம் ரம்யமாகக் கூறிக் கொண்டிருந்தார். இதே சமயம் தட்ச ப்ரஜாபதி தோன்றினார். இதுதான் நல்ல தருணம் என்று நினைத்த ப்ரம்மதேவன் தட்சனை ப்ரஜாபதிகளின் தலைவராக ஆக்கினார்.

பட் அதிகார் தச்ச ஜப் பாவா |
அதி அபிமானு ஹ்ருதயம் தப் ஆவா || 657
நஹிம் கோவு அஸ்ஜன்மா ஜக் மாஹீம் |
ப்ரபுதா பாயி ஜாஹி மத் நாஹீம் || 658

எப்போது தட்சனானவன் இத்தனை பெரிய அதி காரத்தைப் பெற்றானோ; அப்போதே அவன் ஹிரு தயத்தில் ஆணவமும் உண்டாயிற்று. அஹங்காரமும், ஆணவமும் கொண்ட அவன் மற்றவரை இழிவாக நினைக்கலானான். உலக வழக்கமே இப்படித்தான் என்கிறார். அதாவது; தலைமைப் பதவியை ஏற்றதும் மதம் உண்டாகாத மனிதன் பிறக்கவில்லை.

(அதாவது; இப்படிப்பட்ட பதவியும் செல்வாக்கும் பெற்ற மானிடன் எவனானாலும் சரி; தனது பதவி வந்தவுடன் அஹம்பாவம் கொள்வது இயற்கையே என் கிறார்.)

தச்ச லியே முனி போலி ஸப்
கர்ன லகே பட் ஜாக் |
நேவ்தே ஸாதர் ஸகல் ஸுர
ஜே பாவத் மக் பாக் || 659

தட்சனானவன் முனிவர்கள் எல்லோரையும் அழைத் துப் பெரிய யஜ்ஞம் செய்யத் தொடங்கினான். எல்லா தேவதைகளையும் அதாவது; தேவர்களையும் முறைப் படி மரியாதையுடன் யஜ்ஞத்திற்கு வர அழைப்பு அளித்தான்.

கின்னர நாக ஸித்த கந்தர்பா |
பதுன்ஹ ஸமேத் சலே ஸுர ஸர்பா || 660
விஷ்ணு பிரஞ்சி மஹேசு பிஹாயீ |
சலே ஸகல் ஸுர ஜான் பனாயீ || 661

தட்சனின் அழைப்பு கிடைத்தவுடன்; கின்னரர், நாகர், ஸித்தர், கந்தர்வர் மற்றும் எல்லோரும் தங்கள் தங்கள் பத்னியுடன் யஜ்ஞத்திற்குச் சென்றார்கள். ஆனால், விஷ்ணு, ப்ரம்மா, சிவன் மூவரும் மட்டும் வரவில்லை. அவர்களைத் தவிர மற்ற தேவர்கள் தங் கள் தங்கள் விமானத்தை அலங்கரித்துக் கொண்டு சென்றனர்.

ஸதீம் பிலோகே ப்யோம் பிமானா |
ஜாத சலே ஸுந்தர் பிதி நானா || 662
ஸுரஸுந்தரீ கர்ஹிம் கல் கானா |
ஸுனத் ஸ்ரவண் சூட்ஹிம் முனி த்யானா ||663

ஸதியானவள் நோக்கினாள். ஆகாயத்தில் பற்பல விதமான அழகிய விமானங்கள் சென்று கொண்டிருந்தன. தேவ ஸுந்தரிகள் விதவிதமான ராகங்களில் இனிமையாகப் பாடிக் கொண்டே போகிறார்கள். அதைக் கேட்டு முனிவர்களின் த்யானமும் கலைகிறது. (யாவரும் தட்சனின் யஜ்ஞத்தில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தார்கள்.)

பூசேவு தப் சிவம் கஹேஉ பகானீ |
பிதா ஜக்ய ஸுனி கசு ஹர்ஷானீ || 664
ஜௌம் மஹேஸு மோஹி ஆயஸு தேஹீம் |
கசு தின் ஜாயி ரஹௌம் மிஸ் ஏஹீம் || 665

ஸதியானவள் சிவனாரிடம் தேவர்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக எங்கு போகிறார்கள் எனக் கேட்டாள். அப்போது சிவனார் விஷயங்களை விவரமாகக் கூறினார். தனது தந்தை யாகம் செய்யும் விவரத்தைக் கேட்டு ஸதி ஸந்தோஷமடைந்தாள். பின்னும் சிறிது காலம் தானும் சிவனாரிடம் ஆஜ்ஞை பெற்றுத் தகப்பனார் வீடு சென்று வரலாம் என்று ஸதி தனக்குள் நினைத்தாள்.

பதி பரித்யாக் ஹ்ருதயம் துகு பாரீ |
கஹயி ந நிஜ அபராத் பிசாரீ || 666
போலீ ஸதீ மனோஹர பானீ |
பய ஸங்கோச் ப்ரேம ரஸ் ஸானீ || 667

கணவன் தன்னை விட்டுக் கோபத்தினால் மறுபடியும் பிரிந்து விடுவாரோ; என்று ரொம்பவும் பயந்தாள் ஸதி. ஆயினும், தானாகவே கேட்டால் குற்றம் ஏற்படும் என்று பயந்து சும்மா இருந்தாள், கடைசியாக ஸதியின் பயமும், ஸங்கோஜமும் ப்ரேமை ரஸத்தில் கலந்துவிட்டன. எனவே அந்தப் ப்ரேம பாசத்தால் உந்தப்பட்டு மெதுவாகச் சிவனிடம் தன் மனோ நிலையைக் கூற ஆரம்பித்தாள்.

பிதா பவன் உத்ஸவ் பரம ஜௌம்
ப்ரபு ஆயஸு ஹோயி |
தௌ மைம் ஜாவும் க்ருபாயதன்
ஸாதர் தேகன் ஸோயி || 668

ஹே ப்ரபுவே! என் தகப்பனார் வீட்டில் பெரிய தொரு (உத்ஸவம்) விழா நடக்கிறது. தாங்கள் தயவு கூர்ந்து விடை கொடுத்தால்; ஹே க்ருபா நிதியே! நான் அவ்விழாவைக்காண மரியாதையுடன் போய் வருவேன்.

கஹேஹு நீக் மோரேஹும் மன் பாவா |
யஹ் அனுசித் நஹிம் நேவத் படாவா || 669
தச்சஸகல் நிஜ ஸுதா போலாயீம் |
ஹம்ரேம் பயர் தும்ஹஉ பிஸ்ராயீம் || 670

நீ நன்று கூறினாய், என் மனமும் ஸந்தோஷமடைந்தது. ஆனால், அவன் (உன் தகப்பன்) நமக்கு அழைப்பிதழ் அனுப்பவில்லை. இச்செய்கை அனுசிதமானது; சரியில்லை. தவிர;தட்சன் தனது எல்லாப் பெண்களையும் அழைத்திருக்கிறான். ஆனால், என் மீது விரோதம் காரணமாக இருப்பதால்; அவன் உன்னையும் மறந்து விட்டான் (யஜ்ஞத்திற்கு அழைக்கவில்லையல்லவா?) என்றார் சிவன்.

ப்ரஹ்மஸபாம் ஹம் ஸன் துகு மானா |
தேஹி தேம் அஜஹும் கர்ஹிம் அபமானா || 671
ஜௌம் பினு போலேம் ஜாஹு பவானீ |
ரஹ்யி ந ஸீலு ஸநேஹு ந கானீ || 672

ஒரு முறை ப்ரம்மஸபையில் தட்சனானவன் என்னிடம் அஸந்தோஷமடைந்தான். அந்த ஸம்பவத்தால் இன்றும் நம்மை அவன் அவமதிக்கிறான். ஹே பவானீ! அழைக்காமல் நீ அங்குப் போனாயானால் உன்னிடம் அன்பும், நட்பும் இருக்காது; உன்னிடம் பழைய மானம் மரியாதையும் கூட இருக்காது. ஆகவே, யோசித்துச் செய்.

ஜதபி மித்ர ப்ரபு பிது குர் கேஹா |
ஜாஇஅ பினு போலேஹும் ந ஸந்தேஹா ||
673

ததபி பிரோத் மான ஜஹம் கோயீ |
தஹாம் கயேம் கல்யானு ந ஹோயீ || 674

எப்படியும் நண்பர்கள் வீடு, ப்ரபுக்கள் வீடு, பித்ரு வீடு, குரு வீடு இவைகளுக்கு அழைப்பில்லாமலே நாம் ஸகஜமாகச் செல்லலாம்; தப்பில்லை; அவர்கள் ஒன்றும் நினைக்கமாட்டார்கள். ஆயினும், அவர்கள் மனத்திலேயே ஏதேனும் விரோதமனப்பான்மை எழுந்துவிட்டால், என்ன செய்வது? ஆகவே; நாம் அங்குப் போகக் கூடாது. அப்படிப் போனால் நமக்கு நன்மை உண்டாகாது.

பாந்தி அனேக சம்பு ஸமுஜாவா |
பாவீ பஸ் ந க்யானு உர் ஆவா || 675
கஹ் ப்ரபு ஜாஹு ஜோ பினஹிம் போலாயேம் |
நஹிம் பலி பாத் ஹமாரே பாயேம் || 676

சிவன் இம்மாதிரிப் பல விதங்களில் ஸதிக்கு எடுத்துச் சொன்னார்; அவள் மனமும் சரியில்லை. எதிர்காலத்தில் எப்படி நடக்க வேண்டுமென்று ஆண்டவன் சித்தமோ; அதே போல் நடப்பது நடந்தே தீரும். ஆகவே தான் ஸதிக்குத் திருப்தி உண்டாக வில்லை, பின் சிவன் கூறினார். ''என் மனத்திற்கேற்பக் கூப்பிடாத வீடு போவது நல்லது இல்லை. நல்லது நடப்பதாக எனக்குத் தெரியவில்லை என்றார்''

கஹி தேகா ஹர் ஜதன் பஹு
ரஹ்இ ந தச்சகுமாரி |
தியே முக்ய கன் ஸங்க் தப்
பிதா கீன்ஹ த்ரிபுராரி || 677

அதாவது; சிவன் பலவிதமாக அவளுக்கு நல்லதையும், கெட்டதையும் எடுத்துச் சொல்லியும், தட்ச குமாரியான ஸதி கேட்பவளாக இல்லை; பிடிவாதமாக இருந்தாள்; போகவேண்டாமென்று அவள் நிற்கவில்லை. மேலும், பார்வதி தகப்பன் வீடு செல்லத் தயாராக இருப்பதைக் கண்ட த்ரிபுராரி வேறு வழி ஒன்றும் தோன்றாமல் பூத கணங்களுடன் 'போய் வா' என்று விடை கொடுத்து அனுப்பினார்.

பிதா பவன் ஜப் கயீ பவானீ |
தச்ச த்ராஸ் காஹூம் ந ஸன்மானீ || 678
ஸாதர் பலேஹிம் மிலீ ஏக் மாதா |
பகினீம் மிலீம் பஹுத் முஸுகாதா || 679

பவானி எப்போது தட்சனின் மாளிகையில் நுழைந்தாளோ; அப்போதே ஒருவரும் அவளை வரவேற்கவில்லை. எல்லோரும் தட்சனிடம் பயந்து இருப்பவர்களேயாதலால், பவானியை வரவேற்க யாருக்கும் தைரியமில்லை. ஸதியின் தாயார் மட்டும் பாவம் பாசத்தினால் மரியாதையுடன் வரவேற்று அன்பு காட்டினார். ஸஹோதரிகள் ஸந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு வரவேற்றார்கள்; அவ்வளவுதான்.

தச்ச ந கசு பூசீ குஸ்லாதா |
ஸதிஹி பிலோகி ஜரே ஸப் காதா || 680
ஸதீம் ஜாயி தேகேவு தப் ஜாகா |
கதஹும் ந தீக் சம்பு கர் பாகா || 681

தட்சன் ஸதியை யோக க்ஷேமம் கூடக் கேட்கவில்லை. பின்னும் ஸதியைக் கண்டவுடன் அவன் உடலெல்லாம் எரிந்தது. அதே நேரம் ஸதி யஜ்ஞம் பார்க்கப் போனாள். அப்பொழுது சிவனாருக்குச் சேரவேண்டிய ஹவிர்ப் பாகமும், அர்க்யங்களும் இருக்கவில்லை. ஸதி பார்த்துக் கொண்டே நின்றாள்.

தப் சித் சடேவு ஜோ ஸங்கர கஹேவூ |
ப்ரபு அப்மானு ஸமுஜி உர் தஹேவூ || 682
பாசில் துகு ந ஹ்ருதயம் அஸ் ப்யாபா |
ஜஸ் யஹ் பயவு மஹா பரிதாபா || 683

சிவனார் என்னனென்ன கூறினாரோ; எல்லாம் ஸதியின் நினைவில் வந்தது. தன் ஸ்வாமியின் அவமானத்தை அவளால் ஸஹிக்க முடியவில்லை. பதி தன்னைத் துறந்துவிட்டார், என்ற பழைய துக்கம் கூட இத்தனை அளவு அவளைப் பாதிக்கவில்லை. தற்சமயம் தகப்பனாரால் தன் பதிக்கு ஏற்பட்ட மஹா அவமானம் மட்டும் அவளால் ஸஹிக்க முடியவில்லை; அவள் உள்ளம் எரிந்தது. ஸதி கோபமுற்றாள்.

ஜத்யபி ஜக தாருண் துக் நானா |
ஸப்தேம் கடின் ஜாதி அவமானா || 684
ஸமுஜி ஸோ ஸதிஹி பயவு அதிக்ரோதா |
பஹுபிதி ஜனனீம் கீன்ஹ ப்ரபோதா || 685

எப்படியும் உலகின் மானிட வர்க்கத்திற்கு பயங்கர மான துக்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பின்னும் ஜாதியைப் பற்றிய அவமானம், எதையும் விடத் தாங்க முடியாதது. அவளுக்கு மிகுந்த கோபம் மூண்டது. இதை எண்ணி ஸதியைத் தேற்றினாள். ஆனால், ஸதி நிம்மதியடையவில்லை.

சிவ அபமானு நஜாயி ஸஹி ஹ்ருதயம்
ந ஹோயி ப்ரபோத் |
ஸகல ஸப்ஹி ஹடி ஹடகி தப் போலீம்
பசன ஸக்ரோத் || 686

அவளுக்குச் சிவ நிந்தனையும், சிவ அவமானமும் தாங்க முடியவில்லை. அவள் நெஞ்சில் கொஞ்சமும் அறிவுச் சிந்தனை உண்டாகவில்லை. அப்போது ஸதி ஸபையெல்லாம் நடுங்க யாவரையும் நோக்கி எல்லோ ரையும் மிரட்டிக் கோபத்துடன், ஆரவாரத்துடன் கத் தினாள்.

ஸுனஹு ஸபாஸத் ஸகல முனிந்தா |
கஹீ ஸுனீ ஜின்ஹ சங்கர் நிந்தா || 687
ஸோ பலு துரத் லஹப் ஸப் காஹூம் |
பலீபாந்தி பசிதாப் பிதாஹூம் || 688

ஹேஸபாபதிகளே! முனிவர்களே! கேளுங்கள்; ''என் பதி சங்கரரை எவர் தூஷணையைச் செய்தார் களோ; கேட்டார்களோ; அவரவர்களுக்குத் தக்க பலன் உடனே கிடைக்கும். என் பிதா தட்சனும் கட்டாயம் வருத்தம் அனுபவிக்கப் போகிறார். இது உண்மை'' என்றாள் பார்வதி.

ஸந்த ஸம்பு ஸ்ரீபதி அபவாதா |
ஸுனிய ஜஹாந் தஹம் அஸி மர்ஜாதா || 689
காடிய தாஸு ஜீப் ஜோ பஸாயீ |
ச்ரவண மூதி ந த சலிய பராயீ || 690

எங்கும் நிறைந்திருக்கும் ஸாது ஜனங்களே! நற்குணவான்களே! சம்புவையும், ஸ்ரீபதியான விஷ்ணுவையும் நிந்தனை செய்பவர்கள் கூட்டத்தில் ஒரு வேளை நீங்கள் இருந்தால், அந்த நிந்தனை செய்பவர்களின் நாக்கைச் சக்தியிருந்தால்; அறுத்துப் போடுங்கள். அல்லாது போனால்; இரு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து ஓடி விடுங்கள்.

ஜகதாத்மா மஹேசு புராரீ |
ஜகத் ஜனக் ஸப்கே ஹிதகாரீ || 691
பிதா மந்தமதி நிந்தத் தேஹீ |
தச்ச சுக்ர ஸம்பவ் யஹ் தேஹீ || 692

த்ரிபுரம் எரித்துத்தைத்யர்களைக் கொன்ற பகவான் மகேச்வரன் ஸம்பூர்ணமான உலகிற்கும் ஆத்மா போன்றவர். உலகிற்குத் தந்தை. எல்லோருக்கும் நன்மையையே செய்பவர். அப்படியிருக்க நிர்மூடனான என் தந்தை அவரைத் தூஷிக்கிறார். பின்னும் எனது இந்த உடல் தட்சனின் வீர்யத்தினால் உண்டானதன்றோ? இது சரியாகாது. இதை வைத்துக்கொண்டிருப்பதே தவறு.

தஜிஹவும் துரத் தேஹ் தேஹி ஹேதூ |
உர்தரி சந்த்ரமௌலி வ்ருஷ கேதூ || 693
அஸ் கஹி ஜோக் அகினி தனு ஜாரா |
பயவு ஸகல் மக ஹாஹாகாரா || 694

ஆகவே, சந்த்ரனை நெற்றியில் தரித்த வ்ருஷ கேதுவான என் சிவனாரை ஹிருதயத்தில் இருத்திக் கொண்டு, இந்தச் சரீரத்தை உடனே த்யாகம் செய்யப்போகிறேன். இம்மாதிரி சொன்னபடியே ஸ்தியானவள் யோக அக்னியில் விழுந்து பஸ்மமானாள். பூரா யஜ்ஞ சாலைகளிலும் ஒரே ஆரவாரம்; பரபரப்பு. (ஸதிதேவி மறைந்தாள். எங்கும் செய்தி பரவியது).

ஸதீ மர்னு ஸுனி சம்பு கன்
லகே கரன் மக் கீஸ் |
ஜக்ய பிதம்ஸ பிலோகி ப்ருகு
ரச்சா கீன்ஹி முனீஸ் || 695

ஸதீதேவியின் மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட சிவனாரின் கணங்கள் யஜ்ஞ சாலையை த்வம்ஸம் செய்துவிட்டனர்.

சிவகணம் யாக நாசம் செய்வதைக் கண்ட ப்ருகு மஹருஷியானவர் யாகரக்ஷணை செய்தார்.

ஸமாச்சார் ஸப் சங்கர்பாயே |
பீரபத்ரு கரிகோப் படாயே || 696
ஜக்ய பிதம்ஸ ஜாயி தின்ஹ தீன்ஹா |
ஸகல ஸுரன்ஹ பிதிவத் பலு தீன்ஹா || 697

இந்தச் ஸமாசாரங்களை எல்லாம் கேட்ட சிவனார் மிகவும் கோபம் கொண்டு, தனது வீரபத்ரனை அங்கு அனுப்பினார். அவர் யஜ்ஞ சாலையை அடைந்து, யஜ்ஞத்தை அடியோடு அழித்ததும் இல்லாமல்; எல்லா தேவதைகளுக்கும் தகுந்தபடி தண்டனையைக் கொடுத்தார்.

பை ஜகபிதித் தச்சகதி ஸோயீ |
ஜஸி ககூ சம்பு பிமுக் கை ஹோயீ || 698
யஹ் இதிஹாஸ் ஸகல் ஜக் ஜானீ |
தாதே ம்மெம் ஸஞ்சேப் பகானீ || 699

அதாவது; எவருக்குச் சிவ த்ரோஹத்தினால் பல விதத் தீமைகள் உண்டாகின்றனவோ; அதேபோல தட்சனுக்கும் அதேகதி உண்டானது. இந்த எல்லாச் சரித்ரங்களையும் ஸகல உலகமும் அறியும். ஆகவே, நான் அதை மிகவும் குறைவாகவே வர்ணனை செய்து இருக்கிறேன்.

ஸதீம் மரத் ஹரி ஸன் பரு மாகா |
ஜன்ம ஜன்ம சிவ பத் அனுராகா || 700
தேஹி காரண் ஹிமகிரி க்ருஹ் ஜாயீ |
ஜன்மீம் பார்பதீ தனு பர்யீ || 701

ஸதி இறக்கும் தருவாயில் பகவான் ஹரியிடம் ஒரே ஒரு வரம் கேட்டாள். அதாவது; நான் எத்தனை பிறவி எடுத்தாலும் சரி, எனது ப்ரேமை ஹரனுடைய பாத கமலங்களிலேயே இருக்கவேண்டும். இதே காரணத்தினால்தான் இமயமலை வீடடைந்து, பார்வதி என்று பெயர் கொண்டு, ஹிமவானின் புத்ரியாக ஸதி அவதரித்தாள்.

ஜப் தேம் உமா ஸைல க்ருஹ் ஜாயீம் |
ஸகல் ஸித்தி ஸம்பதி தஹம் சாயீம் || 702

ஜஹம் தஹம் முனின்ஹ ஸுஆச்ரம் கீன்ஹே |
உசித் பாஸ் ஹிம பூதர் தீன்ஹே || 703

எப்போது உமையானவள் பார்வதியாக ஹிமாசலத்தின் க்ருஹத்தில் ஜன்மம் எடுத்தாளோ; அப்போதிருந்தே அங்கு தன, தான்யம், ஐச்வரியம், ஸித்திகள் எல்லாம் ஏகமாக ஸம்பவித்தன.

ஹிமாசலமானது எல்லா முனிவர்களும் தங்கி, வாழும்படியாக விதவிதமான ஆச்ரமங்களை உண்டாக்கிக் கொடுத்துத் தகுந்த ஸ்த்தானங்களை அளித்தது.

ஸதா ஸுமன் பல் ஸஹித் ஸப் த்ரும
நவ நானா ஜாதி |
ப்ரகடீம் ஸுந்தர ஸைல பர் மனி ஆகர்
பஹு பூாந்தி || 704

அந்த அழகிய பர்வதத்தில் விதவிதமான புதிய புதிய மரங்களும், எப்பொழுதும் புஷ்பங்களும், பழங்களும் கூடியவையாய் இருந்தன. பலவிதமான மணிகளின் சுரங்கங்கள் வெளியில் தென்பட்டன.

ஸரிதா ஸப் புனீத ஜலு பஹஹீம் |
கக ம்ருக மதுப் ஸுகீ ஸப் ரஹஹீம் || 705
ஸஹஜ் பயரு ஸப் ஜீவன்ஹ த்யாகா |
கிரி பர் ஸகல கர்ஹிம் அனுராகா || 706

எல்லா நதிகளிலும் பவித்ரமான ஜலம் பெருகுகிறது. பறவைகள், வண்டினங்கள், ம்ருகங்கள் இவை எல்லாம் ஸுகமாக நிவாஸம் செய்கின்றன; ஒரு குறையும் இல்லை. எல்லா ஜீவராசிகளும் தங்களது விரோதங்களை மறந்து, ஒன்றுக்கொன்று மலை மீது அன்பும், ப்ரேமையும் மிளிர வாழ்கின்றன.

ஸோஹ் ஸைல கிரிஜா க்ருஹ் ஆயேம் |
ஜிமி ஜனு ராமபக்தி கே பாயேம் || 707
நித நூதன் மங்கல க்ருஹ் தாஸூ |
ப்ரஹ்மாதிக் காவஹிம் ஜஸு ஜாஸூ || 708

பார்வதி தன் பிறந்தகம் வந்தபின் ஹிமயபர்வதம் சொல்ல முடியாத அழகுடனும், ஒளியுடனும்

விளங்கியது. எப்படி ஸ்ரீராம பக்தியால் பித்துப் பிடித்துப் பக்தன் விளங்குவானோ; அதே மாதிரிப் பொலிவுடன் இருந்தது. அந்தப் பர்வத ராஜனின் வீட்டில் நித்ய கல்யாணானுபவங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. ப்ரம்மாதி தேவர்கள் கீர்த்தி பாடுகிறார்கள்.

நாரத் ஸமாசார் ஸப் பாயே |
கௌதுக்ஹீம் கிரி கேஹ் ஸிதாயே || 709
ஸைலராஜ் பட் ஆதர் கீன்ஹா |
பத பகாரி பர் ஆஸனு தீன்ஹா || 710

எல்லா விஷயங்களையும் அறிந்து கொண்ட நாரத முனிவர் குதூஹலத்துடன் ஹிமாசலத்தில் உள்ள பார்வதி வீடு ஏகினார். பர்வதத்தின் ராஜன் நாரதரை மிகவும் மரியாதை செய்து வணங்கி எழுந்தார். அவரது பாதகமலங்களைத் தண்ணீர் விட்டுக் கழுவி, நல்ல ஆஸனம் அமருவதற்கு அளித்தார்.

நாரி ஸஹித் முனி பத ஸிரு நாவா |
சரண ஸலில ஸபு பவனு ஸிஞ்சாவா || 711
நிஜ ஸௌபாக்ய பஹுூத் கிரி பர்னா |
ஸுூதா போலி மேலீ முனி சர்னா || 712

தன் மனைவியுடன் கூட நாரதரின் பாதபூஜை செய்து, வணக்கம் செய்துவிட்டு, அந்தத் திருவடி ஜலத்தைப் பர்வதராஜன் தனது வீடு முழுவதும் தெளித்தான். நாரத முனி தன்' இருப்பிடம் வந்தது தனது ஸௌபாக்யம் என்று கருதிய ஹிமவான் தனது புத்ரியான பார்வதியை அழைத்து நாரதரின் திருவடிகளை நமஸ்கரிக்கச் சொன்னான்.

த்ரிகாலக்ய ஸர்பக்ய தும்ஹ
கதி சர்பத்ர தும்ஹாரி |
கஹஹு ஸுூதா கே தோஷ் குன்
முனிபர் ஹ்ருதயம் பிசாரி || 713

ஹே முனிவரே! தாங்கள் த்ரிகாலஜ்ஞர் (முக்காலமும் உணர்ந்தவர்). எல்லா இடத்திலும் ஸஞ்சரிப்பவர்; எல்லாமறிந்தவர். எனது புத்ரியான பார்வதியின் குணதோஷங்களைக் கூற வேண்டும் என்றார். ஹிமவான்.

கஹ் முனி பிஹஸி கூட் ம்ருது பானீ |
ஸுதா தும்ஹாரி ஸகல குண் கானீ || 714
ஸுந்தர் ஸஹஜ ஸுசீல் ஸயானீ |
நாம உமா அம்பிகா பவானீ || 715

நாரதர் சிரித்துக் கொண்டே ரகஸ்யமாக ம்ருது வான குரலில், ஹே ராஜன்! உனது பெண் குணத்தின் பொக்கிஷம், இயற்கையாகவே இவள் அழகும், குண மும், அறிவும் நிறைந்தவள். இவள் வேறு யாருமில்லை. உமா, அம்பிகா, பவானீ என்பதுவே இவளுடைய பெயர்.

ஸப் லச்சன் ஸம்பன்ன குமாரீ |
ஹோயிஹி ஸந்தத் பியஹி பியாரீ || 716
ஸதா அசல் ஏஹி கர் அஹிவாதா |
ஏஹி தேம் ஜஸு பைஹஹிம் பிது மாதா || 717

இந்தக் கன்னி எல்லாவித லட்சணங்களையும் கொண்டு விளங்குவதால்; தனது பதிக்கு மிகுந்த ப்ரிய மாவாள்; பக்தையாவாள். இவள் தீர்க்க ஸுமங்கலி யாக இருப்பாள். இவளால் இவள் தாய், தகப்பன் புகழ்ப் பெருமையை அடைவார்கள்.

ஹோயிஹி பூஜ்ய ஸகல ஜக் மாஹீம் |
ஏஹி ஸேவத் கசு துர்லப் நாஹீம் || 718
ஏஹி கர் நாமு ஸுமிரி ஸம்ஸாரா |
த்ரிய சடிஹஹிம் பதிப்ரத் அஸிதாரா || 719

இவள் எல்லா உலகிலும் பூஜிக்கத் தகுந்தவள். இவளை எவர் பூஜிக்கிறார்களோ; அவர்களுக்கு ஒரு குறையும் வராது.

உலகில் வாழும் ஸ்த்ரீகள் இவள் பெயரை நினைத்த மாத்திரத்திலேயே பதிவ்ரதாதர்மம் என்னும் கத்தி முனையில் நடக்க, ஏற ஆரம்பித்துவிடுவார்கள்.

ஸைல ஸுலச்சன் ஸுதா தும்ஹாரீ |
ஸுனஹு ஜே அப் அவகுண் துயி சாரீ || 720
அகுண் அமான் மாது பிது ஹீனா |
உதாஸீன் ஸப் ஸம்ஸய சீனா || 721

ஹே பர்வதராஜனே! உமது பெண் ரொம்பவும் அழகு டையவள். ஆயினும், இவளிடம் நான்கு விதமான துர் குணங்களும் சேர்ந்திருக்கின்றன. அதாவது; இம்மாதிரி ஒரு ஸந்தர்ப்பம் வரநேரும். குணஹீனம், மானம் இல் லாத நிலை, தாய் தகப்பன் இல்லாத நிலை, உதாஸீன மான நிலை, சந்தேகமற்றநிலை, லட்சியம் செய்யாத நிலை என்பனவே. ஆகவே, இவள் கவலையற்ற ஒரு வனிடம் போய்ச் சேருவாள்.

ஜோகீ ஜடில் அகாம் மன
நக்ன அமங்கல் பேஷ் |
அஸ் ஸ்வாமீ ஏஹி கஹம் மிலிஹி
பரீ ஹஸ்த அஸி ரேக் || 722

ஹே ராஜன்! யோகியும், ஜடாதாரியும், ஆசையற்ற உள்ளமுள்ளவனும், நிர்வாணமுடையவனும், அமங் கல வேஷதாரியுமான ஒருவன்தான் இந்தப் பெண் ணுக்குப் பதியாவான் என்பதை இவள் கைரேகை கூறு கிறது.

ஸுனி முனி கிரா ஸத்ய ஜியம் ஜானீ |
துக் தம்பதிஹி உமா ஹர்ஷானீ || 723
நாரத்ஹூம் யஹ் பேது ந ஜானா |
தஸா ஏக் ஸமுஜப் பில்கானா || 724

நாரத முனிவரின் பேச்சைக் கேட்ட பர்வதராஜனும், அவன் மனைவி மைனாவும் இது ஸத்ய வார்த்தை என அறிந்து, மிகவும் வருந்தினார்கள். ஆனால், பார் வதியோ உள்ளத்தில் மகிழ்ச்சி அடைந்தாள். நாரதர் கூடப் பார்வதி மகிழ்வு அடைந்ததைத் தெரிந்து கொள்ள வில்லை. ஏனெனில், உள்ளத்தின் ரஹஸ்யத்தை தெரிந்து கொள்வது கடினம். அவரவர் இஷ்டப்படி திட்டமிட்டு நினைப்பார்கள் என்பது நிச்சயம். (அதா வது, வெளிநிலை ஒரே சீராக இருந்தாலும்; உள்ள நிலை வெவ்வேறாக அமையும்)

ஸகல் ஸகீம் கிரிஜா கிரி மைனா |
புலக் சரீர் பரே ஜல் நைனா || 725
ஹோயி ந ம்ருஷா தேவரிஷி பாஷா |
உமா ஸோ பசனு ஹ்ருதயம் தரி ராகா || 726

தோழிகள், பார்வதி, ஹிமவான், மைனா எல்லாருடைய சரீரமும் புளகாங்கிதமடைந்தது. நாரதரின் இச்சொல்லைக் கேட்டு, எல்லோர் கண்களிலும் கண்ணீர் நிறைந்தது. ஏனெனில்; தேவரிஷியான நாரதரின் வார்த்தை பொய்யாக முடியாது என்று எண்ணிய (பார்வதிக்கு இந்த வார்த்தை இதமும், ஸந்தோஷத்தையும் கொடுத்தது. ஆனால், சிலருக்கு இந்த வார்த்தை துக்கத்தையும் அளித்தது.) பார்வதி மனத்தில் பதித்துக் கொண்டாள்.

உபஜேவு சிவ பத கமல் ஸனேஹூ |
மிலன் கடின் மன் பா ஸந்தேஹூ || 727
ஜானி குஅவஸரு ப்ரீதி துராயீ |
ஸகீ உசங்க பைடீ புனி ஜாயீ || 728

பார்வதிக்குச் சிவன் திருவடிகளில் அன்பு உண்டாயிற்று. இச்சமயம் சிவனைக் காண்பதென்பது முடியாத காரியம். ஆன்ால், சிவன் மீதுள்ள காதலோ பெருகியது; மனத்தில் ஸந்தோஷமும் எழுந்தது; சிவனைக் காண்பேனோ; மாட்டேனோ என்ற வருத்தம். இத்தருணம் சரியில்லை என்று மனத்தை அடக்கிக் கொண்டு ஸகியின் மடியில் ஓடிப்போய் அமர்ந்து கொண்டாள்.

ஜூடி ந ஹோயி தேவரிஷி பானீ |
ஸோச்ஹிம் தம்பதி ஸகீம் ஸயானீ || 729
உர் தரி தீர் கஹயி கிரிராவூ |
கஹஹு நாத் கா கரிஅ உபாவூ || 730

தேவரிஷியின் வார்த்தை பொய்யாகாது என்பதை அறிந்த ஹிமவானும், மைனாவும், மற்றும் உள்ள திறமையுள்ள தோழியர் யாவரும் கவலை கொள்ளலாயினர், பிறகு ஹிமவான்; தைரியத்துடன் நாரதரிடம் ''இந்த சிக்கலான விஷயத்திற்கு ஓர் உபாயத்தை நீங்களே கூறுங்கள்!'' என்றார்.

கஹ் முனீஸ ஹிமவந்த ஸுனு ஜோ
பிதி லிகா லிலார் |

தேவ தனுஜ நர் நாக முனி கோவு
ந மேட் நிஹார் || 731

அப்போது நாரதர்; கேள் ஹிமவானே! ப்ரம்மன் யார் தலையிலே எப்படி எழுதியிருக்கிறானோ; அப்படியேதான் நடக்கும். தேவர்கள், ராட்சதர்கள், நாகர்கள், முனிவர்கள் யாவருக்கும் இதே முறையில் இதே மாதிரிதான் நடக்கிறது. இது ஒரு இயற்கையின் நியதி; யாரும் இதை அழிக்க முடியாது.

ததபி ஏக் மைம் கஹஉம் உபாயீ |
ஹோயி கரை ஜௌம் தைவு ஸஹாயீ || 732
ஜஸ்பரு மைம் பர்னேவும் தும்ஹ பாஹீம் |
மிலிஹி உமஹி தஸ் ஸம்ஸய நாஹீம் || 733

''பின்னும் நான் உனக்கு ஓர் உபாயம் சொல்கிறேன் கேள். கடவுளின் உதவி, கருணை இருந்தால்; கட்டாயம் இந்த வரன் கிடைக்கும். நான் எம்மாதிரி வர்ணனை செய்தேனோ; அதேபோல்தான் பார்வதிக்கு வரன் கிடைக்கும். இதில் ஸந்தேஹம் வேண்டாம்''.

ஜே ஜே பர் கே தோஷ் பகானே |
தே ஸப் சிவ பஹிம் மைம் அனுமானே || 734
ஜௌம் பிபாஹு சங்கர் ஸன் ஹோயீ |
தோஷஉ குண் ஸம கஹ் ஸபு கோயீ || 735

எந்த, எந்த விதமாக நான் சிவனாரை அனுமானம் செய்து குறை சொன்னேனோ; அவை கட்டாயம் அவரிடம் உண்டு என்பதைத்தான் அறிவேன். ஆயினும், சிவபிரானோடு விவாஹம் ஆனபின் தோஷங்களையும் கூடக் குணங்களாகச் சேர்த்துக் கூறுவது இயற்கை, அதை நாம் எப்படி மறுக்க முடியும்?

ஜௌம் அஹி ஸேஜ் ஸயன் ஹரி கர்ஹீம் |
புத் கசு தின்ஹ கர் தோஷு ந தர்ஹீம் || 736
பானு க்ருஸானு! ஸர்ப ரஸ காஹீம் |
தின்ஹ கஹம் மந்த கஹத் கோவு நாஹீம் ||737

அதாவது; பகவான் ஹரி ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டு இருந்தாலும், பண்டிதர்கள் அவரைக் குறை

கூறுவது இல்லை. ஸூர்யனும், அக்னியும் நல்லது, கெட்டதாகிற எல்லாவிதமான ரஸங்களையும் குடித்து விடுகிறார்கள். ஆனால், அவர்களை ஒருவ்ரும் தோஷப் பட்டான் என்று நினைப்பதே இல்லை. அப்படியிருக்க;

சுப அரு அசுப ஸலில ஸப் பஹ்யீ |
ஸுரஸரி கோவு அபுனீத் ந கஹ்யீ || 738
ஸமர்த கஹூம் நஹிம் தோஷு கோஸாயீம் |
ரபி பாவக ஸுர்ஸரி கீ நாயீம் || 739

நல்லதும், கெட்டதும், எல்லாவிதமான அசுத்தத் தண்ணீரும் கங்கையில் கலந்தாலும்; ஸுர ஸரிதான அந்தக் கங்கை தூய்மை அற்றது என்று சொல்வ தில்லை.

ஸூர்யன், அக்னி, கங்கை இவைகளைப் போலத் திறமைசாலிகளைக் குற்றங்கள் அண்டுவதில்லை.

ஜௌம் அஸ ஹிஸிஷா கர்ஹிம் நர
ஜட் பிபேக் அபிமான் |
பர்ஹிம் கல்ப பரி நரக் மஹூம்
ஜீவ் கி ஈஸ் ஸமான் || 740

எந்த முட்டாள் ஒருவன் ஈச்வரனை நோக்கி அவரே போல் ஆகி விடப்பொறாமை கொள்கிறானோ; அப் படிப்பட்டவன் கல்ப வருடங்கள் வரை நரகவாசம் செய்வார். ஏனெனில்; ஐந்து பூதங்களினாலும் ஆக்கப் பட்ட இந்த மனிதர் ஈச்வரப் பதவியை அடையமுடி யாது என்பது திண்ணம். (அதாவது; மனிதன் மனி தனாகத்தான் இருக்க வேண்டும். கடவுள் கடவுளாகத் தான் இருக்க வேண்டும் என்ற நியதி உண்டு). மனிதன் கடவுளாக எப்படி ஆக முடியும்?

ஸுரஸரி ஜல க்ருத பாருனி ஜானா |
கப்ஹூம் ந ஸந்த் கர்ஹிம் தேஹி பானா ||741
ஸுரஸரி மிலேம் ஸோ பாவன ஜைஸேம் |
ஈஸ் அனீஸ்ஹி அந்தரு தைஸேம் || 742

கங்காஜலத்தில் தயாரிக்கப்பட்ட சாராயத்தை ஸாதுக் கள் பருகுவதில்லை. அதுவே கங்கை நீரோடு கலந்து

விட்டால்; பவித்ரமாகி விடுகிறது. ஈச்வரன் -ஜீவன் இவைகளிடமும் இதே வித்யாஸந்தான்,

சம்பு ஸஹஜ் ஸமர்த பக்வானா |
ஏஹி பிபாஹம் ஸப் பிதி கல்யானா || 743
துராராத்ய பை அஹஹிம் மஹேஸூ |
ஆஸுதோஷ் புனி கிஏம் கலேஸூ || 744

சிவபிரான் இயல்பாகவே வெகு ஸமர்த்தர்; ஏனெனில்; அவர் பகவான். எனவே இந்தத் திருமண வைபவத்தில் எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகும். ஆனாலும், மஹாதேவனை ஆராதிப்பது மிகவும் கஷ்டந்தான். மேலும், தவம் முதலிய கஷ்டங்களை அனுபவித்து ஆராதிப்போமானால்; அவர் வெகு சீக்ரமே ஸந்தோஷத்தை அடைந்திடுவார்.

ஜௌம் தபு கரை குமாரி தும்ஹாரீ |
பாவிஉ மேடி ஸகஹிம் த்ரிபுராரீ || 745
ஜத்யபி பர் அநேக் ஜக மாஹீம் |
ஏஹி கஹம் சிவ தஜி தூஸர் நாஹீம் || 746

''அதாவது, உமது குமாரி பார்வதி சிவனாரை நினைத்துத் தவம் செய்ய வேண்டும். ஏனெனில்; சிவனார் வருங்கால இடையூறுகளையும் நீக்கி ஏற்பார் என்பது ஸத்தியம். உலகத்தில் எத்தனையோ தகுந்த வரன்கள்-பிள்ளைகள் கிடைக்கலாம். ஆனால்; இவளுடைய விதிப்படி சிவனைத்தவிர வேறு ஒருவனும் இவளுக்குக் கணவனாக முடியாது.''

பர் தாயக் ப்ரனதார்தி பஞ்ஜன் |
க்ருபாஸிந்து ஸேவக் மன ரஞ்ஜன் || 747
இச்சித் பல பினு சிவ அவராதேம் |
லஹிய ந கோடி ஜோக் ஜப ஸாதேம் || 748

சிவனானவர் வரங்களை வாரிக் கொடுப்பவர்; சரணம் என்று வந்தவர்களின் துயரங்களை நொடிப் பொழுதில் போக்க வல்லவர்; கருணைக்கடல் போன்றவர்; ஸேவகர்களின், தாஸர்களின் மனத்தில் ஆனந்தத்தை அளிக்க வல்லவர். மனத்தில் ஒரு விதமான இச்சையும் கொள்ளாமல் பூரண மனத்துடன் ஒரே த்யா

னத்துடனும் சிவனை வழிபடாமல் கோடிக்கணக்கான யாகமும், ஜபமும் செய்தபோதும் விரும்பியபலன் கிடைக்காது. (அவரை வணங்கினால் கோடிக்கணக்கான யோகமும், தவமும் செய்த பலன் ஏற்படும். அதாவது, அதற்குக் கூட இத்தனை மஹிமை இல்லை.)

அஸ் கஹி நாரத் ஸுமிரி ஹரி
கிரிஜ்ஹி தீன்ஹி அஸீஸ் |
ஹோயிஹி யஹ் கல்யான் அப்
ஸம்ஸய் தஜ்ஹு கிரீஸ் || 749

இம்மாதிரிச் சொல்லிவிட்டு நாரதரானவர் பகவானை ஸ்மரித்துக் கொண்டு பார்வதிக்கு ஆசீர்வாதமளித்தார். பின்பு ஹிமவானை நோக்கி, ''ஹே கிரீச்! ஸந்தேஹத்தை விட்டுவிடு. இதில்தான் உனது கல்யாணமே, அதாவது; மங்களமே இருக்கிறது என்றார்.

கஹிஅஸ ப்ரஹ்ம பவன் முனி கயஊ |
ஆகில் சரித ஸுனஹு ஜஸ் பயஊ || 750
பதிஹி ஏகாந்த பாயி கஹ் மைனா |
நாத ந மைம் ஸமுஜே முனி பைனா || 751

இம்மாதிரி கூறிய நாரதமுனி ப்ரம்ம லோகம் சென்றுவிட்டார். இப்போது வரப்போகும் கதையைக்கேள்! பதியைத் தனிமையில் சந்தித்த் மைனாவதி

'ஸ்வாமி!' எனக்கு நாரத முனியின் வசனங்களின் பொருள் புரியவில்லையே! என்று வருந்தினாள்.

ஜௌம் கரு பரு குலு ஹோயி அனூபா |
கரிஅ பிபாஹு ஸுதா அனுரூபா || 752
ந த கன்யா பரு ரஹஉ குவாரீ |
கந்த உமா மம ப்ரானபிஆரீ || 753

''நல்ல குலமும், குடியும், ச்ரேஷ்டமான இடத்திலுள்ள வரனுக்கு, நம்முடைய பெண்ணிற்கு ஏற்ற வரனுக்கு விவாஹம் செய்து கொடுங்கள். இல்லையெனில்; நம் குமாரி கன்னியாகவே இருந்துவிட்டுப் போகட்டும். (ஆனால், தகுதியற்றவனுக்கு நான் பெண் தருவதை விரும்பவில்லை) ஹே நாதனே! உமை எனது உயிரி

னும் மேலானவள். (அவளை இம்மாதிரி ஒரு வரனுக்கு நான் எப்படி மணமுடிப்பேன்.)

ஜௌம் ந மிலிஹி பரு கிரிஜஹி ஜோகூ |
கிரி ஜட் ஸஹஜ் கஹிஹி ஸபு லோகூ || 754
ஸோயி பிசாரி பதி கரேஹு பிபாஹூ |
ஜேஹிம் ந பஹோரி ஹோயி உர் தாஹூ ||755

ஹே ஸ்வாமி! பார்வதிக்குத் தகுந்த வரன் கிடைக் காவிடில்; எல்லாரும் ஹிமவான் ஒரு மூர்க்கன் என்று கூறுவார்கள். ஆகவே, பதியே! நன்றாக யோசனை செய்து பெண்ணுக்கு விவாஹம் செய்து கொடுங்கள். பின்னால் ஒரு போதும் மனத்தில் வருத்தமுண்டாகக் கூடாது.

அஸ கஹி பரீ சரண் தரி ஸீஸா |
போலே ஸஹித் ஸனேஹ் கிரீஸா || 756
பரு பாவக் ப்ரகடை ஸஸி மாஹீம் |
நாரத பசனு அன்யதா நாஹீம் || 757

இம்மாதிரி கூறியமைனா கணவனின் கால்களில் விழுந்து எழுந்தாள். அன்புடன் இப்போது ஹிமவான், மைனா! கேள்; சந்த்ரனிடத்திலிருந்து நெருப்புக் கிளம் பட்டும். ஆனால், நாரதருடைய வாக்கு வீணாக ஆக முடியாது; தெரிந்துகொள்.

ப்ரியா ஸோசு பரிஹர்ஹு ஸபு
ஸுமிரஹு ஸ்ரீபகவான் |
பார்பதிஹி நிர்மயஉ ஜேஹிம்
ஸோயி கரிஹி கல்யான் || 758

என் அன்பே! கேள்! எல்லாவிதமான சிந்தனை யையும் விட்டுப் பகவானை வேண்டிக்கொள். எவன் பார்வதியைப் படைத்தானோ; அவனே அவளுக்கு நன்மை செய்வான், வருந்தாதே.

அப் ஜௌம் தும்ஹஹி ஸுதா பர் நேஹூ |
தௌ அஸ் ஜாயி ஸிகாவனு தேஹூ || 759
கரை ஸோ தபு ஜேஹிம் மில்ஹிம் மஹேஸூ |
ஆன உபாயம் ந மிடிஹி கலேஸூ || 760

உன்னுடைய புத்ரி மேல் உள்ள அன்பு மிகவும் சிறந்ததாக இருந்தால், அவளுக்கு நீயே தகுந்தபடி புத்தி மதி அளித்துவிடு. அதனால் பார்வதி தபஸ் செய்யட்டும். அந்தச் சக்தியினால் அவளுக்குச் சிவன் கிடைக்கட்டும். வேறு ஒரு மார்க்கத்தினாலும் இந்தத் துன்பம் தூர விலகாது. இது நிச்சயம்.

நாரத் பசன் ஸகர்ப ஸஹேதூ |
ஸுந்தர் ஸப் குண் நிதி ப்ருஷகேதூ || 761
அஸ் பிசாரி தும்ஹ தஜ்ஹு அஸங்கா |
ஸப்ஹி பாந்தி சங்கரு அகலங்கா || 762

நாரதரின் வார்த்தை மிகவும் ரகஸ்யமானது; காரணம் நிறைந்தது.

எல்லாவிதமான அழகிய குணங்களுக்கும் சிவன் ஒரு களஞ்சியம் என்பதை ஆலோசித்து இம்மாதிரி மனத்தில் கொண்ட ஸந்தேஹத்தை ஒழித்துவிடு. அவரை எல்லாவிதத்திலும் நம் பெண்ணுக்கு ஏற்றவர்; களங்கமற்றவர் என்று எண்ணி ஏற்றுக் கொள் என்றார் ஹிமவான்.

ஸுனி பதி பசன் ஹர்ஷி மன் மாஹீம் |
கயீ துரத் உடி கிரிஜா பாஹீம் || 763
உமஹி பிலோகி நயன் பரே பாரீ |
ஸஹித் ஸ்நேஹ் கோத் பைடாரீ || 764

தனது பதியின் இதமான வார்த்தைகளால் மனத்தில் மிகவும் ப்ரஸன்னமடைந்தாள் மைனா. உடனே பார்வதியிடம் சென்றாள்; தனது புத்ரியின் கைகளைத் தாங்கிச் கொண்டாள்; உமையைப் பார்த்தவுடன் தாயான அவளது கண்களில் ப்ரேமை நிறைந்த கண்ணீர் பெருகியது. தனது குமாரத்தியை எடுத்து அன்புடன் மடியில் வைத்துக் கொண்டாள்.

பார்ஹிம் பார் லேதி உர் லாயீ |
கத்கத் கண்ட் ந கசு கஹி ஜாயீ || 765
ஜகத் மாது ஸர்பக்ய பவானீ |
மாது ஸுகத் போலீம் ம்ருது பானீ || 766

திரும்பத்திரும்ப மகளை ஆலிங்கனம் செய்து கொண்டாள். அவளால் அன்புத் துயரை அடக்க முடியவில்லை; கண்களில் ப்ரேமை நிறைந்த கண்ணீர் பெருகியது. அவளால் பேச முடியவில்லை. ஜகன் மாதாவான பார்வதி தேவி எல்லாம் அறிந்தவள் அல்லவா? ஆகவே; தாயின் மனநிலையை அறிந்து, ஸமாதானத்துடனும், அன்புடனும் தாயாரிடம் கூறலானாள்.

ஸுன்ஹி மாது மைம் தீக் அஸ் ஸப்ன
ஸுனாவஉம் தோஹி |
ஸுந்தர் கௌர் ஸுபிப்ரபர் அஸ்
உபதேஸேஉ மோஹி || 767

தாயே! நான் ஓர் அழகான ஸ்வப்னம் கண்டேன். உங்களுக்கு அதைச் சொல்கிறேன்; கேளுங்கள்! அழகான சிறந்த ப்ராஹ்மணர் ஒருவர் என்னிடம் வந்து பலவித உபதேசங்கள் செய்தார் தெரியுமா?

கர்ஹி ஜாயி தபு ஸைலகுமாரீ |
நாரத் கஹா ஸோ ஸத்ய பிசாரீ || 768
மாது பிதஹி புனி யஹ் மத் பாவா |
தபு ஸுகப்ரத் துக் தோஷ் நஸாவா || 769

ஹே பார்வதி! போய் நாரதர் கூறியது ஸத்யம் என்று எண்ணி நீ தபஸ் செய்து சிவனை வழி படுவாயாக. நாரதரின் உண்மை வாக்கு என்றும் பொய்யாகாது. நீ இவ்விதம் தபஸில் வழிபடுவது உன் தாய்-தகப்பனாருக்குப் பிடித்தமாக உள்ளது. இந்தத் தபஸ் உனது துக்கத்தையும் அடியோடு ஒழித்து ஸுகத்தைக் கொடுக்கவல்லது.

தப்பல் ரசயி ப்ரபஞ்சு பிதாதா |
தப்பல் பிஷ்ணு ஸகல் ஜக த்ராதா || 770
தப்பல் சம்பு கர்ஹிம் ஸங்காரா |
தப்பல் ஸேஷு தர்யி மஹிபாரா || 771

தவத்தின் பலத்தால்தான் ப்ரம்மா உலகை ஸ்ருஷ்டி செய்கிறார். தவத்தின் பலத்தால்தான் விஷ்ணுவானவர் ஜகத்தை ரட்சணை செய்கிறார். தவத்தின்

பலத்தால்தான் சிவன் ருத்ரனாகி ஸம்ஹாரம் செய் கிறார். பின்னும் தவத்தின் பலத்தால்தான் சேஷன் பூமியின் பாரத்தைச் சுமக்கிறார் என்றார் அந்தப் ப்ராஹ்மணர்.

தப அதார் ஸப் ஸ்ருஷ்டி பவானீ |
கர்ஹி ஜாயி தபு அஸ் ஜியம் ஜானீ || 772
ஸுனத பசன் பிஸ்மித மஹ்தாரீ |
ஸபன் ஸுனாயஉ கிரிஹி ஹங்காரீ || 773

ஹே பார்வதி! "நான் இன்னும் என்ன சொல்வது? தவத்தின் ஆதாரத்தில்தான் ஸகல ஸ்ருஷ்டியும் அமைந் திருக்கிறது. இதை நீ மனத்தில் கொண்டு கட்டாயம் தபஸ் செய்யப் புறப்படு" என்று எனது ஸ்வப்னத்தில் அந்த ப்ராஹ்மணர் கூறினார் என்று தாயிடம் பார் வதி கூற, இம்மாதிரி வசனம் கேட்டவுடன் தாயாரான மைனா பெரிதும் ஆச்சர்யமுற்று, தன் கணவரான ஹிம வானைக் கூப்பிட்டு, பார்வதியின் ஸ்வப்னம் பற்றிக் கூறினாள்.

மாது பிதஹி பஹுபிதி ஸமுஜாயீ |
சலீம் உமா தப் ஹித் ஹர்ஷாயீ || 774
ப்ரிய பரிவார் பிதா அரு மாதா |
பயே பிகல் முக் ஆவ் ந பாதா || 775

மாதா, பிதா இவர்களிடம் பலவிதமாக எடுத்துக் கூறிவிட்டுப் பார்வதி மகிழ்வு நிறைந்த மனத்துடன் தபஸ் செய்யப் புறப்பட்டாள். (தபஸ் செய்யப்போகாதே என்று தாய் தடுத்தும் பார்வதி கிளம்பினாள். இப்போது தான் பார்வதிக்கு உமா என்ற பெயர் உண்டானது) பார்வதி தனது குடும்பத்தாரையும் தாய், தகப்பனையும் பிரிந்து தவம் செய்யப் புறப்பட்டாள். அப்போது ஹிம வான், மைனா இருவரும் வ்யாகுலத்தால் வாய் திறந்து பேசமுடியாது நிலைத்து நின்று விட்டார்கள்.

பேத சிரா முனி ஆயி தப்
ஸப்ஹி கஹா ஸமுஜாயி |
பார்பதீ மஹிமா ஸுனத் ரஹே
ப்ரபோத்ஹி பாயி || 776

அத்தருணம் வேதசிரா என்னும் முனிவர் அங்குத் தோன்றிப் பார்வதியின் மஹிமையைப் பற்றி அவள்

பெற்றோருக்குக் கூறினார். ''பார்வதி ஜகன் மாதா வானவள். அவளைப் பற்றி நீங்கள் அறிந்தீரில்லை'' என்றார். எல்லாரும் பார்வதியின் உண்மைப் பிறப்பை எண்ணிஜ்ஞானம் பெற்றார்கள். ஸமாதானம் அடைந்தார்கள்.

உர் தரி உமா ப்ராணபதி சர்னா |
ஜாயி பிபின் லாகீம் தபு கர்னா || 777
அதி ஸுகுமார் ந தனு தப் ஜோகூ |
பதி பத் ஸுமிரி தஜேவு ஸபு போகூ || 778

பார்வதி ப்ராணபதியான சிவனது திருவடிகளை மனத்தில் நினைத்தவாறு, வனம் சென்று, தபஸ் செய்ய ஆரம்பித்தாள். பின்னும் அவள் உடல் மிகவும் மெல்லியதாக இருந்தது; ம்ருதுவாக இருந்தது; அவள் உடம்பு தபஸ் செய்யக் கூடிய யோக்யதையில் இல்லை. கோமளமான உடம்பாயினும் சிவனது திருவடிகளை மனத்தில் ஸ்மரித்துக் கொண்டே எல்லாவிதப் போகங்களையும் துறந்து, வனத்தில் தபஸ் செய்யலானாள்.

நித நவ சரண உபஜ் அனுராகா |
பிஸரீ தேஹ் தபஹிம் மனு லாகா || 779
ஸம்பத் ஸஹஸ் மூல் பல் காயே |
ஸாகு காயி ஸத் பர்ஷ கம்வாயே || 780

ஸ்வாமியின் திருவடிகளில் தினமும் புதுப்புது அனுராகம் வளரத்தொடங்கியது. மேலும், தவத்தில் அவளது மனமும் ஈடுபட்டது; தேஹத்தின் நினைவையே மறந்தாள். ஓராயிரம் ஆண்டுகள் வரை அவள் கிழங்குகளையும், பழங்களையும் சாப்பிட்டாள்;நூறு ஆண்டுகள் வரை கீரை இலை வகைகளை மட்டுமே சாப்பிட்டுக் காலம் கழித்தாள்.

கசு தின் போஜனு பாரி பதாஸா |
கியே கடின் கசு தின் உபவாஸா || 781
பேல் பாதீ மஹி பர்யி ஸுகாயீ |
தீனி ஸாஹஸ் ஸம்வத் ஸேர்யி காயீ || 782

சில நாட்கள் வரை ஜலத்தையும், காற்றையும் உண்டாள். சில நாட்கள் கடும் உபவாஸம் இருந்தாள்.

சிலதினம் காற்றையும் உட்கொள்ள மறந்தாள். பூமியில் காய்ந்து உலர்ந்து விழுந்த பில்வ இலைச் சரகுகளை மட்டுமே மூவாயிரம் ஆண்டுகள் உட்கொண்டு காலம் கழித்தாள்.

புனி பரிஹரே ஸுகாநேஉ பர்நா |
உமஹி நாமு தப் பயஉ அபர்னா || 783
தேகி உமஹி தப் கீன் ஸரீரா |
ப்ரஹ்மகிரா பை ககன் கபீரா || 784

பிறகு உலர்ந்த இலைகளைச் சாப்பிடுவதையும் உமா விட்டு விட்டாள். அதனால் அவளுக்கு ''அபர்ணா'' என்று பெயர் உண்டாயிற்று. அவளது அழகிய கோமள சரீரம் தபத்தினால் மெலிந்து ஹீனமாகக் காணப்பட்டது. இதைக்கண்டு ஆகாயத்தில்- ப்ரம்மலோகத்தில் இருந்து கம்பீரமான ப்ரம்ம வாக்கு உண்டாயிற்று.

பயவு மனோரத் ஸுபல் தவ
ஸுனு கிரிராஜ்குமாரி |
பரிஹரு துஸஹ் க்லேஸ ஸப் அப்
மிலிஹஹிம் த்ரிபுராரி || 785

''ஹே கிரி ராஜ குமாரி ! உன்னுடைய மனோரதம் பூர்ணமாகட்டும். நீ இந்தக் கடினமான தபஸ்ஸை விட்டு விடு; இப்போது உன்னைச் சிவபெருமான் ஸந்திப்பார்''

அஸ் தபு காஹும் ந கீன்ஹ பவானீ |
பயே அனேக் தீர் முனி க்யானீ || 786
அப் உர் தர்ஹு ப்ரஹ்ம பர் பானீ |
ஸத்ய ஸதா ஸந்தத் ஸுசி ஜானீ || 787

மேலும், கேள் ''பவானீ! அனேக தீரர்களும், முனிவர்களும், ஜ்ஞானிகளும் தபஸ்ஸைச் செய்திருக்கிறார்கள். இருந்தாலும், இம்மாதிரிக் கடினமான தபஸ்ஸை இதுவரை யாருமே செய்தது இல்லை. மேலும், சிறந்த ப்ரம்மனின் ஸத்யமான அந்த வசனத்தை மனத்தில் பவித்ரம் என எண்ணிக் கொண்டு நீ வழிபட்டால்; கட்டாயம் ஸுகமும், பவித்ரமான உன் எண்ணமும் நிறைவேறும்.''

ஆவை பிதா போலாவன் ஜப்ஹீம் |
ஹட பரிஹரி கர் ஜாயேஹு தப்ஹீம் || 788
மில்ஹிம் தும்ஹஹி ஸப்த ரிஷீஸா |
ஜானேஹு தப் ப்ரமான் பாகீஸா || 789

மேலும், ''உன் தகப்பனார் உன்னை மீண்டும் அழைக்க வருவார். அப்போது அடம், பிடிவாதம் பிடிப்பதை விட்டு அவருடன் வீடு போவாயாக. பிறகு உன்னை ஸப்த ரிஷிகளும் ஸந்திப்பார்கள், அப்போது அந்த வார்த்தை ஸத்யமென்பதைத் தெரிந்து கொள்வாயாக.'' என்று கூறியது அந்த அசரீரி.

ஸுனத் கிரா பிதி ககன் பகானீ |
புலக் காத் கிரிஜா ஹர்ஷானீ || 790
உமா சரித் ஸுந்தர் மைம் காவா |
ஸுனஹு சம்பு கர் சரித் ஸுஹாவா || 791

இவ்வாறு ப்ரம்மாவினால் உச்சாரணம் செய்யப்பட்ட இந்த ஆகாச வாணியைக் கேட்டதுமே பார்வதி அதிக ஆனந்தமடைந்தாள்; அவளுக்கு உடலெல்லாம் புல்லரித்தது.

நான் இது வரை பார்வதி தேவியின் ஸுந்தரமான- அழகிய கதையைக் கூறினேன். இப்போது சிவபெருமானின் சோபை நிறைந்த சரித்ரத்தைக் கேள்'' என்றார் யாஜ்ஞுவல்க்யர், பரத்வாஜரிடம்.

ஜப்தேம் ஸதீம் ஜாயி தனு த்யாகா |
தப் தேம் சிவ மன் பயஉ பிராகா || 792
ஜப்ஹிம் ஸதா ரகுநாயக நாமா |
ஜஹம் தஹம் ஸுனஹிம் ராம குன க்ராமா || 793

தொடர்ந்தார் யாஜ்ஞுவல்க்யர்:-

தட்ச யஜ்ஞத்தில் ஸதியானவள் சரீரத்தை த்யாகம் செய்ததிலிருந்தே, சிவனார் வைராக்யமடைந்து விட்டார். அந்த நாளிலிருந்தே அவர் ஸ்ரீராம நாமத்தையே ஜபித்துக் கொண்டு இருந்தார். எங்கு எங்கு ராமனுடைய கதை நடக்கிறதோ; அங்கெல்லாம் சென்று கேட்கலானார்.

சிதானந்த ஸுக்தாம் சிவ பிகத்
மோஹ் மத காம் |
பிசர்ஹிம் மஹி தரி ஹ்ருதயம் ஹரி
ஸகல் லோக் அபிராம் || 794

சச்சிதானந்த சிவன் எப்போதும் ஸுகத்தின் இருப்பிடம். விசேஷமாக காமம், மயக்கம், மதம் இவைகளிலிருந்து வெகு தூரம் விலகியிருப்பவர். உலகுக்கெல்லாம் ஆனந்தத்தை அளித்து வரும் பகவானான ஹரியை மனத்தில் ஸ்மரணை பண்ணிக் கொண்டே ஸதியை நினைத்தபடி பூலோகத்தில் திரிந்து கொண்டு இருந்தார். (ஸதி வியோகம் அவரை ரொம்பவும் வாட்டியது. ஸதியின் இருப்பிடமான கைலாஸம் சென்று அவளை நினைத்து ஏங்கினார்)

கதஹும் முனின்ஹ உபதேஸஹிம் க்யானா |
கதஹும் ராம குண் கர்ஹிம் பகானா || 795
ஜதபி அகாம் ததபி பக்வானா |
பக்த பிரஹ துக் துகித் ஸுஜானா || 796

சில இடங்களில் முனிவர்களுக்கு ஜ்ஞானத்தைப் பற்றி உபதேசம் செய்கிறார். சில இடங்களில் தானாகவே ஸ்ரீராமனுடைய குணசரித்ரங்களில் ஈடுபட்டுப் பேசுகிறார். எல்லாம் அறிந்த சிவன் ஆசையற்றவர். ஆயினும் பக்தையின் விரஹ வேதனையில் தானும் ஈடுபடுகிறார். கடைசியில் அவரே உள்ளம் நொந்தார்; ஸதியின் பிரிவினால் துக்கமடைந்தார்.

ஏஹி பிதி கயஉ காலு பஹு பீதீ |
நித நை ஹோயி ராம பத் ப்ரீதீ || 797
நேமு ப்ரேமு சங்கர் கர தேகா |
அபிசல் ஹ்ருதயம் பக்தி கை ரேகா || 798

இதே மாதிரி நிலையில் சம்புவின் அநேக காலங்கள் கழிந்தன. தினம் தினம் அவருக்கு ஸ்ரீராம சரணங்களில் புதிய ப்ரீதியின் அனுபவம் கிட்டியது. கடும் நியமம், ப்ரேமை இவையெல்லாவற்றையும் காட்டிலும் அவர் ஹிருதயத்தில் ஆணிவேர் போலப் பக்தியானது பகிர்ந்து நின்றது என்பதை ஸ்ரீராமச்சந்த்ரன் பார்த்தார்.

ப்ரகடே ராமு க்ருதக்ய க்ருபாலா |
ரூப ஸீல நிதி தேஜ் பிஸாலா || **799**
பஹு ப்ரகார் ஸங்கர்ஹி ஸராஹா |
தும்ஹ பினு அஸ் ப்ரது கோ நிர்பாஹா ||800

க்ருதஜ்ஞரான, க்ருபாலுவான ரூபம், பண்பு இவைகளின் களஞ்சியமான ஸ்ரீராமர் சிவன் முன் தனது அழகான ப்ரகாசத்தை வெளிப்படுத்திக் கொண்டு தோற்றமளித்தார். பின் சிவனைப் பலவிதமாகப் புகழ்ந்தவாறு ''நண்பரே! உம்மைத்தவிர்த்து இந்தப் பயங்கரமான, கடினமான வ்ரதத்தை வேறு யாரால் செய்து முடிக்க முடியும்?

பஹுபிதி ராம் சிவஹி ஸமுஜாவா |
பார்பதீ கர் ஜன்மு ஸுனாவா || 801
அதி புனீத் கிரிஜா கை கர்னீ |
பிஸ்தர் ஸஹித் க்ருபானிதி பர்னீ || 802

இப்படிப் பலவிதமான ஆதரவுள்ள வார்த்தைகளால் ஸ்ரீராமர் சம்புவுக்கு அறிவுறுத்தினார்; மேலும் பார்வதியின் பிறப்பு வைபவ உண்மையை விளக்கினார். பவித்ரமான பார்வதியின் கர்ம பலன்களை, பகவான் தயாநிதியான ஸ்ரீராமனானவர் மிக விரிவாக வர்ணனை செய்தார்.

அப் பின்தீ மம ஸுனஹு சிவ ஜௌம்
மோ பர் நிஜ நேஹு |
ஜாயி பிபாஹஹு ஸைலஜ்ஹி யஹ்
மோஹி மாகேம் தேஹு || **803**

மேலும், அவர் '' ஹே சிவபிரானே! என்னிடம் உமக்கு ஸத்யமாக, ஸ்னேகம் இருக்குமானால்; எனக்கு இந்தப் பெருமையைக் கொடும்; என் விநயமான வார்த்தைகளைக் கேளும்; உடனே போய் பார்வதியை மணந்து கொள்வீராக'' என்றார்.

கஹ் ஸிவ ஜதபி உசித் அஸ் நாஹீம் |
நாத் பசன் புனி மேடி ந ஜாஹீம் || 804
சிர் தரி ஆயஸு கரிஅ தும்ஹாரா |
பரம தர்மு யஹ் நாத் ஹமாரா || 805

அதற்குச் சிவன்; பகவானே ஸ்ரீராமா! தாங்கள் கூறுவது சற்றும் பொருத்தமில்லை. அதாவது; நானே போய் விவாஹம் செய்ய ஸதியை அண்டுவது நன்றாக இல்லை, இருந்தாலும் தங்களுடைய வார்த்தையும் வீணாக ஆக முடியாது. ஹே நாதனே! தங்களுடைய ஆஜ்ஞை யைச் சிரமேற்கொண்டு தாங்கள் கூறியதைச் செய்கி றேன். இது தான் எனக்குப் பரம தர்மம் என்று நினைக் கிறேன்.

மாது பிதா குர் ப்ரபு கை பானீ |
பினஹிம் பிசார் கரிய ஸுப் ஜானீ || 806
தும்ஹ ஸப் பாந்தி பரம ஹிதகாரீ |
அக்யா ஸிர் பர் நாத் தும்ஹாரீ || 807

அதாவது; மாதா, பிதா, குரு, பெரியவர்கள் ஆகிய இவர்கள் வார்த்தையைச் சுபமாக எண்ணி யோசனையே செய்யாமல் எடுத்துக் கொள்வது, செய்வது சாலச் சிறந் தது; நல்லது. பின்னும் ஹேநாதா! தாங்கள் ஸகல விதத்திலும் எனக்கு நன்மை செய்பவர்; ஆகவே, தங் களுடைய ஆஜ்ஞையை சிரோதார்யம் என்று ஏற்றுக் கொள்வேன் என்று மேலும் கூறினார்.

ப்ரபு தோஷேஉ ஸுனி சங்கர பச்னா |
பக்தி பிபேக் தர்ம ஜுத ரச்னா || 808
கஹ் ப்ரபு ஹர் தும்ஹார் பன் ரஹேவு |
அப் உர் ராகேஹு ஜோ ஹம் கஹேவு || 809

ப்ரபுவான ஸ்ரீராமர் சங்கரரின் இந்த வார்த்தை களைக் கேட்டு மிகவும் ப்ரஸன்னமடைந்தார். ஏனெ னில்; அவர் வார்த்தைகளில் பக்தி, ச்ரத்தை, தர்மம், ஞானம் இவை நிறைந்திருந்தன. மேலும், பகவான் ஹே சிவனாரே! உமது சபதம் பூர்த்தியாகியது. இப் பொழுது நான் சொல்லும் சில வார்த்தைகளைத் தங் கள் ஹிருதயத்தில் இருத்தி, பதியவைத்துக் கொள்ள வேணும் என்றார்.

அந்தர்தான் பயே அஸ் பாஷீ |
சங்கர் ஸோயி மூர்த்தி உர் ராகீ || 810
தப்ஹிம் ஸப்தரிஷி சிவ பஹிம் ஆயே |
போலே ப்ரபு அதி பசன் ஸுஹாயே || 811

இவ்விதம் கூறிய பகவான் ஸ்ரீராமர் அந்தர்த்தானம் ஆகிவிட்டார். அவருடைய ஸுந்தரமான உருவத்தைச் சிவனார் மனத்தில் இருத்திக் கொண்டார். அப்பொழுது அங்கே ஸப்த ரிஷிகளும் சிவனை நாடி வந்தார்கள். (அதாவது; கச்யபர், அத்ரி, வஸிஷ்டர், விச்வாமித்ரர், பரத்வாஜர், ஜமதக்னி, கௌதமர்) இவர்களிடம் சிவன் தான் கண்டதையும்- கேட்டதையும் கூறினார்.

பார்பதீ பஹிம் ஜாயி தும்ஹ
ப்ரேம பரிச்சா லேஹு |
கிரிஹி ப்ரேரி பட்ஏஹு பவன்
தூரி கரேஹு ஸந்தேஹு || 812

ஹே முனிச்ரேஷ்டர்களே! நீங்கள் சென்று பார்வதியின் பரேமையைப் பரீட்சிக்க வேண்டும். மன ஸந்தேஹத்தை ஒழித்துப் பார்வதியை வீட்டிற்கு அழைத்துப் போகவும் என்று ஹிமவானிடம் கூறுங்கள் என்றார் சிவபிரான்.

ரிஷின்ஹ கௌரி தேகீ தஹம் கைஸீ |
மூர்திமந்த் தபஸ்யா ஜைஸீ || 813
போலே முனி ஸுனு ஸைலகுமாரீ |
கரஹு கவன் காரண் தபு பாரீ || 814

சிவனுடைய வார்த்தையைக் கேட்ட அம்முனிவர்கள் மிகவும் ஸந்தோஷத்துடன் பார்வதி தவத்தில் இருக்கும் இடம் ஏகினார்கள். அவர்கள் பார்வதி தவத்தில் ஆழ்ந்து, தன்நிலையை மறந்து, தவமே உருவெடுத்து வந்தது போல் நிற்பதைக் கண்டு ஆச்சர்யம் அடைந்தார்கள். அப்படித் தவமாகவே உருவெடுத்து வந்த பார்வதியைப் பார்த்து அந்த முனிவர்கள்; ஹே பார்வதி! சைல குமாரி! என்ன காரணம்? ஏன் இப்படிக் கடும் தபஸ்ஸைச் செய்கிறாய்? என்று கேட்டார்கள்.

கேஹி அவராத்ஹு கா தும்ஹ சஹஹூ |
ஹம் ஸன் ஸத்ய மர்மு கின் கஹஹூ || 815
கஹத் பசன் மனு அதி ஸகுசாயீ |
ஹம்ஸிஹஹு ஸுனி ஹமாரி ஜடதாயீ || 816

பார்வதி! நீ யாரை நினைத்து இவ்விதம் ஆராதனை செய்து வருகிறாய்? என்ன விரும்புகிறாய் நீ? எங்களிடம் எல்லா ரகஸ்யங்களையும் கூறு பார்வதி! என்றதும் அவர்களுடைய பேச்சைக் கேட்டு 'என்னுடைய ஹிருதயத்தின் அந்தரங்கத்தைச் சொல்லுவது மிகவும் வெட்கமாக இருக்கிறது. என்னுடைய அறியாமையை எண்ணித் தாங்கள் பரிஹஸிப்பீர்கள்' என்று மெதுவாகக் கூறலானாள்.

மனு ஹட் பரா ந ஸுனயி ஸிகாவா |
சஹத பாரி பர் பீதி உடாவா || 817

பின்னும் என் மனத்தில் ஒரு பிடிவாத குணம் இருக்கிறது. அதாவது; நான் எத்தனை சொன்னாலும்; அந்தப் பிடிவாத குணம் உள்ள மனம் நான் சொல்வதைக் கேட்பதில்லை. ஜலத்தின் மீது சுவர் அமைக்கப் பார்க்கிறது.

நாரத் கஹா ஸத்ய ஸோயி ஜானா |
பினு பங்கன்ஹ ஹம் சஹஹிம் உடானா ||818
தேக்ஹு முனி அபிபேகு ஹமாரா |
சாஹிய ஸதா ஸிவஹி பர்தாரா || 819

நாரதருடைய வார்த்தைகளைக் கேட்டு அதை உண்மை என்று அறிந்த நான் இறகு இல்லாமலேயே பறக்க நினைக்கும் பறவை போலானேன். ஹே முனிவர்களே! கேளுங்கள், என்னுடைய இந்த அஜ்ஞானத்தைக் கேளுங்கள், பாருங்கள். விகாரமற்று அந்தச் சிவனாரையே பதியாக அடையவே என் மனம் விரும்புகிறது.

ஸுனத் பசன் பிஹஸே ரிஷய
கிரிஸம்பவ் தவ தேஹ் |
நாரத கர் உபதேஸு ஸுனி கஹஹு
ப்ஸேஉ கிஸு கேஹ் || 820

பார்வதியின் வார்த்தைகளைக் கேட்டு முனிவர்கள் சிரிக்கலாயினர். 'ஹே பார்வதி! உன் சரீரமானது ஹிம் மலையிலிருந்து உண்டானது. ஆமாம்! நாரதரின் உபதேசத்தைக் கேட்டு நீ யாருக்கு வீடு அமைக்கப் பார்க்கிறாய்? என்றனர் முனிவர்கள்.

தச்சஸுதன்ஹ உபதேஸேன்ஹி ஜாயீ |
தின்ஹ பிரி பவனு ந தேகா ஆயீ || 821

ஹே பார்வதி! இப்படித்தான் ஒரு ஸமயம் தட்ச னுடைய புத்திரர்களுக்கு நாரதர் உபதேசம் செய்தார். பின் அவர்கள் வீடு திரும்பவே இல்லை. (அப்படி இருக்க உனக்கு எம்மாத்திரம் அவர் வீடு அமைத்துத் தரப் போகிறார்?)

(முன்பு தட்ச ப்ரஜாபதியானவன் உலகில் பல புத்திரர்களை உற்பத்தி செய்தான். பிறகு அவர்களிடம் நீங்கள் போய் தபஸ் செய்யுங்கள். உங்கள் மூலம் ஏக மான ப்ரஜோத்பத்தி உண்டாக வேண்டும். என்றதும்; அந்தத் தட்ச புத்திரர்கள் வனம் சென்று தபஸ் செய் தார்கள்.

அப்போது நாரதர் தோன்றி அவர்களுக்கு ஜ்ஞானம் உண்டாக்கினார். அவர்கள் எல்லோருமே மோஹம், மாயை விட்டு விரக்தியடைந்து வனத்திலேயே அலைந்து அங்கேயே தபத்தில் ஈடுபட்டனர்; வீடு வரவே இல்லை. பிறகு தட்சன் பெண்களை உண்டாக்கிச் சிருஷ்டியைப் பெருக்கினான்.

இதனால் வெறுப்பும், துக்கமும் அடைந்த தட்சன் நாரதருக்கு, ''நீ ஓர் இடத்திலும் இரண்டு நிமிடம் கூடத் தங்க மாட்டாய்'' என்று சாபம் கொடுத்தான். இத னால் நாரதர் பிச்சைக்காரன் போல் உலகெங்கும் எப் போதும் திரிந்து கொண்டே இருக்கிறார். அப்படியி ருக்க, உனக்கு நாரதர் நல்லபடி உபதேசமளித்து வீடு சேர்வார் என்பது என்ன நிச்சயம்? என்றார்கள்).

சித்ரகேது கர் கரு உன் காலா |
கனக கஸிபு கர் புனி அஸ் ஹாலா || 822

சித்ரகேது என்பவரின் க்ருஹத்தை நாரதர் அழித் தார். இதே நிலைமையை ஹிரண்யகசிபுக்கும் உண்டாக் கினார்.

(சித்ர கேதுவின் கதையைக் கேள்:-

சித்ர கேதுவுக்குக் கோடிக்கணக்கான பத்னிகள் இருந்தனர். ஆனால், யாருக்குமே புத்ர பாக்யம் கிடைக்க வில்லை. பின் ஒரு முனிவரின் ஆசீர்வாதத்தினால் கடைசி ராணிக்கு ஒரே ஒரு புத்ரன் பிறந்தான். எப்போது அந்தப் புத்ரன் ஓராண்டு அடைந்தானோ; அப்போது மற்ற ராணிகள் அவனை விஷம் கொடுத்துக் கொன்றார்கள். காரணம் என்னவென்றால்; ''ராஜா சிறிய ராணிமேல் அதிகக் காதலுடன் இருக்கிறார் என்பதே. மடிந்த புத்ரனை மடியில் எடுத்துக் கொண்டு ராஜா புலம்பினான். இதே நேரம் நாரதர் அங்குத் தோன்றி, அரசனுக்கு ஜ்ஞானம் போதித்தார். ஆனால், அந்த அரசனுக்கு அந்தப் போதனை எட்டவேயில்லை; எல்லாம் வீணானது. நாரதர் அப்போது அந்தக் குழந்தையின் ஆத்மாவைக் கூப்பிட்டு ''உன்னுடைய உயிரற்ற உடலைக் கண்டு உன் தகப்பன் ரொம்ப அழுகிறார். ஆகவே, உன் ம்ருத சரீரத்தில் நீ மீண்டும் வா'' என்றார். அப்போது, அந்த ஆத்மா நாரதரின் யோக பலத்தால் மீண்டும் சரீரத்தில் வந்து பேச ஆரம்பித்தது. நாரதரே யார் புத்ரர்? யார் பிதா? எல்லாமே வெறும் அஜ்ஞானம். உலகம் கர்மானுஸாரம் போய்க்கொண்டே இருக்கும். இதில் ஒருவரும் ஒருவருக்கு உறவு இல்லை. கேளும்! போன ஜன்மத்திலும் நான் ஒரு ராஜாவாக இருந்தேன். நான் ராஜ்யத்தை வெறுத்து வனத்தில் வாசம் செய்து வந்தேன். ஒரு நாள் ஒரு தினம் நான் ந்கரத்தில் வந்தபொழுது, ஸ்த்ரீ ஒருவள் எனக்கு ஒரு தின்பண்டம் கொடுத்தாள். அதற்குள் ஓர் எறும்பு இருந்தது. அந்த எறும்பை எடுத்து நான் நெருப்பில் போட்டேன்; அது இறந்தது. அந்த எறும்பு கூறியது, ''அந்த எறும்புதான் உன் மனைவி; பனியாரம் கொடுத்தவள் உன் தாயார். இதே பாபத்தினால் நான் இந்த ராஜாவின் வீட்டில் பிறந்தேன். ஆனால், அந்த எறும்புக்களின் சாபத்தினால் நான் மறுபடி இறக்கிறேன். நான் வாழ முடியாது என்று சொல்லி அந்த மகன் ம்ண்டும் இறந்துவிட்டான். இதன் பின் சித்ரகேது ராஜ்யத்தை விட்டு ஒழித்து, தபஸ் செய்ய வனம் சென்றான்.

மேலும், முனிவர்கள்; இதேபோல் ஹிரண்ய கசிபுவின் ஸ்த்ரீ கயாது என்பவள் கர்ப்பவதியாக இருந்தாள். அப்போது அங்கு நாரதர் போய் அவளுக்கு ஜ்ஞான உபதேசம் செய்தார். கர்பத்திலேயே ப்ரஹ்லா

தனுக்கு ஜ்ஞானம் கிட்டியது. இதே ப்ரஹ்லாதனின் ஜ்ஞானத்தினால்தான் பகவான் விஷ்ணு ந்ருஸிம்ஹ ரூபம் எடுத்தார். ப்ரஹ்லாதனை வாழ்த்திவிட்டு ஹிரண்ய கசிபுவைக் கொலை செய்தார். இம்மாதிரி ராட்சத குலமே அழிந்தது என்றனர் முனிவர்கள்,

நாரத் ஸிக் ஜே ஸுனஹிம் நர் நாரீ |
அவஸி ஹோஹிம் தஜி பவனு பிகாரீ || 823
மன் கபட தன் ஸஜ்ஜன் சீன்ஹா |
ஆபு ஸரிஸ் ஸப்ஹீ சஹ் கீன்ஹா || 824

நாரதரின் வார்த்தைகள்ளைக் கேட்ட ஸ்த்ரீ-புருஷர் எல்லோரும் வீட்டைத் துறந்து பக்கிரிகளாக ஆகிவிட்டார்கள். அவர் மிகவும் கபடம் நிறைந்தவர். மேல் சரீரத் தோற்றம் மட்டும்தான் ச்லாக்கியமான புருஷன் போன்றது. தன்னைப் போலவே எல்லோரையும் பிச்சைக்காரனாகச் செய்ய நினைக்கிறார் அந்த நாரதர்.

தேஹி கேம் பசன் மானி பிஸ்வாஸா |
தும்ஹ சாஹஹு பதி ஸஹஜ் உதாஸா || 825
நிர்குண நிர்லஜ குபேஷ் கபாலீ |
அகுல் அகேஹ் திகம்பர் ப்யாலீ || 826

ஆகவே, அந்தக்கபட நாரதரின் வசனங்களில் நம்பிக்கை வைத்து, குணமற்ற, நாணமற்ற, உதாஸீனம் செய்யக் கூடிய, ஒரு பதியை நீ நாடுகிறாய். அந்தச் சிவனிடம் ஒரு ச்ரேஷ்ட குணம் இல்லை; அவரும் வேடதாரிதான்; கபால மாலையை அணிந்து கொண்டிருக்கிறார்; குலம், கோத்திரம், வீடு வாசல், இல்லை; அவர் நிர்வாணமான தோற்றமுடையவர்; வஸ்த்ரம் இல்லை; பாம்புகளைச் சரீரத்தில் தொங்கவிட்டிருப்பவர்; அப்படிப்பட்ட தோற்றமுள்ள சிவனாரை நீ வரிக்கிறாய்.'' அப்படித்தானே?

கஹஹு கவன் ஸுகு அஸ் பரு பாயேம் |
பல் பூலிஹு டக் கே பௌராயேம் || 827
பஞ்ச கஹேம் சிவம் ஸதீ பிபாஹீ |
புனி அவ்டேரி மராஏன்ஹி தாஹீ || 828

சொல்லு பார்வதி! ''இப்படிப்பட்ட வரனை நீ

மணந்து கொள்வதால் என்ன பயன்? என்ன ஸுகம் கிடைக்கப் போகிறது? போகட்டும்; உன்னை யாரோ நன்றாக ஏய்த்து இப்படி வரித்திருக்கிறார்கள். அப்படி ஏமாற்றிய (நாரதர்) வரின் பேச்சைக் கேட்டு உன் னையே நீ மறந்திருக்கிறாய், இம்மாதிரி வார்த்தை வரக் கூடாது. பஞ்சாயத்தார் கூறியதால் இன்று சிவனார் ஸதியை மணந்து கொண்டார்; நாளையே அவர் ஸதியை விட்டு விட்டார்'' என்ற பெயர் வரக்கூடாது தெரிந்ததா?

அப் ஸுக் ஸோவத் ஸோசு நஹிம் பீக் மாகி
பவ காஹிம் |
ஸஹஜ் ஏகாகின்ஹ கே பவன் கப்ஹும் கி
நாரி கடாஹிம் || 829

சிவனார் இப்போது ஸுகமாகத் தான் இருக்கிறார்; ஒரு விதக் கவலையும் இல்லை; உலகமெங்கும் பிச்சை எடுத்துச் சாப்பிடுகிறார்; ஸுகமாகத் தூங்குகிறார்; தன்னந்தனியாகத் திகம்பரராகத் திரியும், இப்படிக் கவலையற்ற ஒரு தனி மனிதனிடம் எந்தப் பெண்தான் தங்குவாள்? (அதாவது; தனிமனிதனிடம் வஸிக்க ஒரு பெண்ணும் இச்சைப்பட மாட்டாளே)

அஜ்ஹும் மானஹு கஹா ஹமாரா |
ஹம் தும்ஹ கஹும் பரு நீக் பிசாரா || 830
அதி ஸுந்தர் ஸுசி ஸுகத் ஸுசீலா |
காவ்ஹிம் பேத் ஜாஸு ஜஸ் லீலா || 831

இப்போதும் எங்கள் வார்த்தையைக் கேள்! நாங்கள் உனக்காக வேறொரு நல்ல வரனைப் பார்க்கிறோம். அவர் ஸுந்தரம் ஆனவர்; பவித்ரமானவர்; நல்ல சாஸ்த்ரம் உள்ளவர்; ஸுகத்தை அளிப்பவர்; நல்ல குணமுடையவர். வேத சாஸ்த்ரங்கள் அவருடைய புகழைப் பாடுகின்றன. அப்படிப்பட்ட வரனை உனக்குப் பார்த்திருக்கிறோம்.

தூஷன் ரஹித் ஸகல் குண் ராஸீ |
ஶ்ரீபதி புர பைகுண்ட நிவாஸீ || 832
அஸ் பரு தும்ஹஹி மிலாஉப் ஆனீ |
ஸுனத் பிஹஸி கஹ் பசன் பவானீ || 833

மேலும்,; கேள் பார்வதி! தோஷமே இல்லாத, ஸம்பூர்ண குணஸாகரம், லக்ஷ்மியின் பதி, விஷ்ணு பகவான், வைகுண்டத்தில் வாழ்பவர், அப்படிப்பட்ட வரனை நாம் உனக்குக் கொண்டு வந்து காட்டுகிறோம் என்றார்கள். பார்வதி சிரித்தாள்; பிறகு கூறினாள்.

ஸத்ய கஹேஹு கிரிபவ தனு ஏஹா |
ஹட் ந சூட் சூடை பரு தேஹா || 834
கனகவு புனி பஷான் தேம் ஹோயீ |
ஜாரேஹும் ஸஹஜு ந பரிஹர ஸோயீ || 835

ஹே முனிவர்களே! கேளுங்கள்; நீங்கள் ஸத்திய வசனம்தானே கூறினீர்கள்? என் பிடிவாதத்தை நான் விடமாட்டேன். என் தேஹம் மலையினால் செய்யப் பட்டதுதான். ஆகவே, என் பிடிவாதத்தை நான் விட மாட்டேன். என் தேஹம் மறைந்தாலும் சரி; என் பிடிவாதத்தை விடமாட்டேன்.

தங்கம் கூடக் கல்லிலிருந்துதான் உண்டாகிறது. தங்கம் எப்படிப் பல தடவை அழித்தாலும் அது தன் குணத்தை விடாமல் மறுபடி தங்கமாகவே நிற்கிறதோ; அதேபோல நான் ஒரு கல்; என் ஸ்வபாவத்தை விடவே மாட்டேன்; இது நிச்சயம்.

நாரத பசன் ந மைம் பரிஹர்வும் |
பஸவு பவனு உஜர்உ நஹிம் டர்வும் || 836
குர் கேம் பசன் ப்ரதீதி ந ஜேஹீ |
ஸப்னேஹும் ஸுகம் ந ஸுக் ஸிதி தேஹீ || 837

மேலும், நாரத முனியினுடைய வசனம் வீணாகப் போக நான் விடமாட்டேன். வீடு விளங்கட்டும்; அல்லது; அழியட்டும்; அதற்கு நான் பயப்படவில்லை. யாருக்குக் குருவினுடைய வசனங்களில் ப்ரியமில்லையோ; அவர்களுக்குக் கனவிலும்கூட ஸுகம், ஸித்தி இவை கிடைக்காது. இது நிச்சயம். ஆகவே, நான் நாரதர் வார்த்தையை மீற மாட்டேன்.

மஹாதேவ் சுவகுண் பவன் பிஷ்னு
ஸகல் குண் தாம்|
ஜேஹி கர் மனு ரம் ஜாஹி ஸன்
தேஹி தேஹீ ஸன்காம்|| 838